
சித்திர பெரிய புராணம்

ஓவியம்
எஸ்.ராஜம்



வசனம்
அ.ச.ஞானசம்பந்தன்

பொறுப்பாசிரியர்
டாக்டர் நா.மகாலிங்கம்

சித்திர
பெரிய புராணம்

சித்திர பெரிய புராணம்

ஓவியம்
எஸ்.ராஜம்

வசனம்
அ.ச.ஞானசம்பந்தன்

பொறுப்பாசிரியர்
டாக்டர் நா.மகாலிங்கம்

இரண்டாம் பதிப்பு
இபம|கு|7912000

விலை: ரூ.125|-

வெளியிடுவோர்:
இராமலிங்கர் பணி மன்றம்
102, அண்ணா சாலை
கிண்டி
சென்னை - 600 032.

அச்சிட்டோர்:
சாந்தளகம்
சென்னை - 600 002.

பதிப்புரை



சைவநெறித் திருத் தொண்டர் வரலாறுகளை உலகறியச் செய்யும் வண்ணமாக பாடியருளினார் சேக்கிழார். இவர் சோழப் பேரரசின் முதல் அமைச்சராகப் பணியாற்றியவர். தமிழ் கூறும் நல்லுலகத்தின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர். இவர் தொண்டை மண்டலத்திலே குன்றத்தூரிலே சேக்கிழார் மரபிலே தோன்றியவர். ஆரம்பத்தில் அருண்மொழித் தேவர் என்ற பெயரைப் பெற்றிருந்தார். அவருடைய கல்வியறிவையும் நல்லொழுக்கத்தையும் அறிந்திருந்த அநபாய சோழ மன்னன் அவரை முதன் மந்திரியாக நியமித்து உத்தமசோழப் பல்லவர் என்ற பெயரைக் கொடுத்தார்.

''தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று தொடங்கும் திருத்தொண்டத் தொகையைப் பற்றி ஒரு நாள் அவர் விரிவுரை நடத்தும்பொழுது 'நம்பியாண்டார் நம்பி அந்தாதி' பற்றிக் குறிப்பிட்டார். இதனை விளக்கிப் பொருள் சொல்லுமாறு திருமுறை கண்ட ராஜ ராஜ அபயகுலசேகர சோழ மகாராஜா கேட்டதற்கிணங்கி அத் திருவந்தாதியை ஓதி அதன் பொருளையும் விரித்து உரைத்தார். இதனைக் கேட்டு மகிழ்ந்த அரசர் திருத்தொண்டர்களுடைய சரித்திரத்தை யாவரும் அறிந்துகொள்ளும் பொருட்டுப் பெருங் காப்பியமாகச் செய்து தரவேண்டும் என்று சேக்கிழாரைப் பணித்தார். அதற்கேற்ப சேக்கிழார் பெருமான் செய்தருளிய பெரியபுராணம் இன்றும் நிலைத்து நின்று இந்துக்களிடையே சிவத் தொண்டர்களின் பெருமையைப் பேசுகிறது. பக்திச் சுவை கொட்டப் பாடப்பட்டது. சமயத்துறையில் மாத்திரம் அல்லாது, இலக்கியத் துறையிலும் வரலாற்றுத் துறையிலும் இசைத் துறையிலும் ஈடு இணையற்றதாக அது விளங்குகிறது.

இந்தத் தமிழ் காவியம் செய்யுள் வடிவத்தில் இருப்பதனால் இதனைப் படித்துப் பயன் பெறக்கூடியவர்கள் சிலராகத்தான் இருக்க முடியும் என்ற காரணத்தால், எளிய வசன நடையில் இதனை விளக்கும் நூல்கள் ஒருசில ஏற்கனவே வெளிவந்துள்ளன. இருந்தாலும் அழகிய ஓவியங்களுடன், ஒரு நூலாவது இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. தமிழ் நாட்டின் தலைசிறந்த ஓவியர்களுள் ஒருவரான எஸ். ராஜம் அவர்கள் இந்தக் காவியத்திற்கு ஓவிய வடிவம் கொடுத்திருந்தது எனது மனதைக் கவர்ந்தது. ஓவிய வடிவத்தில் இதனை வெளிக் கொணர வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. ஓவியங்களுக்கு ஒப்ப பெரியபுராணத்தை வசன வடிவில் எழுதித் தருமாறு பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்களை அழைத்தேன்.

எஸ். ராஜம் அவர்களின் ஓவியங்களுடன் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் எழுதிய வசனங்களுடன் 'சித்திர பெரியபுராணம்' என்ற பெயரில், இராமலிங்கர் பணி மன்றம் சென்ற ஆண்டு செவ்வனே நடாத்திய வள்ளலார்—காந்திஜி வெள்ளி விழாவில் முதலாவது பதிப்பு வெளிவந்தது.

தமிழ் மக்களிடையே இந்த நூல் சிறப்பான வரவேற்பைப் பெற்றிருந்தது. இரண்டாவது பதிப்பை இப்பொழுது வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்னை
ஜூலை 1991

நா. மகாலிங்கம்
தலைவர்
இராமலிங்கர் பணி மன்றம்

முன்னுரை



தமிழ்மொழி பெற்றுள்ள சிறப்புகள் பலவகைப் படும். பண்டைய உலக மொழிகளினுடைய இலக் கணங்களை ஆய்ந்தால் மக்கள் வாழ்க்கைக்கு இலக் கணம் வகுக்கின்ற நூல் 'தொல்காப்பியம்' ஒன்று மட்டுமே, 'பொருளதிகாரம்' என்ற பெரும் பகுதியைக் கொண்டுள்ளது. சமய இலக்கியம் என்று ஒரு பெரும் தொகுப்பைப் பெற்றுள்ள சிறப்பு தமிழ்மொழிக்கு உண்டு. பக்திப் பாடல்கள் என்று எடுத்துக்கொண்டால் அளவாலும் சரி, தரத்தாலும் சரி தமிழ் மொழியில் உள்ள அளவு பக்திப் பாடல்கள் உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லை. தமிழுக்கு அடுத்த இடத்தை வகிப்பது ஹீப்ரு மொழியே என்று வல்லுனர்கள் கூறுகின்றனர்.

தமிழில் உள்ள சமய இலக்கியம் சங்க காலத்திலேயே தொடங்கி விட்டது என்றாலும் வேருன்றி வளரத்தொடங்கியது ஏழாம் நூற்றாண்டி லாகும். பன்னிரண்டாம் நூற்றாண்டு முடிய இவ்வளர்ச்சி மிக வேகமாகப் பரவிற்று. சைவம், வைணவம், சமணம் ஆகிய மூன்று சமய இலக்கியங்களும் பல்கின. அதிக மான சமய இலக்கிய பக்திப் பாடல்களைப் பெற்றுள்ளது சைவ சமயம்தான். இரண்டாவது நிற்பது வைணவமாகும். மூன்றாவதாக வருவது சமணமாகும்.

ஏழாம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தரால் தொடங்கப் பெற்ற சமய இலக் கியம் பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சேக்கிழாருடன் முடிவடைந்துவிட் டது. பின்னர் தோன்றிய குமர குருபரர், சிவப்பிரகாசர், பிள்ளைப் பெருமாள் அய் யங்கார் முதலிய பெரியோர்களும் சமய இலக்கிய வளர்ச்சிக்கு உதவினரேனும் அந்த ஐந்து நூற்றாண்டில் இருந்த வளர்ச்சியோ, செழிப்போ பின்னர் இல்லை.

ஒரு பெருங் காப்பியம் தோன்ற வேண்டுமேயானால் அது எந்த இனத்தில் தோன்றுகிறதோ அந்த இனம் மிகப் பெரிய வளர்ச்சியை அடையத் தொடங்குகின்ற காலத்திலாவது அல்லது உயர்ந்த நிலையிலிருந்து அந்த இனம் வீழ்ச்சியடையத் தொடங்குகின்ற காலத்திலாவதுதான் தோன்றும் என்பது திறனாய்வாளர்கள் கண்ட முடிவு.

பல்லவப் பேரரசு வீழ்ச்சியடைந்து, இடைக்காலச் சோழப் பேரரசு தோன்றப் போகின்ற ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி கடைப்பகுதிகளில் கம்பநாடன் தோன்றியதும் கவிதை புனைந்ததும் சிந்திப்பதற்குரியது. அதே சோழப் பேரரசு வீழ்ச் சியடையத் தொடங்கியது இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலாகும். அதனாலேயே பெரிய புராணம் அப்போது தோன்றலாயிற்று.

பல்வேறு வெற்றிகளும், வளமான வாழ்வும், தேனும்பாலும் ஒடுகின்ற இயற்கை வளமும் நிலைத்துவிட்டால் அந்த இனம் கிரேக்க, ரோமானிய, தமிழர் இனம் என்ற எதுவாயினும் அதன் முடிவில் வீழ்ச்சியைத் தவிர வேறு ஒன்றையும் சந்திக்க முடி யாது. அந்த நிலையில்தான் 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் மக்கள் வாழ்க்கை யில் எவ்விதக் குறிக்கோளும், பிடிமானமும் இல்லாமல் வாழத் தொடங்கினர். இந்த மக்கள் வாழ்க்கை எப்படி இருந்தது என்பதை அறிய வேண்டுமானால் கம்பநாடன் காப்பியத்தில் பால காண்டத்திலுள்ள பூக்கொய் படலம், உண்டாட்டுப் படலம் என் பவை போதுமானவை.

வீழ்ச்சியை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிற சமுதாயத்தைத் தடுத்து நிறுத்தி வேறு பாதையில் அழைத்துச் செல்ல என்ன வழியை மேற்கொள்ள முடியும் என்று ஆராய்கின்றார் சேக்கிழார். வளத்தில் வாழ்ந்து கொண்டு இன்ப வேட்டையாடுகின்ற ஒரு சமுதாயம் எவ்விதக் குறிக்கோளும் இல்லாமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழுமேயானால் அதன் வீழ்ச்சி வெகு தூரத்தில் இல்லை என்பதை அறிவுடையோர் எளிதில் அறிவர். ஆனால் இதை நேரிடையாக எடுத்துச் சொன்னால் சமுதாய மக்கள் அதைக் கேட்டுத் திருந்துவார்கள் என்று சொல்ல முடியாது. ஆகவேதான் அறிஞரும், கவிஞரும், அருளாளரும், பக்தரும் ஆகிய சேக்கிழார் அழிவை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கின்ற தமிழ்ச் சமுதாயத்தைத் தடுத்து நிறுத்தி முன்னேறும் வழியைக் காட்ட விரும்புகிறார். இச் சமுதாயத்தினிடம் எல்லாம் இருந்தும் வாழ்க்கையில் குறிக்கோள் என்ற ஒன்று இல்லாமையால் புரையோடிப் போய்க் கொண்டிருக்கிற நிலையை எடுத்துக் காட்ட விரும்புகிறார்.

அறநூல்களைப்போல இது இது தேவை என்று கூறியிருக்கலாம். அல்லது நீதி கற்பிக்கின்ற நூல்களைப் போல இவ்விவற்றைக் கடைப்பிடித்தால்தான் சிறந்த வாழ்க்கை பெற முடியும் என்று சட்டங்களாக வகுத்துக் காட்டலாம். இவ்விரண்டு முறைகளில் எதைப் பின்பற்றினாலும் மக்கள் அதனை விரும்பிக் கற்பார்களா என்பது ஆராய்ச்சிக்குரியதாகும். எனவேதான் கவிதை, காப்பியம் என்றவற்றில் சங்க காலம் முதல் தமிழ்ச் சாதிக்கு ஈடுபாடு உண்டு ஆதலால் அக் காப்பியத்தையே கருவியாகக் கொண்டு தம் கருத்தை நிறைவேற்ற முடிவு செய்தார் சேக்கிழார். காப்பியம் செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்த பிறகு காப்பியப் பொருளாக எந்தக் கதையை மேற்கொள்ளலாம் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். தமிழ் நாட்டில் நூற்றுக்கணக்கான கதைகள் உண்டு. ஆனால் குறிக்கோள் ஒன்றை வலியுறுத்தித்தான் காப்பியம் அமைய வேண்டும் என்று நினைத்த சேக்கிழாருக்கு இந் நாயன்மார்கள் வரலாறுகள் பெரிதும் வாய்ப்பளிப்பவனாக அமைந்தன. ஒரு காப்பியத்தின் கட்டுக்கோப்புக்கு உதிரிக் கதைகளைப் பயன்படுத்தினால் சிறவாது என்பதைச் சேக்கிழார் நன்கு அறிந்திருந்தார். எனவே ஒன்றுக்கொன்று வேறுபட்ட இவ் வரலாறுகள் அனைத்தையும் நன்கு ஆராய்ந்த பொழுது இவற்றின் இடையே காணப்படும் ஓர் ஒருமைப்பாடு சேக்கிழார் கவனத்தை ஈர்த்தது.

பல்வேறு சூழ்நிலைகளில் பிறந்து, அரசாட்சி செய்வது முதல், சட்டி பானை செய்கின்ற வரை பல்வேறு துறைகளை மேற்கொண்டு சிவ பக்தி, அடியார்கள் தொண்டு என்பனவற்றில் மட்டும் ஒருமைப்பாடு உடையவர்களாகிய இப் பெருமக்களுடைய வரலாறுகளில் 'தொண்டு' என்ற ஒன்று இவர்கள் அனைவருக்கும் பொதுவாக இருத்தலைக் கவிஞர் கண்டார். மாறுபட்ட, ஒன்றுக்கொன்று முரணான இவர்கள் அனைவருடைய வாழ்க்கையிலும் தொண்டு என்ற ஒன்று பொதுவாக நிற்றலைக் காணமுடியும்.

எனவே தொண்டு என்ற பண்பைக் காப்பியப் பொருளாக்கி அத் தொண்டில் ஈடுபட்ட பல்வேறு அடியவர்களின் வரலாறுகளை அத் தொண்டு வெளிப்படும் வகைகளாகச் செய்துவிட்டமையின் காப்பிய இலக்கணமும் பழுதுபடாமல், அதே நேரத்தில் நாட்டிற்குத் தேவையான குறிக்கோளையும் வற்புறுத்துகின்ற முறையில் பெரிய புராணம் அமைந்துவிட்டது.

தமிழ் மொழி, தமிழர் நாகரிகம், தமிழர் பண்பாடு, தமிழர் சமயம் என்பனவற்றை நிறுவ வேண்டிய கடமையை மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்ற பெரியபுராணம் சைவர்கள் என்று சொல்லப்படுகின்ற குறுகிய வட்டத்தாருக்கு மட்டும் சொந்தம் என்று யாரேனும் நினைப்பார்களேயானால் அது பெரும் தவறாகவே முடியும். சைவம் என்ற சமயத்திற்குப் பதிலாக வைணவம், ஜைனம், இஸ்லாம், கிருத்துவம் என்று வைத்துக் கொண்டு பார்த்தாலும் மக்களுக்கு நல்ல வழி காட்டும் நூல் பெரியபுராணம்.


திரு. எஸ். ராஜம் அவர்கள் ஒரு புதிய முறையில் பெரியபுராணத்திற்கு வடிவு கொடுக்க எண்ணி, அருமையான சித்திரங்களாகவும் வரைபடங்களாகவும் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கினார். அவை அமைதியாகப் பரணில் தூங்கிக் கொண்டிருந்தன. இப்பொழுது அவை சித்திர பெரியபுராணம் என்ற பெயரில் வெளியாகின்றன. ஒவ்வொரு நாயன்மாருடைய வரலாறும் படங்களாக வெளி வருகின்றன. அவ் வரலாற்றிலுள்ள முடிமணியான பகுதி வண்ண ஓவியமாகவும், ஏனைய சிறந்த பகுதிகள் வரி வடிவ ஓவியங்களாகவும் வெளிவருகின்றன. அந்த வரலாற்றின் சுருக்கம் இடையிலுள்ள தாளில் இடம் பெறுகிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை வண்ணத்திலும் ஓவியத்திலும் ஈடுபடாதவர் இரார். வரம்புகளைத் தாண்டித் தமிழ் கூறும் நல்லுலகில் எந்த இடத்தில் வாழ்பவராயினும், எந்தச் சமயத்தைச் சேர்ந்தவராயிலும் அவர்கள் தமிழராக இருப்பின் தொண்டையும் குறிக்கோளையும் வற்புறுத்துகின்ற பெரியபுராணம் அவர்களுக்கு மிகவும் தேவைப்படும் என்ற கருத்தில் சித்திர பெரியபுராணம் வெளிவருகின்றது.

பெரியபுராணம் மக்களிடை நன்கு பரவாத ஒரு நூலாகும். அதனைப் பரப்புவதற்கு இப் புதுமுறையைத் தம் நுண் மதியால் கண்டு, அதைச் செய்து முடித்த ஓவியர் திரு. எஸ். ராஜம் அவர்கட்கும் தமிழகம் என்றுங் கடப்பாடு உடையதாகும்.

இந்த அருமையான சித்திரத் தொகுப்பைச் சில மாதங்களுக்கு முன்னர் பார்த்த திரு நா. மகாலிங்கம் அவர்கள் இதை வெளிக்கொணர முடிவு செய்து, நாயன்மார் பற்றிய குறிப்புகளைத் தொகுத்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி எனது கடமையைச் செய்துள்ளேன்.

அ.ச.ஞா

முகவுரை



''தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று தொடங்கி திருத்தொண்டத் தொகை என்று அழைக்கப்படும் பதினொரு பாடல்களைச் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளினார். இதில் சைவ நாயனார்கள் அத்தனை பேரையும் அவர் குறிப்பிட்டுள்ளார். அறுபத்து மூவர் என்று பொதுவாக அழைக்கப்படும் நாயன்மார்களுடைய வரலாறு பெரிய புராணம். இதை எமக்குத் தந்தவர் சேக்கிழார் பெருமான். சுந்தரருடைய திருத்தொண்டத் தொகையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இந்தக் காவியம் சிவத் தொண்டர்களின் பெருமையை உலகுக்கு எடுத்துரைக்கிறது.

சிறுவயதிலிருந்தே என்னைப் பெரிய புராண வரலாறுகள் கவர்ந்தன. செய்யுள் வடிவத்தில் இருந்த வரலாறுகளை வசன நடையில் சிலர் எழுதி இருக்கிறார்கள். ஓவியங்களிலும் அவற்றை வரைவதிலும் ஈடுபாடு கொண்டிருந்த எனக்கு அந்த வரலாறுகளை ஓவிய வடிவில் அமைக்க வேண்டும் என்ற ஆர்வம் எனது தகப்பனார் சுந்தரம் ஐயரிடமிருந்து கிடைத்தது. வரலாறுகளை மீண்டும் மீண்டும் படித்தேன். ஒவ்வொன்றிலும் உள்ள முக்கிய அம்சத்தை எடுத்து வண்ணப் படமாகவும் மிகுதி வரலாற்றைச் சாதாரண படங்களாகவும் வரைய ஆரம்பித்தேன். எல்லாவற்றையும் செய்து முடிக்கச் சில ஆண்டுகள் ஆயின.

ஓவியங்களை எடுத்துக் கொண்டு காஞ்சிப் பெரியவரிடம் சென்றேன். அவற்றைப் பார்த்து அவர் மகிழ்ச்சி அடைந்ததோடு என்னை ஆசீர்வதித்தார். அப்பொழுது அவர் சொன்னது இன்றும் எனக்கு நினைவில் இருக்கிறது. ''உலகிற்குத் தொண்டு செய்யும் ஒரு பெரிய தொழிலதிபர் இவற்றை வெளியிட முன்வருவார்'' என்று அவர் அப்பொழுது சொன்னார். நாட்கள் ஓடின. மாதங்கள் சென்றன. ஆண்டுகள் கழிந்தன.

ஒருநாள் அருட்செல்வர் மகாலிங்கம் அவர்கள் எனது இல்லத்திற்கு வந்தார். நான் வரைந்து வைத்திருந்த ஓவியங்கள் எல்லாவற்றையும் அவரிடம் காண்பித்தேன். சில மணித்தியாலங்கள் தங்கியிருந்து ஒவ்வொன்றாகப் பார்த்து மகிழ்ந்த பின், பெரியபுராண ஓவியங்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொண்டார். அப்படியே அவரிடம் ஒப்படைத்தேன்.

இந்த வரலாறுகள் யாவும் தமிழ் மக்களுக்கு மாத்திரமல்லாமல், தமிழ் அறியாத ஏனையோருக்கும் எடுத்து உரைக்கப்படுதல் வேண்டும் என்பது அவருடைய ஆசை. ஆகவே பிறமொழிகளிலும் சித்திர பெரியபுராணத்தை அச்சேற்ற அவர் தீர்மானித்துள்ளார்.

மகிழ்ச்சியோடும் மனத்திருப்தியோடும் நான் ஓவியங்களை அவரிடம் கொடுத்திருக்கிறேன். அவருடைய சிறந்த தமிழ்த் தொண்டு மேன்மேலும் சிறந்து விளங்க, அவருக்கு நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும், தில்லையில் திருநடம் புரியும் இறைவன் கொடுத்தருள வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

சென்னை

எஸ். ராஜம்

செப்டம்பர் 1990.

திருத்தொண்டத் தொகை

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே 1

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரில் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே 2

மும்மை யால் உலகாண்ட மூர்த்திக்கும்அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே 4

வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 5

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 6

பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையர்க் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 7

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 8

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாஞ் செருத்து ணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடிப்
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 9

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 10

மண்ணியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கனார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே. 11

பொருளடக்கம்

சமயகுரவர் நால்வர்


அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரருக்குச்
செப்பியநா லெட்டினிற் றெய்வீக - மிப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினா றறி

பாடிய சம்பந்தர் வைகாசி மூலம் பயிலுமப்பர்
நீடிய சித்திரை மாதச் சதய நிறைவன்றொண்ட
ராடியிற் சோதி திருவாத வூர்நல் லானிமகந்
தேடிய சேக்கிழார் வைகாசிப் பூசஞ் சிறந்தனரே

சித்திரையத்த முமாபதி யாவணித் திங்கடனி
லுத்திரஞ் சீர்கொண் மறைஞான சம்பந்த ரோதுகன்னிச்
சுத்தமெய்ப் பூர மருணந்தி யைப்பசிச் சோதிதனில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே

பொருளடக்கம்

(அகர வரிசைப்படி)



1

1. திருநீலகண்டர்

மட்பாண்டம் செய்யும் வளமான குடியிற் பிறந்த திருநீலகண்டர் இறைவனுடைய திருநீலகண்ட நாமத்தில் மிகுதியும் ஈடுபாடு கொண்டிருந்தமையின் அவர் இயற் பெயர் மறைந்து இதுவே அவர் பெயராகிவிட்டது. அழகிய இளம் மனைவியுடன் இல்லறம் நடத்தும்காலை ஒருமுறை இன்பத் துறையினில் எளியராகிப் பரத்தை வீடு சென்று வந்தார். இதனை அறிந்த மானம் பொறாத அவர் மனைவியார் ''திருநீல கண்டம் ஆணை! எம்மைத் தொடாதீர்'' என்று கூறிவிட்டமையின், மாதராரை மனத் தினாலும் தீண்டாதவராகி மனைவியுடன் ஒரே இல்லில் வாழ்ந்து வந்தார்.

திருநீலகண்டர் வாழ்ந்த காலத்தில் ஆண் மக்கள் பரத்தவையின் செல்லுதல் இச் சமுதாயத்தில் பெருங் குற்றமாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. மருதத்திணை என்ற ஒன்று தமிழ் இலக்கணத்திலேயே இடம் பெறுவதால் இது பெருங் குற்றமாக கருதப் படவில்லை என்று தோன்றுகிறது. அப்படியானால் திருநீலகண்டரின் மனைவி கொண்ட ஊடல் சாதாரணமாகக் க்ணவன் மனைவியரிடையே நிகழ்கின்ற ஊடலாக இருக்குமோ என்ற ஐயம் தோன்றலாம். அத்தகைய ஊடல், தணிவதற்கு உரிய ஒன் றாகும். அம்மையார் ''எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்'' என்று கூறினார் எனின் இது தணிக்கப்படக்கூடிய ஊடலன்று என்பதை நாம் அறிய முடிகிறது. இத னைக் கூறவந்த சேக்கிழார், தம் கணவன் பரத்தையிடம் சென்று வந்ததால் ஏற்படக் கூடிய பொருள் நட்டம், உடல் நல நட்டம் முதலியவற்றைப் பற்றிக் கவலைப்பட வில்லை. ஆனால் அச் செயல் தம் மானத்தைப் போக்கிவிட்டது என்பதற்காகவே வருந்தினார் என்று பாடுகிறார்.

திருநீலகண்டர் செய்தது தமக்கு மட்டுமல்லாமல் பெண் குலத்திற்கே இழைக் கப்பட்ட அவமானம் என்று கருதினார். அதனாலேயே அவரையும் அறியாமல் என்னை என்பதற்குப் பதிலாக 'எம்மை' என்று கூறிவிட்டார்.

ஒரு சிவனடியார் இவரிடம் ஒரு மண் ஓட்டைப் பாதுகாவலாக வைத்திருக்கும் படி தந்து சென்று பலகாலம் கழித்து மீண்டு வந்து அந்த ஓட்டைக் கேட்கவும், அது காணாமற் போய்விட்டமையின், அந்தச் சிவனடியார் இவரைக் களவாடி என்று வழக்குத் தொடர்ந்தார்.

தில்லை வாழ் அந்தணர்கள் நிறுவியிருந்த வழக்கு மன்றத்தில் கிழவர் தம்முடைய கட்சியை மிகத் தெளிவாக எடுத்துக் கூறினார். நல்லொழுக்கம் தலைநின்றவர் களாகிய அந் நீதிமன்றத்தார் பிரதிவாதியாகிய திருநீலகண்டரின் கட்சியை எடுத்துக் கூறுமாறு கூறினார்கள்.

வாதியின் குற்றச் சாட்டுகள் அனைத்தையும் ஒத்துக் கொண்ட திருநீலகண்டர் தம் மைக் களவாடி என்று மறையவர் கூறியதை மட்டும் மறுத்துவிட்டு ஓடு காணாமல் போய்விட்டது என்பதை ஏற்றுக் கொண்டார்.

நீதிமன்றத்தார் 'இவர், உம்மிடம் வைத்த ஓட்டைக் கெடுத்தீர் என்றால் அவர் கூறுகின்றபடியே குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்து தருதலே முறை' எனத் தீர்ப்பு வழங்கினர்.

மனைவியுடன் குளத்தில் இறங்கி பெரியார் தம் மனைவியைத் தீண்ட முடி யாமைக்குரிய காரணத்தை உலகறியக் கூறிவிட்டுத் தண்டு ஒன்றை இருவரும்பற்றி மூழ்கி எழவும் பழைய இளமை பெற்றுத் திகழ்ந்தனர்.

2

திருநீலகண்டர்

ஆதியார் நீல கண்டத் தளவுதாங் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணை கேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போல நோக்கி ''எம்மைஎன் றதனால் மற்றை
மாதரார் தமையும் என்றன் மனத்திலும் தீண்டேன்'' என்றார் 7


இந்நெறி ஒழுகும் நாளில் எரிதளிர்த் தென்ன நீண்ட
மின்னொளிர் சடையோன் தானுந் தொண்டரை விளக்கங் காண
நன்னெறி இதுவாம் என்று ஞாலத்தார் விரும்பி உய்யும்
அந்நெறி காட்டும் ஆற்றல் அருட்சிவ யோகி யாகி 10

தண்டிரு தலையும் பற்றிப் புகும்அவர் தம்மை நோக்கி
வெண்டிரு நீற்று முண்ட வேதியர் ''மாதைத் தீண்டிக்
கொண்டுடன் மூழ்கீர்'' என்னக் கூடாமை பாரோர் கேட்பப்
பண்டுதம் செய்கை சொல்லி மூழ்கினார் பழுதி லாதார் 38

வாவியின் மூழ்கி ஏறுங் கணவரும் மனைவி யாரும்
மேவிய மூப்பு நீங்கி விருப்புறும் இளமை பெற்றுத்
தேவரும் முனிவர் தாமும் சிறப்பொடு பொழியுந் தெய்வப்
பூவின்மா மழையின் மீள மூழ்குவார் போன்று தோன்ற 39

அந்நிலை அவரைக் காணும் அதிசயம் கண்டார் எல்லாம்
முன்னிலை நின்ற வேத முதல்வரைக் கண்டார் இல்லை;
''இந்நிலை இருந்த வண்ணம் என்?'' என் மருண்டு நின்றார்
துன்னிய விசும்பினூடு துணையுடன் விடைமேற் கண்டார் 40


S. Rajan



2. இயற்பகையார்

காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த பெருவணிகர் இவர். இருப்பினும் இறையன்பு மேலீட்டால் 'யாது ஒன்று என்பக்கல் உளதாகில் அது மாதவன் தன் அடியார் உடைமை' என்ற குறிக்கோளுடன் வாழ்ந்தவர். உலகியலை மீறித் தம்பால் உள்ளது எதுவாக இருப்பினும் அது அடியார் உடைமை என்று துணிந்து வாழ்பவர். அவரைப் பொறுத்தவரை மனைவியும் மக்களும், செல்வமும் தாமும் அடியார் உடைமை என்ற உறுதியான குறிக்கோளுடன் வாழ்ந்தவர்.

ஒருநாள் காமுக வேடத்துடன் வந்த ஒரு மறையவர் 'நீ அடியார்கள் கேட்பது எதுவாயினும் மறுக்காமல் தருகிறாய் என்று கேள்விப்பட்டு உன்பால் ஒன்றை விரும்பி வந்தனன். தர வியலுமாயின் கேட்கிறேன்' என்றார். இயற்பகை 'சரி' என்றவுடன் 'உன் காதல் மனைவியை விரும்பி வந்தேன்' என்று அந்த மறையவர் கூறியவுடன் ஒரு சிறிதும் மனக் கலக்கம் அடையாமல் மனைவியை அழைத்து வந்து அடியவரிடம் நிறுத்தினார். மறையவர் அம்மையாருடன் புறப்பட்டார்.

இயற்பகை பித்தன் என்று கருதிய சுற்றத்தார் கூட்டம் மறையவரைத் தடுத்தது. இயற்பகை வாளேந்திப் போரிட்டு அவர்களை அழித்து ஊர் எல்லைவரை மறையவைரைக் கொண்டுசென்று 'இனி நீர் போகலாம்' என்று கூறி மீண்டார்.

'அயர்ப்பிலன் போனான்' என்று வியந்த மறையவர் 'இயற்பகை முனிவா ஓலம், ஈண்டு நீ வருவாய் ஓலம்' எனக் கூவினார். இக்குரல் கேட்டு மீண்ட இயற்பகை திரும்ப ஓடிச் சென்று பார்க்கையில் மனைவியார் மட்டும் நிற்க மறையவர் மறைந்து இறைவன் காட்சி நல்குவதைக் காணும் பேறு பெற்றார். இறந்த பந்துக்களும் உயிர் பெற்றனர்.

இன்றும் பிரச்னைக்குரியதாய்ப் பக்தர்கள்கூடச் சமாதானம் சொல்ல முடியாத செயல் என்று கூறும் நிலையில் இருப்பது இயற்பகையார் வரலாறு. இந்தச் சூழ் நிலையை மனத்தில் கொண்டே, ஏனைய மனிதர்களை அளவிடுகின்ற சட்ட திட்டங்களைக் கொண்டு இவரை அளவிட முடியாது; கூடாது என்பதை நினைவூட்டவே 'உலகியல் பகையார்' என்று சேக்கிழார் கூறுகிறார்.

இதையும் அல்லாமல் ஆழ்ந்து சிந்தித்தால் ஓர் உண்மை தெளிவாக விளங்கும். இயற்பகையாரைப் பொறுத்தமட்டில் தற்போதத்தை முற்றிலும் இழந்தவர் என்பதாலும், தம்மை உள்படத் தம்பால் உள்ள ஸ்தாவர (நிலையியல் பொருள்), சங்கமச் சொத்துகள் (இயங்கியல் பொருள்) அனைத்தையும் மாதவன் தன் அடியார் உடைமை என்று முடிவாகக் கருதி வாழ்ந்தவர் என்பதாலும் இவரை நம்மில் ஒருவராகக் கொண்டு ஆய முடியாது.

தான் என்ற ஒரு பொருளை இழந்துவிட்ட ஒருவனுக்கு மனைவி, மக்கள் என்ற உறவோ, உறவுக்குரிய பொருளோ எதுவும் இல்லை என்பதை உணர வேண்டும். ஆழ்ந்த பக்தன், தீவிரக் காதலன், மனவியல் திரிந்தவன், உணர்ச்சி வசப்பட்ட கலைஞன் ஆகியவர்கள் அனைவருக்கும் தத்தம் நிலைமைக்கு ஏற்பத் தாம் என்ற தற்போதத்தை இழந்தவர்களே ஆவர். எனவே இவர்கள் செயலை நமது அளவுகோலால் அளப்பது அறியாமை. இயற்பகையின் சுற்றத்தார்கூட அவரை அறிந்து கொண்டதாகத் தெரியவில்லை. "இயற்பகை பித்தனானால் புனைஇழை தன்னைக் கொண்டு ஒருவன் போவதோ?" என்று பேசியதாகச் சேக்கிழார் கூறுவதிலிருந்து அடியாரின் உளக்கருத்தை அறியாத அவர் சுற்றத்தார்கூட அவரைப் பைத்தியம் என்றே கருதினார்கள் என்று தெரிகிறது.

6

இயற்பகையார்

மனைவியார் சுற்றத் தாரும் வள்ளலார் சுற்றத் தாரும்
''இனையதொன் றியாரே செய்தார்? இயற்பகை பித்த னானால்
புனையிழை தன்னைக் கொண்டு போவதாம் ஒருவன்'' என்று
துனைபெரும் பழியை மீட்பான் தொடர்வதற் கெழுந்து சூழ்வார் 13

செய்வதற் கரிய செய்கை செய்தநற் றொண்டர் போக
மைதிகழ் கண்டன் எண்டோள் மறையவன் மகிழ்ந்து நோக்கிப்
''பொய்தரும் உள்ளம் இல்லான் பார்க்கிலன் போனான்'' என்று
மெய்தரு சிந்தை யாரை மீளவும் அழைக்க லுற்றான். 28


சென்றவர் முனியைக் காணார்; சேயிழை தன்னைக் கண்டார்,
பொன்றிகழ் குன்று வெள்ளிப் பொருப்பின்மேற் பொலிந்த தென்னத்,
தன்றுணை யுடனே வானில் தலைவனை விடைமேற் கண்டார்,
நின்றிலர்; தொழுது வீழ்ந்தார்; நிலத்தினின் றெழுந்தார்; நேர்ந்தார் 31

''சொல்லுவ தறியேன் வாழி; தோற்றிய தோற்றம் போற்றி!
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலத்துளாடும் சேவடி போற்றி'' என்ன 32


விண்ணிடை நின்ற வெள்ளை விடையவர் அடியார் தம்மை
''எண்ணிய உலகு தன்னில் இப்படி நம்பால் அன்பு
பண்ணிய பரிவு கண்டு மகிழ்ந்தனம்; ப்ழுதி லாதாய்!
நண்ணிய மனைவி யோடு நம்முடன் போது'' கென்று 33



NO 41.



2



3

3. இளையான்குடி மாறர்

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இளையான்குடி என்ற ஊரில் பிறந்த இளையான்குடி மாறர் வேளாண்மை செய்கின்ற பெரும் குடும்பத்தில் தலைவராக வாழ்ந்தவர். ''ஏரின் மல்கு வளத்தினால் வந்த எல்லையில்லாத செல்வத்தைத் தெருவில் நேர வந்தவர் யாராக இருப்பினும்' அவர்களைச் சிவனடியார்கள் என்று நினைத்து அமுதூட்டி மகிழ்கின்ற கொள்கை உடையவர்.

எல்லாச் செல்வமும் மறைந்த பின்பும், ஊரைச் சுற்றிக் கடன் வாங்கியேனும் இவ்வறத்தை விடாது கடைப்பிடித்தவர்.

வறுமை மிகுந்த நிலையில் நல்ல மழைக் காலத்தில் அடியார் ஒருவர் வர, அவருக்கு அமுதூட்ட வேண்டி, அன்று காலையில் விதைத்த விதை நெல்லை வாரிக் கொண்டுவந்து, கூரையை அறுத்து விறகாக்கி, கொல்லையில் முளைத்திருந்த கீரைகளையல்லாம் இருட்டில் தடவித் தடவிப் பார்த்துத் தம் பிறவியையே 'வேரோடு அறுப்பவர்போலக் கீரைகளை வேருடன் பறித்துக் கொண்டுவந்து இனிய அடிசிலாக்கி அடியாரை உண்பிப்பதற்காகத் திண்ணையில் சென்று பார்க்கும்போது அடியார் சோதி வடிவாக நின்று 'அன்பனே! உயிர்களின் பசிப் பிணி தீர்த்த நீ என்னுடன் வந்து வாழ்வாயாக' என்று அருள் செய்து ஏற்றுக்கொண்டார் அழைத்துச் சென்றார்.

இவ் வரலாற்றின் தனிச் சிறப்பைச் சேக்கிழார் அற்புதமாக வெளிப்படுத்துகிறார். திருநீறு இட்ட சிவனடியார்களுக்கு மட்டும் இளையான்குடி மாறர் உணவு படைத்திருந்தால் அது அவருடைய சமயப்பற்றைக் காட்டுமே தவிர உயிர்கள் மாட்டுக் கொண்ட அன்பை வெளிப்படுத்தாது. மாறர், சமய வேறுபாடு கருதாமல், மக்கள் அனைவருக்கும் உணவிட்டார் என்பதைக் கூறவந்த சேக்கிழார் 'தெருவில் நேர வந்தவர் யாவராயினும் அவர்களை இறைவனுடைய அடியார்கள்' என்றே கருதிக் கூட்டி வந்து உணவருத்தினார் என்று கூறுகிறார்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் பசித்தவர்க்கு உணவிடுதலைத் தலையாய அறமாகக் கொண்டு விளங்கினர் தமிழர் என்பதை அறிய முடிகிறது. 'பசிப்பிணி மருத்துவன்' என்று சங்கப் பாட்டிலும், 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று மணிமேகலையிலும் வரும் தொடர்கள் இக்கருத்தை வலியுறுத்தும். நாளாவட்டத்தில் சமய வேறுபாடுகள் மல்கி விருப்பு வெறுப்புகள் வளர்ந்த காலத்தில் அவரவர் சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் உணவிட்டனர் என்று தோன்றுகிறது. இத்தமிழகத்தில் என்றோ தோன்றி வளர்ந்த சைவம், வைணவம் என்பவை போக, புதிதாக வந்த பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களில்கூட அவ்வச் சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கு சோறிடல் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திச் சென்றனர். ஆனால் பெரிய புராணத்தில் காணப்பெறும் அடியார்கள் சைவர்கள் பிறர் என்ற வேறுபாடு கருதாமல் உணவிட்டனர் என்கிறார் சேக்கிழார். திருவீழிமிழலைப் பஞ்சத்தில் உணவிட்ட திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசருங்கூட 'நாதன் விரும்பும் அடியார்கள் அனைவரும் வந்து உணவு கொள்க' என்றுதான் பறையறைவித்தனர் என்கிறார் சேக்கிழார். ஆகவே உணவிடும்போது எவ்வித பாகுபாடும் காட்டாது பசித்தவருக்கு உணவிடுவது பண்பு என்பதை இதிலிருந்து அறியலாம்.


இளையான்குடி மாறர்


உள்ளம் அன்புகொண் டுக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின்வழிப்
புள்ளு றங்கும் வயல்புகப் போயினார்
வள்ள லார்இளை யான்குடி மாறனார் 17

வழிவரும் இளைப்பி னோடும் வருத்திய பசியினாலே
''அழிவுறும் ஐயன்'' என்னும் அன்பினிற் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க 21

''அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய்; ஈண்ட அமுதுசெய் தருள்க'' என்று
தொழும்பனார் உரைத்த போதில் சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாரும் தொண்டரும் திகைத்து நின்றார் 24

மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதி யாகச்
சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் தான் மகிழ்ந்தே
ஏலவார் குழலாள் தன்னோ டிடபவா கனனாய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி 25





4. மெய்ப்பொருளார்

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திருக்கோவிலூரில் மலாடர் என்ற இனத்தில் தோன்றிச் சிற்றரசராக வாழ்ந்தவர் மெய்ப்பொருள் நாயனார். சிவ வேடமே சிவபரம்பொருள் என்ற உறுதியான குறிக்கோளுடன் சிவனடியார்களுக்கு வேண்டுவதை அவர்கள் குறிப்பறிந்து செய்து முடிக்கும் பணியை வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருந்தவர்.

இவருடன் பகைகொண்ட முத்தநாதன் என்பவன் பலமுறை இவருடன் போர் செய்து தோற்று, இறுதியாக, சிவனடியார்களிடத்தில் இவருக்கு இருக்கும் எல்லையற்ற பக்தியையே உபாயமாகக் கொண்டு வஞ்சகத்தால் இவரை வெல்ல முடிவு செய்தான்.

சுற்றிலும் ஒளி தந்தாலும் விளக்கின் திரி கறுப்பாக இருப்பது போல, மனத்தினுள் கொலை நோக்கம் கொண்ட அவன் சிவனடியார் வேடம் அணிந்து கத்தியைச் சுவடிக்குள் மறைத்துக் கொண்டு மெய்ப்பொருளாரின் அரண்மனையுள் புகுந்தான்.

பல காவல்களையும் கடந்து உள்ளே சென்ற அவனை, அரசன் உறங்குகின்ற அறையைக் காவல்செய்யும் தத்தன் என்ற காவலன் கண்டு ஐயுற்று, உள்ளே விடாமல் தடுக்க முயன்றான். தவ வேட்ம் பூண்ட வஞ்சகன் 'அரசனுக்கு உறுதிப் பொருள் கூறப் போகும் என்னைத் தடுக்க நீ யார்?' என்று கூறிவிட்டு அரசன் படுக்கையறையுள் புகுந்தான்.

இவனைக் கண்டவுடன் சிவனடியார் என்று நினைத்த அரசியார் ஒதுங்கிவிட, மெய்ப்பொருள் எழுந்து சிவனடியாரை மண்டியிட்டு வணங்க, முத்தநாதன் தன் குறுவாளால் அவரைக் குத்தி விட்டான். இவன் உள்ளே சென்றபோதே இவனைச் சந்தேகித்த தத்தன் கணநேரத்தில் உள்ளே புகுந்து இவனைக் கொல்ல வாளை ஓங்கவும், 'தத்தா! நமரே காண். இவருக்கு எவ்வித ஆபத்தும் இல்லாமல் நமது நகர எல்லையில் கொண்டு விட்டு மீண்டு வா'! என்று அரசன் ஆணையிட்டான்.

உடன் இருந்த அரசியல் ஆயத்தாருக்கு 'தீருநீற்று அன்பு பாதுகாத்து உய்ப்பீர்' என்று அறிவுரை வழங்கிவிட்டு மெய்ப்பொருள் இறையடி சேர்ந்தார்.

பகைவனால் குத்திக் கொல்லப்பட்ட மெய்ப்பொருள் நாயனாரைக் குறிக்கவந்த சுந்தர மூர்த்தி நாயனார் 'வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கடியேன்' என்று கூறுவது விந்தையேயாகும்.

கொல்லப்பட்டவர் எப்படி வென்றவர் ஆக முடியும்?

இதனைச் சிந்திக்கத் தொடங்கினால் அடியார்கள் வரலாற்றின் ஒரு நுணுக்கத்தை அறியமுடியும். 'சாவதும் புதுவது அன்று' என்று கண்ட தமிழ் மக்கள் ஒருவர் இறந்து போவதை வைத்து வெற்றி தோல்விகளை முடிவு செய்ய மறுத்து விட்டனர். மாபெரும் கொள்கை (தத்துவம், குறிக்கோள்) ஒன்றை மேற்கொண்டு வாழ்ந்து அதனைக் கைவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட நேரத்தில் உயிரை விட்டாவது தம் கொள்கையை நிலை நிறுத்துபவர்களைத் தொண்டர் என்றும், அடியார் என்றும் கூறுகிறோம். இத்தகையவர்கள் கொள்கையை நிலைநிறுத்தி உயிரை விட்டாலும் வென்றார்கள் என்று கூறுவதே மரபு. அழிந்தது உடம்பே தவிர உயிரோ, கொள்கையோ அல்ல. எனவேதான் 'வெல்லுமா மிகவல்ல' என்று சுந்தரர் பாடினார்.

உயிர் பிரிகின்ற நேரத்திலும் தம்மைக் குத்தியவர் அடியார் வேடம் அணிந்துள்ளார் என்ற ஒரே காரணத்திற்காக 'அவருக்கு ஒரு தீங்கும் நேராமல் கொண்டுபோய் விடுக' என்று ஆணையிடுகிறார் நாயனார். அடியார் வேடத்துக்கு உயிர் உள்பட எதனையும் தியாகம் செய்யலாம், என்பது அவருடைய கொள்கையாகும். அந்த வேடத்தைத் தாங்கியவர் நல்லவரா, தீயவரா, உண்மையில் அடியாரா என்பதெல்லாம் அவருக்குத் தேவை இல்லாதவையாகும். எனவே இறுதிவரை அவருடைய கொள்கையில் உறுதியாக நின்று அக் கொள்கையை நிலைநிறுத்துவதற்காகவே உயிரை விட்டார். ஆகலின் அவர் வென்றவரே யாவர் என்பதே சுந்தரர், சேக்கிழார் இருவருடைய முடிவுமாகும்.

மெய்ப்பொருளார்

மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்த நாதன் 7

''மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற தென்கொலோ?'' என்று கூற
''உங்கள்நா யகனார் முன்னம் உரைத்தஆ கமநூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று கொடுவந்தேன் இயம்ப'' என்றான் 12


கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்தப்,
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன் நினைந்தஅப் பரிசே செய்ய,
''மெய்த்தவ வேட மேமெய்ப் பொருள்'' எனத் தொழுது வென்றார் 15

மறைத்தவன் புகுந்த போதே மனம்அங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கட் கூடி வாளினால் எறிய லுற்றான்;
நிறைத்தசெங் குருதி சோர வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப்படும் அளவில் ''தத்தா! நமர்'' எனத் தடுத்து வீழ்ந்தார் 16


அரசியல் ஆயத் தார்க்கும் அழிவுறும் காத லார்க்கும்
விரவிய செய்கை தன்னை விளம்புவார் ''விதியினாலே
பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீர்'' என்று
புரவலர் மன்று ளாடும் பூங்கழல் சிந்தை செய்தார் 22



4



No 42







5. விறன்மிண்டர்

சேர நாட்டில் செங்குன்றூர் என்ற ஊரில் வேளாண் குலத்தில் பிறந்த இப் பெரியார் ''சிவனார் செய்ய கழல்பற்றி, எப்பற்றினையும் அற எறிவார் எல்லை தெரிய ஒண்ணாதார், மெய்ப் பத்தர்கள்பால் பரிவுடையார் விறன் மிண்டர்'' என்ற பெயர் தாங்கிப் பல ஊர்களும் சென்று இறைவன் புகழ்பாடி இறுதியாகத் திருவாரூரில் தங்கித் தேவாசிரிய மண்டபத்தில் தங்கியுள்ள சிவனடியார்களுடன் வாழ்ந்து வந்தார்.

திருவாரூர்க் கோயிலினுள் செல்பவர்கள் முதலில் இச் சிவனடியார்களை வணங்கிவிட்டுத்தான் இறைவனை வணங்க உள்ளே செல்ல வேண்டும் என்பது அன்றைய மரபு.

இதனை அறியாத சுந்தர மூர்த்தி நாயனார் அடியார்களை வணங்காமல் தியாகேசனை வணங்க உள்ளே சென்ற காரணத்தால் அவரையும் அவரைத் தடுத்து ஆட்கொண்ட சிவபெருமானையுமே அடியார் கூட்டத்திலிருந்து விலக்கி வைக்கிறேன் என்று கூறும் துணிவு படைத்த திருத்தொண்டராவார் இவர்.

விறன்மிண்டருடைய வரலாற்றிலிருந்து ஓர் உண்மையை அறிய முடிகிறது. விறன் மிண்டர், ஏயர்கோன் கலிக்காமர் போன்ற பெரு மக்கள் வாழ்க்கையில் ஏதோ ஒன்றைத் தம் குறிக்கோளாகக் கொள்கின்றனர். அந்தக் குறிக்கோளை நோக்கிச் செல்கின்ற தம் முன்னர் எந்தத் தடை வந்தாலும் அதனைப் பொருட்படுத்தாது தம் கொள்கையை நிலை நிறுத்துவர். சில சமயங்களில் இறைவனே வந்து இக் கொள்கையை விட்டுவிடுக என்று கூறினாலும், இப் பெருமக்கள் இறைவனையே வேண்டாம் என்று கூறித் தம் கொள்கையை நிலைநிறுத்த முற்படுவார்கள்.

யாராக இருப்பினும் அடியார்களை வணங்கிவிட்டுத்தான் கோயிலின் உள்ளே செல்ல வேண்டும் என்ற மரபை உறுதியாக நம்பினவர் விறன்மிண்டர். அதை மீறியவர் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற தம்பிரான் தோழர் என்றாலும் அவரை ஒதுக்கிவிடத் தயங்கவில்லை.

இந்த அடியார்களைப் பொறுத்தவரை எதனைத் தம் கொள்கையாகக் கொள்கிறார்கள் என்பதுபற்றி ஆய்வதில் பயனில்லை. உயர்ந்த கொள்கைகள் என்று நாம் கருதுவதை இவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று கூறமுடியாது. சில சமயங்களில் நாம் சாதாரணமானவை என்று கருதுவதைக்கூட இவர்களில் சிலர் மாபெருங் கொள்கையாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர். எனவே கொள்கை எது என்று ஆராயாமல் அதனை இறுதிவரைக் கடைப்பிடித்தார்களா என்று காண்பதில்தான் இவர்களை இனங்கண்டு கொள்ள முடிகிறது.

கொள்கைக்காக வாழ்ந்தவர்கள் என்ற அடிப்படையிலேதான் நாயன்மார்கள் தொகுப்பு ஏற்பட்டுள்ளது.

விறன்மிண்டர்

அப் பொற் பதியி னிடை வேளாண்குலத்தை விளக்க அவதரித்தார்;
செப்பற்கரிய பெருஞ்சீர்த்திச் சிவனார் செய்ய கழல்பற்றி
எப்பற்றினையும் அறஎறிவார் எல்லைதெரிய ஒண்ணாதார்
மெய்ப்பத்தர்கள்பாற் பரிவுடையார்; எம்பிரானார்; விறன்மிண்டர் 4

திருவார் பெருமை திகழ்கின்ற ''தேவா சிரிய னிடைப் பொலிந்து,
மருவா நின்ற சிவனடியார் தம்மைத் தொழுது வந்த ணையா(து)
ஒருவா றொதுங்கும் வன்றொண்டன் புறகென்'' றுரைப்பச் சிவனருளால்,
பெருகா நின்ற பெரும் பேறுபெற்றார்; மற்றும் பெறநின்றார் 7

சேணார் மேருச் சிலைவளைத்த சிவனார் அடியார் திருக்கூட்டம்,
பேணார்தேகும் ஊரனுக்கும் ''பிரானாம் தன்மைப் பிறைசூடிப்
பூணார் அரவம் புனைந்தார்க்கும் புற''கென் றுரைக்க மற்றவர் பால்,
கோணா அருளைப் பெற்றார்மற் றினியார் பெருமை கூறுவார் 8

ஞாலம் உய்ய நாம்உய்ய நம்பி சைவ நன்னெறியின்,
சீலம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பாடச் செழுமறைகள்,
ஓலம் இடவும் உணர்வரியார் ''அடியார் உடனாம் உள'' தென்றால்,
ஆலம் அமுது செய்தபிரான் அடியார் பெருமை அறிந்தாரார்? 9

வேறு பிறிதென்? திருத்தொண்டத் தொகையால் உலகு விளங்கவரும்,
பேறு தனக்குக் காரணராம் பிரானார் விறன்மிண்டரின் பெருமை,
கூறும் அளவென் அளவிற்றே? அவர்தான் சென்னி மேற்கொண்டே,
ஆறை வணிகர் அமர்நீதி அன்பர் திருத்தொண் டறைகுவாம் 11

6. அமர்நீதியார்

சோழ நாட்டில் பழையாறை என்ற திருப்பதியில் வணிகர் குலத்தில் தோன்றிய அமர்நீதியார் இறைவன் திருவடிகளை வணங்குவதும் அவனது அடியார்க்கு அமுது செய்வித்து அவர்களுக்கு உடை, கோவணம் முதலிய தேவைகளைத் தருவதுமே கொள்கையாகக் கொண்டிருந்தார். திருநல்லூரில் நடைபெறுகின்ற இறைவன் திரு விழாக் காண வருகின்ற அடியவருக்கு திருமடம் ஒன்று கட்டி அங்கு வரும் அடியவர் களை உபசரித்து வேண்டுவன செய்து வந்தார்.

ஒருநாள் இறைவன் பிரம்மசாரி வடிவம் கொண்டு வந்து அமர்நீதியாரிடம் தன்னுடைய கோவணம் ஒன்றைக் கொடுத்து ''நான் சென்று நீராடி வரும் வரையில் இக் கோவணத்தைப் பத்திரமாகப் பாதுகாத்து வையும்'' என்று கூறிவிட்டு நீராடச் சென்றான். அமர்நீதியார் அக்கோவணத்தை வாங்கிப் பாதுகாவலான இடத்தில் வைத்துப் பூட்டினார். நீராடச் சென்ற மறையவர் இக்கோவணத்தைப் போக்கிவிட்டு உடல் முழுவதும் நனைந்த நிலையில் அமர்நீதியாரிடம் வந்து ''நாம் தந்த கோவணத் தைக் கொண்டு வாரும்'' எனக் கேட்டார். உள்ளே சென்று வைத்த இடத்திலும், வேறு இடங்களிலும் தேடியும் பிரம்மசாரியார் வைத்த கோவணத்தைக் காணவில்லை. மனம் நொந்து வருந்தி வேறு புதிய கோவணம் கொண்டு வந்து ''ஐயனே, தாங்கள் வைத்த கோவணம் காணாமல் போய்விட்டது. அதற்குப் பதிலாக இப் புதிய கோவ ணத்தை ஏற்றுக் கொள்க'' என்று வேண்டினார். மிகக் கோபமடைந்த பிரம்மச்சாரி யார் ''நீர் எம்முடைய கோவணத்தைத் திருடுவதற்காகவே அடியார்களை உபசரிப்ப தாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்'' என்று எரி துள்ளினால் என வெகுண்டார்.

இறுதியாகத் தம்மிடமிருந்த மற்றொரு கோவணத்தைத் தந்து இதற்கு எடைக்கு எடை துணிகள் தருவதானால் ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று மறையவர் கூற அமர் நீதியார் அதனை ஏற்றுக் கொண்டார்.

துலாக்கோல் ஒன்றை நட்டு மறையவர் கோவணத்தை ஒரு தட்டில் வைத்து மற் றொரு தட்டில் தம் செல்வத்தை எல்லாம் போடவும் துலை நேர் நில்லாது போக, இறுதியாக தாமும், மனைவியும், மகனும் துலையில் ஏறி நின்றவுடன் துலை நேர் நின்றது.

துலாக்கோலில் அமர்நீதியாரின் செல்வம் முழுவதையும் வைத்தும் அது நேர் நிற்கவில்லை என்று அவர் வரலாறு கூறுகிறது. இதன் அடிப்படையைச் சற்று ஆராய வேண்டும். அடியாராக வந்த இறைவனின் ஒரு துணியின் எதிரே இத்தனை செல்வ மும் நேர் நிற்கவில்லை என்றால் என்ன பொருள்? அடியாரின் (இறைவன்) துணி இங்கே அவருடைய அருளைக் குறிக்கும் அடையாளமாக இருக்கிறது. அந்த அருளின் எதிரே பொருட் செல்வம் எந்த அளவிற்கு வைக்கப்பட்டாலும் நேர் நில்லாது என் பது முறையேயாகும்.

தம்முடைய செல்வம் முழுவதும் நேர் நிற்கவில்லை என்பதைப் பார்த்தவுடன் இந்த அடிப்படை நுணுக்கத்தை நன்கு புரிந்து கொண்டார் அமர்நீதியார். ஈடு இணை யற்றதாகி இறைவனின் திருவருளுக்கு நேர் நிற்க வேண்டுமானால் அது உயிர்களின் முழு அன்பாக இருக்க முடியுமே தவிர வேறு எதுவும் நேர் நில்லாது. அன்பைப் பிரித்துத் துலாக்கோலில் இடுதல் இயலாத காரியம். எனவே அன்பு நிறைந்த தம் உள்ளத்தோடு தம்மையும் தம் குடும்பத்தையும் துலாக் கோலில் ஏற்றினார் அமர்நீதி யார். துலாக் கோல் நேர் நின்றது. காரணம் கூற வந்த சேக்கிழார் ''அண்டார் தம்பிரான் திருஅறைக் கோவணம் அதுவும், கொண்ட அன்பினில் குறைபடா அடி யவர் அடிமைத் தொண்டும் ஒத்தலால் நேர் நின்றதுஅத் துலைதான்'' என்று பாடு

கிறார். அடிமைத் தொண்டு என்று கவிஞர் கூறுவது சிந்திக்கத்தக்கதாகும். தொண்டு என்று கூறினவுடன் முழுவதுமாக 'நான், எனது' என்பது அற்றுச் செய்யப் பெறும் பணியையே அது குறிக்கும். என்றாலும் தொண்டு என்ற செயல், அதனைச் செய்யும் தான் என்ற வேறுபாடு ஓரளவு இருக்கத்தான் செய்யும். அதுவும் இல்லை ஏன்று கூறவந்த கவிஞர் 'அடிமைத் தொண்டு' என்று கூறுகிறார். அடிமை என்றவுடன் சுதந்திரம் கடுகளவும் இல்லாத ஒருவன் என்ற பொருள் கிடைக்கின்றது.

அவனருளாலே அவன் தாள் வணங்கிப் பேறு பெற வேண்டும் என்பதற்கு உதாரணமாக இந்த வரலாறு விளங்குகிறது.

அமர்நீதியார்


முக்கண் நக்கராம் முதல்வனா ரவர்திரு நல்லூர்
மிக்க சீர்வளர் திருவிழா விருப்புடன் வணங்கித்
தக்க அன்பர்கள் அமுதுசெய் திருமடம் சமைத்தார்;
தொக்க சுற்றமும் தாமும்வந் தணைந்தனர் தூயோர் 4


பிறைத்த ளிர்ச்சடைப் பெருந்தகைப் பெருந்திரு நல்லூர்க்
கறைக்க ளத்திறை கோவணப் பெருமைமுன் காட்டி
நிறைத்த அன்புடைத் தொண்டர்க்கு நீடருள் கொடுப்பான்
மறைக்கு லத்தொரு பிரமசா ரியின்வடி வாகி 6

தொண்டர் அன்பெனுந் தூயநீர் ஆடுதல் வேண்டி
''மண்டு தண்புனல் மூழ்கிய ஈரத்தை மாற்றத்
தண்டின் மேலதும் ஈரம், நான் தந்தகோ வணத்தைக்
கொண்டு வாரும்'' என் றுரைத்தனர்; கோவணக் கள்வர் 19

மனம கிழ்ந்(து) அவர் மலர்க்கழல் சென்னியால் வணங்கிப்
புனைம லர்க்குழல் மனைவியார் தம்மொடு புதல்வன்
தனையு டன்கொடு தனித்துலை வலங்கொண்டு தகவால்
இனைய செய்கையில் ஏறுவார் கூறுவார் எடுத்து 42

''இழைத்த அன்பினில் இறைதிரு நீற்றுமெய் யடிமை
பிழைத்தி லோம்எனிற் பெருந்துலை நேர்நிற்க!''. என்று
மழைத்த டம்பொழில் திருநல்லூர் இறைவரை வணங்கித்
தழைத்த அஞ்செழுத் தோதினார் ஏறினார் தட்டில் 43


ND43
6



7. எறிபத்தர்

இடைக்காலச் சோழர்களின் இரண்டாவது தலைநகரம் கருவூர். புகழ்ச் சோழன் என்ற சோழப் பேரரசன் காலத்தில் கருவூரில் எறிபத்தர் என்ற சிவனடியார் வாழ்ந்து வந்தார். பரசு என்று சொல்லப்படும் கோடாரி ஒன்றை எப்பொழுதும் தாங்கிக் கொண்டிருக்கும் அவர் சிவனடியார்களுக்கு ஏதேனும் ஊறு நேர்ந்தால் அவ்வாறு தீங்கு செய்பவர்களைத் தம் மழுவினால் தண்டிக்கின்ற பணியை மேற்கொண்டிருந் தார்.

சிவகாமியாண்டார் என்ற வயோதிகச் சிவனடியார் இறைவனுக்குச் சாற்றுவதற் காகப் பூக்களைப் பறித்துக் குடலையில் வைத்துத் தெருவழியே சென்று கொண்டிருந் தார். அரசனுடைய பட்டத்து யானை சிவனடியாரின் பின்னே வந்து அக் குடலை யைப் பறித்துச் சிதறிவிட்டது. சிவகாமியாண்டார் பதறி அழவும் அவ் வழுகுரலைக் கேட்ட எறிபத்தர் வேகமாகச் சென்று யானையின் துதிக்கையை வெட்டி வீழ்த்தி னார்.

யானை வீழ்த்தப்பட்ட செய்தியை அரசனிடம் சென்று கூறியவர்கள் 'நின் பட்ட மால் யானை வீழச் செற்றனர் சிலராம்' என்று கூறிவிட்டனர். பகையரசன் யாரோ தன் படையுடன் நாட்டினுள் புகுந்ததாகத் தவறாக எண்ணிக் கொண்ட மன்னவன் குதிரை ஏறி யானை இறந்துகிடந்த இடத்திற்கு வந்து பார்க்கும்போது பகைவர் யாரும் இல்லாததைக் கண்டு திகைத்தான். உடன் இருந்தவர்கள் 'இச்சிவனடியாரே யானையைச் செற்றவர்' என்று கூறவும், திடுக்கிட்ட அரசன் இறைவன் அடியார்கள் பிழை நடந்தாலொழியக் கொன்றிருக்க மாட்டார்கள் என்று நினைத்துக் குதிரையி லிருந்து இறங்கி அடியவர் முன்னே சென்றான். 'அடியார் ஒருவருக்கு யானை இழைத்த குற்றத்திற்கு இத் தண்டனை மட்டும் போதாது, இத்தவறு நடக்கவிட்ட என்னையும் தண்டித்தல் வேண்டும். தங்களுடைய கையிலுள்ள மழுவினால் கொல் லப்படுவதற்கு யான் தகுதி உடையவன் அல்லன். எனவே என்னுடைய உடை வாளால் என்னை வெட்டிவிடுங்கள்' என்று கூறி வாளை நீட்டி நின்றான்.

இதனைக் கேட்ட சிவனடியார் அஞ்சி நடுங்கிவிட்டார். அடியார்கள் அரசராகக் கூட இருப்பார்கள் போலும் என்று நினைத்து எறிபத்தர் மன்னவனுடைய பெரு மையை அறியாது தாம் இழைத்த இக்காரியத்திற்காக வருந்தினார். சோழனாகிய சிவனடியாரைப் புரிந்து கொள்ளாமல் தாம் செய்த இக்காரியத்திற்கு வருந்தி மன்ன னுடைய வாளால் தம் கழுத்தை அறுத்துக் கொள்ளப் புறப்பட்டார். இதனைக் கண்டு திடுக்கிட்ட மன்னன் சிவனடியார் கையைப் பிடித்து நிறுத்த, ஒருவர் மேல் ஒருவர் கொண்ட 'அளவிலாப் பரிவினால்' வந்த இடுக்கணை அகற்ற வேண்டி இறைவன் அசரீரியாக 'உங்களுடைய அன்பை உலகிற்குக் காட்டவே இதனைச் செய்தோம். இனி அவரவர் பணிமேல் செல்க' என்று கூறவும் உயிர் பெற்று எழுந்த யானையின் மேல் சிவனடியாரை வைத்துத் தானும் ஏறிக் கொண்டு மன்னவன் நகருக்குள் சென்று விட்டான்.

எறிபத்தர் போன்ற சிவனடியார்கூடச் சில சமயங்களில் புறக் கோலத்தைக் கொண்டு ஒரு சிலரை எடைபோட்டு விடுகின்றனர். புகழ்ச் சோழர் அரசராக இருந்த காரணத்தால் தலையாய சிவனடியாராக இருக்க முடியாது என்ற முடிவுடன் இருந் தவர் எறிபத்தர். தம்மையும் கொல்ல வேண்டும் என்று கூறியதுடன் 'மங்கல மழுவால் கொல்கை வழக்கன்று' என்று கூறி உடைவாளை நீட்டிய மனிதரை, இதுவரைத் தாம் அரசர் என்று கருதிய ஒருவரைப் புதிய நோக்கில் எறிபத்தர் பார்க்க முடிகின்றது.

சிவனடியார்கள் அரச வேடத்திலும் இருப்பார்கள் என்ற பேருண்மையை எறிபத்தர் இந்த வினாடியில் விளங்கிக் கொள்கிறார்.

அன்பின் வடிவாக உள்ள இரண்டு அடியார்கள் எதிர் எதிராக நிற்கும்பொழுது ஒருவர்மேல் ஒருவர் குற்றம் காண்பதற்குப் பதிலாக தாங்களே பெருங்குற்றம் செய்து விட்டதாகக் கருதிக் கொண்டு தம்மைத் தாமே தண்டித்துக் கொள்ள முற்படுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகிறது.

இது அன்பின் உயர்ந்த நிலையாகும்.

எறிபத்தர்

வென்றிமால் யானை தன்னை மேல்கொண்ட பாக ரோடுஞ்
சென்றொரு தெருவின் முட்டிச் சிவகாமி யார்முன் செல்ல
வன்றனித் தண்டில் தூங்கும் மலர்கொள்பூக் கூடை தன்னைப்
பின்றொடர்ந் தோடிச் சென்று பிடித்துமுன் பறித்துச் சிந்த 13

கையினைத் துணித்த போது கடலெனக் கதறி வீழ்ந்த
மைவரை அனைய வேழம் புரண்டிட மருங்கு வந்த
வெய்யகோல் பாகர் மூவர் மிசைகொண்டார் இருவ ராக
ஐவரைக் கொன்று நின்றார் அருவரை அனைய தோளார். 25

வெட்டுண்டு பட்டு வீழ்ந்தார் ஒழியமற் றுள்ளார் ஓடி
மட்டவிழ் தொங்கல் மன்னன் வாயிற்கா வலரை நோக்கிப்
''பட்டவர்த் தனமும் பட்டுப் பாகரும் பட்டார் என்று
முட்டநீர் கடிது புக்கு முதல்வனுக் குரையும்'' என்றார். 26

''அங்கணர் அடியார் தம்மைச் செய்தஇவ் வபரா தத்துக்(கு)
இங்கிது தன்னாற் போதா(து); என்னையுங் கொல்ல வேண்டும்;
மங்கல மழுவால் கொல்கை வழக்குமன்(று) இதுவாம்'' என்று
செங்கையால் உடைவாள் வாங்கிக் கொடுத்தனர் தீர்வு நேர்வார். 42

''தொழுந்தகை அன்பின் மிக்கீர்; தொண்டினை மண்மேற் காட்டச்,
செழுந்திரு மலரை இன்று சினக்கரி சிந்தத் திங்கட்,
கொழுந்தணி வேணிக் கூத்தர் அருளினால் கூடிற்''றென்றங்(கு),
எழுந்தது பாக ரோடும் யானையும் எழுந்த தன்றே 48





8. ஏனாதிநாதர்

சோணாட்டில் எனினனூர் என்னும் ஊரில் ஈழக் குலத்தில் தோன்றியவர் ஏனாதிநாத நாயனார். அரசருக்கும் வீரர்களுக்கும் வாட்போர் பயிற்றுவிக்கும் ஆசிரியராகப் பணி மேற் கொண்டவர். பரம்பரை பரம்பரையாக இப்பணி இவர் முன்னோர் செய்து வந்ததாகும். போர்த் தொழிலின் எல்லாத் துறைகளிலும் நூற்றுக் கணக்கான மாணவ வீரர்களைச் சேர்த்துப் பயிற்றுவிக்கும் தொழில் பூண்ட இவருக்கு அதிசூரன் என்ற தாயாதி ஒருவன் இருந்தான். அவனும் போர்ப் பயிற்சிப் பள்ளி ஒன்று நடத்தினாலும் ஏனாதிக்கிருந்த செல்வாக்கைக் கண்டு பொறாமை கொண்டு இவரை அழித்துவிட வேண்டும் என்று முடிவு செய்தான்.

ஒருநாள் 'புலி உறங்கும் இடத்தில் குறுநரி சென்று' அழைப்பதைப் போல் ஏனாதிநாதரிடம் வந்த அதிசூரன் 'வாள் கொண்ட தாயம் வலியரே கொளல் வேண்டும். எனவே நாமிருவரும் நம் பயிற்சியாளருடன் சேர்ந்து போர் புரிவோமாக. வென்றவர் எல்லாப் பள்ளிகளையும் நடத்தும் உரிமை பெற்றவர் ஆவர்' , என்று கூறினான்.

இதனை மனமார ஏற்றுக் கொண்ட ஏனாதி போர் புரிவதற்குரிய நிலைக்களம் அமைத்துத் தம்முடைய மாணவர்களுடன் அங்குச் செல்ல எதிர்ப்புறத்தில் அதிசூரனும் தன் படைகளுடன் வந்து சேர்ந்தான். குருதியில் ஆறு ஓடும்படி போர் நடைபெற்றது. இறுதியில் அதிசூரன் தோற்றான்.

தோற்று ஓடிய அதிசூரன் போரில் ஏனாதியை வெல்ல முடியாது என்பதை அறிந்தான். சிவனடியார்களிடத்தும் திருநீற்றின் மேலும் ஏனாதி கொண்ட மாபெரும் பக்தியைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு வஞ்சகத்தால் ஏனாதியை வெல்ல முடிவு செய்தான். அந்த முடிவுடன் வெண்ணீற்றை நெற்றி விரவ பூசிக் கொண்டு மனத்துள்ளே வஞ்சகத்தை வைத்துக் கொண்டு, வாள், கேடயம் முதலியன எடுத்துக் கொண்டு ஏனாதியிடம் சென்று நாமிருவரும் ஒருவருக்கொருவராகப் போர் புரிவோம் என்று அழைத்தான். போர் தொடங்கிற்று. ஏனாதியின் கை ஓங்குகின்ற போது அது வரையில் கேடயத்தால் நெற்றியை மறைத்துக் கொண்டிருந்த அதிசூரன் கேடயத்தைக் கீழே இறக்கவும் அவனுடைய நெற்றியில் திருநீற்றைக் கண்டார் ஏனாதி. திருநீறு அணிந்தவரைக் கொல்லுதல் தகாது என்பதுடன் தான் வாளைக் கீழே போட்டால் நிராயுதபாணியைக் கொன்ற பாவம் அவனைச் சேரும் என்று அஞ்சி வாளைக் கையில் வைத்துக் கொண்டே அவன் தன்னைக் கொல்ல இடம் கொடுத்து விட்டார்.

இங்கு பேசப்பெற்ற ஏனாதிநாதரும், முன்னர் பேசப்பெற்ற மெய்ப்பொருளும் எதிரே உள்ளவர்கள் தம் பகைவர் என்று அறிந்திருந்தனர். அப் பகைவரை வினாடி நேரத்தில் விண்ணுலகு அனுப்பும் சக்தியும் வாய்ப்பும் பெற்றிருந்தனர். என்றாலும் சிவவேடம் அணிந்திருந்த ஒரே காரணத்தால் பகைவர்கள் தம் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பினை முழு மனத்துடன் ஈந்தனர். எனவே இவர்களைப் பைத்தியக்காரர்கள் என்று நினைப்பது பெரும் தவறாகும். சிறந்த ஒரு கொள்கை என்று முடிவு செய்து ஏற்றுக் கொண்டபின் இடையில் அதனை விட்டுக்கொடுத்தல் அடியார்களுக்குரிய இயல்பு அன்று. எனவே உயிரைப் பெரிதென்று மதியாமல் தம் கொள்கையை நிறைவேற்றுவதற்காக உயிரையும் ஈத்த இப் பெரியார்கள் நாயன்மார்களாக ஆகும் தகுதியைப் பெற்றார்கள்.

ஏனாதிநாதர்

வாளொடு நீள்கை துடித்தன; மார்பொடு வேல்கள் குளித்தன;
தோளொடு வாளி நிலத்தன; தோலொடு தோல்கள் தகைத்தன;
தாளொடு வார்கழல் இற்றன; தாரொடு சூழ்சிரம் அற்றன;
நாளொடு சீறி மலைப்பவர் நாடிய போர்செய் களத்தினில் 18

வெண்ணீறு நெற்றி விரவப் புறம்பூசி
உண்ணெஞ்சில் வஞ்சக் கறுப்பும் உடன்கொண்டு
வண்ணச் சுடர்வாள் மணிபலகை கைக்கொண்டு
புண்ணியப்போர் வீரர்க்குச்சொன்னஇ டம்புகுந்தான் 35


கண்டபொழு தே''கெட்டேன்! முன்பிவர்மேற் காணாத
வெண்டிருநீற் றின்பொலிவு மேற்கண்டேன்; வேறினிஎன்?
அண்டர்பிரான் சீரடியார் ஆயினார்'' என்றுமனங்
கொண்(டு)'' இவர்தங் கொள்கைக் குறிவழிநிற் பேன்'' என்று 38

அந்நின்ற தொண்டர் திருவுள்ளம் ஆரறிவார்?
முன்னின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்;
இந்நின்ற தன்மை அறிவார் அவர்க் கருள
மின்னின்ற செஞ்சடையார் தாமே வெளிநின்றார் 40

மற்றினிநாம் போற்றுவதென்? வானோர் பிரான்அரு ளைப்
பற்றலர்தங் கைவாளால் பாசம் அறுத்தருளி
உற்றவரை என்றும் உடன்பிரியா அன்பருளிப்
பொற்றொடியாள் பாகனார் பொன்னம் பலம்அ ணைந்தார் 41



8


9

9. கண்ணப்பர்

திருக்காளத்தியைச் சுற்றியுள்ள பகுதி பொத்தப்பி நாடு என வழங்கப் பெற்றது. அந் நாட்டில் உடுப்பூர் என்பதைத் தலைநகராகக் கொண்டு நாகன் என்னும் வேட்டுவ மன்னன் அச்சிறு பகுதியை ஆண்ட காலம். நீண்ட நாள் மகப்பேறு இல்லாதிருந்து முருகனை வேண்டிப் பின்னர் ஒரு குழந்தையைப் பெற்றான். குழந்தை கனமாக இருந்த காரணத்தால் திண்ணன் என்று பெயரிட்டு அருமையாக வளர்த்து வந்தான்.

மகனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட நினைத்து முதல் நாள் வேட்டைக்கு அவனை அனுப்பினான். பல வேடுவர்களுடன் திண்ணன் வேட்டைக்குச் சென்று சிறப்பாக வேட்டையாடினான். பன்றி ஒன்று இவர்கள் வலையை அறுத்துக் கொண்டு ஓட, திண்ணன் அதைத் துரத்திக் கொண்டு சென்றான். அரச குமாரனுக்குத் துணையாக நாணன், காடன் என்ற இருவரும் உடன் சென்றனர். மிக நீண்ட தூரம் சென்ற பின் ஒருவகையாக அப் பன்றியைக் கொன்றான் திண்ணன். அவன் கொன்ற இடத்தருகில் சிறிய குன்று ஒன்று காட்சி தர, அது யாது? என வினவினான். அது திருக்காளத்தி மலை என்றும், அங்கே குடுமித் தேவர் இருக்கிறார் என்றும் மேலே சென்றால் அவரை வணங்கலாம் என்றும் நாணன் கூறினான்.

திண்ணனும், நாணனும் மலை ஏறிச் சென்றனர். குடுமித் தேவரைக் கண்ட மாத்திரத்தில் அவரைக் கட்டியணைத்துக் கொண்டு ''நெடிதுயிர்த்து உச்சி மோந்து கண்ணின் அருவிபோல் நீர் வர அடியனேற்கு இவர்தான் இங்கே அகப்பட்டார்'' என்று கதறினார். 'ஐயா, வேட்டுவச் சாதியார் போல நீ இங்கே தனியாக இருக்க லாமா' என அவராகவே பேசிக் கொண்டார். காளத்தி நாதன் மேலுள்ள பூவையும் பச்சிலைகளையும் யாது என்று கேட்க, ஒரு பார்ப்பனர் காளத்தி நாதரை நீராட்டி, பூச்சூட்டி அமுது படைப்பதைப் பற்றி நாணன் கூறினான்.

அந்த வினாடியிலேயே திண்ணனார் 'தம்மை மறந்து தம் நாமம் கெட்டுத் தலை வன் தாளில் தலைப்பட்டார்'. தேவருக்குப் பசியெடுக்கும் என்று கருதிய அவர் கீழே வந்து தாம் வீழ்த்திய பன்றியைச் சுட்டு வாயில் போட்டு ருசி பார்த்துச் சுவையான பகுதிகளை ஒரு தொன்னையில் உமிழ்ந்து எடுத்துக் கொண்டார். குடுமித் தேவரை நீராட்டுவிக்கப் பாத்திரம் ஒன்றும் இன்மையால் தம் வாய் நிறையப் பொன்முகலி ஆற்றின் நீரை எடுத்துக் கொண்டார். ஒரு கையில் வில், மறு கையில் இறைச்சி, வாயில் கலச நீர், இறைவனுக்குச் சூட்டத் தம் தலையில் பூ என்பனவற்றுடன் மேலே சென்றவர் இறைவன் தலையிலிருந்த பூவை மாற்றத் தம் செருப்புக் காலைப் பயன் படுத்தினார். வாயிலுள்ள நீரை உமிழ்ந்து காளத்தி நாதனுக்கு அபிடேகம் செய்தார். இதே முறையில் திண்ணனார் பூசை ஐந்து நாட்கள் நடைபெற்றன.

வழக்கமாகக் குடுமித் தேவருக்குப் பூசனை இயற்றும் சிவகோசரியார் என்னும் சிவவேதியர் திண்ணனார் செயலை அறியாமல் இறைவனின் எதிரில் கிடக்கும் இறைச்சி முதலானவற்றைக் கண்டு மனம் நொந்து அவற்றை நீக்கிவிட்டுத் தூய்மைப் படுத்தித் தம்முடைய முறையான வழிபாட்டை அன்றாடம் செய்து வந்தார்.

ஐந்தாம் நாள் இரவில் சிவகோசரியார் கனவில் தோன்றிய இறைவன், 'ஐயனே, கவலை வேண்டா. திண்ணனுடைய உடல், பொருள், ஆவி அனைத்திலும் அன்பு ஒன்றே நிறைந்துள்ளது. நாளை நீ மறைந்து நின்று பார்ப்பாயாக!' என்று கூறி மறைந்தார்.

ஆறாம் நாள் வழக்கம்போலத் திண்ணனார் மலை ஏறி வந்தார். இறைவனுடைய ஒரு கண்ணில் உதிரம் பெருகுவதைக் கண்டார். திடுக்கிட்டுப்போன அவர் என்ன செய்தும் குருதி நிற்கவில்லை என்பதையறிந்து 'ஊனுக்கு ஊன் இடல் வேண்டும்' என்ற பழமொழியை நினைத்துக் கொண்டு தம்முடைய கண்ணில் ஒன்றைத் தோண்டி இறைவனுடைய கண்ணில் அப்பக் குருதி நின்றது.

எல்லையற்ற மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடி நிற்கும் திண்ணனார் இறைவனுடைய மற்றொரு கண்ணிலிருந்தும் குருதி வரக் கண்டு தம்முடைய மற்றொரு கண்ணையும் தோண்டத் தயாரானார். இரண்டாவது கண் தோண்டப்பட்டால் இறைவனுடைய கண் இருக்கும் இடம் தெரியாது என்பதனால் அடையாளம் தெரிவதற்காகத் தம் முடைய செருப்புக் காலைக் குருதி பொங்கும் இறைவனின் கண்ணின் பக்கத்தில் அடையாளமாக வைத்துக் கொண்டு தம் கண்ணைத் தோண்டத் தயாரானார்.

இதனைப் பொறாத தேவதேவன் 'நில்லு கண்ணப்ப' என்று மும்முறை கூறிக் கண்ணப்பருடைய கைகளைப் பற்றித் தம் இடப்பக்கம் நிறுத்திக் கொண்டார்.

பக்தியின் உயர்ந்த நிலையை அடைந்த பெருமகன் கண்ணப்ப நாயனாராக உயர்ந்தார்.

கண்ணப்பர்

திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில்அன் புருவம் ஆனார் *104*

போதுவர்; மீண்டு செல்வர்; புல்லுவர் மீளப் போவர்;
காதலின் நோக்கி நிற்பர்; கன்றகல் புனிற்றாப் போல்வர்;
''நாதனே! அமுது செய்ய நல்லமெல் இறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு கொண்டிங்கு வருவேன்'' என்பார் *112*

இளைத்தனர் நாய னாரென் றீண்டச்சென் றெய்தி வெற்பின்
முளைத்தெழு முதலைக் கண்டு முடிமிசை மலரைக் காலில்
வளைத்தபொற் செருப்பால் மாற்றி வாயின்மஞ் சனநீர் தன்னை
விளைத்தஅன் புமிழ்வார் போல விமலனார் முடிமேல் விட்டார் *123*

கண்ணுதல் கண்ணில் தங்கண் இடந்தப்பிற் காணும் நேர்பா(டு)
எண்ணுவார் தம்பி ரான்தன் திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி
உண்ணிறை விருப்பி னோடும் ஒருதனிப் பகழிகொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவ தேவர் *182*

செங்கண்வெள் விடையின் பாகர்; திண்ணனார் தம்மை யாண்ட
அங்கணர், திருக்கா ளத்தி அற்புதர் திருக்கை, அன்பர்
தங்கண்முன் இடக்குங் கையைத் தடுக்கமுன் றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்குக் ''கண்ணப்ப நிற்க'' என்ற *183*





10. குங்கிலியக்கலயர்

மார்க்கண்டனுக்காகக் காலனைத் தம் காலால் உதைத்த பெருமான் மகிழ்ந்து உறைகின்ற இடம் திருக்கடவூர் ஆகும். அவ்வூரில் அந்தணர் மரபில் வந்த கலயனார் என்ற சிவபக்தர் பெரும் செல்வமுடன் வாழ்ந்து வருகின்ற காலத்தில் கடவூர்ப் பெருமான் சன்னதியில் குங்குலியப் புகை பரவுமாறு செய்வதைத் தலையாய தொண்டாகக் கருதிச் செய்து வந்தார். வறுமை வந்து நெருக்கிய காலத்திலும் தம் தொண்டை மறக்கவில்லை. பல நாளுக்கொருமுறை தமக்கு உணவு கிடைத்த பொழுதும் தம் தொண்டை முட்டாது செய்து வந்தார். அந் நிலையும் தாண்டிய பிறகு தம் தொண்டு முட்டுப்பட்டதை நினைத்து வருந்தி நிற்கையில் மனைவியார் தம் மங்கல நாணைக் கழற்றித் தந்து நெல் வாங்கி வருமாறு கணவரை வேண்டிக் கொண்டார்.

கலயனார் கடைவீதி செல்கையில் வணிகன் ஒருவன் குங்குலியப் பொதி ஒன்றைக் கொண்ர்ந்தான். நெல் வாங்கச் சென்ற கலயர் மங்கல நாணைக் கொடுத்து நெல்லுக்குப் பதிலாகக் குங்குலியப் பொதியைப் பெற்றுக் கொண்டு நேரே கோவிலுக்குச் சென்றுவிட்டார். திருக்கோயிலுக்குச் சென்ற அவர் பசியினால் வாடித் தளர்ந்து விழ இறைவன் அவர் கனவில் தோன்றி வீட்டிற்குச் சென்று பால் அடிசில் உண்டு வருக எனக் கனவிற் கூறினார். இறைவன் ஆணையை மறுக்க அஞ்சி வீடு சென்ற கலயர் குபேரனுடைய செல்வம் முழுவதும் தம் வீட்டில் இருக்கக் கண்டார். தம் தொண்டையும் செய்து கொண்டு சுற்றத்துடன் மகிழ்ச்சி பொங்க வாழும் நாளில் திருப்பனந்தாளில் தாடகேச்சரப் பெருமான் சாய்ந்து நிற்றலையும் மன்னனுடைய படை முழுவதும் கயிறு கட்டி இறைவனை நிமிர்த்த முயன்று தோல்வியுற்றதையும் கேள்விப்பட்டார்.

வலி குறைந்து வீழ்ந்து கிடக்கும் படைகளைக் கண்டு தாமும் முயன்று இவர்களைப் போல மயக்கமடைய வேண்டும் என்று கருதி இறைவனைக் கட்டியுள்ள கயிற்றைத் தம்முடைய கழுத்தில் மாட்டி இழுக்கலானார். கலயனாரின் அன்பு என்ற கயிற்றால் கட்டுண்ட இறைவன் உடனே நிமிர்ந்து நின்றான்.

மீண்டும் கடவூர் வந்த கலயர் நாவுக்கரசர், திருஞான சம்பந்தர் முதலியோரை வரவேற்று உபசரித்து மகிழும் பேறு பெற்றார்.

திருப்பனந்தாளில் நடந்த இந்த நிகழ்ச்சி ஆழ்ந்து சிந்திப்பதற்குரியது. ஓர் அரசன் தன்னுடைய படைகளுடன் சென்று இலிங்கத் திருமேனியில் கயிற்றைக் கட்டி, அத்திருமேனி நிமிருவதற்காக இழுத்தும் அத்திருஉரு நிமிரவில்லை. இம் முயற்சியில் தளர்ந்த அப்படை மயக்கமுற்று ஒய்ந்து கிடக்கிறது.

இந்நிலையில் கலயர் தாம் ஒருவராக நின்று நான் இழுக்கிறேன் என்று புறப்பட்டாரானால் இதன் அடிப்படை என்ன? இத்தனைபேரும் செய்ய முடியாத காரியத்தைத் தாம் ஒருவரே செய்துவிடலாம் என்று நினைத்தாரா? அவ்வாறு நினைத்திருப்பாரேயானால் அவர் அடியாராக இருக்க முடியாது. அவ்வாறு நினைப்பது எல்லையற்ற அகங்காரத்தின் வெளிப்பாடு ஆகும். அப்படியானால் கலயர் ஏன் இதனைச் செய்தார்?

''அறிவினால் ஆகுவது உண்டோ? பிறிதின் நோய் தந்நோய்போல் போற்றாக் கடை'' என்பது தமிழ் மறை. எனவே சிறந்த அடியாராகிய கலயர் இப் பசுக்களைப் போலத் தாமும் இழுத்து அவர்களடைந்த மயக்கத்தைத் தாமும் அடையவேண்டும் என்று கருதினார். இதுவே 'பிறிதின் நோய் தன் நோய்போல்' போற்றுவதாகும்.

இக் கருத்தைச் சேக்கிழார் 'சேனையும் ஆனை பூண்ட திரளும் எய்த்து எழாமை நோக்கி யானும் இவ் விளைப்புற்று எய்க்கும் இது பெற வேண்டும்' என்று நினைத்து இக்காரியத்தைச் செய்தார் என்று பாடுகிறார்.

குங்குலியக்கலயர்


பாலனாம் மறையோன் பற்றப் பயங்கெடுத் தருளும் ஆற்றால்
மாலுநான் முகனும் காணா வடிவுகொண் டெதிரே வந்து
காலனார் உயிர்செற் றார்க்குக் கமழ்ந்தகுங் குலியத் தூபம்
சாலவே நிறைந்து விம்ம இடும்பணி தலைநின் றுள்ளார் 6

யாதொன்றும் இல்லை யாகி இருபகல் உணவு மாறிப்
பேதுறும் மைந்த ரோடும் பெருகுசுற் றத்தை நோக்கிக்
காதல்செய் மனைவி யார்தங் கணவனார் கலய னார்கைக்
கோதில்மங் கலநூல் தாலிகொடுத்து 'நெற் கொள்ளும்' என்றார் 9


அப்பொழு ததனைக் கொண்டு நெற்கொள்வான் அவரும் போக
ஒப்பில்குங் குலியங் கொண்டோர் வணிகனும் எதிர்வந் துற்றான்;
''இப்பொதி என்கொல்?'' என்றார்க் குள்ளவா றியம்ப கேட்டு
முப்புரி வெண்ணூல் மார்பர் முகமலர்ந் திதனைச் சொன்னார் 10


ஆறுசெஞ் சடைமேல் வைத்த அங்கணர் பூசைக் கான
நாறுகுங் குலியம் ஈதேல் நான்இன்று பெற்றேன்; நல்ல,
பேறுமற் றிதன்மேல் உண்டோ? பெறாப்பேறு பெற்று வைத்து,
வேறினிக் கொள்வ தென்?'' என் றுரைத்தெழும் விரும்பின் மிக்கார் 11

இல்லத்திற் சென்று புக்கார் இருநிதிக் குவைகள் ஆர்ந்த
செல்வத்தைக் கண்டு நின்று திருமனை யாரை நோக்கி என்ன
''வில்லொத்த நுதலாய்! இந்த விள்ளவெல்லாம் என்கொல்?''
''அல்லொத்த கண்டன் எம்மான் அருள்தர வந்த'' தென்றார் 19



NO.38





11. மானக்கஞ்சாறர்

கஞ்சாரூர் என்னும் ஊரில் அரசர்களுக்குச் சேனாபதியாக விளங்கும் குடியில் தோன்றியவர் மானக்கஞ்சாற நாயனார். சேனாபதியாக இருப்பினும் 'பணிவுடைய வடிவுடையாராய்த் தொண்டர்க்கு ஏவல் செய்யும் தொழில் பூண்டார்'.

பலநாள் மகப்பேறு இன்றி இருந்த இவருக்கு ஒரு பெண் மகவு பிறந்து மணப் பருவம் எய்தியது. தம்முடைய சுற்றத்தாராகிய ஏயனார் என்னும் பெருமகனுக்குத் திருமணம் முடிக்கக் கருதி ஏற்பாடுகள் செய்தார்.

மண நாளன்று மக்கள் நிரம்பிய மானக்கஞ்சாறர் வீட்டினுள் இறைவன் மாவிரதிகள் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு முனிவராக நீறு பூசிய மேனியராய்த் தோளில் பட்டிகை இட்டுப் புகுந்தார்.

முனிவரை வரவேற்று வணக்கம் செய்த மானக்கஞ்சாறர், தம் மகளையும் அழைத்து மாவிரதி வேடம் கொண்ட முனிவரை வணங்குமாறு செய்தார். முழங்காலளவு நீண்ட முடியுடன் வணங்கிய அம் மணப் பெண்ணைப் பார்த்து வியப்படைந்தது போலக் காட்சி தந்தார் முனிவர்.

யாரையும் குறிப்பாகப் பாராமல் 'இருண்ட மேகம் போன்ற இப் பெண்ணின் கூந்தல் நமக்குக் கிடைத்தால் பஞ்சவடிக்காகப் பயன்படுத்தலாம்' என்றார். ஒரு கணமுங்கூடச் சிந்தியாமல் தம் உடை வாளை எடுத்து மணப் பெண்ணின் கூந்தலை அரிந்து முனிவர் கையில் கொடுக்க முயலும்போது எதிரேநின்ற முனிவர் மறைந்து இறைவன் காட்சி நல்கினான்.

மேலோட்டமாக இவ் வரலாற்றைப் பார்க்கும்போது செயற்கரும் செயல் எதுவும் இதில் இல்லை என்பதை அறிய முடியும். என்றாலும் இரண்டு நுணுக்கங்களை இவ் வரலாற்றில் காண முடிகிறது.

வ்ந்த அடியவர் தமிழ் நாட்டுச் சிவனடியார் போல் அல்லாமல் பழங்கால சைவத்தின் ஒருசிறு கூறாக அமைந்திருந்த மாவிரதிகள் என்ற குழுவைச் சேர்ந்தவராகக் காணப்பட்டார். என்வே வழக்கமாகச் சந்திக்கும் தமிழ் நாட்டு அடியாரைப் போல் அல்லாமல் வடநாட்டு மாவிரதியைக் கண்டபொழுது மானக்கஞ்சாறர் இத்தகைய உபசரணை செய்ய வேண்டியதில்லை. இன்றுகூட ஒரு குறிப்பிட்ட தொகுதியைச் சேர்ந்த பக்தர்கள் மற்றொரு தொகுதியைச் சேர்ந்த பக்தர்களை ஏற்றுக் கொள்வதும் அவர்களுக்குரிய மரியாதை தருவதும் அருமை. அப்படியிருக்க வடநாட்டு மாவிரதி வேடம் கொண்ட ஒருவர் மணப் பெண்ணின் கூந்தலைக் கேட்டார் என்றவுடன் மானக்கஞ்சாறர் அதை அப்படியே தந்தார் என்றால் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள முடிகிறது. சாதி, சமய, நாட்டு வேறுபாடுகளை இத் தொண்டர்கள் கடந்து நின்றார்கள் என்பதும், இவர்களைப் பொறுத்த மட்டில் சிவவேடம்தான் முக்கியமே தவிர அதனை அணிந்துள்ளவர் யார் என்பது முக்கியமன்று என்பதும் நன்கு விளங்கும்.

அடுத்ததாக உள்ளது மகளின் கூந்தலைத் தந்த நிகழ்ச்சியாகும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரைத் திருமண ஓலை எழுதிவிட்டாலே அசுபமான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதும் செய்வதும் தவறு என்று நினைக்கின்ற மரபு உண்டு. அப்படியிருக்க மணப் பெண்ணின் கூந்தலையே திருமணத்திற்குச் சில நிமிடங்கள் முன்னர் ஒருவர் வெட்டித் தந்தார் என்றால் அது வியப்பினும் வியப்பாகும்! என்றாலும் அனைத்தும் அனைவரும் சிவனடியார்கள் உடைமை என்று நினைந்த இவர்களைப் பொறுத்த மட்டில் இத்தகைய செயல்தள் அன்றாட நிகழ்ச்சிகளாகும்.

மானக்கஞ்சாறர்

பணிவுடைய வடிவுடையார்; பணியினொடும் பனிமதியின்
அணிவுடைய சடைமுடியார்க் காளாகும் பதம்பெற்ற
தணிவில்பெரும் பேறுடையார்; தம்பெருமான் கழல்சார்ந்த
துணிவுடைய தொண்டர்க்கே ஏவல்செயுந் தொழில்பூண்டார் 8

திருமகட்கு மேல்விளங்கும் செம்மணியின் தீபம்எனும்
ஒருமகளை மண்ணுலகில் ஓங்குகுல மரபினராய்க்
கருமிடற்று மறையவனார் தமராய கழல்ஏயர்
பெருமகற்கு மகட்பேச வந்தணைந்தார் பெருமுதியோர் 16

தஞ்சரணத் திடைப்பணிந்து தாழ்ந்தெழுந்த மடக்கொடி தன்
மஞ்சுதழைத் தெனவளர்ந்த மலர்க்கூந்தல் புறம் நோக்கி
அஞ்சலிமெய்த் தொண்டரைப்பார்த் ''தணங்கிவள்தன் மயிர்நமக்குப்
பஞ்சவடிக் காம்'' என்றார் பரவஅடித் தலங் கொடுப்பார் 29

அருள்செய்த மொழிகேளா அடற்சுரிகை தனைஉருவிப்,
''பொருள்செய்தாம் எனப்பெற்றேன்'' எனக்கொண்டு பூங்கொடி தன்
இருள்செய்த கருங்கூந்தல் அடியில்அரிந் தெதிர்நின்ற
மருள்செய்த பிறப்பறுப்பார் மலர்க்கரத்தி னிடைநீட்ட 30

மனந்தளரும் இடர்நீங்கி வானவர்நா யகர்அருளால்
புனைந்தமலர்க் குழல்பெற்ற பூங்கொடியை மணம்புணர்ந்து
தனம்பொழிந்து பெருவதுவை உலகெலாந் தலைசிறப்ப
இனம்பெருகத் தம்முடைய எயின்மூதூர் சென்ற ணைந்தார் 36





12. அரிவாட்டாயர்

பொன்னி நாட்டில் கணமங்கலம் என்ற ஊரில் வேளாண் மரபில் தோன்றியவர் தாயனார் என்ற அடியார். சம்பாச் செவ்வரிசிச் சோற்றையும், செங்கீரையையும், மாவடுவையும் அன்றாடம் இறைவனுக்குப் படைக்கும் தொண்டை மேற்கொண் டிருந்தார்.

வறுமை வந்துற்றகாலை கூலிக்கு நெல்லறுத்துக் கூலியாகப் பெறும் சம்பா அரிசிச் சோற்றையும், எளிதில் கிடைக்கும் கீரையையும், மாவடுவையும் படைத்து இன்புற்றார். தமக்குணவு இல்லையாயினும் படையலுக்கு உரிய சோறு, கீரை, மாவடு என்பனவற்றைச் சட்டியில் தாங்கித் தலையில் வைத்து வயல்களைத் தாண்டிச் செல்லும்போது பசி மயக்கத்தால் காலிடறி வீழ்ந்து விட்டார். பிரசாதப் பொருள்கள் வயலில் சிதறி விழுந்துவிட்டன.

'அல்லல் தீர்த்து ஆள வல்ல பெருமான் அமுது செய்ய முடியாமல் போன தற்குத் தாமே காரணம்' என்று நினைத்த அடியார் அரிவாளை எடுத்துத் தம் கழுத் தில் பூட்டி அரியத் தொடங்கினார். வயலின் பிளவினுள் இருந்து வெளிப்பட்ட இறைவனின் கை அரிவாட்டாயரின் கையைத் தடுத்து நிறுத்தி ''அன்பனே, நீ படைத்த மாவடுவை இதோ உண்கிறேன்'' என்றார். வெடிப்பினுள் மாவடுவைக் கடிக்கும் 'விடக், விடக்' என்ற ஓசையும் கேட்பதாயிற்று. அரிவாளைப் பூட்டித் தம் கழுத்தை அரியத் தொடங்கியதால் தாயர் என்ற பெயருடன் அரிவாள் என்ற சொல் லும் சேர்ந்து அரிவாள்தாயர் என்ற பெயர் வந்தது.

ஒரு சில சிவனடியார்கள் மக்களை உண்பிப்பதை விரதமாகக் கொண்டனர். தாயரோ இறைவனுக்குப் படைப்பதையே தம் கொள்கையாகக் கொண்டார். எட் டாம் நூற்றாண்டில் தோன்றிய திருமூலர் இறைவனுக்கு நேரே படைப்பதைவிட உயிர்களுக்குப் படைப்பதையே சிறப்பாகக் கொண்டாடினார். ''படமாடக் கோயில் பரமர்க்கு ஒன்று ஈயின், நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு அது ஆகாதே'' என்று கூறிய கருத்தை இவர் போன்றவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் இறைவனுக்கு நேரே பணி செய்வதும் உண்டு. இந்த இருவகை பக்தர்களுடைய வரலாறுகளைக் கூர்ந்து பார்க்கும்போது ஓர் உண்மையை அறிய முடிகிறது. தாயர் போன்றவர்கள் உயிர் களை உண்பிக்க வேண்டும் என்பதைப் பெரிதாகக் கருதவில்லை. இளையான்குடி மாறர் போன்றவர்கள் உயிர்களை உண்பிப்பதையே பெரும் கடனாகக் கொண் டிருந்தமையின் இறைவனுக்கு நேரே நைவேத்தியம் கொண்டு செல்வதைப் பாராட்ட வில்லை. என்றாலும் இவ்விரண்டுமே சிறந்த கொள்கைகள்தாம். அவரவர் மேற் கொண்ட கொள்கைகளை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட இடையூறுகளைப் பொருட் படுத்தாமல், தம் உயிரை ஈந்தாவது குறிக்கோளை நிறைவேற்றின ர்கள் என்பதுதான் முக்கியமே தவிர, என்ன கொள்கையை மேற்கொண்டிருந்தார்கள் என்பது முக்கிய மில்லை.

செந்நெல் அமுதும், கீரைக்கறியும், மாவடுவும் பலநாட்களாக தாம் பட்டினி கிடக்கின்ற நாளிலும் இறைவனுக்கு படைப்பதையே கடமையாகக் கொண்டிருந்தார். வயலில் இடறி விழுந்ததால் அத்தொண்டுக்கு முட்டுப்பாடு வந்தது.

உண்மையைக் கூறவேண்டுமேயானால் இன்று அத்தொண்டுக்கு முட்டுப்பாடு வந்த காரணம் தாயர் அல்லர். கவனக் குறைவினாலோ வேண்டுமென்றோ நைவேத்தியப் பொருளை அவர் சிதறிவிடவில்லை. எனவே இந் நிகழ்ச்சிக்கு அவர் பொறுப்பில்லை. இதே சமாதானத்தைக் கூறிக்கொண்டு அவர் அன்று இறைவனுக்குப் படைக்க முடியவில்லை என்று போயிருப்பாரேயானால் யாரும் அவரைக் குறைகூறப் போவதில்லை. அதே நேரத்தில் அடியார் வரிசையில் அவர் இடம் பெறப் போவதுமில்லை. இந்தச் சமாதானத்தைக் கூறிக்கொண்டு அன்றைய நைவேத்தியத்தை விட்டுக் கொடுப்பவர்கள் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள். எத்தகைய சமாதானத்திற்கும் இடம் கொடாமல் உயிரைவிட முற்படுபவர்கள் அடியார்கள்.

அரிவாட்டாயர்

மின்னு செஞ்சடை வேதியர்க் காமென்று
செந்நெல் இன்னமு தோடுசெங் கீரையும்
மன்னு பைந்துணர் மாவடு வுங்கொணர்ந்
தன்ன என்றும் அமுதுசெய் விப்பரால் 6


போதரா நின்ற போது புலர்ந்துகால் தளர்ந்து தப்பி
மாதரார் வருந்தி வீழ்வார் மட்கல மூடு கையால்
காதலால் அணைத்தும் எல்லாங் கமரிடைச் சிந்தக் கண்டு
பூதநா யகர்தந் தொண்டர் ''போவதங் கினியேன்'' என்று 15


நல்லசெங் கீரை தூய மாவடு அரிசி சிந்த
''அல்லல்தீர்த் தாள வல்லார் அமுதுசெய் தருளும் அப்பே(று)
எல்லையில் தீமை யேன்இங் கெய்திடப் பெற்றி லேன்'' என்(று)
ஒல்லையில் அரிவாள் பூட்டி ஊட்டியை அரிய லுற்றார் 16

''ஆட்கொள்ளும் ஐயர் தாமிங் கமுதுசெய் திலர்கொல்'' என்னாப்,
பூட்டிய அரிவாள் பற்றிப் புரையற விரவும் அன்பு,
காட்டிய நெறியின் உள்ளந் தண்டறக் கழுத்தி னோடே,
ஊட்டியும் அரியா நின்றார் உறுபிறப் பரிவார் ஒத்தார் 17

என்றவர் போற்றி செய்ய இடபவா கனராய்த் தோன்றி
''நன்றுநீ புரிந்த செய்கை; நன்னுத லுடனே கூட
என்றுநம் உலகில் வாழ்வாய்'' என்றவர் உடனே நண்ண
மின்றுளே ஆடும் ஐயர் மழவிடை உகைத்துச் சென்றார் 21







13

13. ஆனாயர்

திருச்சிக்கு வடக்கேயுள்ள பகுதி மழநாடு என ஒரு காலத்தில் வழங்கிற்று. அப் பகுதியிலுள்ள திருமங்கலம் என்ற ஊரில் ஆயர் குலத்தில் உதித்தவர் ஆனாயர்.

பசுக்களை மேய்க்கும் தொழில் பூண்ட இப் பெருமகனார் குழல் ஒன்றைக் கையிலேந்தி இறைவனுடைய ஐந்தெழுத்தை இசையுடன் கலந்து வாசிக்கும் இயல் புடையவர்.

மந்தரம், மத்திமம், தாரம் என்ற மூன்று ஸ்தாயைகளிலும் ஐந்தெழுத்தை வாசிக் கும் வழக்கமுடையவர்.

பாணி, தூக்கு என்ற தாள வேறுபாடுகளுடன் பண் அமைய எழும் அக்குழ லோசை பரவும்போது ஆநிரைகள் புல் மேயாது அணையவும் கன்றுகள் தாய் முலை மறந்து நெருங்கவும், எருதுகள், மான் முதலான விளங்குகளும் அவர் அருகே அணை யவுந் தொடங்கின. புள்ளினங்கள் இவ்வோசையால் கட்டுண்டு அப்பகுதியிலேயே வட்டமிட்டன. எல்லோருடைய உணர்வையும் நாயனாரின் குழலோசை ஈர்த்தலி னால் பகை என்ற சொல்லுக்கு இடமில்லாமல் அரவும், மயிலும், புலியும் மானும் ஒருங்கே நின்று அந்த இசையில் லயித்தன.

ஆனாயர் குழலோசைச் சிறப்பைச் சேக்கிழார் கூறுவது போலவே கண்ணன் குழலூதும் சிறப்பைப் பெரியாழ்வார் 'சிறுவிரல்கள் தடவிப் பரிமாற' என்று தொடங்கும் பாடல் முதல் நான்கு பாடல்களில் விரிவாகப் பாடுகிறார். இவ்விரண்டு பெருமக்களும் கூறும் ஒரு கருத்தை இன்றைய உலகம் சிந்திக்க வேண்டியது மிக அவசியமாகும். ஐயறிவை உடைய விலங்குகள் முதல் ஆறறிவு உடைய மனிதர்கள் வரை அனைவரையும் ஒரு சேரப் பிடிப்பதற்கு ஏதாவது ஒரு பொருள் வேண்டு மென்றால் அது இசையாகத்தான் இருக்க முடியும். இயற்கை, உயிர்கள் என்ற இவற் றினிடையே ஓர் ஒன்றியல்பு (HARMONY) வேண்டும் என இற்றை நாள் தத்துவ ஞானிகளும், விஞ்ஞானிகளும் ஒருசேர முழங்குகின்றனர். இந்த ஒன்றியல்பை உண் டாக்குவதற்கு இசை என்பது இன்றியமையாத முதல் சாதனமாகும்.

ஓர் அறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் வரை அனைத்தும் ஒன்றிய தொடர்பைப் பெற்றிருப்பதினாலேயே இவ்வுலகம் நிலை பெற்றுள்ளது. ஆனாயர் போன்ற அடி யார்களோ கண்ணன் போன்ற பரம்பொருளோ இசையை எழுப்பும்போது அந்த இசை உயிர்களின் உள்ளே மறைந்து கிடக்கும் ஒன்றியல்பைத் தட்டியெழுப்பி அவற் றுள் புதிய உறவை ஏற்படுத்துகிறது. இந்த உறவின் காரணமாகத்தான் புலியும், மானும், அரவும் மயிலும் ஒருங்கிணைந்து நிற்கின்றன. இசை ஒன்றுக்குத்தான் அத் தகைய சிறப்பியல்பு உண்டு. ஆகவே ஆனாயருடைய குழலோசை வையம் முழுவதை யும் நிறைத்து, வானத்தையும் நிறைத்து அதற்கப்பாலும் செல்லத் தொடங்கிற்று என்று கவிஞர் கூறும் பொழுது பெரியாழ்வார் ''அணையான் குழல் ஊத அமரலோகத் தளவும் சென்று இசைப்ப அவி உணா மறந்து வானவரெலாம் ஆயர்பாடி நிரையப் புகுந்து'' என்று பாடுவதும் ஆராய்வதற்குரியன.

ஆனாயர் குழலோசை கேட்ட பெருமாள் இறைவியுடன் எழுந்தருளி ''இன் நின்ற நிலையே நம்பால் அணைவாய்'' எனக் கூறி ஆனாயரை அழைத்துச் சென்றார்.

ஆனாயர்

ஆவின் நிரைக்குலம் அப்படி பல்க அளித்தென்றும்
கோவலர் ஏவல் புரிந்திட ஆயர் குலம்பேணும்
காவலர் தம்பெரு மானடி அன்புறு கானத்தின்
மேவு துளைக்கரு லிக்குழல் வாசனை மேற்கொண்டார் 12

நீலமா மஞ்ஞை ஏங்க நிரைக்கொடிப் புறவம் பாடக்
கோலவெண் முகையேர் முல்லை கோபம் வாய் முறுவல் காட்ட
ஆலுமின் னிடைசூழ் மாலைப் பயோதரம் அசைய வந்தாள்
ஞாலநீ டரங்கி லாடக் காரெனும் பருவ நல்லாள் 19

அன்பூறி மிசைப்பொங்கும் அமுதஇசைக் குழலொலியால்
வன்பூதப் படையாளி எழுத்தைந்தும் வழுத்தித்தாம்
முன்பூதி வருமளவின் முறைமையே எவ்வுயிரும்
என்பூடு கரைந்துருக்கும் இன்னிசைவேய்ங் கருவிகளில் 22

இவ்வாறு நிற்பனவும் சரிப்பனவும் இசைமயமாய்
மெய்வாழும் புலன்கரண மேவியவொன் றாயினவால்
மொய்வாச நறுங்கொன்றை முடிச்சடையார் அடித்தொண்டர்
செவ்வாயின் மிசைவைத்த திருக்குழல்வா சனையுருக்க 36

விண்ணவர்கள் மலர்மாரி மிடைந்துலகம் மிசைவிளங்க
எண்ணிலரு முனிவர்குழாம் இருக்குமொழி எடுத்தேத்த
அண்ணலார் குழற்கருவி அருகிசைத்தங் குடன்செல்லப்
புண்ணியனார் எழுந்தருளிப் பொற்பொதுவி னிடைப்புக்கார் 41





14. மூர்த்தியார்

''ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ் மணஞ்செய் மதுராபுரி'' என்று பாண்டி நாட்டின் தலைநகரத்தைச் சேக்கிழார் போற்றுகின்றார். அவ்வூரில் வணிக குலத்தில் தோன்றிய மூர்த்தி நாயனார் என்பவர் 'எப்பற்றினையும் அறுத்துச் சிவ பெருமான் மேல் கொண்ட பற்றே' உயிர் நாடியாக வாழ்ந்தவர். அன்றாடம் சொக் கனுடைய திருக்கோயில் சென்று சந்தனம் அரைத்து இறைவனுக்குச் சாத்தத் தருகின்ற பணியையே தம் முழு நேரப் பணியாகக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் வடுகக்கருநாடர் மன்னன் மதுரையை வென்று அடிமைப்படுத் தினான். அருக சமயத்தைச் சேர்ந்த அவன் மதுரையிலிருந்த அருகர்களுடன்கூடச் சைவ சமயத்திற்கும் சிவனடியார்களுக்கும் பெரும் தீங்கு செய்ய முற்பட்டான். மூர்த் தியாரின் தொண்டையறிந்த அவன் மதுரை மாநகரம் முழுவதிலும சந்தனக் கட் டையே கிடைக்காமல் செய்துவிட்டான். தம்முடைய தொண்டு முட்டுப்பட்ட காரணத் தால் மனம் கலங்கிய மூர்த்தியார் 'கட்டைதான் கிடைக்காமல் போயிற்று, அதைத் தேய்க்கின்ற கைகள் எங்கும் போகவில்லையே?' என்று சிந்திக்கலானார். இச் சிந் தனையின் முடிவில் தம் முழங் கைகளையே சந்தனக் கல்லில் வைத்துத் தேய்க்க ஆரம்பித்தார். சதையும் நரம்பும் தேய்ந்து குருதி வெள்ளத்தில் ஆழ்ந்தது. அன்பர் துயரம் பொறாத சொக்கலிங்கப் பெருமான் அவரைத் தடுத்து நிறுத்தி கைகளையும் பழையபடி தந்து 'அன்பனே உன் தியாகத் தொண்டைக் கண்டு மகிழ்கின்றேன். இவ் வூரின் அரசனாக ஆவாயாக' என்று அசரீரியாய்க் கூறினார்.

மதுரையை வலிந்து பற்றிய மன்னன் திடீரென்று இறந்துவிடவே அமைச்சர்கள் கூடித் தம் பழைய மரபுக்கேற்பப் பட்டத்து யானையின் கண்களைக் கட்டித் தெரு வினூடே செல்ல விடுத்தனர். அம் மாதங்கம் சென்று கோயில் வாயிலில் நின்று கொண்டிருந்த மூர்த்தியாரைத் தன் பிடரியில் ஏற்றிக் கொண்டு வந்தது.

ஏனைய அரசர்களைப்போல் அல்லாமல் திருநீற்று அபிடேகம் செய்து கொண்டு உருத்திராக்க மாலைகளையே அணிகலன்களாகப் பூண்டு சடை முடியையே கிரீட மாகத் தாங்கி மூர்த்தியார் அரசு புரியலானார்.

இவ்வரலாற்றில் அன்றையச் சூழ்நிலையில் வாழ்ந்த தமிழர்கள் அரசன், அர சாட்சி என்பவைபற்றி என்ன நினைத்திருந்தார்கள் என்பதைச் சேக்கிழார் இங்கு கூறுகிறார்.

'சூழும் படை மன்னவன் தோள் இணைக் காவல் இன்றி வாழும் தகைத்து அன்று இவ்வையகம்' என்றும், 'மன்னரை இன்றி வைகும் மண்ணுலகு எண்ணும் காலை இன்னுயிர் இன்றி வாழும் யாக்கையை ஒக்கும்' என்றும் கருதினார்கள். மன் னன் இல்லாமல் உலகம் வாழ முடியாது என்ற கருத்துக் கொண்டிருந்தமையின் இடைக்கால ஐரோப்பாவில் தோன்றி வளர்ந்த 'அரசன் தெய்வத்திற்குச் சமமான வன்' (DIVINE RIGHT THEORY) என்ற கொள்கை இங்கும் பரவி இருந்ததாக நினைக்க வேண்டி உளது. மன்னர்கள் தாங்கள் எந்தச் சமயத்தைப் பின்பற்றி வாழ்ந்தார் களோ அதே சமயத்தை மக்களும் பின்பற்றி வாழ வேண்டும் என்று பிடிவாதம் பிடித் ததாகத் தெரிகிறது. பாண்டியன் கடுங்கோன் ஆட்சியில் களப்பிரரை அழித்து தமிழ் மன்னர்களின் ஆட்சியை நிலைநிறுத்தினான் என்றாலும் களப்பிரர் விட்டுச் சென்ற

ஜைன சமயத்தில் நெடுமாறன் முதலிய சில அரசர்கள் வாழ்ந்ததாகத் தெரிகிறது. களப்பிரர் தோற்றாலும் ஒரு நூற்றாண்டு வரை மறுபடியும் மறுபடியும் பாண்டி நாட்டின்மேல் படையெடுத்து வந்ததாகத் தெரிகிறது. இவர்கள் கர்நாடகத்திலிருந்து வந்தார்கள் ஆதலால் மூர்த்தியார் காலத்தில் வந்த மன்னனைக் குறிப்பிடும்போது 'கானக்கடி சூழ் வடுகக்கருநாடார் காவல், மானப்படை மன்னன்' பாண்டியனை வென்று மதுராபுரியைக் கைக் கொண்டான் என்று சொல்லுகிறார். இம் மன்னன் புறச் சமயத்தான் ஆதலின் பாண்டி நாட்டில் பரவியிருந்த சைவ சமயத்தை ஒடுக்க முற்பட்டான். அவன் மேற்கொண்ட பல்வேறு வழிகளில் கோயில் வழிபாட்டிற்கு உரிய சந்தனம், சந்தனக்கட்டை என்பவை எங்கும் கிடைக்காமற் செய்தது ஒரு வழியாகும்.

மூர்த்தியார்


சங்கங்கள் முரன்றன தாரைகள்; பேரி யோடும்
எங்கெங்கும் இயம்பின பல்லியம்; எல்லை யில்ல
அங்கங்கு மலிந்தன வாழ்த்தொலி; அம்பொற் கொம்பின்
பங்கன்அரு ளால்உல காள்பவர் பாங்கர் எங்கும் 36

''வையம் முறைசெய் குவனாகில் வயங்கு நீறே
செய்யும் அபிடே கமுமாக, செழுங்க லன்கள்
ஐயன் அடையா ளமுமாக, அணிந்து தாங்கும்
மொய்புன் சடைமா முடியேமுடி யாவ' தென்றார் 41

மாடெங்கும் நெருங்கிய மங்கல ஓசை மல்கச்
சூடுஞ்சடை மௌலி அணிந்தவர் தொல்லை ஏனம்
தேடுங்கழ லார்திரு வாலவாய் சென்று தாழ்ந்து
நீடுங்களிற் றின்மிசை நீள்மறு கூடு போந்தார் 43

நுதலின்கண் விழித்தவர் வாய்மை நுணங்கு நூலின்
பதமெங்கும் நிறைந்து விளங்கப் பவங்கள் மாற
உதவுந்திரு நீறுயர் கண்டிகை கொண்ட வேணி
முதன்மும்மையி னால்உல காண்டனர் மூர்த்தியார்தாம் 46

அகல்பா றையின் வைத்து முழுங்கையை அன்று தேய்த்த
இகலார்களிற் றன்பரை ஏத்தி முருக னாராம்
முகில்சூழ் நறுஞ்சோலையின் மொய்யொளி மாட வீதிப்
புகலூ ர்வரும் அந்தணர் தந்திறம் போற்ற லுற்றாம் 49


14


15

15. முருகர்

சோழ நாட்டிலுள்ள பூம்புகலூர் என்னும் ஊரில் தோன்றியவர் முருக நாயனார். அன்றாடம் புதிய பூக்களைக் கொண்டு வந்து பல்வேறு விதமான மாலைகள் கட்டி இறைவனுக்குச் சாத்தும் பணியையே பணியாகக் கொண்டவர். அஞ்செழுத்து ஓதி மலர் கொண்டு அருச்சிப்பதையே தலைக் கடனாகக் கொண்டார் இப்பெருமகனார்.

திருஞானசம்பந்தர் திருமணத்தில் அனைவருடனும் சேர்ந்து சோதியில் கலந்தார்.

தொண்டுகள் பலவகைப்படும். பெரும்பாலும் எல்லாத் தொண்டுகளும் மக்களையே சென்று அடைகின்றன என்றாலும் ஒரு சில நேர்முகமாகவும், ஒரு சில மறைமுகமாகவும் பயன்பட்டன. மக்களுக்கு நேரடியாகச் செய்யும் தொண்டில் சிற்சில சமயங்களில் மன அயற்சியும், வெறுப்புணர்ச்சியும் தோன்றக்கூடும். தாம் செய்யும் தொண்டைப் பிறர் அறிந்து கொள்ளாதபொழுதும், அறிந்து அதனை வரவேற்காத பொழுதும் வெறுப்புணர்ச்சி தோன்றக்கூடும். அன்றியும் மக்கள் தொண்டை நேரடியாகச் செய்யும் பொழுது நண்பர், அயலவர், பகைவர் என்ற பிரிவினை குறுக்கே வந்து நிற்கும். இதனால் நண்பர்க்குச் செய்யும்பொழுது மகிழ்ச்சியும், நொதுமலர்க்குச் செய்யும்பொழுது இடைநிலையான மனநிலையும், பகைவர்க்குச் செய்ய வேண்டி வரும்பொழுது ஓரளவு வெறுப்புணர்ச்சியும் தோன்றத்தான் செய்யும்.

இவற்றையெல்லாம் மனத்துட் கொண்ட நம் முன்னோர் எல்லாவகைத் தொண்டுக்கும் கோயிலை நிலைக்களமாக ஆக்கினர். அன்றாடம் இறைவனுக்கு அழகான மாலைகள் கட்டி அணிவித்தார் முருக நாயனார். என்றாலும் விதவிதமான மலர்கள் எங்கே கிடைத்தன? ஒரு குறிப்பிட்ட பகுதியை நந்தவனமாக மாற்றி அமைத்துப் பல செடி கொடிகளை வைத்து, நீர் பாய்ச்சி, எருவிட்டு, களையெடுத்துப் பாதுகாத்தால் தான் பூக்கள் கிடைக்கும். எனவே எத்தனை பேருக்கு ஒரு நந்தவனம் வேலை கொடுக்கிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். எருக்கம் பூவும் அருகம் புல்லும் இறைவன் விரும்பி ஏற்பவைதான். அப்படிப்பட்ட இறைவனுக்கு விதவிதமான மலர்களை மாலையாகக் கட்டிப் போடுவதன் நோக்கம் யாது - இப் பூக்கள்தான் வேண்டும் என்று இறைவன் கேட்பதில்லை. இந்தத் தத்துவத்தை நன்கு அறிந்திருந்தும் நம் முன்னோர் ஒவ்வொரு கோயிலையும் அடுத்து ஒரு நந்தவனம் அமைத்துப் பல்வேறு செடி கொடிகளை வளர்த்து அவற்றில் பூக்கும் மலர்களைப் பறித்து விதவிதமான மாலைகள் கட்டி இறைவனுக்குச் சாத்தினார்கள் என்றால் இதை நம்பிப் பிழைக்கும் பத்துப் பேருக்கு வேலை கொடுப்பதற்காகவே இதனைச் செய்தனர் என்று அறிய முடிகிறது. பல செடிகள், கொடிகள், மரங்கள் வைத்தியத்திற்குப் பயன்பட்டன.

கோயில் தொண்டு என்று சொல்லாமல் பத்துப் பேருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்றால் கூலி கொடுத்து அவர்களைப் பணி கொள்வதால் நமக்கு என்ன இலாபம் என்று ஒவ்வொருவரும் சிந்திக்கத் தொடங்குவார்கள். தங்களுக்கு இலாபம் இல்லை என்று தெரிந்தவுடன் இப் பொதுப்பணியை யாரும் செய்ய முன் வரார். எனவேதான் நம் முன்னோர் பலருக்கு வேலை கொடுக்கும் இப்பணியை இறைவனுக்குச் செய்கின்ற தொண்டு என்று கூறினர். நந்தவனம் வைத்தல், மலர் கொய்து மாலை கட்டுதல் முதலிய அனைத்துப் பணிகளையும் திருக்கோயில் தொண்டு என்று பெயரிட்டனர்.

முருக நாயனாரைப் போன்ற ஒரு சிலர் கூலி முதலிய பயன் எதையும் பெறா மல் மாலைகள் கட்டி இறைவனுக்கு அணிவித்தார்கள். ஆனால் பெரும்பாலோர் இப்பணியைச் செய்வதன் மூலம் கூலி பெற்று வாழ்க்கை நடாத்தினர். இப் பெரிய தத்துவத்தை உள்ளடக்கி அதன் ஆழ்ந்த தத்துவத்தை வெளியிடாமல் அனைவரும் இறைத் தொண்டில் ஈடுபட வேண்டும் என்று கூறினார்கள்.

கோயிலுக்குப் பக்கத்தில் பலா மரம் வளர்த்து அந்த மரத்திலிருந்து தான் நாயனம் செய்ய வேண்டும் என்பது சம்பிரதாயம். மேல் நாடுகளிலுள்ள மாதா கோயில்களில் காணப்படும் ORGAN என்ற இசைக் கருவிக்கு மேல் 'ஓக்' (OAK) எனப் படும் மரத்தின் கட்டைகளை அடுக்கி, பல ஆண்டுகள் அந்தக் கட்டைகள் இசையின் த்தாக்கத்தைப் பெற்ற பின்னர், அவற்றைப் பிடில் செய்ய உபயோகிப்பது மேல் நாடு களின் சம்பிரதாயம்.

முருகர்


ஆன பெருமை வளஞ்சிறந்த அந்தண் புகலூர் அதுதன்னில்
மான மறையோர் குலமரபின் வந்தார் முந்தை மறைமுதல்வர்
ஞான வரம்பின் தலைநின்றார் நாகம் புனைவார் சேவடிக்கீழ்
ஊனம் இன்றி நிறை அன்பால் உருகு மனத்தார் முருகனார் 5


கோட்டு மலரும் நிலமலரும் குளிர்நீர் மலரும் கொழுங்கொடியின்
தோட்டு மலரும் மாமலரும் சுருதி மலருந் திருவாயில்
காட்டு முறுவல் நிலவலரக் கனக வரையிற் பன்னகநாண்
பூட்டும் ஒருவர் திருமுடிமேல் புனைய லாகும் மலர்தெரிந்து 8

ஆங்கப் பணிக ளானவற்றுக் கமைத்த காலங் களின் அமைத்துத்,
தாங்கிக் கொடுசென் றன்பினொடுஞ் சாத்தி வாய்ந்த அர்ச்ச னைகள்
பாங்கிற் புரிந்து பரிந்துள்ளார்! பரமர் பதிகப் பற்றான
ஓங்கிச் சிறந்த அஞ்செழுத்தும் ஓவா நாளின் உணர்வினார் 10

தள்ளும் முறைமை ஒழிந்திடஇத் தகுதி ஒழுகும் மறையவர்தாம்
தெள்ளு மறைகள் முதலான ஞானஞ் செம்பொன் வள்ளத்தில்
அள்ளி அகிலம் ஈன்றளித்த அம்மை முலைப்பா லுடனுண்ட
பிள்ளை யார்க்கு நண்பருமாம் பெருமை யுடையா ராயினார் 11

அங்கண் அமருந் திருமுருகர் அழகார் புகலிப் பிள்ளையார்,
பொங்கு மணத்தின் முன்செய்த பூசை அதனால் புக்கருளிச்,
செங்கண் அடலே றுடையவர்தாஞ் சிறந்த அருளின் பொருள் அளிக்கத்
தங்கள் பெருமான் அடிநீழல் தலையாம் நிலைமை சார்வுற்றார் 13




16

16. உருத்திரபசுபதியார்

சோணாட்டில் திருத்தலையூர் என்னும் ஊரில் வேதியர் குலத்தில் தோன்றியவர் பசுபதியார். வேதத்திலுள்ள உருத்திரம் என்ற பகுதியை தண்ணீரில் கழுத்தளவில் நின்று தினம் மூன்று வேளையும் சொல்லி வந்த காரணத்தால் இறுதியாக இறைவனுடன் சேருகின்ற நாளிலும் உருத்திரம் சொன்ன காரணத்தினால் உருத்திர பசுபதியார் என்ற பெயரைப் பெற்றார்.

கிருஷ்ண யஜுர் வேதத்தில் தைத்திரிய சம்கிதையில் நாலாவது காண்டத்தில் ஏழாவது பிரபாடகமாக காணப்படுவது ஸ்ரீருத்ரம் என்ற பகுதி. வேதத்தில் வகுக்கப்பட்ட பல்வேறு யாகங்களில் கருட சயனம் என்ற யாகமும் ஒன்று. இஷ்டிகா என்று சொல்லப்படும் செங்கற்கள் ஆயிரத்தெட்டை, பறக்கின்ற கருடப் பறவையின் வடிவத்தில் நட்டு அதன் இருதய பாகத்தில் குண்டம் அமைத்து செய்யப்படும் யாகமே கருட சயனம் என்ற பெயரைப் பெறும். இந்த யாகத்தில் இந்திரன், வருணன் முதலியவர்களுக்கு அவிற் பாகம் உண்டே தவிர ருத்திரனுக்கு இங்கு இடம் இல்லை. வேத காலத்தில் கொடுமை இழைக்கின்ற தேவதைகளுள் ஒருவனாக ருத்திரன் கருதப்பட்ட காரணத்தால் இந்த யாகத்தைச் செய்பவர்கள் ருத்திரனால் தங்களுக்கு இடையூறு ஒன்றும் வந்துவிடக் கூடாது என்பதற்காக யாகம் தொடங்குவதற்கு முன்னரே ருத்திரனுக்குப் பலி இட்டனர். செங்கல்லால் வடிவமைக்கப்பட்ட கருடப் பறவையின் இடப்புறத்து இறக்கையின் நுனியில் ருத்திரனை ஆவாகனம் செய்து ஒரு பாத்திரத்தில் ஆட்டுப் பாலை வைத்துக் கொண்டு எருக்கிலையை கருவாகக் கொண்டு ருத்திரனுக்கு இந்த ஆட்டுப் பாலை வார்க்கும்போது ஸ்ரீருத்திர மந்திரங்களைப் பயன்படுத்தினர்.

ஆகம ரீதியாக நிர்மாணம் செய்யப்பட்ட சிவன் கோயிலில் ஆகமங்களை ஏற்றுக் கொள்ளாத வைதிகர்களால் சொல்லப்படும் இந்த ருத்திரம் எப்பொழுது சிவ வழிபாட்டில் நுழைந்தது என்பது ஆய்வுக்குரியது. என்றாலும் மிக நீண்ட காலமாகச் சிவபெருமானுக்கு அபிடேகம் செய்யும் பொழுது ஸ்ரீருத்ரம் சொல்லுகின்ற மரபு தமிழ் நாட்டில் ஏற்பட்டுவிட்டதை அறிய முடிகிறது.

உருத்திர பசுபதி நாயனார் செய்ததுபோல கழுத்தளவு நீரில் நின்று கொண்டு இந்த ஜபத்தைச் செய்கின்ற மரபு எப்பொழுது தோன்றிற்று என்றும் தெரியவில்லை. முதன் முதலாக உருத்திர பசுபதியார் வரலாற்றில்தான் இதனைப் பார்க்கின்றோம்.

வேதத்தில் காணப்படுகின்ற ருத்திரனையும் சைவ சமயம் கூறுகின்ற சிவ பரம் பொருளையும் ஒன்றாக்கிய காலம் கிறித்துவுக்கு நானூறு அல்லது ஐநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டே இருத்தல் வேண்டும். வைதிக மரபும் தென்னாட்டுச் சைவ மரபும் ஒன்றாகக்கப்பட்ட காலத்தில் ஸ்ரீருத்திரமும் சிவ வழிபாட்டில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

குரல் வளத்தைப் பெறுவதற்குக் கழுத்தளவு நீரில் நின்று பாடும் பழக்கம் உண்டு. கழுத்தளவு நீரில் நின்று கொண்டு எதைச் செய்தாலும் மிக்க பலன் கிடைக்கும்.

உருத்திரபசுபதியார்


அங்கண் மாநக ரதனிடை அருமறை வாய்மைத்
துங்க வேதியர் குலத்தினில் தோன்றிய தூயோர்
செங்கண் மால்விடை யார்செழும் பொன்மலை வல்லி
பங்கனாரடி மைத்திறம் புரிபசு பதியார் 3


ஆய அந்தணர் அருமறை உருத்திரங்கொண்டு
மாய னாரறி யாமலர்ச் சேவடி வழுத்துந்
தூய அன்பொடு தொடர்பினில் இடையறாச் சுருதி
நேய நெஞ்சின ராகிஅத் தொழில் தலை நின்றார் 4

தெள்ளு தண்புனல் கழுத்தள வாயிடைச் செறிய
உள்ளு றப்புக்கு நின்றுகை உச்சிமேற் குவித்துத்
தள்ளு வெண்டிரைக் கங்கைநீர் ததும்பிய சடையார்
கொள்ளும் அன்பினில் உருத்திரங் குறிப்பொடு பயின்றார் 6

அரும றைப்பய னாகிய உருத்திரம் அதனை
வருமு றைப்பெரும் பகலும்எல் லியும்வழு வாமே
திரும லர்ப்பொகுட் டிருந்தவன் அனையவர் சிலநாள்
ஒருமை உய்த்திட உமைஇடம் மகிழ்ந்தவர் உவந்தார் 7

நீடும் அன்பினில் உருத்திரம் ஓதிய நிலையால்
ஆடு சேவடி அருகுற அணைந்தனர்; அவர்க்குப்
பாடு பெற்றசீர் உருத்திர பசுபதி யாராம்
கூடு நாமமும் நிகழ்ந்தது குவலயம் போற்ற 9


16





17. திருநாளைப்போவார்

சோணாட்டின் ஒரு பகுதியாகிய மேற்கா நாட்டில் ஆதனூர் என்ற வளம் பொருந்திய ஊரின் புறத்தே அமைந்த குடிசைகள் பலவும் நிறைந்த புலைப்பாடியில் தோன்றியவர் நந்தனார். ஏனையோர் பயிர்த் தொழில் புரிந்து கள்ளுண்டு களி தூங்கும் நேரத்தில் சிவன் கழலையே நினைத்து, மறந்தும் அயல் நினைவின்றி அறம்புரி கொள்கையராய் வாழ்ந்தவர் நந்தனார்.

திருக்கோயிலிலுள்ள முரசம், மத்தளம், என்பனவற்றிற்குத் தேவையான பதனிட்ட தோலைத் தருதல், வீணைக்குரிய நரம்பைத் தருதல் முதலிய பணிகளில் ஈடுபட்டார்.

ஒவ்வொரு கோயிலிலும் புறத்தே நின்று வழிபடும் பழக்கத்தை மேற்கொண்ட இவர் திருப்புன்கூர் சென்று ஐயனை நேரே கும்பிட வேண்டும் என விரும்பினார். அடியார் விருப்பத்தை நிறைவேற்றும் அண்ணல் தம்மை மறைத்து நின்ற நந்தியை விலகுமாறு பணித்தார்.

எவ்வாறாயினும் தில்லை சென்று கூத்தனை வழிபட வேண்டும் என்ற உணர்வு மிக, தம்முடைய குலத்திற்கு அங்கே போவது தகாது என்று மனம் தடுக்க, ஒவ்வொரு நாளும் 'நாளைக்குப் போகலாம், நாளைக்குப் போகலாம்' என்றே பயணத்தைத் தள்ளிப் போட்டு வந்தமையின் நாளைப் போவார் என்னும் பெயர் நிலைத்துவிட்டது. இறுதியாக ஒரு முறை தில்லை சென்றார். யாரும் இவரைத் தடுக்கவில்லையாயினும் ஊரைச் சுற்றி வலம் வந்து 'இன்னல் தரும் இழி பிறவி இதுவே தடை' என்ற வருத்தத்துடன் உறங்கி விட்டார்.

அன்றிரவில் தில்லை வாழ் அந்தணர்கட்குக் கூத்தன் கனவில் தோன்றி திருநாளைப் போவாரைப் பற்றித் தெரிவித்து அவர் ஏரியில் மூழ்கி வருமாறு ஏற்பாடு செய்யப் பணித்தான். நந்தனிடமும் 'இப்பிறவி போய் நீங்க எரியினிடை நீ மூழ்கி முப்புரி நூல் மார்பருடன் முன் அணைவாய்' என்று கனவில் பணித்தான்.

தில்லை வாழ் அந்தணர்கள் கூத்தன் ஆணைப்படி தீ வளர்த்து அதனுட் புகுந்து வருமாறு நந்தனை வேண்டிக் கொள்ள, தீயினுட் புகுந்த நாளைப் போவார் நான்முகனைப் போல வெளி வந்தார்.

இத்தகைய வரலாறுகளை இன்று படிக்கின்ற நாம் இன்றைய சமுதாயக் கண்ணோட்டத்தோடு இவற்றை ஆராயப் புகுவது சரியாக வராது. நந்தனார் காலத்தில் சாதி வேறுபாடு இருந்தது என்பது உண்மைதான். ஆனால் அதே காலத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாணரை ஞானசம்பந்தர் ஏற்றுக் கொண்டு தம்முடனேயே வைத்துக் கொண்டதை அறிகிறோம். யாழ்ப்பாணர் கோயிலுக்குள் செல்வதை யாரும் தடுத்ததாகத் தெரியவில்லை. அதேபோல நந்தனாரும் கோயிலுக்குள் சென்றிருப்பாரேயானால் யாரும் அவரைத் தடை செய்யப் போவதில்லை. அப்படியானால் தில்லை வாழ் அந்தணர் தீ மூட்டி நந்தனாரை ஏன் அதன் வழியே வரச் சொல்ல வேண்டும் என்ற வினாத் தோன்றலாம்.

இந்தப் பிரசனையை மனத்தில் வாங்கிக் கொண்ட சேக்கிழார் இதற்கு விடை கூறும் முறையில் சரித்திரத்தைக் கூறிச் செல்கிறார். நந்தனாரைப் பொறுத்த மட்டில் தம்முடைய பிறப்பு இழிந்தது என்ற உறுதியான எண்ணங் கொண்டிருந்தார்.

தில்லைக்குச் செல்ல முடிவு செய்த அவர் 'அங்கு எய்த ஒன்றி அணைதரு தன்மை உறுகுலத்தோடு இசைவு இல்லை' என்றும், 'இன்னல் தரும் இழி பிறவி இதுவே தடை' என்றும் ஆழமான முடிவுக்கு வந்துவிட்டமையின் யார் கோயிலுக்குள் அழைத்தாலும் அவர் போகத் தயாராய் இல்லை. இத்தகைய தாழ்வு மனப்பான்மை (INFERIORITY COMPLEX), குற்ற உணர்வு மனப்பான்மை (GUILT COMPLEX) என்ற இந்த இரண்டு மனப்பான்மை உடையவர்களும் எளிதில் மாறிவிடுவதில்லை. இதற்குரிய கழுவாய் செய்யப்பட்டாலொழிய இவர்கள் மன அமைதி அடைவதில்லை. இதனை நன்கு அறிந்த இறைவன் அக்னிப் பிரவேசம் ஒன்றினால்தான் நந்தனாருக்கு மன மாற்றம் தர முடியும் என்று நினைந்து தீக்குளிக்கச் செய்தான். நந்தனாரைத் தீயில் மூழ்கி வருக என்று கூறும் நெஞ்சுரம் தில்லை வாழ் அந்தணர்கட்கு இருந்திருக்க நியாயம் இல்லை. அதனாலேயே அவரை அழைக்கும் பொழுது 'ஐயரே! அம்பலவர் அருளால் இங்கு அணைந்தோம்!' என்றே கூறுகின்றனர்.

பண்டைக் கால வரலாறுகளைப் படிக்கும்போது அக்கால சூழ்நிலைகளையும் அப்பொழுது வாழ்ந்த மக்களின் சிந்தனை, பழக்க வழக்கங்கள் ஆகியனவற்றையும் சேர்த்துப் பார்த்தல் வேண்டும்.

திருநாளைப்போவார்


இப்படித்தா கியகடைஞர் இருப்பின்வரைப் பினின்வாழ்வார்;
மெய்ப்பரிவு சிவன்கழற்கே விளைத்தஉணர்வொடும்வந்தார்;
அப்பதியில் ஊர்ப்புலைமை ஆன்றதொழில் தாயத்தார்;
ஒப்பிலவர்; நந்தனார் எனஒருவர் உளரானார் 11

இத்தன்மை ஈசர்மகிழ் பதிபலவுஞ் சென்றிறைஞ்சி
மெய்த்ததிருத் தொண்டுசெய்து விரவுவார் மிக்கெழுந்த
சித்தமொடுந் திருத்தில்லைத் திருமன்று சென்றிறைஞ்ச
உய்த்தபெருங் காதலுணர்(வு) ஒழியாது வந்துதிப்ப 20

அன்றிரவு கண்துயிலார்; புலர்ந்ததற்பின் "அங்கெய்த
ஒன்றியணை தருதன்மை உறுகுலத்தோ டிசைவில்லை"
என்"றிதுவும் எம்பெருமான் ஏவல்" எனப் போக்கொழிவார்;
நன்றுமெழுங் காதல்மிக "நாளைப்போ வேன்" என்பார் 21

"இப்பிறவி போய்நீங்க எரியினிடை நீமூழ்கி
முப்புரிநூல் மார்பருடன் முன்னணைவாய்" என்னமொழிந்(து)
அப்பரிசே தில்லைவாழ் அந்தணர்க்கும் எரியமைக்க
மெய்ப்பொருளா னார்அருவி அம்பலத்தே மேவினார் 28

திருவுடைய தில்லைவாழ் அந்தணர்கள் கைதொழுதார்;
பரவரிய தொண்டர்களும் பணிந்துமனம் களிபயின்றார்;
அருமறைசூழ் திருமன்றில் ஆடுகின்ற கழல்வணங்க
வருகின்றார் திருநாளைப் போவாராம் மறைமுனிவர் 34





18. திருக்குறிப்புத் தொண்டர்

இவ்வண்டங்களின் தாயாகிய உமையம்மை அருந்தவம் புரிந்த கச்சியம்பதி தொண்டை நாட்டில் தலைநகராகும். அவ்வூரில் ஏகாலிக் குலத்தில் தோன்றிய திருக் குறிப்புத்தொண்டர், அடியார்கள் வாய் திறந்து கேட்கும் முன்னர் அவர்கள் குறிப் பறிந்து பணிவிடை செய்தமையின் இப்பெயரைப் பெற்றார். அடியவர்களின், அழுக் கடைந்த கந்தைகளைச் சலவை செய்து தருவதையே தம் பணியாகக் கொண்டவர்.

கிழவேதியர் ஒருவர் ஒற்றை ஆடையுடன் எதிரில் வர தொண்டனார் அவர் எதிரில் சென்று ''இக் கந்தையைத் தூய்மை செய்து தருகின்றேன்'' என வேண்டிக் கொண்டார்.

கிழ வேதியர் 'இன்று அந்திபடுவதன் முன் இதனை ஒலித்து உணக்கித் தாரீரேல் இந்த உடற்கு இடர் செய்தீர் ஆவீர்' என்று கூறி கந்தையினைத் தந்தார்.

தொண்டனார் அக் கந்தையினைப் பெற்றுச் சென்று அழுக்கு நீங்க தூய்மைப் படுத்திய பிறகு, காய வைப்பதற்கு முன் 'திசை மயங்க வெளி அடைத்து' மழை கொட்டத் தொடங்கிவிட்டது. இரவு வரை மழை விடாத காரணத்தால் துணியைக் காய வைக்க முடியவில்லை. வயோதிக அடியார்க்கு ஊறு இழைத்து விட்டோம் என்ற அச்சத்தினால் கடமை தவறிய தமக்குத் தாமே தண்டனை விதித்துக் கொண்டார். சலவை செய்யும் கல்லில் தம் தலையை மோதத் தொடங்க இறைவனுடைய கை அவரைத் தடுத்து அணைத்துக் கொண்டது.

இவ்வரலாறு சற்று வினோதமானதாகும். துணியைச் சலவை செய்து தருகிறேன் என்று ஒருவர் சொன்னால் அது துணியை அழுக்குப் போகத் துவைத்து உலர்த்தித் தருவதையே குறிக்கும். துணியைத் துவைப்பது என்பது நாமாகச் செய்கின்ற ஒன்று. ஆனால் காய வைத்தலுக்கு கதிரவன் வெப்பம் வேண்டும்.

சிவனடியாரிடத்தில் அவருடைய அழுக்கடைந்த கந்தையைச் சலவை செய்து தருகிறேன் என்று திருக்குறிப்புத் தொண்டர் வலியச் சென்று கேட்கும் பொழுது அம்முதியவர் கூறிய சொற்கள் நினைவில் கொள்ளத் தக்கனவாகும். இன்று துணி களைச் சலவைக்குப் போடும் நாம் 'துவைத்துக் காய வைத்துக் கொண்டு வருக' என்று கூறுவதில்லை. துவைத்துப் போடுதல் அல்லது சலவை செய்தல் என்று கூறி னாலேயே காய வைப்பதையும் சேர்த்துத்தான் சொல்கிறோம். ஆனால் அச் சிவனடி யார் 'கந்தை இது ஒலித்து (துவைத்து) உணக்கி (காயவைத்து) கடிது இன்றே தாரீ ரேல் இந்த உடற்கு இடர் செய்தீர் ஆவீர்' என்று கூறினார். ஒப்பந்தத்தில் துணியைத் துவைப்பது மாத்திரம் அல்லாமல் காயவைப்பதையும் குறிப்பிட்டிருப்பதால் மழை யின் காரணமாகக் காய வைக்க முடியாத பொழுது திருக்குறிப்புத் தொண்டரின் தொண்டு முட்டுப்பட்டு விடுகிறது. தம்முடைய முயற்சி, செல்வாக்கு என்பவற்றிற்கு அப்பாற்பட்டதாகும், மழை. எனவே எதிர்பாராமல் மழை வந்துவிட்டமையின் என் னால் உலர்த்த முடியவில்லை என்று அடியார் கூறியிருந்தால் யாரும் அவரை குறை கூறப்போவதில்லை.

இந்நிலையில் தாம் செய்துவிட்ட ஒரு பிழையை அடியார் நினைக்கின்றார். 'திசைமயங்க வெளியடைத்துக் கருமுகிலின் குழாம் மிடைந்து' வரும் பொழுதே நான் இத் துணியை வீட்டிற்கு எடுத்துச் சென்று அடுப்பின் பக்கத்தில் காய வைத்திருக்க வேண்டும். 'மனைக் காற்று ஏற்க அறிந்திலேன்! எனவே நான் செய்த தவறுக்குக் கழுவாயாக இக்கல்லில் என் தலையை மோதிக் கொள்கிறேன்' என்கிறார்.

திருக்குறிப்புத்தொண்டர்


மெய்த ரும்புகழ்த் திருமயி லாபுரி விரைசூழ்
மொய்த யங்குதண் பொழில்திரு ·வான்மியூர் முதலாப்
பைத ரும்பணி அணிந்தவர் பதியெனைப் பலவால்
நெய்தல் எய்தமுன் செய்தஅந் நிறைதவம் சிறிதோ? 40


மலைக்கு லக்கொடி பரிவுறு பயத்தால் மாவின் மேவிய தேவநா யகரை,
முலைக்கு வட்டொடு வளைக்கையால் நெருக்கி முறுகு காதலால் இறுகிடத் தழுவச்
சிலைத்த னித்திரு நுதல்திரு முலைக்கும் செந்த ளிர்க்கரங் களுக்கும்மெத் தெனவே,
கொலைக்க ளிற்றுரி புனைந்ததம் மேனி குழைந்து காட்டினார் விழைந்த கொள்
கையினார் 64

மண்ணின்மிசை வந்ததற்பின் மனமுதலா யினமூன்றும்
அண்ணலார் சேவடியின் சார்வாக அணிவிப்பார்
புண்ணியமெய்த் தொண்டர்திருக் குறிப்பறிந்து போற்றுநிலைத்
திண்மையினால் 'திருக்குறிப்புத் தொண்டர்' எனுஞ் சிறப்பினார் 112

''இக்கந்தை அழுக்கேறி எடுக்கவொணா தெனினும்யான்
மெய்க்கொண்ட குளிர்க்குடைந்து விடமாட்டேன்; மேல்கடற் பால்,
அக்குன்றம் வெங்கதிரோன் அணைவதன்முன் தருவீரேல்,
கைக்கொண்டு போயொலித்துக் கொடுவாரும் கடி''தென்றார் 119

முன்னவரை நேர்நோக்கி முக்கண்ணர் ''மூவுலகும்
நின்னிலைமை அறிவித்தோம்; நீயும்இனி நீடியநம்
மன்னுலகு பிரியாது வைகுவாய்'' என அருளி
அந்நிலையே எழுந்தருளி அணிஏகாம் பரம்அணைந்தார் 127





19. சண்டேசுரர்

குடந்தையை அடுத்துள்ள மண்ணியாற்றின் தென்கரையிலுள்ளது சேய்குலூர். வைதிக நெறி மேற்கொண்ட குடியிற் பிறந்தவர் எச்சதத்தன் என்ற வைதிகர். அவருக்கு மகனாகத் தோன்றியவர் விசார சர்மர் என்பவர். ஊர் முழுவதும் உள்ள வைதிகர்கள் வேத முறைப்படி யாகம் செய்தலில் ஈடுபட்டிருக்கையில் விசார சர்மர் வேதம் ஆகமம் இரண்டையும் கற்றுத் தெளிந்து ''அலகில் கலையின் பொருட்கு எல்லை ஆடும் கழலே'' எனத் தெளிந்து சிவ பூசையில் ஈடுபட்டார்.

வைதிகர்கள், சைவர்கள் இருவரும் போற்றும் பசுக்களை மேய்க்கும் ஒருவன் ஒருநாள் பசுக்களை அடிப்பதைக் கண்ட விசார சர்மர் தாமே அவற்றை மேய்ப்பதாக ஏற்றுக் கொண்டு தினந்தோறும் மேய்த்து வரலானார்.

அன்பினால் இவர் மேய்க்கத்தொடங்கப் பசுக்கள் தாமே பாலைப் பொழியலாயின. சிவபூசையில் விருப்புடையவர் ஆதலின் மாடு மேய்க்கும் இடத்திலேயே இலிங்கம் ஒன்றை ஸ்தாபித்து இப் பாலை அபிடேகம் செய்யலானார். இச் செய்தி ஊரில் பரவ, சிவ பூசையில் நம்பிக்கை இல்லாத வைதிகர்கள் இவர் இலிங்கத் திற்கு அபிடேகம் செய்வதை, பாலை வீணாகக் கொட்டுவதாக இவர் தந்தையிடம் சென்று முறையிட்டனர்.

இதன் உண்மையை அறியப் புறப்பட்ட எச்சதத்தன் மகன் இருக்கும் இடத்திக்கு வந்து மறைவாக நின்று கவனிக்கலானான். குடங்களில் பாலை நிரப்பிக் கொண்ட விசார சர்மர் ஒன்றிய மனத்துடன் பூசையைத் தொடங்கினார். சினங்கொண்ட எச்சதத்தன் மறைவிலிருந்து வெளிப்பட்டு கம்பினால் இவரை அடிக்கத் தொடங்கினான். சிவபூசையில் ஈடுபட்டிருந்த விசார சர்மருக்குத் தம் உடம்பில் அடிவிழுவது தெரியவில்லை. இதனால் ஆத்திரம் கொண்ட எச்சதத்தன் அபிடேகத்திற்குரிய குடப் பாலைக் காலினால் எற்றிவிட்டான். இது சிவ அபராதம் ஆகையால் விழித்துக் கொண்ட விசார சர்மர் பக்கத்தில் கிடந்த கோல் ஒன்றை எடுத்துத் தந்தையின் காலில் அடிக்க முற்பட, அந்தக் கோலே கோடரியாக மாறி அவன் இருகால்களையும் துண்டித்து விட்டது.

இறைவன் தோன்றி 'நம் பொருட்டால் ஈன்ற தாதை விழ எறிந்தாய், அடுத்த தாதை இனி உனக்கு நாம்' என்று அருளி, உண்ட கலமும், உடுப்பனவும், சூடுவனவும் பெறுகின்ற சண்டீசப் பதத்தை அருள் செய்தார்.

பல்லவர்கள் காலத்தில் வேத வழக்கொடுபட்டவைதிகர்களுக்கும் ஆகம வழக்கொடுபட்ட மறையவர்களுக்கும் மறைமுகமாக நடைபெற்ற பூசலைத்தம் நுண்மான் நுழை புலத்தால் கண்டறிந்த சேக்கிழார் இவ்வரலாற்றில் அதனை எடுத்துக் காட்டுகிறார். வேத வழக்கொடுபட்ட வைதிகர்களில் 'கௌண்டின்ய கோத்திரத்தைச்' சேர்ந்தவர்கள் தவிர மற்றவர்கள் யாரும் சிவ பெருமானைப் பரம்பொருளாக ஏற்றுக் கொள்வதில்லை. ஐந்தெழுத்துக்குத் தனிச் சிறப்பு தருவதில்லை. கௌண்டின்யர்கள், ஏனைய ரிக்வேதிகள் ஆகிய இருசாராரும் யாகம் செய்வதையே மேற்கொண்டனர் என்றாலும் யாகத்தின் தலைவனாக, அவிசை ஏற்றுக் கொள்ளும் அதிகாரியாக யாரைச் சொல்வது என்பதில் இவ்விரு சாராரும் முரண்பட்டனர், கௌண்டின்யர்கள் சிவபரம்பொருளையே யாகத்தை ஏற்கும் தலைவனாகக் கருதினர், கூறினர்... ஏனைய வைதிகர்கள் சிவபெருமானை ஏற்றுக் கொள்ளாததாலும் வேத அடிப்படையில் ருத்திரனுக்கு அவிசு தரும் மரபு இல்லையாதலாலும் இந்திரனையும், வருணனையுமே தலைவர்களாகக் கருதினர், கூறினர்.

இந்த அடிப்படையில் சேய்குலூரில் வாழ்ந்த மறையவர்கள் அனைவரும் வைதிக மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆதலால் அவருள் காசிப கோத்திரத்தைச் சேர்ந்த எச்சதத்தன் சிவனையும் சிவ வழிபாட்டையும் ஏற்காத வைதிகனாவான்.

ஆனால் இவனுக்குப் பிள்ளையாகப் பிறந்த விசார சர்மர் ஆகம வழிப்பட்ட சிவ பூசையில் தலை நின்றவராவார். இம்முறையில் சிவ பூசை புரிபவர்கள் இலிங்கத் திருமேனிக்கு அபிடேகம் செய்வதை மிக இன்றியமையாததாகக் கொள்வர். ஆனால் வைதிகனாகிய எச்சதத்தன் சிவ வழிபாட்டை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் அபிடேகத்திற்குத் தனிச் சிறப்பு ஒன்றையும் நினைக்கவில்லை. எனவேதான் மக னாகிய விசார சர்மர் அபிடேகத்திற்கு வைத்திருந்த பால் குடத்தைக் காலால் எட்டி உதைத்தான். இவ் வரலாறு முழுவதிலும் மிக நுணுக்கமாக இப்பிரிவினையைசேக் கிழார் கூறிச் செல்கிறார். எவ்வளவு சினங்கொண்டாலும் சிவ பூசையை நம்புகின்ற ஒருவன் அபிடேகப் பாலைக் காலால்உதைக்க முன் வரமாட்டான். சேய்ஞலூர் வைதிகர்கள் 'விசார சர்மர் பாலைக் கறந்து மணலில் ஊற்றி விளையாடுகிறான்' என்று கூறியதும் இக் கருத்தையே வலியுறுத்துகிறது.

சண்டேசுரர்

''யானே இனிஇந் நிரைமேய்ப்பன்'' என்றார்; அஞ்சிஇடை மகனும்,
தானேர் இறைஞ்சி விட்டகன்றான்; தாமும் மறையோர் இசைவினால்,
ஆனே நெருங்கும் பேராயம் அளிப்பா ராகிப் பைங்கூழ்க்கு,
வானே என்ன நிரைகாக்க வந்தார் தெய்வ மறைச்சிறுவர் 24

ஆயநிரையின் குலமெல்லாம் அழகின் விளங்கி மிகப்பல்கி
மேய இனிய புல்லுணவும் விரும்பு புனலும் ஆர்தலினால்
ஏய மனங்கொள் பெருமகிழ்ச்சி எய்தி இரவும் நண்பகலும்
தூய தீம்பால் மடிபெருகிச் சொரிய முலைகள் சுரந்தனவால் 28

கொண்டு மடுத்த குடநிறையக் கொணர்ந்து விரும்புங் கொள்கையினால்
அண்டர் பெருமான் வெண்மணல்ஆ லயத்துள் அவைமுன் தாபித்து
வண்டு மருவுந் திருப்பள்ளித் தாமங் கொண்டு வரன்முறையே
பண்டைப் பரிவால் அருச்சித்துப் பாலின் திருமஞ் சனம்ஆட்டி 35

''அந்தண் மறையோர் ஆகுதிக்குக் கறக்கும் பசுக்க ளானவெலாம்
சிந்தை மகிழ்ந்து பரிவினால் திரளக் கொடுபோய் மேய்ப்பான்போல்
கந்தம் மலிபூம் புனல்மண்ணி மணலிற் கறந்து பாலுகுத்து,
வந்த பரிசே செய்கின்றான் என்றான்'' என்று வாய்மொழிந்தார் 42

அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப னாக்கி ''அனைத் துநாம்
உண்ட கலமும் உடுப்பனவும் சூடு வனவும் உனக் காகச்,
சண்டீ சனுமாம் பதந்தந்தோம்'' என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார் 56





20

20. திருநாவுக்கரசர்

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூர் என்ற ஊரில் வேளாளர் மரபில் குறுக்கையர் குடியில் புகழனார் என்ற பெருமானுக்குத் திலகவதியார் என்ற மகளும், சில ஆண்டுகள் கழித்து மருள் நீக்கியார் என்ற மகனும் தோன்றலாயினர். வளமான குடும்பத்தில் பிறந்த காரணத்தால் பல கலைகளையும் கற்ற மருள் நீக்கியார், சாலை அமைத்தல், குளம் தோண்டுதல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல் என்ற பல சமுதாய அறங்களைச் செய்தும் மனத்தில் அமைதி பெறவில்லை. இவருடைய தமக்கையாராகிய திலகவதியார் தமக்கு மணம் பேசப் பெற்ற ஒருவர் மணவினை நடக்கு முன்னரே போர்க்களத்தில் உயிர் நீத்தாராக, கைம்மை நோன்பை மேற்கொண்டார். இந்த இடைக் காலத்தில் தாய் தந்தையர் இருவரும் இவ்வுலகைத் துறக்கத் தமக்கையும் தம்பியும் தனித்து விடப்பட்டனர்.

கலைஞானம் பெற்றிருப்பினும் இறையருள் இன்மையால் மருள் நீக்கியார் மன அமைதி பெறுதற் பொருட்டு அமண் சமயம் புகுந்து பல்லாண்டுகள் அச் சமயத்தில் இருந்து வரலானார். தம்பியார் நிலை இவ்வாறு ஆகிவிட்டதை இறைவனிடம் முறையிட்டுவிட்டுச் சகோதரியார் திருக்கோயில் தொண்டில் ஈடுபடலானார். இறுதியாக மருள் நீக்கியாருக்கு வந்த வயிற்று வலியை அவர் புகுந்த சமயத்தால் நீக்க முடியாமல் போக, தமக்கையாரை வந்து கண்டு அவரிடம் திருநீறு பெற்று அண்மையில் உள்ள திருவதிகை வீரட்டானம் கோயிலுக்குச் சென்று இறைவனைப் பாடினார். நோய் நீங்கப் பெற்றுச் சைவராக வாழ்ந்த அவரை அமண் சமயத்தில் வாழ்ந்த பல்லவ மன்னன் (முதலாம் மகேந்திரவர்மன்) அவர் சமண சமயத்தை நீத்ததற்காகப் பல்வேறு தண்டனைகளை அளித்தான். சுண்ணாம்புக் காளவாயில் இடுதல், விடம் கலந்த பால் சோற்றைத் தருதல், யானையைவிட்டு இடறச் செய்தல், கல்லுடன் கட்டி கடலில் போடுதல் ஆகிய பல்வேறு தண்டனைகளையும் இறையருள் பெற்ற வாக்கின் வேந்தர் வெற்றி கொண்டு நின்றார்.

கையில் உழவாரப் படை ஒன்றை ஏந்திக் கொண்டு, செல்லும் திருக்கோயில்களில் எல்லாம் புல்லைச் செதுக்கித் தூய்மைப்படுத்தும் சமுதாயத் தொண்டில் ஈடுபட்டு வாழ்ந்தார்.

திருஞான சம்பந்தரைப் போலவே இப்பெருமகனாரும் இறைவன் உறையும் தலங்கள் பலவற்றிற்கும் சென்று வழிபட்டுப் பாடல்கள் பாடினார். அப்பூதி அடிகள் என்ற அந்தணர் வீட்டிற்குச் சென்று விடம் தீண்டிய அவரது மகனைப் பிழைக்கச் செய்தார்.

திருவீழிமிழலையில் இவரும் பிள்ளையாரும் சேர்ந்து தங்கியிருக்கையில் பஞ்சத்தால் வாடிய மக்களுக்கு இரண்டு மடங்கள் அமைத்துப் பஞ்சம் தீருகின்ற வரையில் உணவு படைத்தனர்.

பழையாறை வடதளி என்ற இடத்தில் அமணர்களால் மறைக்கப்பட்ட சிவலிங்கத்தைக் கண்டு வழிபட்டாலொழிய உண்ண மாட்டேன் என்று உண்ணாவிரதத்தை இந் நாட்டிற்கு முதன் முறையாகப் போதித்தவர் திருநாவுக்கரசரேயாவார்.

கயிலையில் இறைவன் இருக்கும் வண்ணம் கண்டு வணங்க வேண்டும் என்ற முடிவுடன் கயிலை யாத்திரை மேற்கொண்டார். பனிப் பிரதேசத்தில் கைகளும், கால்களும் குருதி ஓட்டம் இன்மையால் இற்றுப் போக உருண்டு உருண்டு செல்லத் தொடங்கினார். இந் நிலையில் இவரைக் கண்ட தவ முனிவர் வேடம் கொண்ட இறைவன் ''மானிட உடம்புடன் கயிலை சென்று இறைவனைப் பணிதல் இயலாத காரியம்'' என்று பலவாறு எடுத்துச் சொல்லியும் ''மாளும் இவ்வுடல் கொண்டு இனி மீளேன்'' என்று மேலே செல்ல எத்தனித்த முதல் சத்தியாக்கிரகி இவரேயாவார்.

இறையருளால் பக்கத்திலிருந்த வாவியில் குளித்து 'யாதும் சுவடு படாமல்' (மீண்டும் நடந்து வராமல்) திருவையாற்றை வந்து அடைந்தார். கயிலையில் தானிருந்த கோலத்தை ஐயாற்றில் இறைவன் காட்டியருளினான்.

பல தலங்களையும் சென்று வணங்கித் திருப்பதிகம் பாடிய நாவுக்கரசர் பெருமான் திருப்பூம்புகலூர் என்ற ஊரில் இறையடி சேர்ந்தார்.

திருநாவுக்கரசர்

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன்; பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணாமை உணராதேன் 1


திலகவதி யார்பிறந்து சிலமுறையாண் டகன்றதற்பின்
அலகில்கலைத் துறைதழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில்வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர்போற்பின்
மலருமரு ணீக்கியார் வந்தவதா ரஞ்செய்தார் 18

என்றபொழு தவரருளை எதிரேற்றுக் கொண்டிறைஞ்ச
நின்றதபோ தனியாரும் நின்மலன்பேர் அருள்நினைந்து
சென்றுதிரு வீரட்டம் புகுவதற்குத் திருக்கயிலைக்
குன்றுடையார் திருநீற்றை அஞ்செழுத்தோ திக்கொடுத்தார் 66

நீற்றால்நிறை வாகிய மேனியுடன் நிறைஅன்புறு சிந்தையில் நேசமிக,
மாற்றார்புரம் மாற்றிய வேதியரை மருளும்பிணி மாயை அறுத்திடுவான்
'கூற்றாயின வாறு விலக்ககிலீர்' என நீடிய கோதில் திருப்பதிகம்
போற்றாலுல கேழின் வருந்துயரும் போமாறெதிர் நின்று புகன்றனரால் 70

''நாமார்க்குங் குடியல்லோம்'' என்றெடுத்து நான்மறையின்
கோமானை நதியினுடன் குளிர்மதிவாழ் சடையானைத்
தேமாலைச் செந்தமிழின் செழுந்திருத்தாண் டகம்பாடி
''ஆமாறு நீரழைக்கும் அடைவிலம்''என் றருள்செய்தார் 93

மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
''புண்ணியா! உன்னடிக்கே போதுகின்றேன்'' எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅர(சு) அமர்ந்திருந்தார் 427


20



21

21. குலச்சிறையார்

திருஞான சம்பந்தர் காலத்தில் பாண்டிய நாட்டை ஆட்சி செய்த பெருமன்னன் கூன் பாண்டியன் என்று அழைக்கப் பெற்ற நின்றசீர் நெடுமாறன் என்புவனாவான். உழிஞம், பாழில், நெல்வேலி முதலிய இடங்களில் பாண்டி மன்னன் மாபெரும் வெற்றிகளைப் பெறப் பெருந்துணையாக நின்றவர் குலச்சிறையார். இம் மன்னன் சமண சமயத்தைச் சார்ந்து வாழ்ந்த காலத்திலும் இவனுடைய அமைச்சராகிய குலச் சிறை நாயனார் சைவ சமயத்தை அழுத்தமாகப் பின்பற்றியதுடன் ஞான சம்பந்தரை அழைத்துப் பாண்டி நாட்டில் சைவம் வளர்க்கப் பாடுபட்டவர்.

பாண்டி நன் நாட்டில் மணமேற்குடி என்ற ஊரில் தோன்றியவர் குலச்சிறை யார். சிவனடியார் எனப்பட்டவர் யாராக இருப்பினும், நான்கு குலத்துள் எக் குலத் தில் தோன்றியவராயினும், குலத்தின் நீங்கியவராயினும் அவர்களைப் போற்றி வழி பட்டார். அன்பர்கள் பலர் சேர்ந்து வந்தாலும் ஒருவராக வந்தாலும் அவர்களை உப சரித்து அமுதூட்டி, திருநீற்றுப்பை, கோவணம் முதலிய அடியார் வேண்டும் பொருளை அள்ளி வழங்கும் இயல்புடையவர்.

பாண்டியன் மனைவியாகிய மங்கையர்கரசியார் சைவ சமயத்தை விடாது போற்றி வளர்க்க உறு துணையாக நின்றவர்.

இந்த வரலாற்றிலும் ஏழாம் நூற்றாண்டுத் தமிழகத்தின் வரலாற்றை ஓரளவு அறிய முடிகிறது. மிகப் பிரசித்தி பெற்ற பாண்டியன் நின்ற சீர் நெடுமாறன். பல்ல வர்களுக்குப் பிறகு முதன் முதலாகத் தமிழ்நாடு முழுவதையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டு வந்தவன் நின்ற சீர் நெடுமாறன் ஆவான். மிக வலிமை உடையவனாகிய இம் மன்னன் பிற சமயத்தைத் தழுவிய காரணத்தால் அங்கையற்கண்ணி அமர்ந்து ஆட்சி புரியும் பாண்டி நாடு முழுவதும் புறச் சமயத்தைத் தழுவத் தொடங்கியது.

இந்தச் சூழ்நிலையில் சைவ சமயத்தில் மிக அழுத்தமான பற்றுடையவராகிய குலச்சிறையார் நெடுமாறனுக்கு முதலமைச்சராகிறார். மன்னன் தன் செல்வாக்கின் காரணமாகத் தன்னுடைய முதலமைச்சரின் சமயத்தை மாற்ற முயலவில்லை. இவ் வாறு கூறுவதால் நெடுமாறனின் அரசியல் ஆற்றலைக் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது. குலச்சிறையார் மாறியே தீர வேண்டும் என்று மன்னன் கூறியிருந்தால் தமிழ் நாட்டின் வரலாறே திசை மாறிப் போயிருக்கும். மன்னனுடைய பெருந்தன்மை தன் அமைச்சரின் சொந்த வாழ்க்கையில் தலையிட இடம் கொடுக்கவில்லை.

திருஞான சம்பந்தரை அமைச்சர் குலச்சிறையாரும் அரசி மங்கையர்க்கரசியாரும் பாண்டி நாட்டுக்கு அழைத்தார்கள் என்பதை அறிந்தும்கூட அம்மன்னர் பெருந்தகை ஒன்றும் செய்யவில்லை. எனவேதான் குலச்சிறையார் பெரு முயற்சியால் பாண்டி நாடு சைவம் தழைத்தோங்கும் வாய்ப்பைப் பெற்றது. தலைவன் பாதை சரியல்ல எனத் தோன்றும்போது உற்ற தோழர்களும் அமைச்சர்களும் அதனைத் திருத்த முயல வேண்டும் என்பது இவ் வரலாற்றின் கருத்து. ஆயின் அதிகாரம் உள்ளவர்களை அனுசரித்துப் பேசும் வழக்கம் அதிகரித்துள்ள இன்றைய உலகில் குலச்சிறையாரின் வாழ்க்கை அவரை நாயன்மாராக உயர்த்தியது சிந்திக்கற்பாலது.

குலச்சிறையார்


பன்னு தொல்புகழ்ப் பாண்டிநன் னாட்டிடைச்
செந்நெ லார்வயல் தீங்கரும் பின்வயல்
துன்னு பூகப் புறம்பணை சூழ்ந்தது
மன்னு வண்மையி னார்மண மேற்குடி 1

குறியில் நான்கு குலத்தின ராயினும்
நெறியின் அக்குலம் நீங்கின ராயினும்
அறிவு சங்கரற் கன்பர் எனப்பெறில்
செறிவு றப்பணிந் தேத்திய செய்கையார் 4

பூதி கோவணஞ் சாதனத் தாற்பொலிந்
தாதி தேவர்தம் அஞ்செழுத் தாமவை
ஓது நாவணக் கத்தால் உரைப்பவர்
பாதம் நாளும் பரவிய பண்பினார் 7

இன்ன நல்லொழுக் கத்தினார்; ஈறில்சீர்த்
தென்ன வன்நெடு மாறற்குச் சீர்திகழ்
மன்னு மந்திரி கட்குமே லாகியார்;
ஒன்ன லர்ச்செற்(று) உறுதிக்கண் நின்றுளார் 8

வாதில் தோற்ற அமணரை வன்கழுத்
தீது நீங்கிட ஏற்றுவித் தார்திறம்
யாது போற்றினேன்? மேலினி ஏத்துகேன்
வேத நீதி மிழலைக் குறும்பர்தாள் 11





22. பெருமிழலைக் குறும்பர்

மிழலை நாட்டின் தலைநகரம் பெருமிழலை என்பதாகும். அவ்வூரில் குரும்பர் என்ற பெருமகனார் அடியார் பணி செய்தலையே பெரும் பேறாகக் கொண்டு அவர்களைக் கண்ட பொழுது மிகுந்த அன்புடன் அமுதூட்டி எல்லையில்லாத பெரு நிதியத்தையும் அவர்கட்கு வழங்குவாராயினார். ஒருமுறை நம்பி ஆரூராருடைய வர லாற்றைக் கேள்விப்பட்டு அவரைச் சென்று வணங்கினார்.

அந்த வினாடி முதல் இறைவன் திருவடிகளை அடைய நம்பி ஆரூரார் என்ற மந்திரத்தையே தாரக மந்திரமாகக் கொண்டு யோகப் பயிற்சிகளில் முற்பட்டார்.

நம்பி ஆரூரார் என்ற நாமம் நவின்ற நலத்தால் அட்டமா சித்திகளும் கைவரப் பெற்று வாழ்ந்து வருகையில் திருஅஞ்சைக் களத்தில் தம்முடைய ஆன்மிக குருவாகிய நம்பி ஆரூரார் (சுந்தர மூர்த்திகள்) கயிலை செல்கிறார் என்பதைத் தம் யோக சித்தி யால் அறிந்து கொண்டார்.

'திருநாவலூரில் வந்த வன்றொண்டர் நண்ணற்கரிய திருக்கயிலை நாளை எய் தும்போது நான் அவரைப் பிரிந்து கண்ணின் மணியை இழந்தவர் போல் வாழ மாட் டேன்' என்று கூறிப் பிரமநாடி வழியாகக் கருத்தைச் செலுத்திக் கபாலம் திறக்கக் கயிலையை முன்னமே அடைந்தார்.

பெரிய புராண நாயன்மார்களின் வரலாறுகளில் இவருடைய வரலாறு சற்று வேறுபட்டதாகும். பக்தி மார்க்கத்தின் அடிப்படையில் ஏதோ ஒரு குறிக்கோளை வைத்துக் கொண்டு வாழ்ந்த நாயன்மார்கள் யோக மார்க்கத்தைக் கடைப் பிடித்த தாகத் தெரியவில்லை. இதற்கு விதிவிலக்கு குரும்ப நாயனாரும், திருமூலருமே ஆவர். குரும்பர் நம்பி ஆரூரர் என்ற சுந்தரரின் பெயரையே தாரக மந்திரமாகக் கொண்டு யோகம் பயின்றார். யோக மார்க்கத்தில் செல்கின்றவர்கள் பல்லாயிர வராக இருப்பினும் ஒருவர் இருவருக்குத்தான் சித்திகள் கிட்டும். சித்திகள் என்று சொன்னவுடன் வெறுங் கையிலிருந்தோ, தழைகளிலிருந்தோ விபூதி, ஆப்பிள் பழம், கெடிகாரம் முதலியவற்றை வரவழைத்துத் தருவதையே சித்திகள் என்று இன்று பலரும் நினைக்கின்றனர். யட்சினி வித்தை எனப்படும் இதற்கும் அட்டமா சித்திகள் என்று சொல்லப்படும் சித்திகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. அணிமா, லகிமா முதலிய சித்திகளைப் பெற்றவர்கள் வித்தை காட்டுபவர்களைப் போல அவற்றைப் பயன்படுத்துவதில்லை. தம்முடைய உயிரை வேண்டும்பொழுது கபாலத் தைத் திறந்து (PITUTARY GLAND) சகஸ்ரதளம் வழியாகப் போக்கிக் கொள்ளவும் வல்ல வர்கள்.

குரும்பருடைய வரலாற்றின் தனிச்சிறப்பு என்னவென்றால் யாரிடமும் சென்று யோக வித்தையை இவர் பயின்றதாகத் தெரியவில்லை. நம்பி ஆரூரர் என்ற பெய ரைக் கூறுவதாலேயே இத்தனை சித்திகளையும் இவர் பெற்று விட்டார்.

இவ்வரலாற்றிலிருந்து நாம் அறியக் கூடியது ஒன்று உண்டு. வேறு பயன் கருதாது (நிஷ்காம்யமாக) முழு மனத்தோடு (ஏகாக்கிர சித்தத்தோடு) ஏதாவது ஒரு மந்திரத்தை உருவேற்றத் தொடங்கினால் சித்திகள் நம்மை நோக்கித் தாமே வரும்.

யோக முறைகள் பற்றிய சிந்தனை ஐந்து வயதில் ஆரம்பித்துப் பயின்றால் ஐந்து ஆண்டுகளில் பயன் கிட்டும் என்றும், 5 வயதிலிருந்து 10 வயதுக்குள் ஆரம்பித்துப் பயின்றால் 10 ஆண்டுகளில் பயன் கிடைக்கும் என்றும் 10 முதல் 15 வயதுக்குள் ஆரம்பித்துப் பயின்றால் 15 ஆண்டுகளில் பலன் கிடைக்கும் என்பதும் பண்டைக் கால அறிஞர்களின் கருத்து. ஆனால் வள்ளலாரோ, இந்தக் கருத்துக்கு மாறாக, பசி போக்கி கொல்லாமையே மேற்கொண்டு வாழ்க்கையை அமைத்து முயன்றால், எந்த நிலையிலும் யோக வாழ்க்கை மூலம் இறைவனடி சேர முடியும் என்பதை முத்தேக சித்தி பெற முடியும் என்று கூறியுள்ளார்.

மெருமிழலைக் குறும்பர்


இத்தன் மையராய் நிகழுநாள் எல்லை இல்லாத் திருத் தொண்டின்
மெய்த்தன் மையினை உலகறிய விதியால் வணங்கி மெய்யடியார்
சித்தம் நிலவுந் திருத்தொண்டத் தொகைபா டியநம் பியைப்பணிந்து
நித்தன் அருள்பெற் றவர்பாதம் நினைக்கும் நியமத் தலைநின்றார் 4

அஞ்சைக் களத்து நஞ்சுண்ட அமுதைப் பரவி அணைவுறுவார்
செஞ்சொல் தமிழ்மா லைகள்மொழியத் தேவர் பெருமான் அருளாலே
மஞ்சில் திகழும் வடகயிலைப் பொருப்பில் எய்த வரும்வாழ்வு
நெஞ்சில் தெளிய இங்குணர்ந்தார் நீடு மிழலைக் குறும்பனார் 8

''மண்ணில் திகழுந் திருநாவ லூரில் வந்த வன்றொண்டர்
நண்ணற் கரிய திருக்கயிலை நாளை எய்த நான்பிரிந்து
கண்ணிற் கரிய மணிகழிய வாழ்வார் போல வாழேன்''என்(று)
எண்ணிச் ''சிவன் தாள் இன்றேசென் றடைவன் யோகத் தால்'' என்பார் 9

நாலு கரணங் களும்ஒன்றாய் நல்ல அறிவு மேற்கொண்டு
காலும் பிரமநாடிவழிக் கருத்துச் செலுத்தக் கபாலநடு
ஏல வேமுன் பயின்றநெறி எடுத்த மறைமூ லந்திறப்ப
மூல முதல்வர் திருப்பாதம் அணைவார் கயிலை முன்னடைந்தார் 10

பயிலைச் செறிந்த யோகத்தால் பரவை கேள்வன் பாதமுறக்
கயிலைப் பொருப்பர் அடியடைந்த மிழலைக் குறும்பர் கழல்வணங்கி
மயிலைப் புறங்கொள் மென்சாயல் மகளிர் கிளவி யாழினொடும்
குயிலைப் பொருவும் காரைக்கால் அம்மை பெருமை கூறுவாம் 11


22




23

23. காரைக்காலம்மையார்

பெரு வணிகர் மிகுதியாக வாழும் பெருமை மிக்கது காரைக்கால். அவ்வூரில் வணிகர் குலத் தலைவராகிய தனதத்தனாருக்குப் புண்ணியத்தின் பயனாய் அவதரித்த வர் புனிதவதியார். ஐந்து வயதுக் குழந்தையாய் விளையாடும்போதுகூடக் கோயில் கட்டி விளையாடி இறைவன் திருப் பெயரையே ஓயாது சொல்லும் இயல்புடையவ ராக இருந்தார். மணப் பருவம் வந்தவுடன் பரமதத்தன் என்பவருக்கு இவரை மண முடித்தார்கள். இவரை மனைவியாகப் பெற்றதைவிட மணப் பந்தலில் பெற்றுக் கொண்ட சீர்வரிசைகளைக் கண்டு பெரு மகிழ்வடைந்த பரமதத்தனோடு இல்வாழ் வைத் தொடங்கினார்.

பரம தத்தனைக் காண வந்த வணிகர் சிலர் இரண்டு மாம்பழங்களைத் தர அவற்றை வீட்டிற்கு அனுப்பி வைத்தான். உணவு தயாராவதற்கு முன்னரே சிவனடி யார் ஒருவர் வர, ஒரு மாம்பழத்தை வைத்து அடியாரை அமுதூட்டி அனுப்பி வைத்தார் அம்மையார். மதியம் உணவுக்கு வந்த பரமதத்தன் மனைவியார் இலையில் இட்ட மாம்பழத்தை உண்டு ''இன்னும் ஒரு பழம் உளது. அதனையும் இடுக'' என்றான். அடியாருக்குக் கொடுத்ததை மறந்துவிட்ட அம்மையார் பழத்தை எடுக்கச் சென்ற பொழுதுதான் அது இல்லை என்பதை அறிந்தார். இறைவனை வேண்டி நிற்க, அவன் அருளால் பெற்ற கனியைக் கணவனுக்குப் படைத்தார். அதனை உண்ட அவ்வணிகன், ''மூவுலகத்திலும் இத்தகைய கனி இல்லை. இதனை எங்கே பெற் றாய்?'' என வினவ, அம்மையார் நடந்தவற்றைக் கூறினார். அதனை நம்ப மறுத்த அவன், 'இது திருவருளானால் இன்னமும் ஒரு பழம் வரவழைத்துத் தருக' என்றான்.

இறையருளால் மூன்றாவது பழம் அம்மையார் கைக்கு வர அவன் கையில் இட்டார்; 'வணிகன் தன் கை புக்க மாங்கனி பின்னை காணான்'. அவரைத் தெய்வம் என்று அஞ்சி ஒருவருக்கும் சொல்லாமல் ஊரை விட்டு ஓடி விட்டான்.

பாண்டி நாட்டில் சென்று வேறு திருமணம் செய்து கொண்டு பிறந்த குழந்தைக் குப் புனிதவதியார் என்ற பெயரும் இட்டான். அவன் இருப்பிடம் அறிந்த சுற்றத்தார் புனிதவதியாரை அவனிடம் கொண்டுவிட அவரை ஏற்றுக் கொள்ள மறுத்து நடந்த வற்றைக் கூறினான். அவன் கருத்தை அறிந்த அம்மையார் மானிட உடலைக் கழித்து இறைவனை வேண்டிப் பேய் வடிவம் பெற்றுக் கயிலை மலை சென்று வணங்கி அப் பெருமானின் கட்டளைக்கு ஏற்பத் திருவாலங்காட்டில் அவனுடைய திருவடிக்கீழ் என்றும் இருந்து அவன் புகழ் பாடும் பேறு பெற்றார்.

தம்முடைய கொள்கைக்கும் செயல்பாட்டிற்கும் ஒத்துவராத கணவன்மார்க ளுடன் வாழ நேர்ந்தால் தமிழ்ப் பெண்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதைக் காட் டக் கண்ணகி வரலாறு முதல் காரைக்கால் அம்மையார் வரலாறு வரை பல எடுத்துக் காட்டுகள் உள்ளன. தான் அனுப்பிய இரண்டு மாம்பழங்களில் ஒன்றை உண்டுவிட்ட பிறகு மனைவிக்காக ஒன்று இருக்க வேண்டும் என்ற எண்ணங்கூட இல்லாமல் 'இன்னும் ஒரு பழமுளது. அதனையும் இடுக' என்று கூறுபவன் சராசரி மனிதனிலும் தாழ்ந்தவனாவான். அதையும் பெற்று உண்ட பிறகு ஈசன் அருளால் மாம்பழத்தைக் கூட பெற முடியும் என்பதை நம்பாத வணிகன் அம்மையாருக்கு சோதனை வைக்கின்ற முறையில் மூன்றாவது பழம் ஒன்றை வருவிக்குமாறு ஏவி னான். அம்மையாரும் அதனைப் பெற்று அவன் கையில் இட்டார். 'வணிகன் தன் கை புக்க மாங்கனி பின்னை காணான்'. வரவழைக்க முடியுமா என்பதுதானே அவனுடைய ஐயம்! கையில் பழம் விழுந்தவுடன் அவனுடைய ஐயத்திற்கு விடை கிடைத்து விட்டது. அந்த மாம்பழத்தை உண்பதற்குரிய உரிமையோ, தகுதியோ அவ னுக்கு இல்லை. எனவேதான் கனி மறைந்துவிட்டது.

அம்மையாரைப் பொறுத்தமட்டில் தம் இயல்பை உணர்ந்து கொள்ள முடியாத கணவன்மேல் எத்தகைய குறையையும் அவர் காணவோ கூறவோ இல்லை. கண்ணகியும் இவ்வாறே வாழ்ந்தார். தமக்கு ஊறு செய்யும் கணவனைக்கூட எவ்வித மனமாறுபாடோ, காழ்ப்புணர்ச்சியோ இல்லாமல் அவனிடத்தும் அன்பு செய்வது 'ஸ்திதப் பிரஞ்ஞ' மனநிலை என்று கூறப்பெறும் இந்தச் சமதிருஷ்டிதான் அம்மையாரையும் கண்ணகியையும் இப் பிறப்பிலேயே வீடு பேற்றை அடைய உதவியது எனபதை அறிதல் பயனுடையதாகும்.

காரைக்காலம்மையார்

வங்கமலி கடற்காரைக் காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார் தனதத்த னார்தவத்தால்
அங்கவர்பால் திருமடந்தை அவதரித்தாள் எனவந்து
பொங்கியபே ரழகுமிகப் புனிதவதி யார்பிறந்தார் 2


வந்தமூ தறிவோர்கள் மணங்குறித்த மனைபுகுந்து
தந்தையாந் தனதத்தன் தனைநேர்ந்து ''நீபயந்த
பைந்தொடியை நிதிபதிமைந் தன்பரம தத்தனுக்கு
முந்தைமர பினுக்கேற்கும் முறைமைமணம் புரி'' கென்றார் 8

இல்லாளன் ''வைக்க''எனத் தம்பக்கல் முன்னிருந்த
நல்லநறு மாங்கனிகள் இரண்டினில்ஒன் றைக்கொண்டு
வல்விரைந்து வந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினால்
அல்லல்தீர்ப் பவர்அடியார் தமைஅமுது செய்வித்தார் 20

மலர்மழை பொழிந்த தெங்கும்; வானதுந் துபியின் நாதம்
உலகெலாம் நிறைந்து விம்ம உம்பரும் முனிவர் தாமும்
குலவினர்; கணங்கள் எல்லாங் குணலையிட் டன; முன் நின்ற
தொலைவில்பல் சுற்றத் தாருந் தொழுதஞ்சி அகன்று போனார் 51

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்.
''பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க'' என்றார் 60




24

24. அப்பூதியடிகள்

திருவையாற்றை அடுத்துள்ள திங்களூரில் பிறந்தவர் அப்பூதியார் என்ற அந்தனர். மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகும் என்பதை நன்கு அறிந்த அப் பெருமகனார் மடங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் முதலிய அறங்களைச் செய்து வாழ்ந்தார். நாவுக்கரசர் பெருமானுடைய ஒப்பற்ற வரலாற்றைக் கேள்விப்பட்டு, அவரைக் காணாமலேயே, அவரை தன் ஆன்மிக குருவாக வரித்துக் கொண்டார்.

வாக்கின் வேந்தர்பால் கொண்ட ஆறாத காதலினால் வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்கள், மாடு கன்றுகள், மக்கள் ஆகிய அனைவர்க்கும் திருநாவுக்கரசு என்ற பெயரையே இட்டு வழங்கலானார். தம் தண்ணீர்ப் பந்தல் முதலிய அறச் சாலைகளுக்கும் அப் பெருமான் பெயரையே இட்டு வைத்தார்.

இவரை இன்னார் என்று அறியாத நாவரசர் பெருமான் ஒருமுறை இவரைத் தேடிவர உரையாடலின் இடையே வாக்கின் வேந்தர் இவரே என்பதை அறிந்த அப்பூதியார் மகிழ்ச்சிக் கடலின் கரைகாணாமல் அப்பெருமானுக்கு விருந்தளிக்க முற்பட்டார்.

உணவு படைப்பதற்குரிய வாழை இலையை அரிந்து வருக என்று ஏவப் பெற்ற அப்பூதியாரின் முதல் மகனாகிய மூத்த திருநாவுக்கரசு வாழை இலையை அரியும் போது அரவு தீண்டி இறந்து போனான். அடியார் உணவு கொள்வதற்குத் தடையாகும் என்று கருதிய அப்பூதியார் இறந்த உடலைப் பாயில் சுருட்டி கொல்லையில் வைத்துப் பெருமானை உணவுக்கழைத்தார். இறைவன் அருளால் உண்மையை உணர்ந்த நாவரசர் திருக்கோயிலுக்கு அவ்வுடலை எடுத்துச் சென்று இறைவனைப்பாடி அப்பூதியாரின் மூத்த மகனை உயிர்ப்பித்தார்.

போக்குவரத்து வசதி மிகுதியும் இல்லாத காலத்தில் திருநாவுக்கரசரின் சிறப்பைச் செவி வழியாக அறிந்த சோழ நாட்டு அந்தணராகிய அப்பூதி அடிகள், அப்பர் பெருமான்மாட்டு இத்துணை அளவு பக்தி கொண்டது வியப்பேயாகும்! அப்பர் வேளாளர் என்று அறிந்திருந்தும் அவரைத் தெய்வமாகவே கருதி வழிபட்ட அப்பூதியாரின் மனநிலை இன்றைய தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒப்பற்ற எடுத்துக்காட்டாகும். ஒரு மனிதனின்பக்தி எல்லை மீறிச் செல்கையில் 'காண்பவை எல்லாம் அவையே போறல்' என்ற அகத்துறை விதிப்படி அப்பூதியாருக்கு அனைத்தும் திருநாவுக்கரசராகவே காட்சி அளித்தன.

கா வளர்த்தல், குளம் தோண்டுதல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல் ஆகிய பல்வேறு அறங்களைச் செய்யும் அப்பூதியார் அவை ஒன்றில்கூடத் தம் பெயர் வராமல் நாவுக்கரசரின் பெயரை வைத்தது நம் போன்றோருக்கு ஒப்பற்ற படிப்பினையாகும். இதில் வியப்புக்குரியது எது எனில் இத்தனை அறங்களையும் செய்து முடிக்கின்ற வரையில் அப்பூதியார் அப்பரைக் கண்ணால் கண்டதே இல்லை. ஒரு சிறிய தருமத்தைச் செய்பவர்கள்கூட இக்காலத்தில் தங்களுடைய பெயரை அதில் எழுதி அமரத்துவம் தேட முயல்கின்றனர்! ஆனால் மாபெரும் அறங்களைச் செய்த அப்பூதியார் எங்குமே தம் பெயரை எழுதவில்லை என்பது இற்றை நாள் மனிதர்களுக்கு நல்ல படிப்பினையாகும்.

இத்துணைச் சிறந்த அன்பர் இறுதியாக நாவரசரைச் சந்திக்கின்றார். அவரை உண்பிக்க வேண்டும் என்னும் பெருவிருப்பால் அதற்குரிய பணிகளை மேற்கொள் கையில் மூத்த மகன் இறந்துவிடுகிறான். பெரியார் வந்திருக்கும் போது இத்தகைய நிகழ்ச்சி நடந்தால் அவரையே அபசகுனமாகக் கருதுவதுதான் சாதாரண மனிதர் களின் மனப்போக்காகும். அதன் எதிராக அடியார் அமுது செய்ய மைந்தனின் மரணம் குறுக்கே நிற்கக் கூடாது என்ற கருத்தால் மகன் உடலை மறைத்துவிட்டு அப்பரை அமுது செய்விக்க அப்பூதியார் புறப்பட்டுவிட்டார். இது ஓர் ஒப்பற்ற மனநிலையாகும். ஆனால் இறையருள் பெற்ற அப்பருடைய மனத்தில் ஒரு தடுமாற் றம் உண்டாக நடந்தவற்றை அறிந்து கொள்கிறார். ஒருவரிடத்தில் பக்தி கொள்வது எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இவ் வரலாறு ஓர் எடுத்துக் காட்டாகும்.

அப்பூதியடிகள்


வந்த ணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருடன் அமுதமாந் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்
சந்தமுற வரைந்ததனை எம்மருங்குந் தாங்கண்டார் 6

''நல்லதாய் தந்தை ஏவ நான்இது செயப்பெற் றேன்'' என்(று)
ஒல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரிய வாழை
மல்லலங் குருத்தை ஈரும் பொழுதினில் வாள ராஒன்(று)
அல்லல்உற் றழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற் றன்றே 24

தளர்ந்துவீழ் மகனைக் கண்டு தாயருந் தந்தை யாரும்
உளம் பதைத் துற்று நோக்கி உதிரஞ்சோர் வடிவும் மேனி
விளங்கிய குறியும் கண்டு ''விடத்தினால் வீந்தான்'' என்று
துளங்குதல் இன்றித் தொண்டர் அமுதுசெய் வதற்குச் சூழ்வார் 28

நாவினுக் கரசர் கேளா ''நன்றுநீர் புரிந்த வண்ணம்!
யாவர்இத் தன்மை செய்தார்?'' என்றுமுன் எழுந்து சென்றே
ஆவிதீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார் 35

இவ்வகை அரசின் நாமம் ஏத்திஎப் பொருளும் நாளும்
அவ்வருந் தவர்பொற் றாளே எனவுணர்ந் தடைவார் செல்லுஞ்
செவ்விய நெறிய தாகத் திருத்தில்லை மன்றுள் ஆடும்
நவ்வியங் கண்ணாள் பங்கர் நற்கழல் நண்ணி னாரே 44



24



25

25. திருநீலநக்கர்

காவிரி நன்னாட்டில் சாத்த மங்கை என்னும் ஊரில் மறையவர் குலத்தில் தோன்றியவர் திருநீலநக்கர் என்பவர். ஆகம வழிப்படி சிவபூசை செய்து மகிழ்கின்ற இவர், ஒரு திருவாதிரை நன்னாளில் தாம் அன்றாடம் செய்கின்ற பூசையை முடித்து அயவந்தி என்ற இடத்தில் அமைந்துள்ள திருக்கோயிலில் வழிபாடு செய்ய விரும்பி மனைவியையும் அழைத்துக்கொண்டு பூசைக்கு வேண்டிய பொருள்களையும் எடுத்துக் கொண்டு சென்றார்.

பூசை முடிந்து இறைவன் எதிரே நின்று கண்களை மூடிக் கொண்டு ஐந்தெழுத்தை ஓதிக் கொண்டிருக்கிற நேரத்தில் சிலந்திப் பூச்சி ஒன்று இறைவன் திருமேனிமேல் விழுந்தது. பக்கத்தில் நின்ற இவர் மனைவியார் தாயன்பு மேலீட்டால் வாயினால் ஊதிச் சிலந்தியை அப்புறப்படுத்தினார்.

இறைவன் திருமேனியின் மேல் எச்சில் படும்படியாக ஊதியதை அனுசிதம் என்று நினைத்த திருநீலநக்கர் ''இனி உன்னை மனைவியாக ஏற்றுக் கொள்ள மாட்டேன்'' என்று அவரைப் போக்கிலிட்டு தாம் தனியே வீடு சென்றார். அம்மையார் கோயிலிலேயே தங்கிவிட்டார்.

இரவு வந்தது. திருநீலநக்கர் துயில் கொள்ளத் தொடங்கினார். அயவந்தி அமர்ந்த பெருமான் அன்பரின் கனவில் வந்து தம் திருமேனியைக் காட்டி ''அன்பனே, தாயன்பால் உன் மனைவி ஊதிய பகுதி போகப் பிற இடங்களிலெல்லாம் சிலந்தி விடத்தால் ஏற்பட்ட கொப்புளங்களைப் பார்ப்பாயாக'' என்று கூறி மறைந்தார்.

விடிந்தவுடன் மனைவியை அழைத்து வந்து இல்லறம் நடத்துகிற நாளில் திருஞான சம்பந்தப் பெருமான் அடியவர் கூட்டத்துடன் வர அனைவரையும் வரவேற்று அமுது வழங்கித் தம் இல்லிலேயே தங்க வைத்தார்.

முத்தீ வளர்க்கின்ற மறையவராகிய திருநீலநக்கர் அரிசனராகிய தீருநீலகண்ட யாாழ்ப்பாணருக்கும் அவருடைய மனைவியாருக்கும் யாகம் வளர்க்கின்ற வேதியின் ப்க்கத்திலேயே தங்குமாறு இடம் அமைத்துக் கொடுத்தார்.

இறுதியாகப் பிள்ளையாரின் திருமணத்தில் பங்குகொண்டு ஏனையோர் போலச் சோதியில் கலந்தார்.

வேதவழிப்பட்ட கொள்கையுடையவர் திருநீலநக்கர் என்பதை ''ஞாலம் மிக்க நான்மறைப் பொருள் விளக்கிய நலத்தார்'' என்றும், ''ஏய்ந்த மூன்று தீ வளர்த்துளார்'' என்றும், ''இரு பிறப்பாளர்'' என்றும் கூறுவதால் இவர் வைதிகர் என்பதையும் நன்கு விளக்குகிறார் சேக்கிழார்.

ஆனால் வைதிகர்கள் ஏற்றுக் கொள்ளாத ஆகமங்களை ஏற்றுக் கொள்பவர் என்றும் ''ஆகம விதி வழி, வேதகாரணரை நித்தல் பூசனை புரிந்து எழு நியமத்தார்'' என்றும் கூறுவதால் இவரைக் கௌண்டின்ய கோத்திரத்தாரோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ரிக் வேதிகளாகிய வைதிகர்களுள் ஆகமங்களை ஏற்றுக் கொண்டு சிவபெருமானே யாகத் தலைவன் என்பதையும் உடம்பட்டுத் தங்களுடைய ஜபங்களுக்கு ஐந்தெழுத்தை மூல மந்திரமாகக் கொள்பவர்கள் கௌண்டின்ய கோத்திரத்தார் மட்டுமே ஆவர். அயவந்தியில் சென்று கோயிலில் உள்ள இறைவனுக்கு அபிடேக ஆராதனைகள் முதலியவற்றைத் தம் மனைவியையும் உடன் வைத்துக் கொண்டு செய்கிறார் நீலநக்கர். பூசனை முடிந்த பின்பும் மனத்தில் ஆர்வம் அடங்காமையால் இறைவனின் எதிரே நின்று ஐந்தெழுத்தை ஜபித்தார் என்றும் சேக்கிழார் கூறுவது இக் கருத்தை வலியுறுத்துகிறது.

திருஞான சம்பந்தர் திருநீலகண்ட யாழ்ப்பாணரை எப்படி அருகிலேயே வைத்துக் கொண்டாரோ அதேபோல நீலநக்கரும் செய்தார் என்று அறியும்போது இவரும் கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்த வைதிகர் என்ற எண்ணம் வலுப்பெறுகிறது. முதன் முதலாக வேத வழக்கொடு ஆகமங்களையும் ஒன்றாக்கிச் சிவபெருமானுக்கு அபிடேகம், அர்ச்சனை, ஆராதனை என்பனவற்றைச் செய்யும் புதியதொரு மரபை நிலைநாட்டியவர்கள் கௌண்டின்ய கோத்திரத்தாரேயாகும். அந்த வழக்கத்திற்குத் தலைமை இடங்கொடுத்துச் சைவ சமயத்தில் புதியதொரு வழியை நிறுவியவர் ஞான சம்பந்தரேயாவார்.

தமிழ் நாகரிகத்தின் அடிப்படையில் ஆகம விதிகளின்படி பூசை செய்து சிவபரம் பொருளை வழிபாடு செய்து சாதி வித்தியாசம் பாராட்டாமல் 1000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் வேதியர்கள் செயல்பட்டார்கள் என்பது மன நிறைவைத்தருகிறது. இக் காலத்தில் மதுரை வைத்தியநாத ஐயரின் வாழ்க்கை இதுபோன்று சமய வேறுபாடுகளைத் தாண்டிய ஒன்றாகும். ஆரிய சமாஜ அன்பர்களும் இன்று இப்படிச் செயல்படுகிறார்கள். ஆயின் வேதியர்களின் தன்மை மாறிய இக்காலத்தில் இன்னும் சாதிச் சண்டைகள் குறையாமல் இருப்பது வருந்தத் தக்கது.

திருநீலநக்கரின் வாழ்க்கை இன்றும் மக்களுக்குச் சிறந்த உதாரணமாக விளங்குகிறது.

திருநீலநக்கர்

சீலம் உய்த்தஅத் திருமறை யோர்செழு மூதூர்
ஞாலம் மிக்கநான் மறைப்பொருள் விளக்கிய நலத்தார்
ஆலம் வைத்தகண் டத்தவர் தொண்டராம் அன்பர்
''நீல நக்கனார்'' என்பவர் நிகழ்ந்துளார் ஆனார் 4

நீடு சீர்த்திரு நீலகண் டப்பெரும் பாணர்
தோடு லாங்குழல் விறலியார் உடன்வரத் தொண்டர்
கூடும் அப்பெருங் குழாத்தொடும் புகலியர் பெருமான்
மாடு வந்தமை கேட்டுளம் மகிழ்நீல நக்கர் 24

நின்ற அன்பரை ''நீலகண் டப்பெரும் பாணர்க்(கு)
இன்று தங்களுர் இடங்கொடுத் தருளுவீர்'' என்ன
நன்றும் இன்புற்று நடுமனை வேதியின் பாங்கர்ச்
சென்று மற்றவர்க் கிடங்கொடுத் தனர்திரு மறையோர் 30

ஆங்கு வேதியில் அறாதசெந் தீவலஞ் சுழிவுற்(று)
ஓங்கி முன்னையில் ஒருபடித் தன்றியே ஒளிரத்
தாங்கு நூலவர் மகிழ்வுறச் சகோடயாழ்த் தலைவர்
பாங்கு பாணியா ருடன்அரு ளாற்பள்ளி கொண்டார் 31

பெருகு காதலிற் பின்நெடு நாள்முறை பிறங்க
வருபெ ருந்தவ மறையவர் வாழிசீ காழி
ஒருவர் தந்திருக் கல்லியா ணத்தினி லுடனே
திரும ணத்திறஞ் சேவித்து நம்பர்தாள் சேர்ந்தார் 37




S. Rajan

26. நமிநந்தியடிகள்

சோணாட்டில் ஏமப் பேரூர் என்ற ஊரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர் நமி நந்தி அடிகள். அணித்தே உள்ள திருவாரூர் கோயினுள் சென்று வணங்கி மீண்டவர் திருவிளக்கு ஏற்ற வேண்டும் என்ற எண்ணத்தால் அண்மையிலிருந்த ஒரு வீட்டினுள் புகுந்து எண்ணெய் வேண்டும் எனக் கேட்டார். அவ்வீட்டுக்காரர் புறச் சமயத்தார். ஆதலின் 'கையில் நெருப்பை உடைய உமது இறைவனுக்கு விளக்கு எதற் காக? தேவையானால் தண்ணீரை ஊற்றி எரிய விடுவீராக' என்றனர். இதுகேட்டு மனம் பொறாத தொண்டர் இறைவனிடம் வந்து முறையிட, தண்ணீரை ஊற்றியே விளக்கை எரிக்குமாறு இறைவன் பணித்தான். கமலாலயத்தில் உள்ள தண்ணீரைக் குடத்தில் மொண்டு வந்து பலநாள் விளக்கெரித்தார்.

ஒருநாள் வீதிவிடங்கப் பெருமான் அண்மையிலுள்ள மணலி என்ற ஊருக்கு எழுந்தருளும்போது கூட்டத்தில் நின்று சேவித்துவிட்டு வீடு திரும்பினார். எல்லா வகையான மக்களின் இடையே நின்று திருவோலக்கத்தை வணங்கியதால் தீட்டுப் பட்டுவிட்டது என்று கூறி, நீராடுவதற்குரிய சாதனங்களைத் தயார் செய்யுமாறு மனைவியிடம் உத்தரவிட்டார். எதிர்பாராமல் உறக்கம் வர இறைவன் கனவில் தோன்றி ''அன்பனே! திருவாரூரில் இருப்பவர் அனைவரும் நம்முடைய கணங்கள் என்பதை ஏன் நீ மறந்தாய்! சாதியும் தீட்டும் இங்கு எங்கே வந்தது?'' என்று சொல்லி மறைய, நமிநந்தியார் தம் பிழையை உணர்ந்து இறைவனிடம் மன்னிப்பு வேண்டி வாழ்ந்து வருகிற நாளில் வாக்கின் வேந்தரை சந்தித்து உபசரிக்கும் நற்பேற்றையும் பெற்றார். அப்பெருமான் ''தொண்டர்க்கு அணி'' என்ற பட்டத்தை இவருக்கு வழங் கினார்.

நமிநந்தி அடிகள் போன்ற ஒப்பற்ற சிவனடியார்களும் கூடச் சமுதாயத்தில் வாழ்ந்த காரணத்தினாலும் அந்தக் காலச் சூழ்நிலையால் சாதி வேறுபாடுகளை மதித்தே நடந்தனர் என்று அறிய முடிகிறது. வைணவ சமயத்தில் இராமானுஜர் போன்ற ஒப்பற்ற தலைவர்கள் முயன்றும்கூடச் சாதிப் பிரச்னையைத் தீர்க்க முடிய வில்லை. ஆழ்வார்கள் அனைவருக்கும் தலைவர் என்று போற்றப்படும் நம்மாழ் வாரைக்கூடப் பிறந்த சாதியின் காரணமாக ஒருபடி தாழ்த்தியே கருதுகிறவர்கள் இன்றும் உண்டு. இடைக்காலத்தில் தமிழ்ச் சாதியைப் பிடித்த இந்தச் சாதி நோய் வலுவாக வேர்கொண்டுவிட்டது.

நேரிடையாக இதனை வெளிக்காட்டாவிட்டாலும் மறைமுகமாக அனைவரும் இதனை ஆதரித்தனர் என்பதை அறிதல் வேண்டும். இறைவன் மணலிக்குச் செல்லும் திருவோலக்கத்தைத் தெருவிலிருந்து ஆறாக் காதலுடன் வழிபட்ட நமிநந்தியார் அந்த நேரத்தில் சுற்றி நிற்பவர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் வீட்டுக்கு வந்தவுடன் வீட்டிற்குள் நுழையாமல் திண்ணையிலேயே தங்கிவிட்டார். உள்ளே வரு மாறு மனைவியார் அழைத்த பொழுது, ''தங்கள் பெருமான் திருமணலிக்கு எழுச்சி சேவித்து உடன் நண்ண, எங்கும் எல்லாரும்போத இழிவு தொடங்கிற்று என்னை'' என்று கூறிவிட்டு 'ஆதலால் குளித்து அடுத்த தூய்மை செய்து அகம் புக வேண்டும்' என்று கூறுகிறார்.

இறைவனை வழிபடுகின்ற நேரத்தில் இத்தகைய எண்ணம் அவர் மனத்தில் தோன்றவில்லை. தோன்றியிருந்தால் நம்பூதிரிப் பார்ப்பனரைப் போலத் தூரத்தே நின்று சேவித்துவிட்டு மீண்டிருப்பார். எனவே இறைவனைத் தெருவில் நின்று வணங்குகின்ற நேரத்தில் தோன்றாத இந்த எண்ணம் வீட்டின் கடைத்தலையில் நுழையும்போது தோன்றுகிறது. தீட்டுப் பட்டதற்காகக் குளித்து பிராயச்சித்தம் செய்து கொண்டு உள்ளே செல்ல வேண்டும் என்று நினைக்கின்றார்.

சமுதாய மரபுகளைப் போற்றி ஒழுகிய இவர்கள் மனத்தில் இந்த எண்ணம் இருப்பது நியாயம்தான். சாதாரண மக்கள் எடுத்துக் கூறியிருந்தால் இந்த வைதிகர் அதனைக் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார். எனவேதான் இறைவனே கனவில் வந்து 'திருவாரூரில் உள்ள அனைவரும் நம் கணங்கள் என்பதனை மறந்தாயோ' என்று சொல்லவேண்டி வந்தது. உள்ள அனைவரும் என்று இறைவன் கூறியதால் சைவ சமயத்தின் வேறு கிளைகளைச் சேர்ந்த பாசுபதர், காளாமுகர், மாவிரதிகள் என்பவர்களோடு பௌத்தர், சமணர் ஆகிய புறச் சமயத்தாரும் இதில் அடங்குகின்றனர். எனவே சைவ சமயம் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும் யாரையும் புறக் கணிப்பதில்லை என்ற கருத்துக்கு அரண் செய்வதாகவே இவ்வரலாறு அமைந்துள்ளது.

நமிநந்தியடிகள்


சோதி விளக்கொன் றேற்றுதலுஞ் சுடர்விட் டெழுந்த(து) அது நோக்கி
ஆதி முதல்வர் அரனெறியார் கோயில் அடையவிளக் கேற்றி
ஏதம் நினைந்த அருகந்தர் எதிரே ழ்முதிருங் களிப்பினுடன்
நாதர் அருளால் திருவிளக்கு நீரால் எரித்தார் நாடறிய 14

வென்றி விடையார் மதிச்சடையார் வீதி விடங்கப் பெருமாள்தாம்
என்றுந் திருவா ரூர்ஆளும் இயல்பின் முறைமைத் திருவிளையாட்
டொன்றுஞ் செயலும் பங்குனியுத் திரமாந் திருநாள் உயர்சிறப்பும்
நின்று விண்ணப் பஞ்செய்த படிசெய் தருளும் நிலைபெற்றார் 20


பொழுது வைகச் சேவித்துப் புனிதர் மீண்டுங் கோயில்புகத்
தொழுது தம்மூர் மருங்கணைந்து தூய மனையுட் புகுதாதே
இழுதும் இருள்சேர் இரவுபுறங் கடையில் துயில இல்லத்து
முழுதுந் தருமம் புரிமனையார் வந்துட் புகுத மொழிகின்றார் 23

மேன்மை விளங்குந் திருவாரூர் வீதி விடங்கப் பெருமாள்தாம்
மான அன்பர் பூசனைக்கு வருவார் போல வந்தருளி
"ஞான மறையோய்! ஆரூரில் பிறந்தார் எல்லாம் நங்கணங்கள்
ஆன பரிசு காண்பாய்" என் றருளிச் செய்தங் கெதிரகன்றார். 27

இன்ன வகையால் திருப்பணிகள் எல்லா உலகுந் தொழச் செய்து
நன்மை பெருகும் நமிநந்தி அடிகள் நயமார் திருவீதிச்
சென்னி மதியும் திருநதியும் அலைய வருவார் திருவாரூர்
மன்னர் பாத நீழல்மிகும் வளர்பொற் சோதி மன்னினார் 32



26



27. திருஞானசம்பந்தர்

சோணாட்டில் சீர்காழிப் பதியில் சிவபாத இருதயர் என்ற ரிக் வேத அந் தணருக்கு மகவாய்ப் பிறந்தவர் தமிழ் விரகராம் திருஞான சம்பந்தர். மூன்றாவது வயதில் குளக்கரையில் அனைத்து அண்டங்களையும் ஈன்ற உமா தேவியாரால் பொன் வள்ளத்தில் ஞானப்பால் ஊட்டப் பெற்றவர். இதனை அறியாத தந்தையார் யார் கொடுத்த பாலை உண்டாய்? என்று கேட்க, இதோ இவர்தான் என்று வேதமும் சுட்ட முடியாத பொருளைச் சுட்டிக் காட்டித் 'தோடுடைய' என்று தொடங்கும் பாட லைப் பாடினார்.

ஐந்தாவது வயதில் உபநயனச் சடங்கு முடிந்து உபதேசம் பெற வேண்டிய நிலை யில் உபதேசிக்க வந்த ஆச்சாரியர்களுக்கு வேதங்களிலிருந்து ஐயங்களைப் போக்கி அருளினார். தந்தையாரின் தோள்மேல் அமர்ந்து அண்மையிலுள்ள இறைவன் உறை யும் திருக்கோயில்கள் பலவற்றிற்கும் சென்று பதிகம் பாடி மீண்டார். நடந்து செல்ல இயலாத பருவமாகலின் தலைமகனாகிய இவருக்கு முத்துச்சிவிகை, முத்துப் பந்தர், பொன்னாலாகிய தாளம் முதலியவற்றை இறைவன் தந்தான்.

இந் நிலையில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்ற பெருமகனார் பிள்ளையாரை நாடி வந்தார். அந்த அரிசனரைத் தம் பக்கத்தில் இருத்திக் கொண்டு தாம் பாடும் பொழுது யாழ் வாசிக்கும் உரிமையையும் வழங்கினார்.

திருமருகல் என்ற ஊரில் இரவில் தலைவனுடன் உடன்போக்கில் வந்த ஒரு பெண், தலைவன் அரவு தீண்டி இறந்ததினால், கதறி அழுது கொண்டிருந்ததைக் கண்ட பிள்ளையார் திருமருகல் பெருமானை வேண்டிப் பாடி அவ்வணிகன் உயிரை மீட்டு அப்பெண்ணிற்கு வாழ்வளித்தார்.

யாழ்ப்பாணர் பிறந்த திருஎருக்கத்தம்புலியூரில் பிள்ளையார் பாடும் பொழுது அப்பண் யாழில் அடங்கவில்லை. மனம் வருத்தம் கொண்ட பாணர் யாழை உடைக்க முற்படப் பிள்ளையார் தடுத்து விட்டார்.

சீர்காழியில் உறையும்போது பிள்ளையாரைவிட வயதில் மிகவும் மூத்தவராகிய திருநாவுக்கரசர் இவரை வந்து கண்டு மகிழ்ந்து பிள்ளையாருடன் பல தலங்களுக்கும் சென்று பாடும் பழக்கத்தை மேற்கொண்டார்.

பலமுறை பல இடங்களுக்கும் செல்கையில் ஒருமுறை இருவரும் வேதாரண்யம் என்று இன்று அழைக்கப் பெறும் திருமறைக்காட்டிற்கு வந்தனர். முக்கியமான நுழை வாயில் அடைபட்டிருந்தது. திருநாவுக்கரசர் பதிகம்பாடி அக் கதவுகள் தாமே திறக்கு மாறு செய்தார். இருவரும் திருமறைக்காட்டில் தங்கியிருக்கும் பொழுது சமணத்தில் மூழ்கிய பாண்டி நாட்டிலிருந்து தூதுவர்கள் பிள்ளையாரைக் கண்டு பாண்டி நாட்டுக்கு எழுந்தருளி, சைவ சமயத்தை நிலை நிறுத்த வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர்.

பிள்ளையார் பாண்டி நாட்டுக்கு எழுந்தருளுவதை விரும்பாத அப்பர் தடை செய்ய முயன்றார். இறைவனடியாரை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது என்று அமைதி கூறிப் பிள்ளையார் மதுரை மாநகரம் வந்து சேர்ந்தார்.

மாற்றுச் சமயத்தில் ஈடுபட்டிருந்த மன்னவன் கொடிய வெப்பு நோயால் தாக்கப்பட்டான். அவன் சேர்ந்திருந்த சமயத்தார் பலரும் கூடி நோயைத் தணிக்க முயன்று தங்களுடைய இயலாமையை அறிவித்து விட்டனர். அந் நிலையில் காழிப் பிள்ளையார் பதிகம் பாடித் திருநீற்றை இட்டுப் பாண்டியனின் வெப்பு நோயைத் தணித்தார். இதன் பிறகு வாதங்கள் பல செய்து அப் புறச் சமயத்தாரை வெற்றி கொண்டார். மயிலாப்பூரில் பல ஆண்டுகளுக்கு முன்னர் இறந்த பூம்பாவையை எழுப்பிக் கொடுத்தார். அந்தக் கோயில் சமுத்திர கரையில் இருந்தது.

தக்க பருவத்தில் பிள்ளையாருக்குத் திருமணம் பேசி மணவினைக்குரிய அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்றன. திருநல்லூர்ப் பெருமணம் (இன்று ஆச்சாள்புரம் என வழங்கப் பெறுகிறது) என்ற ஊரில் திருமணம் முடிந்த பிறகு மனைவியோடு தீ வலஞ் செய்யப் புறப்படுகையில் பெரியதொரு சோதி தோன்றத் திருமணம் காண வந்தவர் அனைவரையும் அச் சோதியிற் கலக்கச் செய்து காழியர்கோனும் தம் மனைவியுடன் சோதியிற் கலந்தார்.

திருஞானசம்பந்தர்

பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால் 14

பெருந்தெழும்அன் பாற்பெரிய நாச்சியா ருடன்புகலித்
திருத்தோணி வீற்றிருந்தார் சேவடிக்கீழ் வழிபட்டுக்
கருத்துமுடிந் திடப்பரவும் காதலியார் மணிவயிற்றில்
உருத்தெரிய வரும்பெரும்பே றுலகுய்ய உளதாக 20

அருக்கன்முதற் கோள்அனைத்தும் அழகியஉச் சங்களிலே
பெருக்கவலி யுடன்நிற்கப் பேணியநல் லோரைஎழத்
திருக்கிளரும் ஆதிரைநாள் திசைவிளங்கப் பரசமயத்
தருக்கொழியச் சைவமுதல் வைதிகமும் தழைத்தோங்க 22

விண்ணிறைந்த பெருகொளியால் விளங்குமழ விடைமேலே
பண்ணிறைந்த அருமறைகள் பணிந்தேத்தப் பாவையுடன்
எண்ணிறைந்த கரு ணையினால் நின்றாரை எதிர்காட்டி
உண்ணிறைந்து பொழிந்தெழுந்த உயர்ஞானத் திருமொழியால் 74

செம்மைபெற எடுத்ததிருத் ''தோடுடைய செவியன்'' எனும்
மெய்ம்மைமொழித் திருப்பதிகம் பிரமபுரம் மேவினார்
தம்மைஅடை யாளங்க ளுடன்சாற்றித் தாதையார்க்(கு)
''எம்மையிது செய்தபிரான் இவனன்றே'' எனஇசைத்தார் 76





28. ஏயர்கோன் கலிக்காமர்

சோணாட்டில் காவிரியின் வடகரையில் அமைந்தது திருப்பெருமங்கலம். அர சர்க்குச் சேனாபதித் தொழில் பூண்ட குடியில் பிறந்த கலிக்காமர் என்பவர் போர் வீரராக இருந்தும் பழுத்த சிவ பக்தராக இருந்தார். நந்தனார்க்கு நந்தி எம்பெருமான் விலகிய திருப்பூன்கூருக்குப் பல திருப்பணிகள் செய்து 'நிதியமாவன நீறு உகந்தார் கழல்' என்ற உறுதியோடு வாழ்ந்து வந்தார்.

சிவபெருமானை பரவையின் வீட்டிற்குத் தூதாக அனுப்பினார் சுந்தரர் என் பதைக் கேள்விப்பட்டுச் சுந்தரர் மீது எல்லையில்லாத சினம் கொண்டிருந்தார். இறை வனாகிய நாயகனை அடிமையாகிய சுந்தரர் ஒரு பணியைச் செய்க என்று ஏவுவது மன்னிக்க முடியாத பெருங்குற்றம். இக்குற்றத்தைச் செய்தவரைக் கண்டால் நான் என்ன செய்வேன் என்று சொல்ல முடியாது என்ற முடிவுடன் வாழ்ந்தவர்.

இறையருளால் கலிக்காமருக்குத் தீர்க்க முடியாத வயிற்று வலி வ்ந்தது. இறை வன் கனவில் தோன்றி 'அன்பனே, ஆரூரன் (சுந்தரர்) வந்தாலொழிய இதனைத் தீர்க்க முடியாது' என்று கூறினார். ஆனால் கலிக்காமர் 'ஐயனே! பல தலைமுறை களாக நீ ஆண்டான், நாங்கள் அடிமைகள் என்று கருதி பக்தி பூண்டு ஒழுகும் எனக்கு வந்த வலியைக் கேவலம் நேற்று வந்து உன்னாலே ஆட்கொள்ளப்பட்ட ஒருவன் தீர்ப் பான் என்றால் இது நகைப்புக்கிடமாகும். மற்றவன் தீர்க்கில் தீராது ஒழிதல் நன் றால்' என்று கூறிவிட்டார்.

ஆனால் இறைவன் ஆரூரரைக் கலிக்காமர் வீட்டுக்குச் செல்லுமாறு பணித்தான். நடந்தது ஒன்றையும் அறியாத சுந்தரர் தம் பரிவாரங்களோடு கலிக்காமர் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். இவர் வருவதை அறிந்த கலிக்காமர் உடை வாளால் தம் வயிற்றைக் கிழித்துக் கொண்டு உயிர் நீத்தார்.

இறந்த கணவனை உள்ளே மறைத்து வைத்து அவர் மனைவியார் சுந்தரருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து வரவேற்றார். நடந்ததை அறிந்த சுந்தரர் இக்கொடு மைக்குத் தாமே காரணம் என நினைத்து உடைவாளால் தம்முடைய வயிற்றைக் கீறத் தொடங்க இறைவன் அருளால் கலிக்காமர் உயிர் பெற்று எழவும் இருவரும் உற்ற நண்பர்களாயினர்.

ஏயர்கோன் கலிக்காமருடைய வரலாற்றைக் கூறுவதுதான் இப் புராணம் என் றாலும் 380 பாட்டுகளில் சுந்தரர் வரலாற்றையும் 25 பாடல்களில் ஏயர்கோன் வர லாற்றையும் சேக்கிழார் பாடுகின்றார். திருத்தொண்டத்தொகையை பரம கருணை யுடன் சுந்தரர் பாடியதால்தான் பெரிய புராணத்தைத் தாம் பாட முடிந்தது என்பது சேக்கிழாரின் திடமான எண்ணமாகும். எனவே சுந்தரருடைய வரலாற்றின் பெரும் பகுதியை ஏயர்கோன் புராணத்தில் இயைக்கின்றார். பொருத்தமில்லாத இயைத்தல் தவறாக முடியும் என்பதால் ஒரு சிறந்த பொருத்தத்தைக் காட்டுகிறார் சேக்கிழார். ஏயர்கோனுக்கு சுந்தரரிடத்தில் எல்லையற்ற கோபம் வரக் காரணம் ஒன்றே ஒன்று தான். இறைவனைப் பரவையின் வீட்டிற்குத் தூதாக அனுப்பினார் சுந்தரர் என்ப தாலேயே சினம் கொண்டார். அப்படித் தூதனுப்ப வேண்டிய சூழ்நிலை என்ன என் பதை விரித்துரைப்பதில் சுந்தரர் வரலாறும் இணைந்து விடுகிறது.

அடியார்களுடைய தனித் தன்மையை எடுத்துக் காட்ட ஏயர்கோன் வரலாறு மிகப் பொருத்தமானது. வயிற்று வலியைத் தந்தவன் இறைவன். அவனே கனவில் வந்து நம்பி ஆரூரர் வந்தால்தான் இவ்வலி தீரும் என்று கூறுகிறான். அந்த நிலைமையிலும், 'பரம்பரை பரம்பரையாக நீதான் தலைவன் என்றும் நாங்கள் அடிமைகள் என்றும் உறுதியாக நம்பி உனக்கு ஆட்செய்கின்றோம். நீயே சென்று வழக்காடி வன்சொற்கள் பலவற்றையும் பேசிய நம்பி ஆரூரரை அடிமையாகக் கொண்டாய். பழ அடியானாகிய எனக்கு வந்த நோயைப் புது அடியானாகிய அவன்தான் வந்து தீர்க்க வேண்டும் என்றால் அது நகைப்புக்கிடமாகும். மற்றவன் வந்து தீர்ப்பதைவிட 'தீராது ஒழிதல் நன்றால்' என்று இறைவனையே எதிர்த்துப் பேசினவர் கலிக்காமர். அம்மட்டோடு நில்லாமல் இறைவன் ஏவலால் நம்பி ஆரூரர் வருகிறார் என்று அறிந்தவுட ன் அவரைச் சந்திப்பதைக் காட்டிலும் சாவதே மேல் என்று கருதி உயிரை விட்டு விடுகிறார்.

இப்பெருமக்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் மேற்கொண்ட கொள்கைதான் தலையாயதாகும். அதன் எதிரே அதற்கு ஊறு விளைவிக்கும் வகையில் இறைவனே ஒரு காரியத்தைச் செய்தாலும் இறைவனும் புறம்பு என்று சொல்லுகின்ற நெஞ்சழுத்தம் உடையவர்கள்.

ஏயர்கோன் கலிக்காமர்

இன்ன வாழ்பதி அதனிடை ஏயர்கோக் குடிதான்
மன்னி நீடிய வளவர்சே னாபதிக் குடியாம்
தொன்மை மேவிய தொடர்ச்சியால் நிகழ்வது தூய
பொன்னி நாட்டுவே ளாண்மையில் உயர்ந்தபொற் பினதால் 5


ஆளிடவேண் டிக்கொள்வார் அருகுதிருப் பதியான
கோளிலியில் தம்பெருமான் கோயிலினை வந்தெய்தி
''வாளனகண் மடவாள் வருந்தாமே'' எனும்பதிகம்
மூளவருங் காதலுடன் முன்தொழுது பாடுதலும் 20


செங்கோல் அரசன் அருளுரிமைச் சேனா பதியாங் கோட் புலியார்
நங்கோ மானை நாவலூர் நகரார் வேந்தை நண்பினால்
தங்கோ மனையில் திருஅமுது செய்வித் திறைஞ்சித் தலைசிறந்த
பொங்கோ தம்போல் பெருங்காதல் புரிந்தார் பின்னும் போற்றுவார் 37

''நன்று மகிழுஞ் சம்பந்தர் நாவுக் கரசர் பாட்டுகந்தீர்''
என்று சிறப்பித் திறைஞ்சிமகிழ்ந் தேத்தி அருள்பெற் றெழுந் தருளி
மன்றி னிடையே நடம்புரிவார் மருவு பெருமைத் திருவாரூர்
சென்று குறுகிப் பூங்கோயிற் பெருமான் செம்பொற் கழல்பணிந்து 44

காண்டலுந் தொழுது வீழ்ந்துடன் எழுந்து கரையில் அன் பென்பினை உருக்கப்
பூண்டஐம் புலனில் புலப்படா இன்பம் புணர்ந்துமெய் யுணர்வினில் பொங்கத்
தாண்டவம் புரியுந் தம்பிரா னாரைத் தலைப்படக் கிடைத்தபின் சைவ
ஆண்டகை யாருக் கடுத்தஅந் நிலைமை விளைவையார் அளவறிந் துரைப்பார் 90







29. திருமூலர்

நந்தியம் பெருமான் அருள் பெற்ற யோகியார் ஒருவர் கயிலையிலிருந்து புறப் பட்டு வழியிலுள்ள தலங்களை எல்லாம் வணங்கிக் கொண்டு சிதம்பரத்தை அடைந்து பின்னர்க் காவிரிக் கரையோடு சென்று திருவாவடுதுறை நண்ணிச் சிலநாள் அங்கு தங்கினார். அவ்வூரைவிட்டுப் புறப்பட்டவுடன் பல பசுக்கள் காவிரிக் கரையில் கண் ணீர் விட்டு நிற்பதைக் கண்டார். சாத்தனூர் என்ற ஊரைச் சேர்ந்த மூலன் என்ற இடையன் விதி தீர்தலினாலே கரையில் விழுந்து இறந்து விடுகிறான். பசுக்களின் துய ரத்தைப் போக்க வேண்டி இம் முனிபுங்கவர் கூடுவிட்டுக் கூடுபாய்கின்ற தம் ஆற்ற லைப் பயன்படுத்தி மூலன் உடலில் புகுந்தார்.

உயிர் பெற்ற மூலனைக் கண்டு பசுக்கள் மகிழ்ந்தன. அவற்றை ஓட்டிச் சென்று அவற்றிற்குரிய வீடுகளிற் சேர்ப்பித்தார். தம் வீட்டுக்கு வந்தவுடன் பழைய மூலனின் மனைவி தன் கணவன் என்று நினைத்து நெருங்க, தம்முடைய நிலையை விளக்க முடி யாமல் அருகில் உள்ள மடத்தில் சென்று வாழத் தொடங்கினார். தம்முடைய பழைய உடலைத் தேடிச் சென்ற மூலர் அவ்வுடல் மறைந்து விட்டதைக் கண்டார். திரு வருளே இந் நிகழ்ச்சிக்குக் காரணம் என்று கருதியவர் ஆவடுதண்துறை அரனை வணங்கி அவன் அருள் வழி நின்று மூவாயிரம் பாடல்களையுடைய திருமந்திரத்தை அருளினார்.

பெரிய புராணத்தில் யோக மார்க்கத்தைச் சேர்ந்த திருமூலர் இடம் பெறுவது புதுமையேயாகும். மூவர் முதலிகளின் தேவாரங்களில் யோகம், பிராணாயாமம், சக் கரம் முதலியவை இடம்பெறவில்லை. என்றாலும் யோக மார்க்கத்தைப் பெரிதாக வலியுறுத்தும் திருமூலர், பக்தி மார்க்கத்தை வலியுறுத்தும் நாயன்மார்கள் மரபில் வந்தவராகத் தெரியவில்லை. எல்லாவற்றையும்விடத் திருஐந்தெழுத்தைத் தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம், அதிசூக்கும பஞ்சாட்சரம் என்று பிரிவினை செய்து பேசுகிறார். அபிடேகம் முதலியவற்றைத் திருமூலரும் ஏற்றுக் கொள்கிறார். என்றாலும் இந்த யோக சித்தர்கள் ஒரு தனி இனமாகவே தமிழ் நாட்டில் இருந்தனர் என்று நினைக்க வேண்டி உளது. அப்படியானால் திருமூலர்மட்டும் நாயன்மார் வரிசையில் இடம் பெற இரண்டு காரணங்களை நினைக்கலாம்.

முதலாவது விக்கிரக வழிபாட்டிற்கு அதிக மதிப்புத் தராத சித்தர்கள் கூட்டத் தில் சிவலிங்கத் திருமேனி, நடராஜ வடிவம், அன்னையின் வடிவம் ஆகியவற்றைத் திருமூலர் விரித்துப் பேசுகிறார்.

இரண்டாவதாக மொழிக்கும் மந்திரங்கட்கும் அதிக மதிப்புத் தராத சித்தர்களி டையே திருமூலர் ஐந்தெழுத்திற்கு அதிக மதிப்புத் தருகிறார். 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்றும் பாடு கிறார். மேலும் பல ஆகமங்களைத் தமிழில் தர வந்ததாகவும் திருமந்திரத்தில் குறிப் பிடுகின்றார்.

இந்த இரண்டு காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டு திருமூலரைச் சிவ னடியார் கூட்டத்தில் சேர்த்திருக்க வேண்டும் என்று நினைப்பதில் தவறில்லை.

திருமூலர்

அந்தணர்தஞ் சாத்தனூர் ஆமேய்ப்பார் குடித்தோன்றி
முந்தைமுறை நிரைமேய்ப்பான் மூலன்எனும் பெயருடையான்;
வந்துதனி மேய்க்கின்றான் வினைமாள வாழ்நாளை
வெந்தொழில்வன் கூற்றுண்ண வீடிநிலத் திடைவீழ்ந்தான் 11


பாய்த்தியபின் திருமூல ராய்எழலும் பசுக்களெலாம்
நாத்தழும்ப நக்கிமோந் தணைந்துகனைப் பொடுநயந்து
வாய்த்தெழுந்த களிப்பினால் வாலெடுத்துத் துள்ளிப்பின்
நீத்ததுய ரினவாகி நிரைந்துபோய் மேய்ந்தனவால் 14

''பித்துற்ற மயலன்று; பிறிதொருசார் புளதன்று;
சித்தவிகற் பங்களைந்து தெளிந்தசிவ யோகத்தில்
வைத்தகருத் தினராகி வரம்பில்பெரு மையிலிருந்தார்;
இத்தகைமை அளப்பரி தால் யாராலும்'' எனஉரைப்பார் 20

தண்ணிலவார் சடையார்தாம் தந்தஆ கமப்பொருளை
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ்வகுப்பக்
கண்ணியஅத் திருவருளால் அவ்வுடலைக் கரப்பிக்க
எண்ணிறைந்த உணர்வுடையார் ''ஈசர்அருள்'' எனஉணர்ந்தார் 23

ஊனுடம்பிற் பிறவிவிடந் தீர்ந்துலகத் தோர்உய்ய
ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை
பான்மைமுறை ஓராண்டுக் கொன்றாகப் பரம்பொருளாம்
ஏனஎயி றணிந்தாரை ''ஒன்றவன்தான்'' எனஎடுத்து 26





30. தண்டியடிகளார்

திருவாரூரில் பிறக்கும் பெருமைத் தவமுடைய பெரியார் தண்டி அடிகள். அக நோக்கில் இறைவன் அருள் பெற்று வந்தாரே தவிரப் பிறந்த பொழுதிலிருந்தே புறத்தே நோக்கும் கண் பார்வை அற்றிருந்தார். என்றாலும் தம்முடைய கண் பார்வை இன்மையை ஒரு குறையாகக் கருதாமல் தொண்டு செய்வதில் முனைந்து நின்றார். திருக்கோயிலின் குடதிசையிலுள்ள திருக்குளம் பயன்பட முடியாதபடிப் புறச் சமயத் தார் ஊடுருவி (ENCROACHMENT) அதனைச் சுற்றி வாழத் தொடங்கினர். தமிழ்நாட் டில் இப்பழக்கம் என்றுமே உண்டுபோலும்!

குளத்தை ஆழப்படுத்த வேண்டும் என்று நினைத்த தண்டியடிகள் வரிசையாகக் கோல்களை நட்டுக் குளத்தின் நடுவிலிருந்து கரை வரையில் கயிற்றைக் கட்டினார். மண்ணைத் தோண்டித் தலையில் சுமந்து கொண்டு கயிற்றைப் பிடித்துக் கொண்டு கரை சேர்ந்து மண்ணைக் கொட்டிவிட்டு மறுபடியும் தோண்டிவரும் பணியை மேற் கொண்டார். புறச் சமயிகள் அதனைத் தடுத்தும், ‘உன் விழியும் குருடு, காதும் செவிடு’ என்று ஏசிக் கழிகளையும் கயிற்றையும் அப்புறப்படுத்தினர்.

மனம் நொந்த அடிகள் ‘நான் விழிப் புலத்தைப் பெறப் போகிறேன். நீங்கள் விழிப் புலத்தை இழக்கப்போகிறீர்கள்’ என்று சபதமிட்டார். அது கேட்ட அவர்கள் ‘நீ விழி பெற்றால் நாங்கள் அனைவரும் இவ்வூரை விட்டு ஓடிவிடுகிறோம்’ என்று உறுதியளித்தனர்.

அன்றிரவு இறைவன் கனவில் தோன்றி ‘நீ விழி பெறுவாய் நின் தொண்டை இகழ்ந்த அவர்கள் விழிகளை இழப்பர்’ என்று கூறினான். மறுநாள் இறைவனால் கனவில் ஏவப்பட்ட மன்னவன் அடிகளைக் கண்டுபேச மன்னனின் எதிரே குளத்தில் மூழ்கி எழுந்தார் அடிகள். அந்த வினாடியே அவர் விழிகளைப் பெற, அவரை இகழ்ந்தவர்கள் தம் விழிகளை இழந்து ஓடி விட்டனர்.

விஞ்ஞானமும், மனவியலும் (PSYCHOLOGY) பெரிதும் வளர்ந்துவிட்ட இந்த நூற்றாண்டில் மிக அண்மைக் காலமாக மருத்துவர்களும், மனவியலாரும் ஒரு கருத்தை வலியுறுத்துகின்றனர். உடலில் உறுப்புக் குறை உடையவர்களை எக் கார ணத்தைக் கொண்டும் சமுதாயத்தில் ஒதுக்கி வைத்தல் கூடாது. அவர்களுடைய குறை களைச் சுட்டிக் காட்டிப் பரிவு காட்டுதல் என்பது அவர்களுக்கு இழைக்கப்படும் பெரும் கொடுமையாகும். அவரவர்களுடைய குறைந்த உறுப்பை விட்டுவிட்டு ஏனைய உறுப்புகளைக் கொண்டு என்ன பணியினைச் செய்ய முடியுமோ அதனைச் செய்யுமாறு அவர்களுக்கு ஊக்கம் தருவதே அவர்களிடம் அன்பு காட்டுவதாகும். இவ் வாறு செய்வதால் அவர்களுடைய மனத்தில் தோன்றுகின்ற தாழ்வு மனப்பான்மை மறைந்து தன்மான உணர்ச்சி புண்படாமல் வாழ முடியும். அதனைத்தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்களே தவிர நம்முடைய பரிவை அன்று. இன்று உடல் ஊனமுற்ற வர்களுக்கு வங்கி முதலானவற்றில் பணி புரிய வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அதை விட வியப்பு எந்திரங்களை ஓட்டவும், எந்திரங்களின் மூலம் சிறு பொருள்களை உற்பத்தி செய்யவும் கண் இழந்தவர்களைப் பயன்படுத்துகின்றனர். கண்ணுடையவர் கள்கூடப் பல சமயங்களில் இவ்வியந்திரங்களில் சிக்கிக் கொள்கின்றனர். ஆனால் கண் இழந்தோர் எந்த விபத்திலும் சிக்குவதில்லை.

இருபதாம் நூற்றாண்டு மனவியலார் கண்ட உண்மையை இத்தமிழகம் என்றோ போற்றி மகிழ்ந்திருக்கிறது. கண் உடையவர்கள் மட்டும் ஈடுபடுகின்ற மண் வெட்டிக் குளம் தோண்டும் பணியில் பிறவிக் குருடராகிய தண்டியடிகள் தாம் ஒருவராகவே முயன்று பணி புரிந்தார் என்று அறிகிறோம். குருடரே உமக்கு ஏன் இந்த வேலை என்று பிறர் எள்ளி நகையாடிய பொழுதும் அடிகளாருக்குத் தாழ்வு மனப்பான்மை தோன்றவில்லை.

கொங்கு சமுதாயத்தில் ஊனமுற்ற குழந்தைகளை எடுத்து வளர்ப்பதற்கு ஒரு தனி ஏற்பாடு செய்திருந்தனர். ஒருவருக்கு என்று ஒரு தொகை நிர்ணயிக்கப்பட்டு வளர்ப்பவர்களுக்குக் கொடுப்பதும், அப்படியாகக் குழந்தைகள் வளர்க்கப்படுவதும் சமீப நாள் வரை இருந்த பழக்கம். இப்போது அது மறைந்துவிட்டது.

தண்டியடிகளார்


பூவார் சடிலத் திருமுடியார் மகிழ்ந்த செல்வப் பூங்கோயில்
தேவா சிரியன் முன்னிறைஞ்சி வலஞ்செய் வாராய்ச் செம்மைபுரி
நாவால் இன்ப முறுங்காதல் நமச்சி வாய நற்பதமே
ஓவா அன்பில் எடுத்தோதி ஒருநாள் போல வருநாளில் 3

பழுது தீர்ப்பார் திருத்தொண்டர் பரவி விண்ணப் பஞ்செய்து
தொழுது போந்து மடம்புகுந்து தூய பணிசெய் யப்பெறா(து)
அழுது கங்குல் அவர்துயிலக் கனவில் அகில லோகங்கள்
முழுதும் அளித்த முதல்வனார் முன்நின் றருளிச் செய்கின்றார் 12

அருகர் தம்மை அரசனும்அங் கழைத்துக் கேட்க அதற் கிசைந்தார்;
மருவுந் தொண்டர் முன்போக மன்னன் பின்போய் மலர்வாவி
அருகு நின்று விறல்தண்டி யடிகள் தம்மை முகநோக்கிப்
''பெருகுந் தவத்தீர்; கண்அருளாற் பெறுமா காட்டும்'' எனப்பெரியோர் 18

குழியில் விழுவார்; நிலைதளர்வார்; ''கோலும் இல்லை'' எனஉரைப்பார்;
''வழியீ(து)'' என்று தூறடைவார்; ''மாண்டோம்'' என்பார்; ''மதிகெட்டீர்!
அழியும் பொருளை வட்டித் திங் கழிந்தோம்'' என்பார்; ''அரசனுக்குப்,
பழியீ தாமோ'' என்றுரைப்பார்; பாய்கள் இழப்பார் பறித லையர் 22

மன்னன் வணங்கிப் போயினபின் மாலும் அயனும் அறியாத
பொன்னங் கழல்கள் போற்றிசைத்துப் புரிந்த பணியுங் குறைமுடித்தே
உன்னும் மனத்தால் அஞ்செழுத்தும் ஓதி வழுவா தொழுகியே
மின்னுஞ் சடையார் அடிநீழல் மிக்க சிறப்பின் மேவினார் 25



30





31. மூர்க்கர்

தொண்டை நாட்டில் பாலாற்றின் வட கரையில் அமைந்தது வேற்காடு என்னும் ஊர். அவ்வூரில் வேளாண் குலத்தில் பிறந்தவர் மூர்க்கர். திருநீற்றின் சிறப்பை இளமையிலேயே அறிந்த அவர் அடியார்க்கு அமுது படைப்பதையே தொண்டாகக் கொண்டார். இத் தொண்டில் தம் பொருளை எல்லாம் இழந்துவிட, தாம் இளமையில் கற்றுத் தேர்ந்த சூதாட்டத்தையே வருவாய்க்கு வழியாகக் கொண்டார். பல ஊர்களுக்கும் சென்று இறைவனை வணங்கி இறுதியாக குடந்தை சென்றார்.

சூதாடும்போது முதல் ஆட்டத்தில் தாம் தோற்று, வென்றவர் தம் பொருளை பெறுமாறு செய்து நம்பிக்கை ஊட்டிப்பிறகு அடுத்த ஆட்டங்களில் அவர் பொருளை முழுவதுமாக கவர்வதைத் தொழிலாகக் கொண்டார். சூதில் தகராறு ஏற்பட்டால் எதிரிகளைக் கத்தியால் குத்துவதையும் செய்து வந்தமையால் மூர்க்கர் என்ற காரணப் பெயர் ஏற்பட்டது. சூதில் வென்ற பொருளையெல்லாம் அடியார்க்கு அமுதாக்கி இறைத்தொண்டு செய்தார்.

அடியார்க்கு எவ்வாறாயினும் உணவூட்ட வேண்டும் என்ற குறிக்கோள் மிக உயர்ந்தது என்பதில் ஐயமே இல்லை. ஆனால் அதற்குரிய பொருளைச் சேகரிக்கச் சூதாட்டத்தைக் கைக்கொள்ள வேண்டுமா என்ற வினாவிற்கு விடை கூறுவது அவ்வளவு எளிதன்று. மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது இது தவறு என்றே கொள்ள நேரிடும். எத்துணை சிறந்த பயனைப் பெறுவதாயினும் அதனை அடைய மேற்கொள்ளும் வழியும் தூய்மை உடையதாக இருத்தல் வேண்டும் என்று நம் முன்னோரும் அறநூல்களும் கூறுகின்றன. இவ்விதி பொதுவான விதி என்பதிலும், அனைவருக்கும் ஏற்புடையது என்பதிலும், அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதிலும் எவ்வித ஐயமும் இல்லை.

ஆனால் அடியார்கள், தொண்டர்கள் என்பவர்கள் இந்தப் பொதுவிதியில் அடங்குபவர்கள் அல்லர். பொது விதியை மேற்கொண்டு சமுதாய மரபுகளை மீறாமல் வாழ்கின்றவர்கள் நம் போன்ற சாதாரண மனிதர்களாக இருக்க முடியுமே தவிரச் செயற்கரும் செய்கை செய்கின்ற அடியார்களாக, நாயன்மார்களாக இருத்தல் முடியாது.

இதனை மனத்துள் கொண்டால் இவர்கள் செய்யும் செயல்களை நாமும் செய்யக் கூடாதா என்ற வினா தோன்றாது. சமுதாய மரபுக்கும் மனித பொது நியதிக்கும் புறநடையாக (EXCEPTIONS) இவர்கள் இருத்தலினால்தான் நம்மினும் வேறுபட்டவர்களாக இருக்கிறார்கள்.

திருமங்கையாழ்வார் களவு செய்தார் என்பதனாலோ, மூர்க்கர் சூதாடினார் என்பதாலோ நாமும் இவற்றை மேற்கொள்ளலாம் என்பது தவறு. இவற்றைச் செய்த இவ்விருவரும் அகங்காரம், மமகாரம் என்ற இரண்டையும் அறவே ஒழித்தவர்கள். ஆதலால் இச்செயலின் அடுத்தபடியாக வீடு பேற்றை அடைந்தனர். செய்யப்படுகின்ற செயலைக் காட்டிலும் செய்கின்றவனுடைய மனம், எண்ணம் என்பவைதான் முக்கியமானவை என்பதை அறிதல் வேண்டும். இதனால்தான் கல்லெறிந்த சாக்கியர், சூதாடும் மூர்க்கர், செருப்புக் காலை இறைவன் மேல் வைத்த கண்ணப்பர் என்பவர்களுடைய செயல்கள் நம் போன்றவர்கள் செய்கின்ற செயல்களாகக் கருதப்படாமல் நம்மினும் வேறுபட்ட புறநடையாளர் செயல்களாகக் கருதப்படுகின்றன.

மூர்க்கர்

கோதில் மரபிற் பிறந்துவளர்ந் தறிவு கொண்ட நாள் தொடங்கி
''ஆதி முதல்வர் திருநீற்றின் அடைவே பொருள்'' என் றறிந்தரனார்
காதல் அடியார்க் கமுதாக்கி அமுது செய்யக் கண்டுண்ணும்,
நீதி முறைமை வழுவாத நியதி பூண்ட நிலைமையார் 3


இருளாரும் மணிகண்டர் அடியார்க்கின் னமுதளிக்கப்
பொருளாயம் எய்துதற்குப் புகழ்க்குடந்தை அம்பலத்தே
உருளாயச் சூதாடி உறுபொருள்வென் றனநம்பர்
அருளாக வேகொண்டங் கமுதுசெய்வித் தின்புறுவார் 8

முற்சூது தாந்தோற்று முதற்பணைய மவர்கொள்ளப்
பிற்சூது பலமுறையும் வென்றுபெரும் பொருளாக்கிச்
சொற்சூதால் மறுத்தாரைச் சுரிகைஉரு விக்குத்தி
நற்சூதர் மூர்க்கர்எனும் பெயர்பெற்றார் நானிலத்தில் 9

சூதினில்வென் றெய்துபொருள் துரிசற்ற நல்லுணர்வில்
தீதகல அமுதாக்கு வார்க்கொள்ளத் தாந்தீண்டார்
காதலுடன் அடியார்கள் அமுதுசெயக் கடைப்பந்தி
ஏதமிலா வகைதாமும் அமுதுசெய்தங் கிருக்குநாள் 10

நாதன்தன் அடியார்க்கு நல்லடிசில் நாடோறும்
ஆதரவி னால்அமுது செய்வித்தங் கருளாலே
ஏதங்கள் போயகல இவ்வுலகை விட்டதற்பின்
பூதங்கள் இசைபாட ஆடுவார் புரம்புக்கார் 11





32. சோமாசிமாறர்.

அம்பர் என்ற ஊரில் மறையவர் குலத்தில் பிறந்தவர் சோமாசிமாறர். சிவ பெருமானைப் போற்றும் யாகங்கள் பலவற்றை முறை வழுவாமல் செய்த பெருமை உடையவர். ஈசனுக்கு அன்பர் என்றால் அவர்களே தம்மை ஆள்பவர்கள் என்று சித்தம் தெளிய, சிவன் அஞ்செழுத்து ஓதும் நித்தம் நியமம் என்னும் நெறியில் வாழ்ந்த பெருமகனார்.

திருவாரூர் சென்று வன்றொண்டராகிய சுந்தர மூர்த்திகளிடம் அன்பு பூண்டு அவர் நட்பைப் பெற்று வாழ்வதே தலையாய கடன் என்று வாழ்ந்து வீடு பேற்றைப் பெற்றவர்.

சோமாசிமாறருடைய வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்ததைச் சேக் கிழார் குறிக்கின்றார். இவர் தம்முடைய மரபுக்கேற்ப யாகம் முதலியவற்றில் ஈடு பட்டு அவற்றை வழுவாமல் செய்து வந்தார். அதிலும் இந்திரன் வருணன் முதலான வர்களைப் போற்றும் வைதிக யாகமாக அமையாமல் இவர் இயற்றும் யாகங்கள் சிவபெருமானையே முதலாகக் கொண்டு அமைந்தன. அன்றியும் தியானத்திற்கு மூல மாக ஐந்தெழுத்தையே கொண்டார் என்பதனாலும் தென்னாட்டு சைவ வைதிகர் வழியைப் பின்பற்றினார் என்பதை அறிய முடிகிறது. கரும காண்டத்தில் பற்று வைத்து இந்த யாகங்களை விடாது செய்துவருபவர்கள் எந்த நிலையிலும் அதனை விட விரும்புவதில்லை. தலைமகனாகி நின்ற தமிழ் ஞான சம்பந்தரைப் பெற்ற பிறகும்கூட அவருடைய தந்தையாராகிய சிவபாத இருதயர் யாகங்களை விடாது செய்தார் என்று அறிய முடிகிறது.

மிக இளம் குழந்தையாக உள்ள பிள்ளையார் மிக நீண்ட தூரம் சென்று பல் வேறு தலங்களையும் தரிசிக்கச் செல்லும்போது தந்தையார் உடனிருப்பதுதான் நியாய மாகும். ஆனால் ஒரு சமயம் சிவபாத இருதயர் மகனை நோக்கி 'பெற்ற பாசத்தால் உம் கூடவே இருக்க வேண்டுமென்று மனம் விரும்பினாலும் யாகங்களைச் செய்ய வேண்டிய கடமை உடையவனாகிய நான் சீர்காழிக்குச் சென்று என் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்' என்று கூறிவிட்டு பிள்ளையாரை விட்டுப் பிரிந்து சென்று விட்டார் என்று அறிகிறோம். எனவே கிரியைகளில் (RITUALS) பற்றுள்ளவர்கள் அவற்றை விட்டுவிடுவது ஓரளவு இயலாத காரியம் என்றே கூறிவிடலாம். திருஞான சம்பந்தரோடு பழகிய வைதிகர்கள் யாரும் அவருடைய பெருமையை அறிந்த பிறகும் தம்முடைய கிரியைகளை விட்டுவிட்டு அவர் கூடவே இருக்க வேண்டும் என்று நினைத்ததாகத் தெரியவில்லை.

கிரியைகளில் பற்றுக்கொண்டு அவற்றை விடாது நிகழ்த்திய இவ்வைதிகர்க ளிடையே மாபெரும் சோம யாகத்தைச் செய்து சோமாசிமாறர் என்ற பெயரையும் பெற்ற இப் பெருமானார் திடீரென்று யாகம் செய்யும் கடமையை விட்டுவிட்டுத் திருவாரூர் சென்று விட்டார். சென்ற அவர் வைதிக மரபுக்கு முற்றும் மாறான செயல்களைச் செய்து கலப்புத் திருமணம் புரிந்து கொண்டு மாப்பிள்ளைக் கோலத் துடன் என்றும் வாழ்ந்து வரும் நம்பி ஆரூரரை நண்பராகப் பெற்றார். பிராமணங் களில் கூறியபடி யாகம் புரிகின்ற ஒருவர் திடீரென்று அவற்றை விட்டுவிட்டுப் புரட்சி வீரராகிய சுந்தரரிடம் நட்புக் கொண்டது மட்டுமல்ல; அங்கேயே தங்கியும் விட்டார்.

இந்த நட்பில் ஒரு வியப்பான செய்தியைச் சேக்கிழார் கூறுகிறார். கலப்புத் திருமணம் செய்து கொண்டு இன்பமாக இல்லறம் நடத்தும் வேதியராகிய நம்பி ஆரூரர் நட்பு 'துன்றும் புலன் ஐந்துடன் ஆறுதொகுத்த குற்றம் வென்று இன்று இது நன்னெறி சேரும் விளக்கம் என்று வன்றொண்டர் பாதம் தொழுதார்' என்று கூறுகிறார் கவிஞர். புலன் அடக்கம் செய்வதற்கும் அறுவகைக் குற்றங்களைப் போக்குவதற்கும் வழி நம்பி ஆரூரருடைய திருவடிகளைத் தொழுவதுதான் என்று கண்டார்.

கிரியா மார்க்கத்திற்கும் பக்தி மார்க்கத்திற்கும் உள்ள வேறுபாட்டை மிக நுண்மையாகச் சோமாசிமாறர் புராணத்தில் சேக்கிழார் வைத்துக் காட்டுவது அறிந்து மகிழ்வதற்குரியதாகும்.

சோமாசிமாறர்


சூதம்பயி லும்பொழில் அம்பரில் தூய வாய்மை
வேதம்பயி லும்மறை யாளர் குலத்தின் மேலோர்
ஏதம்புரி யும்எயில் செற்றவர்க் கன்பர் வந்தால்
பாதம்பணிந் தார்அமு தூட்டுநற் பண்பின் மிக்கார் 1

''யாழின்மொழி யாள்தனிப் பாகரைப் போற்றும் யாகம்
ஊழின்முறை மைவழு வாதுல கங்க ளான
ஏழும்உவப் பப்புரிந் தின்புறச் செய்த பேற்றால்
வாழுந்திறம் ஈசர் மலர்க்கழல் வாழ்த்தல்''-என்பார் 2


எத்தன்மைய ராயினும் ''ஈசனுக் கன்பர்'' என்றால்
''அத்தன்மையர் தாம்நமை யாள்ப்வர்'' என்று கொள்வார்;
''சித்தந்தெளி யச்சிவன் அஞ்செழுத் தோதும் வாய்மை
நித்தந் நியமம்'' எனப்போற்றும் நெறியில் நின்றார் 3

சீருந்திரு வும்பொழி யுந் திரு வாரூர் எய்தி
ஆரந்திகழ் மார்பின் அணுக்கவன் றொண்டர்க் கன்பால்
சாரும்பெரு நண்பு சிறப்ப அடைந்து தங்கிப்
பாரும்விசும் பும்பணி யும்பதம் பற்றி யுள்ளார் 4

துன்றும்புலன் ஐந்துடன் ஆறு தொகுத்த குற்றம்
வென்(று) ''இங்கிது நன்னெறி சேரும் விளக்கம்'' என்றே
வன்றொண்டர் பாதந்தொழு தான சிறப்பு வாய்ப்ப
என்றுந்நில வுஞ்சிவ லோகத்தில் இன்பம் உற்றார் 5



32



33. சாக்கியர்

திருச்சங்கமங்கை என்ற ஊரில் வேளாளர் குலத்தில் உதித்த சாக்கியர் அண்மையிலுள்ள காஞ்சி நகரம் சென்று நல்ஞானம் பெறுவதற்குரிய வழிகள் பலவற்றையும் ஆராய்ந்து இறுதியாகச் சாக்கிய சமயமாகிய பௌத்தத்தில் சேர்ந்து பெரிதும் கற்றாராயினும் அதில் மனம் அமைதி பெறவில்லை.

செய்வினை, செய்பவன், வினையின் பயன், அதனைக் கொடுப்பவன் என்ற நான்கையும் ஏற்றுக் கொள்ளுகிற இயல்பு சைவம் ஒன்றுக்கே உள்ளது என்பதை உணர்ந்தார். மேலும் 'எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னிய சீர்ச் சங்கரன் தாள் மறவாமையே பொருளாகும்' என்ற முடிவில் புத்த சமயத்துக்குரிய காவி உடையை விட்டுவிடாமல் அகத்தே சிவனடியாராக வாழத் தொடங்கினார். ஒருநாள் தம்மை மறந்த நிலையில் பக்கத்திலிருந்த கல்லை எடுத்துச் சிவலிங்கத்தின் மேல் எறிந்தார். எறிகின்ற நேரத்தில் அவர் மனத்தில் தோன்றிய உவகை இறைவன் திருவருள் குறிப்பு என்று நினைந்த அடியார் அன்றாடம் அதனையே செய்து வந்தார்.

ஒருமுறை கல்லெறிய மறந்து உண்பதற்கு அமைந்த அவர் திடீரென்று 'பிரானின் மேல் கல்லெறிய மறந்தேனே' என்று நினைத்து ஓடிச் சென்று கல் ஒன்றைத் தூக்கவும் இறைவன் காட்சி தந்து அவரை ஏற்றுக் கொண்டான்.

ஒரு காலத்தில் பௌத்த, சமண சமயங்கள் தமிழ் நாட்டில் பரவின என்றாலும், சமணம் பரவிய அளவிற்குப் பௌத்தம் பரவவில்லை. இதற்குரிய காரணங்கள் பல.

தொடக்கத்தில் சாக்கிய நாயனார் பௌத்தராக இருந்தவர். பௌத்தம் கடவுள் என்ற ஒன்றை ஏற்பதில்லை. அறிவு வாதத்தையே அடிப்படையாகக் கொண்ட பௌத்த சமயத்தைச் சேர்ந்த சாக்கியர் பக்தியில் ஈடுபடலானார். பக்தி மார்க்கத்துக்குப் பௌத்தத்தில் இடம் இல்லை. பக்தி மார்க்கம் என்பது உணர்வை அடிப்படையாகக் கொண்டது. இது அறிவு வாதத்திற்கு ஓரளவு புறம்பானதாகும். ஓரளவுக்கு அறிவு வாதத்தை மேற்கொண்டு, தலைவன் யார், தான் யார்? தனக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பு என்ன? என்பனவற்றை ஓரளவு அறிந்து கொள்வதற்கு அறிவு வாதத்தைப் பயன்படுத்தி அத்தோடு விட்டுவிடுகிறது பக்தி மார்க்கம். பக்தி மார்க்கத்தின் இன்றியமையாத அடிப்படை, 'தான்' என்பதை அறவே ஒழித்து இறைவனிடம் சரண் புகுவதாகும். நான் என்பதை அடிப்படையாகக் கொண்டு அறியப்படும் பொருளை ஆராய்வது அறிவு வாதமாகும்.

எனவேதான் பௌத்தராகிய சாக்கியர் முதன் முறையாகச் சிவலிங்கத் திருமேனியில் கல்லை எடுத்து அடிப்பதற்குக் காரணமாக இருந்தது உணர்வேயாகும். உண்ர்ச்சி மேலீட்டால் செய்யப்பட்ட இச் செயல் உடனடியாக அவருக்கு மன நிறைவையும் அமைதியையும் தந்தது. இதன் காரணம் அறியாத காரணத்தால் எல்லை மீறிய ஈடுபாட்டால் (பக்தி பரவசத்தால்) அன்றாடம் கல்லையெடுத்து எறியத் தொடங்கினார்.

முதன்முறை கல்லெறிவதற்குத் தற்போதம் (VOLITION) காரணமாக இல்லை என்பதை உணர்ந்து கொண்டார். எவ்வளவு ஆராய்ந்தும் ஏன் இச்செயலைச் செய்தோம் என்று அவரால் அறியக்கூடவில்லை. எனவே இது திருவருட் குறிப்பு என்ற முடிவுக்கு வருகிறார். ஏனையோர் இச்செயல்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது அவர் கவனத்திற்கு வரவேயில்லை. பௌத்தர்களுக்குரிய உடையைத் தாம் அணிந்து இருப்பதைப்பற்றியும் அவர் கவலைப்படவில்லை. தற்போதத்தை முழுவதும் இழந்த அடியாராகவே அவர் மாறி விடுகிறார்.

சாக்கியர்

''எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்''என்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவந்
தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார் 6

தொடங்கியநாள் அருளியஅத் தொழிலொழியா வழிதொடரும்
கடன்புரிவார் அதுகண்டு கல்லெறிவார் துவராடைப்
படம்புனைவே டந்தவிரார் பசுபதியார் தஞ்செயலே
அடங்கலும்என் பதுதெளிந்தார்; ஆதலினால் மாதவர்தாம் 12

இந்நியதி பரிவோடும் வழுவாமல் இவர்செய்ய
முன்னுதிருத் தொண்டர்நிலை முடிந்தபடி தான்மொழியில்
துன்னியமெய் யன்புடனே எழுந்தவினை தூயவர்க்கு
மன்னுமிகு பூசனையாம் அன்புநெறி வழக்கினால் 13

கல்லாலே எறிந்ததுவும் அன்பான படிகாணில்
வில்வேடர் செருப்படியுந் திருமுடியின் மேவிற்றால்;
நல்லார்மற் றவர்செய்கை அன்பாலே நயந்ததனை
அல்லாதார் கல்லென்பார்; அரனார்க்கஃ தலராமால் 14

மழவிடைமேல் எழுந்தருளி வந்ததொரு செயலாலே
கழலடைந்த திருத்தொண்டர் கண்டுகரம் குவித்திறைஞ்சி
விழஅருள்நோக் களித்தருளி மிக்கசிவ லோகத்தில்
பழஅடிமைப் பாங்கருளிப் பரமரெழுந் தருளினார் 17





34. சிறப்புலியார்

'இரந்து சென்றோர்க்கு இல்லை எனாதே ஈயும் தன்மையார் வாழ்கின்ற ஆக்கூர்' என்று ஞான சம்பந்தரால் பாடப்பட்ட பெருமை உடையது அவ்வூர். அவ்வூர் வேதியர் குலத்தில் தோன்றியவர் சிறப்புலியார். அஞ்செழுத்து ஓதி, அங்கிவேட்டு நல் வேள்வி செய்து, அடியாருக்கு அமுதூட்டி அவர் விரும்புவனவற்றையெல்லாம் தந்து மகிழ்வதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர் சிறப்புலியார்.

செயற்கரும் செயல் என்றோ, சாதாரண மனிதர்களுடைய செயற்பாட்டிற்கு அப்பாற்பட்டதென்றோ, பிறர் கண்டு வியக்கக் கூடியது என்றோ கருதப்படும் செயல்களைச் செய்த அடியார்கள் பெரிய புராணத்தில் மிகக் குறைவாகவே உள்ளனர்.

சிறப்புலி போன்றவர்கள் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் அல்ல. அவர் பிறருக்கு உணவிட்டு உபசரிப்பதையே தலையாய கடனாகக் கொண்டிருந்தார். அப்படியானால் நமக்கும் இவருக்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்? உணவு இடுதலாகிய செயல் இல்லறத்தில் இருக்கின்ற பலரும் செய்கின்ற ஒன்றுதான். ஆனால் அதை ஒரு பெரிய கடமையாகக் கொண்டு வாழ்கின்றவர்கள் ஒரு சிலரேயாவர். அப்படி இடுகின்றவர்களும் இச்செயல் முட்டுப்பட்டால் அது பற்றிக் கவலைப்படுவதில்லை. ஏதோ கையில் இருந்த காலத்தில் செய்தோம். இப்பொழுது முடியவில்லை என்று அமைதி கூறி இருந்து விடுகின்றனர். இளையான்குடி மாறர், சிறப்புலி போன்றவர்கள் இத் தொண்டுக்கு இடையூறு நேர்ந்தால் அதன் காரணத்தைப் பற்றி ஆராய்வதில்லை.

அதன் எதிராகத் தம்முடைய குறிக்கோளுக்கு ஏற்பட்ட தடையை நீக்க முயல்கின்றார்கள். நீக்க முடியவில்லையானால், அந்தத் தடை அவருடைய சக்திக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும் இறைவனால் ஏற்பட்டதானாலும் அவர்கள் கவலைப் படுவதில்லை. தடையை நீக்கிக் கடமையைச் செய்ய வேண்டும்; இல்லையானால் உயிரை நீத்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார்கள். இந்த ஒன்றுதான் நம் போன்றவர்களுக்கும் அடியார்க்கும் உள்ள வேறுபாடு ஆகும். நம்மைப் போலவே சாதாரண வாழ்க்கை வாழ்கின்றவர்கள் ஆதலால் இவர்களைப் பிரிந்து இனம் கண்டு கொள்ளுதல் கடினம். சேக்கிழார் போன்ற இறையருள் பெற்ற பெருமக்கள் இவர்களை இனம் கண்டு கொள்ள முடிகிறது. இந்த வேறுபாடு காரணமாகவே இப் பெருமக்கள் பெரிய புராணத்தில் இடம் பெறுகின்றனர்.

சிறப்புலியார்


பொன்னிநீர் நாட்டின் நீடும் பொற்பதி ''புவனத் துள்ளோர்
இன்மையால் இரந்து சென்றோர்க் கில்லைஎன் னாதே ஈயும்
தன்மையார்'' என்று நன்மை சார்ந்தவே தியரைச் சண்பை
மன்னனார் அருளிச் செய்த மறைத்திரு வாக்கூர் அவ்வூர் 1

தூ மலர்ச் சோலை தோறும் சுடர்தொடு மாடந் தோறும்
மாமழை முழக்கந் தாழ மறையொலி முழக்கம் ஓங்கும்;
பூமலி மறுகில் இட்ட புகைஅகில் தூபந் தாழ
ஓமநல் வேள்விச் சாலை ஆகுதித் தூபம் ஓங்கும் 2

ஆலைசூழ் பூக வேலி அத்திரு வாக்கூர் தன்னில்
ஞாலமார் புகழின் மிக்கார் நான்மறைக் குலத்தி னுள்ளார்
நீலமார் கண்டத் தெண்டோள் நிருத்தர்தந் திருத்தொண் டேற்ற
சீலராய்ச் சாலும் ஈகைத் திறத்தினில் சிறந்த நீரார் 3

ஆளும்அங் கணருக் கன்பர் அணைந்தபோ தடியிற் றாழ்ந்து
மூளும்ஆ தரவு பொங்க முன்புநின் றினிய கூறி
நாளும்நல் லமுத மூட்டி நயந்தன எல்லாம் நல்கி
நீளும்இன் பத்துள் தங்கி நிதிமழை மாரி போன்றார் 4

அஞ்செழுத் தோதி அங்கி வேட்டுநல் வேள்வி எல்லாம்
நஞ்சணி கண்டர் பாதம் நண்ணிடச் செய்து ஞாலத்(து)
எஞ்சலில் அடியார்க் கென்றும் இடையறா அன்பால் வள்ளல்
தஞ்செயல் வாய்ப்ப ஈசர் தாள்நிழல் தங்கி னாரே 5


34


35

35. சிறுத்தொண்டர்

காவிரி நாட்டில் உள்ளது செங்காட்டங்குடி. அரசருக்குச் சேனாதிபதியாகப் பணியேற்கும் ஆமாத்தியர் குலத்தில் பிறந்தவர் பரஞ்சோதியார். நரசிம்மவர்மப் பல்லவனுக்குச் சேனாதிபதியாக இருந்து புலிகேசியைப் போரில் வென்று அவன் தலைநகராகிய வாதாபி வரை சென்று அந்நகரை அழித்து வெற்றியுடன் மீண்டவர்.

போர்வினை முடிந்து அரசப் பணியிலிருந்து விடுதலை பெற்றுச் செங்காட்டங் குடியில் வந்து தங்கிச் சிவனடியார்க்குத் தொண்டு செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர்.

அடியார்கள்உடன் உண்பதையே கொள்கையாகக் கொண்ட இவருக்கு ஒருநாள் அடியார்கள் கிடைக்காத காரணத்தால் வெளியே தேடிச் சென்றார். வட நாட்டு பைராகி ஒருவர் இவரைத் தேடி வந்து, இவர் வீட்டில் இல்லாததால் இவர் கட்டிய கணபதிச்சரம் என்ற கோயிலில் தங்கியிருந்தார். இதையறிந்த பரஞ்சோதியார் அவரைத் தேடிச் சென்று அமுதுண்ண அழைத்தார். அதனைக் கேட்ட பைராகியார் தமக்கு அமுது படைக்க வேண்டுமானால் ஒரு குடும்பத்திற்கு ஒரு மகனாய், ஐந்து வயதுக்கு உட்பட்டவனாய், உறுப்பு குறைவில்லாதவனாய் உள்ள ஒருமகனைத் தாய் பிடிக்க தந்தை அரிந்து கறி சமைத்தல் வேண்டும் என்று கூறினார்.

மீண்ட பரஞ்சோதியார் பள்ளியில் உள்ளதம் மகனை அழைத்து அடியவர் விரும் பியவாறே செய்து கறி சமைத்துப் பைராகியாரை அழைத்து வந்து உண்பிக்கத் தொடங்கினார்.

உண்ணத் தொடங்குமுன் அடியார் ‘நீர் ஆண்பிள்ளை பெற்றிருந்தால் அந்தக் குழநதையும் நம்மோடு உண்ண வேண்டும்’ என்று கூறப் பரஞ்சோதியார், ‘இப் போது இங்கு அவன் உதவ முடியாது’ என்று அடக்கத்தோடு கூறினார்.

‘அவன் வந்தாலொழிய நாம் உண்ண முடியாது. சென்று அழைத்து வர்ருங்கள்’ என்று அடியார் கட்டளையிட இருவரும் சென்று தெருவில் நின்று ‘சீராளா, வாராய்! சிவனார் அடியார் உடன் உண்ண அழைக்கின்றார்’ என்று ஒலமிட மகன் பள்ளியி லிருந்து எப்பொழுதும் வருவது போல ஓடி வந்தான்.

குழந்தையை அழைத்துக் கொண்டு உள்ளே வந்த பரஞ்சோதியாருக்கு சிவனடி யார் மறைந்து இறைவன் திருக்காட்சி நல்கினான்.

இந்த வரலாற்றில் நம் அறிவைச் செலுத்தி நுண்மையாக ஆராய வேண்டிய இடங்கள் பலவுண்டு. தான் பெற்ற பிள்ளையைத் தானே அறுத்துக் கறி சமைக்க வேண்டும் என்ற சோதனை யாருக்குத் தரப்பட்டது? என்று சிந்திக்க வேண்டும். நரசிம்மவர்மப் பல்லவனுக்குச் சேனாபதியாக இருந்து புலிகேசியைப் போரில் வென்று அவனுடைய தலைநகராகிய வாதாபி வரை அவனைத் துரத்திச் சென்று வெற்றி கொண்டவர் பரஞ்சோதியார். நூற்றுக் கணக்கானோரைக் கொன்று குவிக் கையில் அவருடைய மனத்தில் எவ்வித இரக்க உணர்வும் ஏற்படவில்லை. காரணம், நாட்டைக் காக்கும் கடமையில் செய்யப்பட்ட செயலாகும், அது. தனக்கு இடப்பட்ட கடமையை நிறைவேற்றுவதில் குறைவு நிறைவு ஆயவோ, பச்சாதாபப்படவோ, நன்று தீது காணவோ அவருக்கு உரிமை இல்லை.

கடமை என்ற பெயரில் நூற்றுக்கணக்கானவர்களைக் கொன்ற ஒருவருக்கு அதே கடமை என்ற பெயரில் இப்பொழுது சோதனை வருகிறது. சிவனடியார்கள் என்ன கேட்டாலும் தருவது என்ற கடமையை மேற்கொண்டு விட்டார் பரஞ்சோதியார். தன் பிள்ளை என்று வரும்பொழுது வாத்சல்யம் காரணமாகக் கடமையைக் காற்றில்

விட்டுவிடுகிறாரா அல்லது எந்த நிலையிலும் அதை நிறைவேற்றுகிறாரா என்பது தான் சோதனை. கடமை என்ற பெயரில் யாரோ பெற்ற பிள்ளைகளை முன்னர் வெட்டினார். அதே கடமை என்ற பெயரில் தான் பெற்ற பிள்ளையையும் அரிந்து கறி சமைக்கிறார். எந்த நிலையிலும் தாம் கொண்ட கொள்கையிலிருந்து மாறாமல் எது கடமையோ அதனை விருப்பு வெறுப்பு இன்றிச் செய்து முடிக்கும் செயல் வீரராகிறார் சிறுத்தொண்டர்.

இளமை முதல் இடை வயது வருகின்ற வரையில் போரிலேயே ஈடுபட்டிருந்த காரணத்தால் இறுதிவரை தற்போதத்தை இழக்க முடியவில்லை சிறுத்தொண்டருக்கு அதனால்தான் போலும் பிள்ளையைப் பள்ளியிலிருந்து அழைத்து வா என்று அடியார் சொன்னவுடன் பள்ளிக்குச் சென்ற 'மகனே வா' என்றழைக்கிறார். சிறுத் தொண்டரைவிட அவருடைய மனைவியார் சிறந்த பக்தராகக் காணப்படுவதனால் சேக்கிழார் அவரை 'மனை அறத்தின் வேராகி விளங்கு திருவெண்காட்டு நங்கை' என்று கூறுகிறார்.

இன்று தென்னாட்டில் சைவம் என்பது புலால் மறுத்த நிலை. ஆயின் வட நாட்டில் இப்போதும் சிவ வழிபாடு செய்பவர்கள் புலால் மறுத்தவர்கள் அல்ல. ஆக வடநாட்டு அடியார் கேட்டதைக்கொடுக்க முயன்றநிலை 1000ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் இருந்ததை அறிகிறோம். பொதுவாகத் தமிழ்நாட்டில் பொது விருந்து களில் புலாலுடன் விருந்திடுவதில்லை.

சிறுத்தொண்டர்


நிலவியஅத் திருப்பதியில் நெடுஞ்சடையார் நீற்றடைவால்
உலகில்வளர் உயிர்க்கெல்லாம் உயர்காவற் றொழில்பூண்டு
மலர்புகழ்மா மாத்திரர்தங் குலம்பெருக வந்துள்ளார்
பலர்புகழுந் திருநாமம் பரஞ்சோதி யார்என்பார் 2

நீராருஞ் சடைமுடியார் அருளினால் நிறைதவத்துப்
பேராள ரவர்தமக்குப் பெருகுதிரு மனையறத்தின்
வேராகி விளங்குதிரு வெண்காட்டு நங்கைபால்
சீராள தேவர்எனுந் திருமைந்தர் அவதரித்தார் 17

வையம் நிகழுஞ் சிறுத்தொண்டர் ''மைந்தா! வருவாய்'' என அழைத்தார்;
தைய லாருந் தலைவர்பணி தலைநிற் பாராய்த், தாம்அழைப்பார்;
''செய்ய மணியே! சீராளா! வாராய் சிவனார் அடியார்யாம்
உய்யும் வகையால் உடனுண்ண அழைக்கின் றார்''என் றோலமிட 81

பரமர் அருளால் பள்ளியினின் றோடி வருவான் போல் வந்த
தரமில் வனப்பின் தனிப்புதல்வன் தன்னை எடுத்துத் தழு வித்தங்
கரமுன் அணைத்துக் கணவனார் கையிற் கொடுப்பக் களிகூர்ந்தார்
''புரமூன் றெரித்தார் திருத்தொண்டர் உண்ணப் பெற்றோம்'' எனும்பொலிவால்82

கொன்றை வேணி யார்தாமும் பாகங் கொண்ட குலக் கொடியும்
வென்றி நெடுவேல் மைந்தருந்தம் விரைப்பூங் கமலச் சேவடிக்கீழ்
நின்ற தொண்டர் மனைவியார் நீடு மகனார் தாதியார்
என்றும் பிரியா தேஇறைஞ்சி இருக்க உடன்கொண் டேகினார் 87





36. கழறிற்றறிவார்

சேர நாட்டில் அமைந்துள்ளவை திருவஞ்சைக் களமும், சேரர் முடி புனையும் கொடுங்கோளூருமாகும். கொடுங்கோளூரில் அரசர் குடியில் பிறந்தவர் பெருமாக் கோதையார் என்பவர். அரசாட்சியை மேற்கொள்ளாமல் இறைத் தொண்டு புரிவ திலேயே கண்ணும் கருத்துமாக இருந்தவர். அரசாட்சி ஏற்க வேண்டிய சூழ்நிலை உரு வாயிற்று. இறைவன் திருக்குறிப்பும் அதனை ஏற்றுக் கொள்ளுமாறு அவரைத் தூண்ட அரச பதவியை ஏற்றுக் கொண்டார். உலகிலுள்ள எல்லா உயிர்களும் தம்முள் பேசிக் கொள்வதை அறிந்துகொள்ளும் ஆற்றலையும் பெற்றார்.

அரச பதவியை ஏற்றுக் கொண்ட பெருமாக் கோதையார் யானையின் மேல் ஏறி வரும்பொழுது உவர் மண்ணைத் தலையில் சுமந்து கொண்டு எதிரே சலவைத் தொழிலாளி ஒருவர் வந்தார். உவர் மண் கரைந்து அவர் உடம்பில் பட்டு உடல் முழுவதும் வெண்மை நிறம் அடைந்திருந்தது. அவரைக் கண்டவுடன் யானையி லிருந்து இறங்கிய மன்னர் அவரை வணங்க, அஞ்சிய ஏகாலியார் 'அடியேன் அடி வண்ணான்' என்று கூறி மனமுருகி நின்றார். 'அடியார் வருகின்ற வேடத்தை யானைமேல் வருகின்ற எமக்கு நீவிர் நினைவூட்டினீர். வருத்தப்படாமல் செல்வீராக' என்றார் மன்னர் பெருமான்.

இவர் அரசாள்கின்ற காலத்தில் பாணபத்திரன் என்ற இசைப் பாடகன் இறை வனிடமிருந்து திருமுகப் பாசுரம் ஒன்றைப் பெற்றுக் கொண்டு வந்து இவரைக் கண்டு பரிசில் பெற்றுச் சென்றான்.

பெருமாக் கோதையார் அன்றாடம் சிவபூசை செய்து முடித்தபின் ஆடல் கூத் தனின் திருவடியில் அணியப் பெற்ற சிலம்பில் ஓசையைக் கேட்பது வழக்கமாக இருந்தது.

ஒருநாள் சிலம்போசை கேளாமல் போக, தம் தொண்டில் பழுது நேர்ந்து விட்டது என்று பதறிய மன்னர் உடைவாளை எடுத்து தம்மைக் கொன்று கொள்ள முயல, அதனைத் தடுத்தான் இறைவன். நம்பி ஆரூரர் பாடலைக் கேட்டதால் காலந் தாழ்ந்தது என்று கூறி இருவருக்குமிடையே நட்புச் செய்து வைத்தான். இதன் பிறகு பலமுறை திருவாரூர் சென்று நம்பி ஆரூரருடன் தங்கியும் பலமுறை அவரை அழைத்து வந்து விருந்து செய்வித்தும் மகிழ்ந்தார்.

ஒருமுறை இவரைக் காண வந்த நம்பி ஆரூரர் அஞ்சைக் களத்து அப்பரை வணங்கி, 'பெருமானே இனி இப்பிறவி வேண்டேன்' என்று விண்ணப்பம் செய்ய, கயிலையிலிருந்து வந்த வெள்ளை யானையில் ஏறி இமயவர் புடைசூழ கயிலை நோக்கிச் சென்றார்.

இதனை ஞான திருட்டியால் அறிந்த பெருமாக் கோதையார் தம்முடைய குதி ரையின் காதில் ஐந்தெழுத்தை ஓதி அதன்மேல் ஏற அதுவும் கயிலை நோக்கிச் சென்றது

இவருடைய வரலாற்றில் அரச பதவியை மேற்கொள்ளுவதற்கு முன்னர் இந்த உலகத்தில் வாழ்கின்ற உயிர்கள் யாவும் யாரும் பேசுவதை அறியும் உணர்வைப் பெற் றார் என்று பெரிய புராணம் பேசுகிறது.

ஆனால் இந்த ஆற்றலை அவர் பயன்படுத்தியதாக எந்த ஒரு குறிப்பும் இல்லை. இதேபோல பழைய விவிலியத்தில் சாலமன் கதை வருகிறது.

சேரமான் பெருமாளைப் பொறுத்தமட்டில் அவர் அன்றாடம் சிவ பூசை முடித்த பிறகு ஆடவல்ல பெருமானின் திருச்சிலம்பின் ஓசையைக் கேட்பது வழக்கம். இதன் உட்கருத்தை ஓரளவு சிந்தித்தல் வேண்டும். தேவையற்ற ஓசையும் ஒலியும் நிரம்பி யிருக்கின்ற காரணத்தாலும் நம்முடைய காதுகள் இதனைக் கேட்க பயிற்சி பெறாத தாலும் சாதாரண மக்கள் இதனைக் கேட்க முடிவதில்லை. இங்கு சிலம்பொலி என்று சொல்லப்படுவது ஆதிநாதத்தை ஆகும் (PREMORDIAL SOUND). பக்தி மார்க்கத்தில் பல படிகளைக் கடந்து ஒரு குறிப்பிட்ட நிலையை அடைந்தவர்கள் மட்டுமே ஆதி நாதத் ைதக் கேட்டு அனுபவிக்கும் தகுதியைப் பெறுகின்றனர்.

சேரமான் பெருமாள் பலநாள் இச்சிலம்பொலியைக் கேட்கும் பேறு பெற் றிருந்தார். என்ன காரணத்தாலோ ஒருநாள் இதைக் கேட்க முடியாமல் போயிற்று. சாதாரண மக்கள் பலமுறை இதனைக் கேட்டு ஒருநாள் கேட்க முடியவில்லை என் றால் 'இன்றில்லாவிட்டால் நாளை கேட்டுக் கொள்ளலாம்' என்றிருந்துவிடுவார்கள். இன்றேல் யாது காரணத்தாலோ இறைவன் அவ்வொலியைக் கேட்பிக்கவில்லை என்று இறைவன்மேல் குற்றம் சாட்டுவார்களே தவிரத் தங்கள் குறை என்பதை உணர மாட்டார்கள். ஆனால் சேரமான் பெருமாள் போன்றவர்கள் ஒருநாள் அவ் வொலியைக் கேளாத பொழுது தாங்கள் ஏதோ தவறு செய்து விட்டதால்தான் ஒலி கேட்கவில்லை என்று உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிகின்றனர்.

'அதிகாரம் ஆளைக் கெடுக்கும். சர்வாதிகாரம் முழுவதுமாக ஒருவனை அழித்து விடும்' என்பதை நன்குணர்ந்த சேரமான் எதிரே வருகின்ற சலவைத் தொழிலாளரை வணங்கும்போது தாம் தவறு செய்ததாக நினைக்கவேயில்லை. அதிகாரத்தில் இருக் கும் தமக்குப் பணிவை அறிவுறுத்த இறைவன் அவ்வண்ணாரை அனுப்பியதாக நினைக்கிறார். அடியார்கள் அரசர்களாக நேர்ந்தால் எவ்வாறிருப்பார்கள் எவ்வாறு நடந்து கொள்ளுவார்கள் என்பதை நமக்கு அறிவுறுத்த சேரமான், புகழ்ச் சோழர், மூர்த்தியார் போன்றவர்கள் வரலாறு பயன்படுத்தப்படுகிறது. இது இன்றைய இந்தி யாவுக்குத் தேவையான முன் உதாரணம்.

கழறிற்றறிவார்

உரிமை நாளில் ஓரைநலன் எய்த மிக்க உபகரணம்
பெருமை சிறக்க வேண்டுவன எல்லாம் பிறங்க மங்கலஞ் செய்(து)
இருமை உலகுக் கொருமைமுடி கவித்தார்; எல்லா உயிரும்மகிழ்
தரும நிலைமை அறிந்துபுவி தாங்குங் கழறிற் றறிவார்தாம் 16

வாசத் திருமஞ் சனம்பள்ளித் தாமஞ் சாந்தம் மணித் தூபம்
தேசிற் பெருகுஞ் செழுந்தீபம் முதலா யினவுந் திரு வமுதும்
ஈசர்க் கேற்ற பரிசினால் அருச்சித் தருள எந்நாளும்
பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர் பொற்பார் சிலம்பின் ஒலி அளித்தார் 24

கைக்கொண்டு கொடுபோம்அக் கைவினைஞர் தமைஏவி
மைக்கொண்ட மிடற்றாரை வணங்கிப்போய்க் கொங்ககன்று
மெய்க்கொண்ட காதலினால் விரைந்தேகி மென்கரும்புஞ்
செய்க்கொண்ட சாலியுஞ்சூழ் திருவாரூர் சென்ற ணைந்தார் 172



36



39

37. கணநாதர்

பிள்ளையார் பிறந்த காழிமா நகரில் மறையவர் குலத்துதித்தவர் கணநாத நாயனார். ஆலயத்திற்குரிய பல்வேறு பணிகளைச் செய்வதில் சிறப்புற்று விளங்கிய அவர் பல்வேறு திருத்தொண்டுகளைச் செய்ய விரும்பும் தொண்டர்கட்குப் பயிற்சி அளித்தார்.

மலர் கொய்தல், மாலை கட்டுதல், அலகிடுதல், மெழுகிடுதல், திருமுறை எழுது தல், வாசித்தல் ஆகிய பணிகளில் பயிற்சி தந்தார். இத் தொண்டினைச் செய்து வீடு பேற்றை அடைந்து கயிலையிலுள்ள கணங்களுக்குத் தலைவர் ஆனார்.

வேதியர் குலத்தில் தோன்றிய கணநாதர் அம் மரபினர் வாலாயமாகச் செய்து வந்த வேள்வி முதலியவற்றில் ஈடுபடாமல் புதுவகையான தொண்டில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. திருக்கோயில் திருப்பணி என்பது ஒருவகையாகப் பார்க்கும்பொழுது சமுதாயப் பணியேயாகும். ஒரு காலத்தில் தமிழகக் கோயில்கள் அனைத்தும் சமு தாயத்தின் ஆணி வேராக விளங்கியதைத் திருவொற்றியூர் கல்வெட்டுகள் நன்கு அறிவிக்கின்றன. ஊரின் கல்விக் கூடமாகவும், சொற்பொழிவுக் கூடமாகவும், மருத் துவ விடுதியாகவும், அனாதை இல்லமாகவும், ஆவணக் களறியாகவும் (REGISTRAR OFFICE) அக்கோயில்களே அமைந்திருந்தன. எனவே கோயிலுக்கு என்ன தொண் டைச் செய்தாலும் அது மக்களுக்குச் செய்யப்பட்ட தொண்டாகவே கருதப்பட்டது. எனவே கணநாதர் இத்திருக்கோயில் தொண்டில் உள்ள பல்வேறு துறைகளிலும் நுழைந்து பணி புரிவாராயினர்.

அம்மட்டோடில்லாமல் அவ்வூரிலுள்ளவர்களைத் திருக்கோயில் பணி என்ற சமுதாயப் பணிக்கு பயிற்றுவிக்கும் சிறந்த தொழிலையும் மேற்கொண்டார். இத னைக் கூறவந்த சேக்கிழார் ''மேய அத்திருத் தொண்டினில் விளங்குவார் விரும்பி வந்து அனைவார்க்கு, தூய கைத்திருத் தொண்டினில் அவர் தமை துறைதொறும் பயில்விப்பார்'' என்று கூறுகிறார். துறைதொறும் என்பதை விளக்க வந்த அவர் நந்த வனம் வைத்தல், மலர் கொய்தல், மாலை கட்டுதல், திருமஞ்சனத்துக்குரிய பணி செய்தல், அலகிடுதல், மெழுக்கிடுதல், விளக்கெரித்தல், திருமுறை எழுதுதல், வாசித் தல் என்று ஒரு சில பணிகளின் விவரங்களையும் தருகிறார்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது இவை ஏதோ சாதாரண வேலைகள்போலத் தோன்றும். ஆனால் உண்மையில் தக்க பயிற்சியும் விடா முயற்சியும் தொழில் நுணுக்க அறிவும் மிகவும் தேவைப்படும் பணிகளாகும் இவை. அதனால்தான் கண நாதர் இவர்களைப் பயிற்றுவிப்பதற்கு ஒரு பயிற்சிப் பள்ளியே நடத்தினார். கோயில் தொண்டோ, சமுதாயத் தொண்டோ செய்கின்றவர்கள் ஊதியம் வாங்கிக் கொள் வதில் தவறில்லை. ஆனால் ஊதியத்திற்காகவே பணி புரிகிறவர்கள் எவ்விதப் பய னையும் விளைக்க மாட்டார்கள். இதை மனதிற் கொண்ட சேக்கிழார் கணநாதர் யாருக்கு இப் பயிற்சியை அளித்தார் என்று சொல்லும்போது ''விரும்பி வந்து அணைவார்க்கு'' என்று கூறுவதால் இன்று நாம் கூறும் 'வாலண்டரி சர்விஸ்' எனப் படுவது அன்றே நடைமுறையில் இருந்தது என்பதை அறிய முடிகிறது.

கணநாதர்

ஆழி மாநிலத் தகிலமீன் றளித்தவள் திறமுலை அமுதுண்ட
வாழி ஞானசம் பந்தர்வந் தருளிய வனப்பின தளப்பில்லா
ஊழி மாகடல் வெள்ளத்து மிதந்துல கினுக்கொரு முதலாய
காழி மாநகர்த் திருமறை யவர்குலக் காவலர் கணநாதர் 1


நல்ல நந்தன வனப்பணி செய்பவர்; நறுந்துணர் மலர்கொய் வோர்;
பல்ப ணித்தொடை புனைபவர் கொணர்திரு மஞ்சனப் பணிக்குள்ளோர்;
அல்லும் நன்பக லுந்திரு அலகிட்டுத் திரு மெழுக் கமைப்போர்கள்;
எல்லை யில்விளக் கெரிப்பவர்; திரு முறை எழுதுவோர் வாசிப்போர் 3

இனைய பஃறிருப் பணிகளில் அணைந்தவர்க் கேற்றஅத் திருத்தொண்டின்
வினைவி ளங்கிட வேண்டிய குறைஎலாம் முடித்துமே விடச்செய்தே
அனைய அத்திறம் புரிதலில் தொண்டரை ஆக்கிஅன் புறுவாய்மை
மனைய றம்புரிந் தடியவர்க் கின் புற வழிபடுந் தொழில் மிக்கார் 4

இப்பெ ருஞ்சிறப் பெய்திய தொண்டர்தாம் ஏறுசீர் வளர்காழி
மெய்ப்பெ ருந்திரு ஞானபோ னகர்கழல் மேவிய விருப்பாலே
முப்பெ ரும்பொழு தருச்சனை வழிபாடு மூளும்அன் பொடுநாளும்
ஒப்பில் காதல்கூர் உளங்களி சிறந்திட ஒழுகினார் வழுவாமல் 5

ஆன தொண்டினில் அமர்ந்தபே ரன்பரும் அகலிடத் தினி லென்றும்
ஞான முண்டவர் புண்டரீ கக்கழல் அருச்சனை நலம் பெற்றுத்
தூ நறுங்கொன்றை முடியவர் சுடர்நெடுங் கயிலை மால் வரைஎய்தி
மான நற்பெருங் கணங்கட்கு நாதராம் வழித் தொண்டின் நிலைபெற்றார் 6





38. கூற்றுவர்

களந்தை என்ற ஊரின் சிற்றரசராக இருந்த கூற்றுவனார் தம் வலியால் வேந்தர் பலரைப் போரில் வென்று, பல சிற்றரசர்களைத் தம் கீழ்க் கொண்டுவந்து அரசராக விளங்கினார். பேரரசர் கவித்துக் கொள்ளுகின்ற முடி ஒன்று தவிர ஏனைய செல்வங்கள் எல்லாவற்றையும் பெற்ற அவர் தில்லை வாழ் அந்தணர்களிடம் சென்று தமக்கு முடி சூட்ட வேண்டிக் கொண்டார்.

சோழர்களுக்கன்றிப் பிறர்க்குத் தாம் முடி சூட்ட முடியாது என்று மறுத்த அவ் வேதியர்கள் அரசனுக்கு அஞ்சிச் சேர நாட்டிற்கு ஓடிவிட்டனர்.

சோழர்க்குரிய முடி கிடைக்கவில்லை என்பதால் சிறந்த சிவ பக்தராகிய கூற்றுவர் இறைவனுடைய திருவடிகள் தலையில் சூட்டப்பெற அதையே பெரும்பேறாகக் கொண்டு அரசாண்டார்.

'களந்தை முதல்வனார்' என்று சேக்கிழார் சொல்வதால் களந்தை என்ற ஊரில் சிற்றரசராக இருந்தவர் என்றும் பொருள் கொள்ளலாம். கோவைக்குத் தெற்கு பக்கத்தில் பெரிய களந்தை, சிறிய களந்தை என்ற ஊர்களும், சிவாலயமும் உள்ளது. அங்கு மன்னர்களும் இருந்ததற்கு அடையாளம் உள்ளது. புரவி பாளையம் ஜமீன் உறவினர்கள் அங்கு உள்ளனர். பெரியபுராண களந்தை இதுதானா என்று பரிசீலிப்பது நல்லது. சிற்றரசராக இருந்தவர் நாளாவட்டத்தில் பலரையும் வென்று ஒரு அரசராவதற்குரிய தகுதியைப் பெற்றிருந்தார். அரசர்க்குரிய எல்லாச் செல்வங்களையும் பெற்றும் முடி ஒன்று மட்டும் இல்லாதவராக இருந்தார் என்று சேக்கிழார் கூறும்பொழுது பழந்தமிழ் நாட்டின் பழக்கம் ஒன்றை அறிய முடிகிறது. சேர, சோழ, பாண்டியர் என்ற மூவர் மட்டுமே முடி புனைவதற்குரியவர். அவர்களை அல்லாத பிறர் எவ்வளவு பெரிய அரசராக இருப்பினும் இம் மூவேந்தர்களின் முடியை அவர்கட்குப் புனைகின்ற பழக்கம் இல்லை.

தமிழ் நாட்டில் தோன்றி வளர்ந்த சிற்றரசர்கட்குக்கூட இம்முடி கிடையாதென்றால் களப்பிரராகத் தமிழ் நாட்டில் வந்து குடியேறிய கூற்றுவருக்கு அம் முடியைக் கவிக்கத் தில்லை வாழ் அந்தணர்கள் உடன்படாமல் போனதில் வியப்பு ஒன்றும் இல்லை.

இதைவிடச் சிறப்பு என்னவென்றால் அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் அரசனுடைய ஆணையை எதிர்த்து 'முடி புனைய முடியாது' என்று உறுதியாகக் கூறிவிட்ட இத் தில்லை வாழ் மக்களின் நெஞ்சுரத்தைப் பாராட்டத்தான் வேண்டும். அதே நேரத்தில் தம்முடைய அதிகார பலத்தை வைத்துக்கொண்டு முடி சூட்டித்தான் ஆக வேண்டும் என்று கூற்றுவனாரும் வலியுறுத்தியதாகத் தெரியவில்லை. அன்றையத் தமிழக மன்னர்களின் மனப்போக்கைக் காட்ட இதுவும் ஓர் எடுத்துக் காட்டாகும்.

கூற்றுவர்


துன்னார் முனைகள் தோள்வலியால் வென்று சூலப் படை யார்தம்
நன்னா மந்தந் திருநாவில் நாளும் நவிலும் நலமிக்கார்;
பன்னாள் ஈசர் அடியார்தம் பாதம் பரவிப் பணிந்தேத்தி
முன்னா கியநற் றிருத்தொண்டின் முயன்றார்; களந்தை முதல்வனார் 1


வென்றி வினையின் மீக்கூர வேந்தர் முனைகள் பலமுருக்கிச்
சென்று தும்பைத் துறைமுடித்துஞ் செருவில் வாகைத் திறங் கெழுமி
மன்றல் மாலை மிலைந்தவர்தம் வளநா டெல்லாங் கவர்ந்துமுடி
ஒன்றும் ஒழிய அரசர்திரு வெல்லாம் உடைய ராயினார் 3

ஒருமை உரிமைத் தில்லைவாழந் தணர்கள் தம்மில் ஒருகுடியைப்
பெருமை முடியை அருமைபுரி காவல் பேணும் படிஇருத்தி
இருமை மரபுந் தூயவர்தாஞ் சேரர் நாட்டில் எய்தியபின்
வருமை யுறவால் மனந்தளர்ந்து மன்றுள் ஆடும் கழல்பணிவார் 5

அற்றை நாளில் இரவின்கண் "அடியேன் தனக்கு முடியாகப்
பெற்ற பேறு மலர்ப்பாதம் பெறவே வேண்டும்" எனப்பரவும்
பற்று விடாது துயில்வோர்க்குக் கனவில் பாத மலரளிக்க
உற்ற அருளால் அவைதாங்கி உலகம் எல்லாந் தனிப் புரந்தார் 6

அம்பொன் நீடும் அம்பலந்துள் ஆரா அமுதத் திருநடஞ்செய்
தம்பி ரானார் புவியில்மகிழ் கோயில் எல்லாந் தனித்தனியே
இம்பர் ஞாலம் களிகூர எய்தும் பெரும்பூ சனைஇயற்றி
உம்பர் மகிழ அரசளித்தே உமையாள் கணவன் அடிசேர்ந்தார் 7


38
S.RAJAN


S.RAJAM

39. புகழ்ச்சோழர்

உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பெருமன்னர் புகழ்ச் சோழர் ஆவார். எறிபத்தருடைய வரலாற்றில் தம் தலையையும் கொய்து கொள்ளலாம் என்று வாளை நீட்டிய பெருமகனார் இவரேயாவர். தம் இரண்டாம் தலைநகராகிய கருவூரில் வந்து தங்கித் தமக்குக் கப்பம் செலுத்தும் மன்னர்கள் பட்டியலைப் பார்வை யிடும்போது அதிகன் என்ற மலைநாட்டு மன்னன் கப்பம் செலுத்தவில்லை என் பதைக் கண்டார்.

''சோழப் பேரரசை எதிர்த்து நிற்கும் வலி உடையவனோ அதிகன்? உடனே சென்று அவன் கோட்டையைத் தகர்த்து வென்று வருக'' என்று ஆணையிட்டார். அரசர் ஏவலின்படி பெரும் போர் மூண்டது. அதிகன் தோற்றான். அக்கால வழக்கப் படி கொல்லப்பட்டவர்களின் பல தலைகளை அரசன் முன் கொண்டு வந்து காட்ட அவற்றுள் ஒரு தலை சடாமுடியுடன் திரு நீறணிந்த சிவனடியார் தலையாக இருந் தது. அதனைக் கண்டு பதைத்த புகழ்ச் சோழர் 'திரை சரித்த கடல் உலகில் திரு நீற்றின் நெறி புரந்து யான் அரசு அளித்தபடி சால அழகிது' என நொந்து அத் தலையை ஒரு பொன் தட்டில் தாங்கித் தீக்குளிக்கலானார்.

பேரரசராக இருந்துகொண்டு சோழப் பெருநாட்டை ஆட்சி செய்த இம் மன்னர் கப்பம் செலுத்தாத அதிகன் மேல் போர் தொடுக்கப் படையை ஏவினார் என்று அறிகிறோம். எனவே அரசருக்குரிய கடமைகளில் ஒரு சிறிதும் வழுவாது பணியாற்றி னார் என அறிய முடிகிறது.

இந்த மன்னரைப் பொறுத்தமட்டில் இரண்டு வேறுபட்ட வலுவான இயல்புகள் இவருள் இருந்ததை அறிய முடிகிறது. எறிபத்தரைச் சந்தித்தபொழுது தவறு நடந் திருந்தாலொழியச் சிவனடியார் யாரையும் கொல்லமாட்டார் என்ற முடிவுக்கு வந்த மன்னர் இவர். அடுத்தபடியாக நடந்த குற்றத்திற்குத் தானும் ஒருவகையில் உடந் தையே என்ற முடிவுடன் தம்முடைய வாளை எறிபத்தர் கையில் கொடுத்துத் தம் மையும் கொல்லுமாறு வேண்டிக் கொண்டவரும் இவரே. சிவனடியாராக மாறிப் பணி புரிகின்ற நேரத்திலும் அரசருடைய நீதிகளை மறவாமல் கடைப்பிடித்தார்.

தமக்குக் கீழ் பணிபுரியும் ஒருவன் இழைத்த தவறுக்கு எஜமானனும் கூட்டுக் குற்றவாளி ஆகிறான் (ACCESSORY AFTER THE FACT). இந்த அடிப்படையில்தான் புகழ்ச் சோழர் தம்மையும் கொல்ல வேண்டும் என்று வாளை நீட்டுகிறார். எனவே இவ ருடைய மனோநிலை என்ன என்பதை ஒருவாறு அறியமுடிகிறது.

அதிகன் மேல் போர் தொடுத்த வீரர்கள் பகைவர்களின் தலைகளைக் கொண்டு வந்து அரசன் முன் வைத்தனர். இது அக் காலத்திய மரபு அத் தலைகளுள் ஒன்று சிவனடியார் தலையாக இருந்தது.

பெரும்போர் நிகழ்கின்ற இடத்தில் சிவனடியார் எங்கே வந்து சேர்ந்தார் என்று தெரியவில்லை. அறிவின் துணை கொண்டு ஆராய்ந்தால் உண்மையிலேயே இதனை விபத்து (ACCIDENT) என்றுதான் சொல்ல முடியுமே தவிர அறிந்து செய்யப்பட்ட குற்றம் என்று சொல்ல முடியாது. வேறு யாராக இருப்பினும் அறியாது நிகழ்ந்த இத் தவறுக்காகக் கழுவாய் செய்ய முற்படுவர். இதற்கு மேல் எதுவும் செய்ய முற்பட மாட்டார்கள். புகழ்ச்சோழர், தாம் ஓர் அரசர் என்ற நிலையில் நின்று இதனைப் பார்த்திருந்தால் இதனை விபத்து என்று அறிந்து வருந்தியிருப்பதோடு விட்டிருப் பார்.

ஆனால் புகழ்ச் சோழர் என்ற பக்தர், சிவனடியார், இந் நிகழ்ச்சியைப் பார்க்கின்ற பார்வையே வேறு. சிவபெருமானுக்குச் செய்கின்ற குற்றங்களைக் காட்டிலும் கொடுமை உடையது சிவனடியாருக்குச் செய்கின்ற குற்றம். சிவ அபராதம் மன்னிக்கப்படலாம். ஆனால் சிவனடியார் அபராதம் மன்னிக்க முடியாத ஒன்று. எனவே இதற்குக் கழுவாய் உயிர்த் தியாகம் ஒன்றுதான். இந்த அடிப்படையிலேயே புகழ்ச் சோழர் தீப்பாய்ந்தார்.

புகழ்ச்சோழர்

அந்நகரில் பாரளிக்கும் அடலரச ராகின்றார்
மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி அணிவிளக்கும்
சென்னிநீ டனபாயன் திருக்குலத்து வழிமுதலோர்
பொன்னிநதிப் புரவலனார் புகழ்ச்சோழர் எனப்பொலிவார் 8

சென்றுசிவ காமியார் கொணர்திருப்பள் ளித்தாமம்
அன்றுசித றுங்களிற்றை அறஎறிந்து பாகரையும்
கொன்றஎறி பத்தர்எதிர் "என்னையுங்கொன் றருளும்" என
வென்றிவடி வாள்கொடுத்துத் திருத்தொண்டில் மிகச்சிறந்தார் 15

மண்ணுக் குயிரா மெனும்மன் னவனார்
எண்ணிற் பெருகுந் தலையா வையினும்
நண்ணிக் கொணருந் தலையொன் றினடுக்
கண்ணுற்ற தொர்புன் சடைகண் டனரே 33

அம்மாற்றங் கேட்டழியும் அமைச்சரையும் இடரகற்றிக்
கைம்மாற்றுஞ் செயல்தாமே கடனாற்றுங் கருத்துடையார்
செம்மார்க்கந் தலைநின்று செந்தீமுன் வளர்ப்பித்துப்
பொய்ம்மாற்றுந் திருநீற்றுப் புனைகோலத் தினிற்பொலிந்தார் 38

கண்டசடைச் சிரத்தினையோர் கனகமணிக் கலத்தேந்திக்
கொண்டுதிரு முடித்தாங்கிக் குலவும்எரி வலங்கொள்வார்
அண்டர்பிரான் திருநாமத் தஞ்செழுத்தும் எடுத்தோதி
மண்டுதழற் பிழம்பினிடை மகிழ்ந்தருளி உள்புக்கார் 39




S.Rajam

40. நரசிங்கமுனையரையர்

திருமுனைப்பாடி நாட்டை ஆட்சி செய்த சிற்றரசர் நரசிங்க முனையர். சிவத் தொண்டும் சிவனடியார்த் தொண்டும் வாழ்வின் குறிக்கோள் என வாழ்ந்தவர்.

திருவாதிரை நாளன்று அடியார்களை வரவழைத்து அவர்களுக்குப் பூசனை செய்து நூறு பொற்காசுகள் வீதம் அளித்து இன்புறலானார். இவ்வடியார் கூட்டத்தில் காமக் குறிப்புடன் மானமிழந்தவராகி ஊனமுடைய உடம்புடன் வரும் ஒருவரைக் கண்டு பக்கத்திலுள்ளவர்கள் இகழ்ச்சிக் குறிப்புடன் ஒதுங்கிவிட நரசிங்க முனையர் அவர்களைப் பார்த்துக் கூறத் தொடங்கினார். 'சீலம் இலரே எனினும் திருநீறு சேர்ந்தாரை ஞாலம் இகழ்தல் தகாது' என்று கூறி அவருக்கு இருநூறு பொன் காசுகளை வழங்கி விடை கொடுத்தார்.

அவன் சிவனடியார் அல்லன் என்பது தெரிந்திருந்தும் அவனுக்கு இரட்டிப்பான பரிசிலை வழங்கினார். இச் செயலின் அடிப்படையைச் சிந்தித்தல் வேண்டும். சிவனடியார் வேடமிட்டவன் யாராக இருப்பினும் அவனைப்பற்றி ஆராயவோ இகழவோ கூடாது என்பது இந்நாட்டுப் பெரியவர்கள் கண்ட உண்மை. அரசர் மதிப்புக் கொடுப்பது சிவனடியார் வேடத்துக்குத்தானே தவிர அந்த வேடத்தைத் தாங்கியவருக்கு அல்ல. சிவனடியார் வேடத்தை நல்லவர், தீயவர், கற்றவர், கல்லாதவர் என்ற அனைவரும் ஏற்றுக் கொள்ளலாம். வேடந் தாங்கியவர்களை ஆராயத் தொடங்கினால், அந்த வேடத்திற்கு மதிப்புக் கொடுப்பதாக ஆகாது.

சுந்தரமூர்த்தி நாயனாரின் இளம் பிராயப் பெயர் நம்பியாரூரர். இவர் சிறு பிராயத்தில் விளையாடிக் கொண்டிருந்த பொழுது அவ்வழியாக வந்த நரசிங்க முனையார், குழந்தையைக் கண்டு, அக் குழந்தை பால் அன்பு கொண்டு, குழந்தையின் பெற்றோர்களிடம் சென்று பேசி அந்தக் குழந்தையைத் தன் மகனாகப் பெற்றுக் கொண்டார்.

அரச குடும்பத்தின் குழந்தையாக மாறிய நம்பியாரூரர் அருங்கலைகளையும் அறிவுக் களஞ்சியங்களையும் கற்றறியும் வாய்ப்பைப் பெற்றார்.

நரசிங்கமுனையரையர்


கோடாத நெறிவிக்கும் குலமரபின் அரசளித்து
மாடாக மணிகண்டர் திருநீறே மனங்கொள்வார்;
தேடாத பெருவளத்தில் சிறந்ததிரு முனைப்பாடி
நாடாளுங் காவலனார்; நரசிங்க முனையரையர் 1

சினவிடையார் கோயில்தொறுந் திருச்செல்வம் பெருக்குநெறி
யனஇடைஆர் உயிர்துறக்க வருமெனினும் அவைகாத்து
மனவிடைஆ மைத்தொடையல் அணிமார்பர் வழித்தொண்டு
கனவிடையா கிலும் வழுவாக் கடனாற்றிச் செல்கின்றார் 3

ஆறணிந்த சடைமுடி யார்க் காதிரைநா டொறுமென்றும்
வேறுநிறை வழிபாடு விளங்கியபூ சனைமேவி
நீறணியும் தொண்டர்அணைந் தார்க்கெல்லாம் நிகழ்பசும்பொன்
நூறுகுறை யாமல்அளித் தின்னமுது நுகர்விப்பார் 4

சீலம்இல ரேஎனினுந் திருநீறு சேர்ந்தாரை
ஞாலம்இகழ்ந் தருநரகம் நண்ணாமல் எண்ணுவார்
பாலணைந்தார் தமக்களித்த படிஇரட்டிப் பொன்கொடுத்து
மேலவரைத் தொழுதினிய மொழிவிளம்பி விடைகொடுத்தார் 7

இவ்வகையே திருத்தொண்டின் அருமைநெறி எந்நாளும்
செவ்வியஅன் பினிலாற்றித் திருந்தியசிந் தையராகிப்
பைவளர்வாள் அரவணிந்தார் பாதலர் நிழல்சேர்ந்து
மெய்வகைய வழிஅன்பின் மீளாத நிலைபெற்றார் 8





41

41. அதிபத்தர்

நாக பட்டினத்தில் பரதவர் குலத்தில் தோன்றியவர் அதிபத்த நாயனார். அன்றாடம் அலைகடல் சென்று மீன் பிடித்து விற்று வாழ்க்கை நடத்தியவர். மீன் பிடிக்கும் போதெல்லாம் கிடைத்த மீன்களுள் மிகப் பெரிய மீனை ''நட்டமாடிய நம்பருக்கு'' (நடராசப் பெருமான்) என்று கூறி மறுபடியும் கடலில் விட்டுவிடுவார்.

ஒருமுறை பலநாளும் மீன் ஒன்றும் சிக்காததால் அதிபத்தர் பட்டினியால் வாடி உடல் மெலிந்தார். ஒருநாள் வலையில் ஒரே ஒரு மீன் அகப்பட்டது.

பொன்னிறத்துடன் நவமணிகளும் பொதிக்கப்பட்டு உலகத்தையே விலையாகக் கொள்ளும் அழகு நிரம்பிய மீன் ஒன்று மட்டும் வலையில் பட்டது. என்றாலும் அம் மீனை விற்றுத் தம் வறுமையைப் போக்கிக் கொள்ளாமல் ஒரே மீன் என்ற காரணத்தால் நட்டமாடிய நம்பருக்கு என்று கடலில் விட்டுவிட்டார்.

வசதி படைத்தவர்கள் வயிறு நிரம்பியிருக்கின்ற நேரத்தில் பூசை, விரதம் என்பனவற்றில் ஈடுபடுவதில் வியப்பில்லை. இவர்கள் கூடத் தங்களுடைய வசதி குறைந்த காலத்தில் இக்கொள்கைகளை விடாது நிறைவேற்றுவார்களா என்பது ஐயத்திற்குரியது. ஆனால் அடியார்களைப் பொறுத்தமட்டில் நிலைமை முற்றிலும் வேறு. ஒரு கொள்கையை மேற்கொண்டவர்கள் எந்த நிலையிலும் எந்த நேரத்திலும் அக் கொள்கையை விடாமல் பின்பற்றுவார்கள். அதை நிறைவேற்ற முடியவில்லை என்றால் உயிரையாவது விடுவார்களே தவிரக் கொள்கையை விடமாட்டார்கள்.

அதிபத்தரைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு நாளும் நிறைய மீன்கள் கிடைக்கும் பொழுது அவற்றுள் பெரிய மீன் ஒன்றை எடுத்து 'நட்டமாடிய நம்பருக்கு' என்று மீண்டும் கடலில் விட்டுவிடும் பழக்கத்தை மேற்கொண்டார். எங்கோ கடலில் கிடைக்கின்ற மீனில் ஒன்றை எடுத்து அதே கடலில் மீண்டும் எறிந்து விடுவது எவ்வகையில் பூசையாகும் என்று சிலர் ஐயம் கொள்ளலாம். மாபெரும் கோயில்களைப் புல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கட்டி மகிழ்ந்த இத் தமிழர்கள் கோயிலில்தான் இறைவன் உறைகின்றான் என்ற கொள்கையை ஏற்காதவர்கள். இதனை விளக்க வந்த திருமுருகாற்றுப்படை 'காடு, கா, துருத்தி, யாறு, குளம், சதுக்கம், சந்தி, மன்றம், பொதியல் ஆகிய பல்வேறு இடங்களிலும் வேண்டினர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட, ஆண்டாண்டு உறைதலும் அறிந்தவாறே' என்று சொல்லிச் செல்கிறது.

இந்த அடிப்படையில் சிந்தித்தால், நட்டமாடிய நம்பன், தில்லை அம்பலத்தையும், திருவாலங்காட்டையும் விட்டுவிட்டு அதிபத்தர் படகின் பக்கத்தில் கடலிலேயே நட்டமாடுவன் என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆகவே தம்முடைய கையில் கிடைக்கின்ற, தாம் உண்ணப் போகின்ற அந்த உணவில் (மீன் உணவு) முதல் கவளத்தை (முதல் மீனை) இறைவனுக்குப் படைக்கின்றார் அதிபத்தர்.

பலநாள் பட்டினிக்குப் பிறகு ஒரு மீனும் கிடைக்காத நிலையில் தம் வறுமையையே முற்றிலும் போக்கிக் கொள்ளக் கூடிய செல்வம் முழுவதையும் தரும் ஒரு மீன் அகப்படுகிறது. பொன்னினால் செய்யப்பெற்று மணிகள் அழுத்தப் பெற்று விளங்கும் ஒரு மீன் கிடைத்த இந்நிலையில் இம் மீனை விற்று வறுமையைப் போக்கிக் கொள்வதா அல்லது கிடைத்த முதல் மீன் ஆதலால் நட்டமாடுகின்றவனுக்குத் தருவதா என்ற வினா அதிபத்தரின் எதிரே தோன்றுகிறது. உயிரினும் சிறந்தது கொள்கை. ஆதலால் கிடைத்தது ஒரே மீன் எனினும் நட்டமாடியவரின் பங்கு என அதைக் கடலில் விட்டுவிடுகிறார்.

அதிபத்தர்

அனைய தாகிய அந்நுளைப் பாடியில் அமர்ந்து
மனைவ ளம்பொலி நுளையர்தங் குலத்தினில் வந்தார்;
புனைஇ ளம்பிறை முடியவர் அடித்தொண்டு புரியும்
வினைவி ளங்கிய அதிபத்தர் எனநிகழ் மேலோர் 9

முட்டில் மீன்கொலைத் தொழில்வளத் தவர்வலை முகந்து
பட்ட மீன்களில் ஒருதலை மீன்படு தோறும்
''நட்ட மாடிய நம்பருக்'' கெனநளிர் முந்நீர்
விட்டு வந்தனர் விடாதஅன் புடனென்றும் விருப்பால் 11

சால நாள்கள்இப் படிவரத் தாம்உண வயர்த்துக்
கோள மேனியுந் தளரவுந் தந்தொழில் குறையாச்
சீல மேதலை நின்றவர் தந்திறந் தெரிந்தே
ஆலம் உண்டவர் தொண்டர் அன் பெனும்அமு துண்பார் 14

வாங்கு நீள்வலை அலைகடற் கரையில்வந் தேற
ஓங்கு செஞ்சுடர் உதித்தென உலகெலாம் வியப்பத்
தாங்கு பேரொளி தழைத்திடக் காண்டலும் எடுத்துப்
பாங்கு நின்றவர் ''மீனொன்று படுத்தனம்'' என்றார் 16

அகில லோகமும் பொருள்முதற் றாமெனும் அளவில்
புகலும் அப்பெரும் பற்றினைப் புரையற எறிந்த
இகலில் மெய்த்திருத் தொண்டர்முன் இறைவர்தாம் விடைமேல்
முகில்வி சும்பிடை அணைந்தனர்; பொழிந்தனர் முகைப்பூ 18





42. கலிக்கம்பர்

பெண்ணாகடம் என்ற ஊரில் வணிகர் குலத்தில் உதித்தவர் கலிக்கம்பர். அவ்வூர்ப் பெருமானாகிய தூங்கானை மாடத்து இறைவனை வழிபட்டு அடியார்க்கு அமுது செய்விக்கும் பணியை மேற்கொண்டவர். ஒருநாள் வந்திருந்த அடியார்களை அமுது செய்விக்க விரும்பி முறைப்படி அவர்கள் திருவடிகளைக் கழுவும் பணியில் ஈடுபட்டார். அவருடைய மனைவியார் செம்பில் நீர் முகந்து திருவடிகளில் ஊற்ற, கலிக்கம்பர் அடியார் திருவடிகளைக் கழுவுவாராயினார்.

வந்த அடியார்களில் ஒருவர் முகத்தைப் பார்த்த அம்மையார் 'இவர் முன்பு நம் வீட்டில் குற்றேவல் செய்து பிறகு சொல்லாமல் ஓடிப் போனவராயிற்றே' என்று மனத்துள் நினைத்தார். இத்தகைய பணியாளரின் காலைப் பற்றித் தம் கணவர் கழுவும்படி ஆயிற்றே என்று நினைத்தவுடன் செம்பிலிருந்து தண்ணீர் விடுவது தடைப் பட்டது.

இதனைக்கண்ட கலிக்கம்பர் மனைவியின் மனநிலை அறிந்து அவருடைய கைகளை வெட்டிவிட்டார்.

இன்றைய உலகில் பலருடைய மனத்திலும் புகுந்து புறப்படுகின்ற பெரிய வினா ஒன்று பற்றிச் சேக்கிழார் இங்கே ஆராய்கிறார். நம் எதிரே உள்ளவர்களைப்பற்றி நாம் எவ்வாறு முடிவு செய்கிறோம்? அவர்களுடைய நடை, உடை, பாவனைகள், பேச்சு, செயல், பழகும் முறை முதலிய அடிப்படையில் இவர்கள் எத்தகையவர்கள் என்று முடிவுக்கு வருகின்றோம். ஒரு காலத்தில் மிகச் சாதாரணமானவர்கள் என்று நம்மால் அறியப்பட்டவர்கள் சிலகாலம் கழித்து நம்மைச் சந்திக்கும்பொழுது நாம் என்ன செய்கின்றோம்? அவர்களைப்பற்றி நாம் முன்னர்க் கொண்டிருந்த அதே முடிவுடன்தான் காணுகிறோமே தவிர இந்த இடைப்பட்ட காலத்தில் அறிவால், செயலால், பண்பாட்டால் அவர் வளர்ந்துள்ளாரா, தாழ்ந்துள்ளாரா என்று ஆராய முற்படுவதில்லை. மனிதன் கால வளர்ச்சியில் தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளவும் முடியும், தாழ்த்திக் கொள்ளவும் முடியும். இந்நுணுக்கம் அனைத்தையும் அறிந்து எதிரே இருப்பவரை எடை போடுதல் என்பது முடியாத காரியம்.

எனவே நம் முன்னோர்கள் யாரையும் உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர் என்று மதிப்பிடாமல் அவர்களுடைய புறக் கோலத்தை வைத்தே அதற்குரிய மதிப்பைத் தந்தனர். அடியார்களை, புறக்கோலங்கொண்டு, இன்று நாம் மதிப்பதில்லையே தவிரப் பணக்காரர், பதவியிலிருப்பவர் என்பவர்களைப் புறக்கோலங்கொண்டு தானே இன்று மதிக்கிறோம். செல்வர், அதிகாரத்திலிருப்பவர் என்பவர்களின் மன நிலையைக் கவனித்தால் அவர்களை மதிக்க முடியுமா? அடியார் வேடம் போட்டவர்களெல்லாம் அடியார்களாக இருப்பதில்லை. முத்தநாதனும், அதிசூரனும் இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளவர்கள். அப்படியானால் உண்மை அடியாரைத் தேடிப் பிடிப்பது எப்படி? இது இயலாத காரியம் என்பதை அறிந்த நம் முன்னோர் இந்த ஆராய்ச்சியில் புகாமல் ஒருவர் கொண்டிருக்கின்ற வேடத்திற்கு மட்டும் மதிப்புக் கொடுக்கலாயினர்; சிவ வேடத்தைச் சிவமாகவே கருதி வழிபட்டனர். அதனால் அவ் வேடத்தைத் தாங்கியவர் யார் என்ற ஆராய்ச்சிக்குப் போகவே இல்லை. அந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தால் வாழ்நாளில் பெரும் பகுதி வீணாகிவிடும். இதனை நன்கறிந்த காரணத்தினால்தான் சிவவேடம் தாங்கியவர்களே மெய்ப்பொருள் என்று சொல்லாமல் மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் என்று கூறுகிறார் சேக்கிழார்.

கலிக்கம்பரைப் பொறுத்தமட்டில் இவ்வுண்மையை நன்கறிந்திருந்தார். எனவே சிவ வேடம் தாங்கி வருபவர் அனைவரையும் யார் எவர் என்று ஆராயாமல் அவர்களை உபசரித்தார். ஆனால் அவருடைய மனைவியார் அந்நிலையை அடையாத காரணத்தினால் அவதிப்படுகின்றார். வணக்கத்துக்குரிய நம் கணவர் யாருடைய காலைத் தொட்டுக் கழுவுகின்றாரோ அவர் தம் வீட்டில் சில காலத்திற்கு முன்பு ஏவலாளராக இருந்து சொல்லாமல் ஓடிப் போய்விட்டவர் என்பதை அறிந்து கொள்கிறார். உடனே மனம் பேதலிக்கிறது. முன்னாள் பணியாளன் காலைத் தம் கணவர் தொட்டுக் கழுவ வேண்டுமா என்று நினைக்கிறார். இவர் மனத்தில் இந்த எண்ணம் ஓடுவதைக் கலிக்கம்பர் நன்கு அறிந்திருந்தார் என்று தெரிகிறது. அதனால்தான் உடனடியாக வாளை எடுத்து மனைவியின் கையைத் துணித்து விட்டார். வந்திருப்பவர் பணியாளர் என்பது தெரிந்தும் கலிக்கம்பர் ஒரு சிறிதும் மனம் கலங்காமல் அவரைச் சிவனடியாராகவே மதித்து வழிபட்டார்.

கலிக்கம்பர்

மற்றப் பதியி னிடைவாழும் வணிகர் குலத்து வந்துதித்தார்
கற்றைச் சடையார் கழற்காத லுடனே வளர்ந்த கருத் துடையார்
அற்றைக் கன்று தூங்கானை மாடத் தமர்ந்தார் அடித்தொண்டு
பற்றிப் பணிசெய் கலிக்கம்பர் என்பார் மற் றோர் பற்றில்லார் 2


திருந்து மனையார் மனையெல்லாந் திகழ விளக்கிப் போனக மும்
பொருந்து சுவையிற் கறியமுதும் புனிதத் தண்ணீ ருடன் மற்றும்
அருந்தும் இயல்பில் உள்ளனவும் அமைத்துக் கரக நீரளிக்க
விரும்பு கணவர் பெருந்தவர்தாள் எல்லாம் விளக்கும் பொழுதின்கண் 5

முன்பு தமக்குப் பணி செய்யுந் தமராய் ஏவல் முனிந்துபோய்
என்பும் அரவும் அணிந்தபிரான் அடியா ராகி அங்கெய்தும்
அன்ப ருடனே திருவேடந் தாங்கி அணைந்தார் ஒருவர்தாம்
பின்பு வந்து தோன்றஅவர் பாதம் விளக்கும் பெருந்தகையார் 6

''வெறித்த கொன்றை முடியார்தம் அடியார் இவர்முன் மேவுநிலை
குறித்து வெள்கி நீர்வாரா தொழிந்தாள்'' என்று மனங்கொண்டு
மறித்து நோக்கார் வடிவாளை வாங்கிக் கரகம் வாங்கிக்கை
தறித்துக் கரக நீரெடுத்துத் தாமே அவர்தாள் விளக்கினார் 8

விளக்கி அமுது செய்வதற்கு வேண்டு வனதா மேசெய்து
துளக்கில் சிந்தை யுடன்தொண்டர் தம்மை அமுது செய்வித் தார்
அளப்பில் பெருமை யவர்பின்னும் அடுத்த தொண்டின் வழிநின்று
களத்தில் நஞ்சம் அணிந்தவர்தாள் நிழற்கீழ் அடியா ருடன்கலந்தார் 9




42



43

43. கலியர்

திருவொற்றியூரில் எண்ணெய் ஆட்டி விற்கும் தொழிலோர் நிறைந்த சக்கரப் பாடித் தெருவில் தோன்றியவர் கலிய நாயனார். செல்வ மிக்கவர் ஆதலால் திரு வொற்றியூர் கோயிலின் உள்ளும் புறமும் அல்லும் பகலும் திருவிளக்கேற்றும் தொண் டினை மேற்கொண்டிருந்தார்.

நாளாவட்டத்தில் இவருடைய செல்வம் மறைய ஏனைய வணிகரிடம் எண் ணெய் வாங்கி விற்று அதில் கிடைக்கும் தரகுப் பணத்தில் தம் தொண்டை நிறை வேற்றினார். பின்னர் அதுவும் முடியாது போகச் செக்கிழுக்கும் மாட்டிற்குப் பதி லாகத் தாமே செக்குச் சுற்றி அதனால் வரும் கூலியைக் கொண்டு தம் தொண்டை விடாது நடத்தினார்.

இத்தொழிலுக்கும் போட்டி மிகுந்தவுடன் மனைவியை விற்கத் துணிந்து விலை கூறவும் யாரும் வாங்குவாரில்லை. ஆதலால் தம் தொண்டு முட்டக் கூடாது என்ற ஒரே உறுதிப் பாட்டுடன் அகல் விளக்குகளைப் பரப்பி வைத்து தம் குருதி கொண்டு எரிக்கத் தொடங்குகையில் இறைவன் அதனைத் தடுத்து ஆட்கொண்டான்.

திருவொற்றியூரைப் பற்றிப் பாட வருகின்ற சேக்கிழார் 'பன்னுதிருப் பதிக இசைப் பாட்டோவா மண்டபங்கள், அன்னநடை மடவார்கள் ஆட்டோவா மணி யரங்கு' என்று பாடுகிறார். நாயன்மார்கள் வரலாற்றைப் பாட வந்த சேக்கிழார் சிதம்பரத்தில் இருந்துகொண்டு பாடினார் என்று நினைப்பது அவ்வளவு பொருத்த மாகத் தெரியவில்லை. ஒவ்வொரு நாயன்மார் பிறந்த ஊருக்கும் சென்று அப்பெரு மக்களைப் பற்றிய செய்திகளைச் சேகரித்து அவ்வூரின் தனிச் சிறப்பு ஏதாவது இருப் பின் அவற்றையும் தொகுத்து வரலாற்று அடிப்படையில கவிதை புனைந்தார் என்பது தெளிவு. அவர் காலத்துக்கு முன்னர் வாழ்ந்த மன்னர்கள் எழுதுவித்த கல் வெட்டு கள் அனைத்தையும் பயின்று அவற்றில் தமக்குத் தேவையானவற்றைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். திருவொற்றியூர் படம்பக்கநாதர் கோயிலில் ஆடலரங்கு, சொற் பொழிவு மண்டபம், பாடலரங்கு முதலியவை இருந்ததாகவும், சொற்பொழிவு மண் டபத்தில் சுந்தர மூர்த்தி நாயனார் வரலாற்றைப் பேசியதாகவும் ஒரு கல்வெட்டு குறிக்கிறது. அதை மனத்தில் வாங்கிக் கொண்ட சேக்கிழார் பாட்டோவா மண்டபங் கள் என்று பாடுகிறார்.

எண்ணெய் வாணிபம் செய்யும் கலியர் மிக்க பெரும் செல்வத்து மீக்கூற விளங் கினார். அவ்வளவு செல்வம் இருக்கின்ற காலத்தில் திருக்கோயிலில் உள்ளும் புறமும் அல்லும் பகலும் விளக்கெரித்தார். இது ஏதோ வாழ்க்கையில் ஒருமுறை கார்த்திகை மாதத்தில் செய்கின்ற தொண்டாக அவர் கருதவில்லை. 'எண்ணில் திருவிளக்கு நெடு நாளெல்லாம் எரித்து வர' என்று கவிஞர் கூறுவதால் நாள் நட்சத்திரம் பார்க் காமல் அன்றாடம் இத் தொண்டைச் செய்து வந்தார்.
எனவே அவருடைய வாழ்க்கையின் குறிக்கோள் அதுவாக அமைந்துவிட்டது என் பதை அறிய முடிகிறது. சாதாரண விளக்கெரிக்கும் திருப்பணி, திருப்பணி என்ற அளவில் நிற்குமேயானால் அதற்குச் சோதனை வருவதில்லை. அதுவே ஒருவருடைய குறிக்கோளாக மாறிவிட்டால் சோதனை வந்தே தீரும். அந்த முறையில்தான் கலி யருக்கும் சோதனை வந்தது. பெரும் செல்வந்தராக வாழ்ந்த அவர், வசதி குறைந்த

காலத்தில் தரகுக்கு எண்ணெய் வாங்கி விற்றதும் அதுவும் முடியாத பொழுது எருதுகளுக்குப் பதிலாக தாமே நின்று செக்குச் சுற்றும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதும் வியப்பை விளைவிக்கின்றது. அன்றையத் தமிழ் மக்கள் பணி செய்வதில் எவ்வித குறைவு நிறைவு, உயர்வு தாழ்வு என்பவற்றைக் கருதியதாகத் தெரியவில்லை. அவ்வாறு செல்வந்தராக வாழ்ந்த ஒருவர் அதே ஊரில் செக்கிழுக்கும் பணியைச் செய்யும் பொழுது யாரும் அவரை எள்ளி நகையாடியதாகவும் தெரியவில்லை. அதுவும் முடியாத பொழுது தம் தொண்டுக்கு வரும் முட்டுப்பாட்டைத் தவிர்க்கத் தம் உடலின் உதிரத்தையே எண்ணெயாகப் பயன்படுத்தினார்.

கலியர்


அக்குலத்தின் செய்தவத்தால் அவனிமிசை அவதரித்தார்;
மிக்கபெருஞ் செல்வத்து மீக்கூர விளங்கினார்;
தக்கபுகழ்க் கலியனார் எனுநாமந் தலைநின்றார்;
முக்கண் இறை வர்க்குரிமைத் திருத்தொண்டின் நெறிமுயல்வார் 6


எல்லையில்பல் கோடிதனத் திறைவராய் இப்படித்தாம்
செல்வநெறிப் பயனறிந்து திருவொற்றி யூரமர்ந்த
கொல்லைமழ விடையார்தங் கோயிலின்உள் ளும்புறம்பும்
அல்லுநெடும் பகலும்இடுந் திருவிளக்கின் அணிவிளைத்தார் 7

செக்குநிறை எள்ளாட்டிப் பதமறிந்து திலதயிலம்
பக்கமெழ மிகவுழந்தும் பாண்டில்வரும் எருதுய்த்தும்
தக்கதொழில் பெறுங்கூலி தாங்கொண்டு தாழாமை
மிக்கதிரு விளக்கிட்டார் விழுத்தொண்டு விளக்கிட்டார் 11

திருவிளக்குத் திரிஇட்டங் ககல்பரப்பிச் செயல்நிரம்ப
ஒருவியஎண் ணெய்க்கீடா உடல்உதிரங் கொடுநிறைக்கக்
கருவியினால் மிடறரிய, அக்கையைக் கண்ணுதலார்
பெருகுதிருக் கருணையுடன் நேர்வந்து பிடித்தருளி 15

மற்றவர்தம் முன்னாக மழவிடைமேல் எழுந்தருள
உற்றவூ றதுநீங்கி ஒளிவிளங்க உச்சியின்மேல்
பற்றியஅஞ் சலியினராய் நின்றவரைப் பரமர்தாம்
பொற்புடைய சிவபுரியில் பொலிந்திருக்க அருள்புரிந்தார் 16




S.Rajan

44. சத்தியார்

காவிரி நாட்டில வரிஞ்சையூர் என்ற ஊரில் வேளாண் குலத்தில் உதித்தவர் சத்தியார். சிவனடியார்களை யாரேனும் குறை கூறினால் அவர்களுடைய நாக்கை இழுத்து வைத்து அரிந்து விடும் பணியைத் தம் பணியாகக் கொண்டவர்.

சத்தியார் ஒரு வினோதமான தொண்டராவர். அவருடைய சமயப் பற்று வினோதமாக வெளிப்பட்டது. ஒரு சமயத்தைச் சேர்ந்தவர் பிற சமயங்களை எள்ளி நகையாடுதல் பண்டு தொட்டே இருந்து வருகின்ற பழக்கமாகும். மணிமேகலையிலும், மகேந்திரவர்மன் எழுதிய மத்த விலாசம் நாடகத்திலும் இப் பழக்கத்தைக் காணலாம். தங்களுடைய சமயத்தைச் சார்ந்தாலொழிய உய்கதி அடைய முடியாது என ஒவ்வொரு சமயத்தாரும் உறுதியாக நம்பினர். இந்த நம்பிக்கை ஒரு அளவோடு இருக்கின்ற வரையில் தவறில்லை. ஆனால் எல்லை மீறும்பொழுது இதே நம்பிக்கை பெரும் துயரத்தைத் தருகிறது. சமயப்பற்று என்பது வேறு, சமய வெறி என்பது வேறு. இதுவரை சமயப்பற்றுடைய அடியார்கள் வரலாறுகள் பேசப் பெற்றன. ஆனால் சத்தியார் இந்தத் தொகுப்பிலிருந்து மாறுபட்டுச் சமய வெறி உடைய பக்தர்கள் தொகுப்பில் சேருகின்றார். தத்தம் சமயத்தின் மாறுபட்டவர்களை துன்புறுத்தலும், கொல்லுதலும் எல்லாச் சமயங்களிலும் உள்ள கொடிய பழக்கமாகும். இதோடல்லாமல் தம் சமயத்தின் உள்ளேயே மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களை வலிந்து துன்புறுத்தலும் சமய வரலாறுகளில் காணப்படுகின்ற ஒன்றாகும். கத்தோலிகர்-பிராடெஸ்டெண்டு, ஷியா சுன்னிகள், மகாயான-ஹீனயானர்கள், திகம்பர-சுவேதாம்பரர்கள் ஆகிய இவர்கள் முறையே கிறித்துவம்; இஸ்லாம், பௌத்தம், சைனம் ஆகிய சமயங்களின் உட்கிளைகளாக இருந்தும் இவர்களிடையே நடந்த, நடக்கின்ற போராட்டங்கள் எண்ணில் அடங்காதவை. எனவே சமயத்தின் பெயரால் கொடுமை இழைப்பது என்பதும் அக் கொடுமை செய்தாரை அவர் சார்ந்துள்ள சமயத்தார் போற்றிப் புகழ்வதும் வரலாற்றில் நெடுகக் காணப்படுகின்ற ஒன்றாகும்.

அந்த முறையில் சைவ சமயத்தைச் சேர்ந்த சத்தியார் சிவபெருமானையும் அவனுடைய அடியார்களையும் குறை கூறுபவர்களின் நாக்கை இழுத்து வைத்து அரிகின்ற செயலை மேற்கொண்டிருந்தார். எறிபத்தரும் இத்தகைய செயலை மேற்கொண்டிருந்தாலும் அடியார்களுக்குத் துன்பம் செய்தவர்களை மட்டும் தண்டிக்கும் பணியை மேற்கொண்டிருந்தார். இவரினும் வேறுபட்டுச் சத்தியார் அடியார்களைக் குறை கூறியவர்களைக் கூடத் தண்டித்தார். பிற சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஊறு செய்யும் பழக்கம் ஒரு சில சமயங்களைப் பொறுத்தமட்டில் இன்றும் இருந்து..வருவதை அறிய முடிகிறது.

சத்தியார்


வரிஞ்சை யூரினில் வாய்மைவே ளாண்குலம்
பெருஞ்சி றப்புப் பெறப்பிறப் பெய்தினார்;
விரிஞ்சன் மால்முதல் விண்ணவர் எண்ணவும்
அருஞ்சி லம்பணி சேவடிக் காட்செய்வார் 2


அத்த ராகிய அங்கணர் அன்பரை
இத்த லத்தில் இகழ்ந்தியம் பும்உரை
வைத்த நாவை வலித்தரி சத்தியால்
சத்தி யார்எனும் நாமமும் தாங்கினார் 3

தீங்கு சொற்ற திருவிலர் நாவினை
வாங்க வாங்குதண் டாயத்தி னால்வலித்
தாங்க யிற்கத்தி யால்அரிந் தன்புடன்
ஓங்கு சீர்த்திருத் தொண்டி னுயர்ந்தனர் 4

அன்ன தாகிய ஆண்மைத் திருப்பணி
மன்னு பேருல கத்தில் வலியுடன்
பன்னெ டும்பெரு நாள்பரி வாற்செய்து
சென்னி ஆற்றினர் செந்நெறி ஆற்றினர் 5

ஐய மின்றி அரிய திருப்பணி
மெய்யி னாற்செய்த வீரத் திருத்தொண்டர்
வைய முய்ய மணிமன்று ளாடுவார்
செய்ய பாதத் திருநிழல் சேர்ந்தனர் 6


44



45. ஐயடிகள்காடவர்கோன்

பல்லவர் குலத்தில் தோன்றி பெரும் சிறப்புடன் சைவம், தமிழ் என்பவற்றை வளர்த்து வரும் பணி புரிந்தார் காடவர் கோனாகிய ஐயடிகள். ஒருநாள் இவ்வர சாட்சி பயனற்றது என்ற முடிவுக்கு வந்து தம் மகனை அழைத்துப் பட்டம் கட்டிவிட்டு ஒவ்வொரு தலமாகச் சென்று அவ்வூர் இறைவனைப் பற்றி ஒரு வெண்பா புனைந் தார்.

பல்வேறு தலங்களையும் வணங்கிக் கொண்டு பெரும்பற்றப் புலியூரில் இறை வன் நடனத்தைக் கண்டு பாமாலை சூட்டினார்.

அரசர் குடியில் பிறந்தவர்கள் பலரும் அரசாட்சியை மேற்கொள்ளுவதை இன்ப மாகவே கருதினர். மனிதனுக்குரிய பல்வேறு ஆசைகளில் செல்வம் சேர்த்தலும், அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொள்ளுதலும் முக்கியமானவை ஆகும். தன்னை யொத்த பிறரை அதிகாரம் செய்வதிலும், அடக்கியாள்வதிலும் மனிதனுக்குத் தனி விருப்பம் இருப்பதாகத் தெரிகிறது. இளம் குழந்தைகள் பல கூடி விளையாடும் பொழுது திடீரென்று ஒரு குழந்தை உடன் இருக்கும் மற்றவர்களை அதிகாரம் செய் வதைக் காண்கிறோம். இங்கே தொடங்குகின்ற இந்த அதிகார வெறி மனிதன் முழு வளர்ச்சி அடைந்த பின்பும் அவனை விட்டு விலகுவதில்லை. சாதாரண மக்களைப் பொறுத்த மட்டில் இந்த அதிகாரத்தைக் காட்டுவதற்குரிய வாய்ப்பும் வசதியும் இல் லாமற் போவதால் இது அடங்கி விடுகிறது. ஆனால் வாய்ப்பும் வசதியும் உள்ளவர் களைப் பொறுத்த மட்டில் இவ்வெறி பயங்கரமாக வெளிப்படுகிறது.

இந்த அடிப்படையை மனத்தில் கொண்டு பார்த்தால் அரசனாக உள்ள ஒருவன் தனக்குள்ள அதிகாரத்தை, செல்வாக்கைத் தானே விரும்பி விட்டுக் கொடுத்தல் என் பது ஏறத்தாழ இயலாத காரியம் என்றே சொல்லிவிடலாம். இத்தகைய மனிதர்கள் நிரம்பிய உலகில் பல்லவ மன்னனாகிய ஐயடிகள் காடவர்கோன் அரசைத் துறந்தது வியப்பைத் தருவதாகும்.

ஒருவேளை செயல்திறம் இல்லாதவராய் வரிசையாகத் தோல்விகளையே சந்திப் பவராய், உள்நாட்டுக் கலகங்கள் மிக்க நாட்டை ஆளும் துரதிருஷ்டம் உள்ளவராய் இருக்கும் மன்னர் அதை விட்டுவிட்டுப் போவதை விரும்புவார். ஆனால் காடவர் கோன் 'திருமலியும் புகழ் விளங்க சேண் நிலத்தில் எவ்வுயிரும் பெருமையுடன் இனி தமரப் பிற புலங்கள் அடிப்படுத்துத் தருமநெறி தழைத்தோங்க' ஆட்சி புரிந்தார். அன்றியும் 'மன்னவரும் பணிசெய்ய, வடநூல் தென்தமிழ் முதலாம் பன்னுகலைப் பணி செய்யப் பாரளிப்பார்' என்று சேக்கிழார் இவரைப் பற்றிக் கூறுகிறார்.

இத்தகைய வாய்ப்பு, வசதி, பெருமை, வெற்றி, கலைச்செல்வம் ஆகியவற்றை நிரம்பப் பெற்றுத் திகழும் காடவர்கோன் திடீரென்று அரசைத் துறந்துவிட்டுத் தல யாத்திரை புறப்பட்டுவிட்டார் என்றால் அது வியப்பினும் வியப்பேயாகும்! ஒப்பற்ற சிவனடியாராக இருந்த இவர் கந்தையும் மிகை என்ற கருத்துடையவர். ஆதலால் அரசாட்சியை இன்பம் தரும் பொருளாகக் கருதாமல் பாரமாகவே கருதினர் என்று தெரிகிறது. அதனை இறக்கி வைக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தவுடன் முதல் வேலை யாகத் தம் மைந்தனிடம் இந்தப் பாரத்தை இறக்கி வைக்கின்றார். இறைவன் உறை கின்ற கோயில்கள் பலவற்றையும் வணங்கிக் கொண்டு சென்று தில்லைக்கூத்தன் திருநடம் செய்யும் தில்லையிலும் சிலநாள் தங்கி மறுபடியும் தல யாத்திரையை மேற் கொண்டார்.

அரசராக இருக்கையில் மனம், மொழி, மெய் என்ற மூன்றினாலும் எந்நேரமும் இறைபணி செய்ய முடியாமல் கடமைகள் குறுக்கே நிற்றலின் ஐயடிகள் இந்த வழியை மேற்கொண்டார்.

ஐயடிகள் காடவர்கோன்

வையநிகழ் பல்லவர்தங் குலமரபின் வழித்தோன்றி
வெய்யகலி யும்பகையும் மிகையொழியும் வகைஅடக்கிச்
செய்யசடை யார் சைவத் திருநெறியால் அரசளிப்பார்
ஐயடிகள் நீதியால் அடிப்படுத்துஞ் செங்கோலார் 1


மன்னவரும் பணிசெய்ய வடநூல்தென் றமிழ்முதலாம்
பன்னுகலைப் பணிசெய்யப் பாரளிப்பார் ''அரசாட்சி
இன்னல்'' என இகழ்ந்ததனை எழிற்குமரன் மேலிழிச்சி
நன்மைநெறித் திருத்தொண்டு நயந்தளிப்பா ராயினார் 3

தொண்டுரிமை புரக்கின்றார் சூழ்வேலை உலகின்கண்
அண்டர்பிரான் அமர்ந்தருளும் ஆலயங்க ளான எலாம்
கண்டிறைஞ்சித் திருத்தொண்டின் கடனேற்ற பணிசெய்தே
வண்டமிழின் மொழிவெண்பா ஒரொன்றா வழுத்துவார் 4

பெருத்தெழுகா தலில்வணங்கிப் பெரும்பற்றத் தண்புலியூர்த்
திருச்சிற்றம் பலத்தாடல் புரிந்தருளுஞ் செய்யசடை
நிருத்தனார் திருக்கூத்து நேர்ந்திறைஞ்சி நெடுந்தகையார்
விருப்பினுடன் செந்தமிழின் வெண்பாமென் மலர்புனைந்தார் 5

இந்நெறியால் அரனடியார் இன்பமுற இசைந்தபணி
பன்னெடுநாள் ஆற்றியபின் பரமர்திரு வடிநிழற்கீழ்
மன்னுசிவ லோகத்து வழிஅன்பர் மருங்க ணைந்தார்;
கன்னிமதில் சூழ்காஞ்சிக் காடவரை அடிகளார் 7





46. கணம்புல்லர்

வட வெள்ளாற்றின் தென் கரையில் அமைந்தது இருக்குவேளூர் என்ற ஊர். பெரும் செல்வத்தை உடையவராய் முதல் குடியாக வாழ்ந்தவர் கணம் புல்லர். இறைவன் கோயிலில் ஒளி விளக்கு ஏற்றுவதையே கடனாகக் கொண்ட இவர் தில்லை சென்றடைந்து திருப்புலீச்சரத்தில் விளக்கெரிக்கத் தொடங்கித் தம் செல்வம் முழுவதும் கரைந்த பிறகும் புல்லரிந்து அதனை விற்று அதனால் வரும் பொருளைக் கொண்டு விளக்கெரிக்கலானார். அந்நிலையில் புல் விற்ற பணமும் போதாததாக தம் தலை முடியையே விளக்கில் வைத்து எரிக்கலானார்.

கணம்புல்லர்

தில்லைநகர் மணிமன்றுள் ஆடுகின்ற சேவடிகள்
அல்கியஅன் புடனிறைஞ்சி அமர்கின்றார் புரமெரித்த
வில்லியார் திருப்புலீச் சரத்தின்கண் விளக்கெரிக்க
இல்லிடைஉள் ளனமாறி எரித்துவரும் அந்நாளில் 4

ஆயசெயல் மாண்டதற்பின் அயலவர்பால் இரப்பஞ்சிக்
காயமுயற் சியில்அரிந்த கணம்புல்லுக் கொடுவந்து
மேயவிலைக் குக்கொடுத்து விலைப்பொருளால் நெய்மாறித்
தூயதிரு விளக்கெரித்தார் துளக்கறுமெய்த் தொண்டனார் 5

இவ்வகையால் திருந்துவிளக் கெரித்துவர அங்கொருநாள்
மெய்வருந்தி அரிந்தெடுத்துக் கொடுவந்து விற்கும்புல்
எவ்விடத்தும் விலைபோகா தொழியவும்இப் பணியொழியார்
அவ்வரிபுல் லினைமாட்டி அணிவிளக்கா யிடஎரிப்பார் 6

முன்புதிரு விளக்கெரிக்கும் முறையாமங் குறையாமல்
மென்புல்லும் விளக்கெரிக்கப் போதாமை மெய்யான
அன்புபுரி வார்அடுத்த விளக்குத்தந் திருமுடியை
என்புருக மடுத்தெரித்தார் இருவினையின் தொடக்கெரித்தார் 7

தங்கள்பிரான் திருவுள்ளஞ் செய்துதலைத் திருவிளக்குப்
பொங்கியஅன் புடன்எரித்த பொருவில்திருத் தொண்டருக்கு
மங்கலமாம் பெருங்கருணை வைத்தருளச் சிவலோகத்(து)
எங்கள்பிரான் கணம்புல்லர் இனிதிறைஞ்சி அமர்ந்திருந்தார் 8

திருத்தொண்டர் வருணம்

தனியடியார் அறுபத்துமூவர்

ஆதிசைவர் நால்வர்: சுந்தரமூர்த்தி, புகழ்த்துணையார் சடையர், இசைஞானியார்

பிராமணர் பன்னிருவர்: குங்குலியக்கலயர், முருகர், உருத்திரபசுபதியார், சண்டேசுரர், அப்பூதியடிகள், திருநீலநக்கர், நமிநந்தியடிகள், திருஞானசம்பந்தர், சோமாசிமாறர், சிறப்புலியார், கணநாதர், பூசலார்.

மாமாத்திரப்பிராமணர்: சிறுத்தொண்டர்

க்ஷத்திரியர் அறுவர்: சேரமான்பெருமாள், புகழ்ச்சோழர், நெடுமாறர், இடங்கழியர், மங்கையர்க்கரசியார், கோச்செங்கட்சோழர்

குறுநில மன்னர் ஐவர்: மெய்ப்பொருளார், கூற்றுவர், நரசிங்கமுனையரையர் ஐயடிகள்காடவர்கோன், கழற்சிங்கர்

வைசியர் ஐவர்: இயற்பகையார், அமர்நீதியார், மூர்த்தியார், காரைக்காலம்மையார், கலிக்கம்பர்

வேளாளர் பதின்மூவர்: இளையான்குடிமாறர், விறன்மிண்டர், மானக்கஞ்சாறர், அரிவாட்டாயர், திருநாவுக்கரசர், ஏயர்கோன் கலிக்காமர், மூர்க்கர், சாக்கியர், சத்தியார், வாயிலார், முனையடுவார், செருத்துணையார், கோட்புலியார்

இடையர் இருவர்: திருமூலர், ஆனாயர்

குயவர்: திருநீலகண்டர்

பாணர்: திருநீலகண்டயாழ்ப்பாணர்

பரதவர்: அதிபத்தர்

வேடர்: கண்ணப்பர்

சான்றோர்: ஏனாதிநாதர்


சாலியர்: நேசர்

செக்கார்: கலியர்


ஏகாலியர்: திருக்குறிப்புத்தொண்டர்

புலையர்: திருநாளைப்போவார்

மரபறியாதவர் அறுவர்: எறிபத்தர், குலச்சிறையார், பெருமிழலைக்குறும்பர் தண்டியடிகள், கணம்புல்லர், காரியார்


S.RAJAM
46





47

47. காரியார்

திருக்கடவூரில் பிறந்த காரியார் வண்டமிழின் சொல் விளங்கி பொருள் மறைய குறையாத தமிழ்க் கோவை தம் பெயரால் தொகுத்து அமைத்து, அவற்றை மூவேந் தர்க்கும் உணர்த்திச் சிறப்புப் பெற்றவர். அம் மன்னர்கள் மகிழும் வகையில் நயமான உரைகள் கூறி அவர்கள்பால் பெற்ற நிதிக் குவையைக் கொண்டு சங்கரனார் இனிது அமரும் தானங்கள் பல அமைத்தார்.

பெரிய புராணத்தில் வேறு எந்த அடியாரும் செய்யாத ஒரு பணியைச் செய்து, பொருளீட்டி அடியவர்க்குத் தொண்டாற்றினார் காரியார். உடல் உழைப்பினால் பொருள் சேகரித்தவர்கள் பலருண்டு. அவ்வாறு பொருள் சேகரித்துப்பணி செய்ய முடியாத பொழுது மனத்தினாலேயே கோயில் கட்டியவரும் உண்டு. மொழித் தொண்டு என்று எடுத்துக் கொண்டால் நம்பி ஆரூரர் என்ற நாமத்தையே மந்திர மாகக் கொண்டு ஜபித்து அட்டமா சித்திகள் பெற்றவரும் உண்டு. கழுத்தளவு நீரில் நின்று ஸ்ரீருத்ரத்தை ஜபிப்பதையே கடனாகக் கொண்டவர்களும் உண்டு.

இத்தனை பெருமக்கட்கும் மாறுபட்டுத் தாம் பெற்ற கல்வியின் உதவியால் ஒரு கோவையைத் தொகுத்து 'காரிக்கோவை' என்ற அந்த நூலை ஒவ்வொரு மன்னரிடத் தும் அரங்கேற்றி உரை நயங்கள் சொல்லி அவர்கள் பரிசலாகத் தரும் பொருளைக் கொண்டு அடியார்த் தொண்டு செய்தார் காரியார்.

மன்னர்களிடம் சென்று பாடல்கள் பாடியும் ஆடல்கள் ஆடியும் பரிசில் பெற் றுத் தம்முடைய வறுமையைப் போக்கிக் கொண்ட பாணர், விறலியர் என்பவர்கள் சங்க காலத்துக்கு முன் தொட்டே இத்தமிழ் நாட்டில் இருந்து வந்தனர். இவர்கள் பாடிய பாடல்கள் எல்லாம் அந்த அந்த மன்னரைப் புகழ்ந்த பாடல்களாகவே இருக் கும். சங்கப் பாடல்களில் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் என்பவை தவிர, ஏனைய அனைத்தும் மன்னர்களைப் புகழ்ந்து பாடிய பாடல்களேயாகும். புறப் பாடல்கள் தான் இப்படி என்றால் அகப் பாடல்களிலும் இடையிடையே மன்னர்களின் புகழ், வெற்றிச் சிறப்பு என்பவை இடம் பெற்றிருத்தலைக் காண முடியும்.

இவ்வாறு இருந்த தமிழர் நிலையை, ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய அப்பர், திருஞானசம்பந்தர் ஆகிய இருவரும் மாற்றினர். கேவலம் மனிதர்களாக உள்ள அரசர்களையும் செல்வர்களையும் போற்றிப் பாடுதல் ஒரு புலவனுடைய தன்மானத் துக்கு இழுக்காகும் என்று வலியுறுத்தினர். எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய சுந் தரர் 'பொய்ம்மையாளரைப் பாடாதே' என்று அறிவுறுத்தினார்.

இப்படி இருந்தும், மனிதர்களைப் பாடுகின்ற பழக்கம் குறைந்துவிட்டாலும், ஆங்காங்கே இருந்து கொண்டுதான் இருந்தது. மணிவாசகர் அருளிய திருச்சிற்றம் பலக்கோவை தவிர ஏனைய எல்லாக் கோவைகளும் மனிதர்களைப் பாட்டுடைத் தலைவனாகத் கொண்டு பாடப்பட்டவையேயாகும். காரி நாயனார் தொகுத்த காரிக் கோவையும் இதற்கு விதிவிலக்காக இருந்திருக்க முடியாது. எனவே மனிதர்களைப் பாடிப் பொருள் சேகரிக்கும் பணியையும் ஒரு நாயனார் மேற்கொண்டிருந்தார் எனத் தெரிகிறது. அவ்வாறு சேகரித்த பொருளைத் திருக்கோயில்கள் கட்டும் பணி யில் செலவழித்தார். சங்க காலத்திற்கு முன்னர்த் தோன்றிய மனிதர்களைப் பாடும் மரபு பக்தி இயக்க காலத்தில் ஓரளவு குறைந்திருந்தாலும் அழியாமல் நின்று இந் நாளில் விரிவாக வளர்ந்திருத்தலின் தமிழ் மக்களின் தனி மரபு போலும் இது என்று நினைக்க வேண்டி உளது.

காரியார்

மறையாளர் திருக்கடவூர் வந்துதித்து வண்டமிழின்
துறையான பயன்தெரிந்து சொல்விளங்கிப் பொருள்மறையக்
குறையாத தமிழ்க்கோவை தம்பெயராற் குலவும்வகை
முறையாலே தொகுத்தமைத்து மூவேந்தர் பாற்பயில்வார் 1

அங்கவர்தாம் மகிழும்வகை அடுத்தஉரை நயமாக்கிக்
கொங்கலர்தார் மன்னவர்பால் பெற்றநிதிக் குவைகொண்டு
வெங்கண்அரா வொடுகிடந்து விளங்கும்இளம் பிறைச்சென்னிச்
சங்கரனார் இனிதமருந் தானங்கள் பலசமைத்தார் 2

யாவர்க்கும் மனமுவக்கும் இஃபமொழிப் பயனியம்பித்
தேவர்க்கு முதற்றேவர் சீரடியார் எல்லார்க்கும்
மேவுற்ற இருநிதியம் மிகஅளித்து விடையவர்தம்
காவுற்ற திருக்கயிலை மறவாத கருத்தினராய் 3

ஏய்ந்தகடல் சூழுலகில் எங்குந்தம் இசைநிறுத்தி
ஆய்ந்தஉணர்(வு) இடையறா அன்பினராய் அணிகங்கை
தோய்ந்தநெடுஞ் சடையார்தம் அருள்பெற்ற தொடர்பினால்
வாய்ந்தமனம் போலுடம்பும் வடகயிலை மலைசேர்ந்தார் 4

நன்றி:
சக்தி பைனான்ஸ் லிமிடெட்
29/30, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை
மயிலாப்பூர், சென்னை 600 004.




48

48. நின்றசீர் நெடுமாறர்

காழியில் வந்த தமிழ் விரகராம் ஞான சம்பந்தப் பெருமானால் தீண்டித் திருநீறு இடப்பெற்ற பெருமை உடையவர் நெல்வேலி வென்ற நெடுமாறன். என்றும், உழி ஞும், பாழில் முதலிய இடங்களில் பகைவர் பலரையும் வென்று பாண்டி நாட்டின் எல்லையை மிகவும் விரிவாக்கியவர்.

மங்கையர்க்கரசியாரை மணம் செய்து வாழ்ந்த இப் பெருமகனார் முதலில் சமணராக இருந்து திருஞான சம்பந்தர் திருநோக்கால் சைவரானார்.

பெரிய புராணத்தில் காணப்படும் அரசர்களுள் புகழ்ச் சோழரும், நின்றசீர் நெடுமாறனும் மிகப் பெரிய மன்னர்களாவார்கள். புகழ்ச் சோழரைப் பொறுத்த மட்டில் அவருடைய இயற் பெயர் யாது? யாருடைய காலத்தில் வாழ்ந்தார் என்பதை அறிய வாய்ப்பில்லை. ஆனால் நெடுமாறனைப் பொறுத்த மட்டில் அவன் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டியப் பேரரசன் என்பதை அறிய முடிகின்றது. மகேந் திர வர்மன் நரசிம்மவர்மன் என்ற பல்லவ மன்னர்கள் காலம் இது. என்றாலும் அவர்கள் செல்வாக்கு தொண்டை நாட்டைத் தாண்டினாலும் நடுநாட்டைத் தாண்ட வில்லை. அந்த நிலையில் நெடுமாறனுக்குத் தன் பெண்ணை மணம் செய்து கொடுத்த சோழ மன்னனும் இன்னார் என்று அறியப்படாத சிற்றரசனாகவே இருந்திருத்தல் வேண்டும். பாண்டி நாட்டை ஆண்ட நெடுமாறன் சேரர்கள் செல்வாக்கை ஒடுக்கு வதற்காக உழிஞும், பாழில் முதலிய இடங்களில் போர் புரிந்து வெற்றி வாகை சூடி யதைப் பாண்டிக் கோவையும், பெரிய புராணமும் அறிவிக்கின்றன. திருஞான சம் பந்தர் காலத்தில் வாழ்ந்த இப் பாண்டிய மன்னன் தொடக்கத்தில் சமணனாக இருந்து பிள்ளையாரால் சைவத்திற்கு மாறினான். இவனுடைய காலத்திற்குச் சற்று முன்னர் வாழ்ந்த மகேந்திரப் பல்லவ மன்னனும் திருநாவுக்கரசரால் சமணத்தி லிருந்து சைவத்திற்கு மாறியவனாவான். இந்த நெடுமாறன் ஏறத்தாழ தமிழகம் முழு வதையும் (தொண்டை, நடுநாடுகள் நீங்கலாக) ஆண்ட பெருமைக்குரியவன் ஆவான். மங்கையர்க்கரசியார் என்னும் சோழர் குல மாதரசியாரை மணந்தவன். இத்துணைச் சிறப்பு வாய்ந்த நெடுமாறனைப் பத்துப் பாடல்களில் பாடி முடித்துவிடுகிறார் சேக்கிழார்.

மன்னர் பெருமையைத் தனியே எடுத்துப் பாடும் பழக்கத்தைச் சேக்கிழார் விரும் பியதாகத் தெரியவில்லை. எனவேதான் பத்துப் பாடல்களில் நெடுமாறன் வரலாற்றை முடித்து விட்டார். சோழர்களைப் பாடும்போது காட்டுகின்ற உள்ளன்பையும், பெரு மதிப்பையும் பாண்டியனைப் பாடும்போது காட்டுவதில்லை. இதற்குரிய காரணத் தைத் தேடி அதிக தூரம் செல்ல வேண்டியதில்லை. தமிழக வரலாற்றில் எந்தச் சோழனும் சைவ சமயத்தை விட்டுப் புறச் சமயம் புகுந்ததாக வரலாறு இல்லை. ஆனால் பாண்டியனைப் பொறுத்த மட்டில் முதலில் புறச் சமயத்தில் இருந்தான் என்பதாலும் அடியார்கள் வாழும் மடத்தில் தீ வைப்பதற்கு மறைமுக உடந்தையாய் இருந்தான் என்பதாலும் சேக்கிழார் இவனைப் பற்றி விரிவாகப் பாட விரும்ப வில்லை என்று தெரிகிறது.

நின்றசீர் நெடுமாறர்

தடுமாறும் நெறியதனைத் தவமென்று தம்முடலை
அடுமாறு செய்தொழுகும் அமண்வலையில் அகப்பட்டு
விடுமாறு தமிழ்விரகர் வினைமாறுங் கழலடைந்த
நெடுமாற னார்பெருமை உலகேழும் நிகழ்ந்ததால் 1


வயப்பரியின் களிப்பொலியும் மறவர்படைக் கலஒலியும்
கயப்பொருப்பின் முழக்கொலியும் கலந்தெழுபல் லியஒலியும்
வியக்குமுகக் கடைநாளின் மேகமுழக் கெனமீளச்
சயத்தொடர்வல் லியும்இன்று தாம்விடுக்கும் படிதயங்க 5


இனையகடுஞ் சமர்விளைய இகலுழந்த பறந்தலையில்
பனைநெடுங்கை மதயானைப் பஞ்சவனார் படைக்குடைந்து
முனையழிந்த வடபுலத்து முதல்மன்னர் படைசரியப்
புனையுநறுந் தொடைவாகை பூழியர்வேம் புடன்புனைந்து 7

வளவர்பிரான் திருமகளார் மங்கையருக் கரசியார்
களபமணி முலைதிளைக்குந் தடமார்பிற் கவுரியனார்
இளவளவெண் பிறைஅணிந்தார்க் கேற்றதிருத் தொண்டெல்லாம்
அளவில்புகழ் பெறவிளக்கி அருள்பெருக அரசளித்தார் 8

திரைசெய்கடல் உலகின்கண் திருநீற்றின் நெறிவிளங்க
உரைசெய்பெரும் புகழ்விளக்கி ஓங்குநெடு மாறனார்
அரசுரிமை நெடுங்காலம் அளித்திறைவர் அருளாலே
பரசுபெருஞ் சிவலோகத் தின்புற்றுப் பணிந்திருந்தார் 9

நன்றி:
பன்னாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட்
252, மேட்டுப்பாளையம் ரோடு,
கோயமுத்தூர் 641 043.


48


49

49. வாயிலார்

மயிலாப்பூரில் வேளாண் குடியில் பிறந்தவர் வாயிலார் என்னும் தபோதனர். தம்முடைய மனத்தில் உள்ளேயே இறைவனை நிறுவி ஒளி விளக்கை வரிசையாக ஏற்றி ஆனந்தம் என்னும் திருமஞ்சனம் செய்வித்து அப்பெருமானிடம் அன்பு என்னும் அமுதத்தைப் படைத்துப் பூசை புரிவதிலேயே வாணாளைக் கழித்தவர்.

வாயிலார்

சொல்வி ளங்குசீர்த் தொண்டைநன் னாட்டிடை
மல்லல் நீடிய வாய்மை வளம்பதி
பல்பெ ருங்குடி நீடு பரம்பரைச்
செல்வம் மல்கு திருமயி லாபுரி *1*

மன்னு சீர்மயி லைத்திரு மாநகர்த்
தொன்மை நீடிய சூத்திரத் தொல்குல
நன்மை சான்ற நலம்பெறத் தோன்றினார்;
தன்மை வாயிலார் என்னுந் தபோதனர் *6*

வாயி லாரென நீடிய மாக்குடித்
தூய மாமர பின்முதல் தோன்றியே
நாய னார்திருத் தொண்டின் நயப்புறு
மேய காதல் விருப்பின் விளங்குவார் *7*

மறவாமை யான்அமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆனந்தம் எனுந்திருமஞ் சனம்ஆட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச் சனைசெய்வார் *8*

அகமலர்ந்த அர்ச்சனையில் அண்ணலார் தமைநாளும்
நிகழவரும் அன்பினால் நிறைவழிபா டொழியாமே
திகழநெடு நாட்செய்து சிவபெருமான் அடிநிழற்கீழ்ப்
புகலமைத்துத் தொழுதிருந்தார் புண்ணியமெய்த் தொண்டனார் *9*

நன்றி:
ஸ்ரீ பகவதி டீ எஸ்டேட்ஸ் லிமிடெட்
தபால் பெட்டி எண் 3878
180, ரேஸ் கோர்ஸ் ரோடு, கோயமுத்தூர் 641 018.

குரு பூசைக் கிரமம்

சித்திரை

பரணி	சிறுத்தொண்டர்
உரோகிணி	மங்கையர்க்கரசியார்
திருவாதிரை	விறன்மிண்டர்
அத்தம்	உமாபதிசிவாசாரியர்
சித்திரை	இசைஞானியார்
சுவாதி	குறிப்புத்தொண்டர்
சதயம்	திருநாவுக்கரசர்

வைகாசி

பரணி	கழற்சிங்கர்
பூசம்	நமிநந்தியடிகள்
பூசம்	சேக்கிழார்
ஆயிலியம்	சோமாசிமாறர்
மூலம்	திருஞானசம்பந்தர்
மூலம்	முருகர்
மூலம்	திருநீலநக்கர்
மூலம்	திருநீலகண்டயாழ்ப்பாணர்

ஆனி

மகம்	மாணிக்கவாசகர்
பூரம்	அமர்நீதியார்
இரேவதி	கலிக்காமர்

ஆடி

கார்த்திகை	மூர்த்தியார்
கார்த்திகை	புகழ்ச்சோழர்
திருவாதிரை	கூற்றுவர்
சித்திரை	பெருமிழலைக்குறும்பர்
சுவாதி	சுந்தரமூர்த்தி
சுவாதி	சேரமான் பெருமாள்
கேட்டை	கலியர்
கேட்டை	கோட்புலியர்

ஆவணி

பூசம்	செருத்துணையார்
ஆயிலியம்	புகழ்த்துணையார்
ஆயிலியம்	அதிபத்தர்
மகம்	இளையான்குடிமாறர்
அநுடம்	குலச்சிறையார்
மூலம்	குங்கிலியக்கலயர்

புரட்டாதி

அச்சுவினி	உருத்திரபசுபதியார்
உரோகிணி	திருநாளைப்போவார்
சதயம்	நரசிங்கமுனையரையர்
உத்தராடம்	ஏனாதிநாதர்

ஐப்பசி

அச்சுவினி	திருமூலர்
பரணி	நெடுமாறர்
கார்த்திகை	இடங்கழியர்
பூசம்	சத்தியார்
சுவாதி	மெய்கண்டார்
அநுடம்	பூசலார்
மூலம்	ஐயடிகள்காடவர்கோன்

கார்த்திகை

கார்த்திகை	கணம்புல்லர்
உத்திரம்	மெய்ப்பொருளார்
அத்தம்	ஆனாயர்
மூலம்	மூர்க்கர்
பூராடம்	சிறப்புலியார்

மார்கழி

திருவாதிரை	சடையர்
உத்திரம்	இயற்பகையார்
சுவாதி	மானக்கஞ்சாறர்
பூராடம்	சாக்கியர்
இரேவதி	வாயிலார்

தை

மிருகசீரிடம்	கண்ணப்பர்
திருவாதிரை	அரிவாட்டாயர்
உத்திரம்	சண்டேசுரர்
விசாகம்	திருநீலகண்டர்
சதயம்	அப்பூதியடிகள்
இரேவதி	கலிக்கம்பர்


மாசி

அத்தம்	எறிபத்தர்
பூராடம்	காரியார்
சதயம்	கோச்செங்கட்சோழர்

பங்குனி

உரோகிணி	நேசர்
திருவாதிரை	கணநாதர்
பூசம்	முனையடுவார்
சுவாதி	காரைக்காலம்மையார்
சதயம்	தண்டியடிகள்





50. முனையடுவார்

சோழ நாட்டில் திருநீடூர் என்ற ஊரில் வேளாண் குலத்தில் தலைக்குடியில் பிறந்தவர் முனை அடுவார்.

மன்னர்கள் இடையே ஏற்படும் போரில் தோற்றவர் முனை அடுவார் உதவியை வேண்டி வந்து அவர் தயவால் போரில் வெற்றி பெற்று அதற்குப் பதிலாகத்தந்த பெருநிதியத்தைச் சிவனடியார் திருத் தொண்டுக்காகச் செலவழித்தவர்.

சிற்றரசர்களும் பேரரசர்களும் போரிடும்போது இரண்டு வகையான படைகளைப் பயன்படுத்தினர் என்பது உலகம் முழுவதும் பரவியிருக்கும் பழக்கமாகும். இவற்றுள் முதல் வகை நிலைப்படை (STANDING ARMY) எனப்படும். இப்படையிலுள்ள வீரர்கள் வேறு பணி ஒன்றிலும் ஈடுபடாமல் போர்ப்பயிற்சி ஒன்றையே சாதாரண காலங்களிலும் செய்து வந்தனர். நால்வகைப் படைகள் என்று கூறப் பெறும் காலாட் படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை என்பவற்றுள் முதலாவதாக உள்ள காலாட்படை நீங்கலாக ஏனைய மூன்றும் நிலைப்படையாகவே இருக்கும். காலாட் படையைப் பொறுத்தமட்டில் நிலைப்படையாக உள்ளது ஒரு சிறு கூறாகவே இருக்கும். போர் என்று வரும்போது நிலையாக உள்ள காலாட்படை போகப் பெரும் பகுதி அந்த அந்தச் சந்தர்ப்பத்திற்குத் தேவையான முறையில் சேகரிக்கப்படும். இந்தப் படை தனித் தனியாகச் சேகரிக்கப்படாமல் குறிப்பிட்ட சில மறக்குடியாளர்களிடம் இருந்து பெறப்படும். இங்கிலாந்து முதலிய நாடுகளிலும் (FEUDAL ARMY) எனப்படும் இத்தகைய படைச் சேகரிப்பு முறை இருந்ததை அந்நாட்டு வரலாற்றின் மூலம் அறியமுடிகிறது.

இங்ஙனம் சேகரிக்கின்ற படை இங்கிலாந்து முதலிய நாடுகளைப் பொறுத்த மட்டில் ஒரே அரசனாக இருந்தமையில் அவனுக்கு மட்டும் உரியதாக இருந்தது. ஆனால் பிரெஞ்சு நாட்டைப் பொறுத்த மட்டில் சிற்றரசர் (DUKES) பலர் இருந்து தம்முள் போரிட்டமையின் அதிகமாகப் பணம் கொடுப்பவர்களுக்கு அவர்கள் யாராக இருப்பினும் சென்று உதவுகின்ற கூலிப் படைகளைப் (MERCENARY ARMY) பலர் வைத்துக் கொண்டு தம்மை நாடி வருபவர்களுக்கு உதவினர்.

இதே அடிப்படையில்தான் முனை அடுவார் தொழிலும் இருந்ததாகத் தெரிகிறது. தோற்ற மன்னர்கள் இவருடைய உதவியை வேண்டி வந்த பொழுது உதவிக்குரிய தொகையைப் பெற்றுக்கொண்டு அத் தோற்றவனுக்காகச் சென்று போரிட்டார். இவ்வாறு கூறுவதால் ஒரே மன்னனுக்கு உதவியாக முனை அடுவார் படை இருந்தது என்று கூற முடியாது. ஒரு முறை வென்றவன் மறுமுறை தோற்கலாம். இது மாறியும் வரலாம். எனவே இவருடைய உதவி நாட்டுக்காகப் போராடும் உயர்ந்த குறிக்கோளைப் பெறாமல், தேவையானவருக்கு உதவும் தாம் கேட்கின்ற பொருளைத் தருபவருக்கு உதவும் அடிப்படையில் அமைந்ததைக் காண்கிறோம்.

இவ்வாறு வருகின்ற பொருளில் படைகளை வைத்துப் பராமரிக்கும் செலவு போக எஞ்சிய பணத்தைக்கொண்டு அடியார்த் தொண்டு செய்தார் என்று வரலாறு கூறுகிறது. இப்பழக்கம் முனை அடுவார் புதிதாகப் புகுத்திய பழக்கம் என்று நினைக்கத் தேவையில்லை. சங்க காலத்தில் கூடத் தேவையான மன்னருக்குக் கூலிப்படை உதவும் சிற்றரசர்களும் பெரு வீரர்களும் இருந்ததை அறிய முடிகிறது.

முனையடுவார்

மாறு கடிந்து மண்காத்த வளவர் பொன்னித் திருநாட்டு
நாறு விரைப்பூஞ் சோலைகளின் நனைவாய் திறந்து பொழிசெழுந் தேன்
ஆறு பெருகி வெள்ளமிடும் அள்ளல் வயலின் மள்ளர் உழுஞ்
சேறு நறுவா சங் கமழுஞ் செல்வ நீடூர் திருநீடூர் 1


விளங்கும் வண்மை மிக்குள்ள வேளாண் தலைமைக் குடி முதல்வர்
களங்கொள் மிடற்றுக் கண்ணுதலார் கழலிற் செறிந்த காதல்மிகும்
உறங்கொள் திருத்தொண் டுரிமையினில் உள்ளார் நள்ளார் முனைஎறிந்த
வளங்கொ டிறைவர் அடியார்க்கு மாறா தளிக்கும் வாய்மையார் 2

மாற்றார்க் கமரில் அழிந்துள்ளோர் வந்து தம்பால் மாநிதியம்
ஆற்றும் பரிசு பேசினால் அத்னை நடுவு நிலைவைத்துக்
கூற்றும் ஒதுங்கும் ஆள்வினையால் கூலி ஏற்றுச் சென்றெறிந்து
போற்றும் வென்றி கொண்டிசைந்த பொன்னுங் கொண்டு மன்னுவார் 3

இன்ன வகையால் பெற்றநிதி எல்லாம் ஈசன் அடியார்கள்
சொன்ன சொன்ன படிநிரம்பக் கொடுத்துத் தூய போனகமும்
கன்னல் நறுநெய் கறிதயிர்பால் கனியுள் ளுறுத்த கலந்தளித்து
மன்னும் அன்பின் நெறிபிறழா வழித்தொண் டாற்றி வைகினார் 4

மற்றிந் நிலைமை பன்னெடுநாள் வையம் நிகழச் செய்துவழி
உற்ற அன்பின் செந்நெறியால் உமையாள் கணவன் திருவருளால்
பெற்ற சிவலோ கத்தமர்ந்து பிரியா உரிமை மருவினார்
முற்ற உழந்த முனையடுவார் என்னும் நாமம் முன்னுடையார் 5

நன்றி:
சக்தி சுகர்ஸ் லிமிடெட்
101, மௌண்ட் ரோடு
கிண்டி, சென்னை 600 032.



50



51. கழற்சிங்கர்

பல்லவர் குலத்தில் தோன்றிய கழற் சிங்கர் வடபுலத்துப் பகைவர் பலரை வென்று செங்கோல் செலுத்துகின்ற காலத்தில் இறைவன் உறையும் தலங்களை வரிசையாகச் சென்று வணங்குகின்ற முறையில் திருவாரூர்க்கு வந்து சேர்ந்தார். கோயிலை வலங்கொண்டு புற்றிடம் கொண்டாரை மன்னர் வணங்கிக் கொண் டிருக்கிற அதே நேரத்தில், அவருடைய பட்டத்தரசியார் பூங்கோயிலைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வருகையில் இறைவனுக்கு மாலைகள் தொடுக்கும் மண்டபத் திற்கு வந்து சேர்ந்தார்.

புதிய மலர் ஒன்று கீழே கிடக்கக் கோயில் மரபு தெரியாத அரசியார் அப் பூவினை எடுத்து முகர்ந்து பார்த்தார். இதனைக் கண்ட செருத்துணையார் என்ற அன்பர் இறைவனுக்குச் சாத்தும் மலரை முகந்தது குற்றம் என்று கூறிப் பட்டத் தரசியின் மூக்கை அரிந்துவிட்டார். அரசியார் கூப்பாட்டைச் செவியுற்ற மன்னன் விரைந்து வந்து 'யார் இதனைச் செய்தார்' என்று வினவ, செருத்துணையார் நடந் தவற்றைக் கூறினார். அதுகேட்ட மன்னன் 'மலர் மூக்கில் சென்று பொருந்த உதவி யது கைதானே. எனவே அந்தக் கையும் தண்டனைக்குரியது' என்று அந்தக் கையை யும் துண்டித்து விட்டார்

கழற் சிங்கனாகிய பல்லவன் பல தலங்களையும் வணங்கிக் கொண்டு திருவாரூர் சென்றடைந்தார். மன்னனுக்குரிய மனைவியர் பலருள் முதல் தேவி கீழே கிடந்த பூவை எடுத்து முகந்துவிட்டார். தமிழ் நாட்டுப் பெண்ணாக அல்லது சைவ சமயத் தைச் சேர்ந்த பெண்ணாக இருப்பின் இவ்வம்மையார் இதனைச் செய்திரார். இறை வனுக்குச் சாத்த உள்ள பூ முகந்து பார்ப்பதற் குரியதன்று. இதனை அறியாமல் பட் டத்தரசியார் முகந்தார் என்றால் ஒன்று அவர் தமிழர் அல்லாதவராக இருத்தல் வேண்டும். இன்றேல் புறச் சமயத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். அரசன் கருவறையில் வணங்குகின்ற நேரத்தில் இந்த அம்மையார் அவன் உடன் இராமல் உட் சுற்று மண்டபத்தில் இருந்தார் என்றால் இவர் புறச் சமயத்தைச் சார்ந்தவராக இருக்க லாம் என்று கருதுவதில் தவறில்லை. அரசர்கள் அரசியல் காரணங்களுக்காகப் புறச் சமயத்தைச் சேர்ந்த மன்னர்களின் மகள்களை மணப்பதும், பிறநாட்டு மகளிரை மணப்பதும் அந்நாளைய மரபாகும். கழற் சிங்கருடைய மனைவியார் இவ்விரண் டினுள் எதனைச் சேர்ந்தவர் என்பது தெரியவில்லை. எனவேதான் அவர் கோயி லினுள்பூவை எடுத்து முகர்ந்துவிட்டார். இதனைக் கண்ட செருத்துணையார் இதனை மாபெரும் குற்றமாகக் கருதிவிட்டார். சாதாரண மக்களைப் பொறுத்த மட்டில் அவர் கள் சைவராக இருப்பினும்கூட இச்செயலைத் தவறு என்று கூறுவார்களே தவிர இதனைப் பெருங்குற்றமாகப் பாவித்துத் தண்டனை வழங்க மாட்டார்கள். ஆனால் இந்த அடியார்களைப் பொறுத்த மட்டில் நிலைமையே வேறாகும். இறைவனுக்குரிய பொருளைத் தூய்மையான முறையில் பயன்படுத்த வேண்டுமே தவிர, முகர்ந்து பார்த்தல் அவருடைய நோக்கில் சிவ அபராதம் ஆகும். இலிங்கத்தின் மேல் ஊதிய தம் மனைவியார் பெருங் குற்றம் இழைத்தார் என்று எப்படித் திரு நீலநக்கர் தண் டித்தாரோ அதே போலச் செருத்துணையாரும் மன்னன் மனைவி செய்த இத்தவற் றைப் பெரும் குற்றமாகக் கருதித் தண்டனை ஈந்து விட்டார்.

இவ்வடியார்களுள் இருவகை உண்டு என்பதை அறிதல் வேண்டும். இறையன்பில், கொள்கைக் கடைப்பிடிப்பில், இரண்டு பகுதியினரும் சளைத்தவர்கள் அல்ல. கண்ணப்பர் போன்றவர்கள் சாத்திரம், கட்டுப்பாடு போன்றவற்றில் அக்கறை காட்டுவதில்லை. தற்போதத்தை முற்றிலும் இழந்தவர்களாகிய அவர்கள் அன்பே வடிவாக ஆகிவிட்டமையின் சாத்திர சட்டதிட்டங்கட்கு அவர்கள் கட்டுப்படுவதில்லை. விதி மார்க்கத்தை அனுசரிக்கின்ற சிவகோசரியார், செருத்துணையார் முதலியவர்கள் சாத்திரம் கூறும் சட்ட திட்டங்கட்கு முற்றிலும் கட்டுப்பட்டவர்கள். ஆகம முறையில் சிவ பெருமானுக்குரிய பொருள்களைத் தூய்மை இல்லாமல் தீண்டுதலும் பயன்படுத்துதலும் பெருங் குற்றமாகும். இவற்றைத்தான் படைக்க வேண்டும், இவற்றைத் தவிர மற்றவற்றைப் படைப்பதை அனுசிதம் என்று சாத்திரங்கள் கூறும். ஆனால் திண்ணனுடைய இறைச்சிப் படையலையும், அதிபத்தருடைய முதல் மீனையும் இறைவன் ஏற்றுக் கொண்டான் என்பதில் ஐயம் இல்லை.

விதி மார்க்க அடிப்படையில் வாழும் செருத்துணையார், தம் மனைவிக்கு ஈந்த தண்டனை சரியானதே என்று கழற்சிங்கர் கருதுகிறார். ஒருபடி மேலே சென்று முகந்த மூக்கு தண்டனைக்குரியது என்றால் அதற்கு உதவியாக இருந்த கையும் தண்டனைக் குரியதே என்று கையையும் வெட்டுகிறார். அடியார்களாகிய இவர்கள் கொண்ட கொள்கையின் எதிரே மனைவி, மக்கள் என்ற எந்த உறவும் முன் நிற்பதில்லை.

கழற்சிங்கர்

படிமிசை நிகழ்ந்த தொல்லைப் பல்லவர் குலத்து வந்தார்
கடிமதில் மூன்றுஞ் செற்ற கங்கைவார் சடையார் செய்ய
அடிமலர் அன்றி வேறொன் றறிவினிற் குறியா நீர்மைக்
கொடிநெடுந் தானை மன்னர் கோக்கழற் சிங்கர் என்பார் 1

குவலயத்(து) அரனார் மேவுங் கோயில்கள் பலவுஞ் சென்று
தவலரும் அன்பில் தாழ்ந்து தக்கமெய்த் தொண்டு செய்வார்
சிவபுரி என்ன மன்னுநீ தென்திரு வாரூர் எய்திப்
பவமறுத் தாட்கொள் வார்தங் கோயிலுட் பணியப் புக்கார் 3

வந்தணை வுற்ற மன்னர் மலர்ந்தகற் பகத்தின் வாசப்
பைந்தளிர்ப் பூங்கொம் பொன்று பார்மிசை வீழ்ந்த தென்ன
நொந்தழிந் தரற்று வாளை நோக்கி'இவ் வண்டத் துள்ளோர்
இந்தவெவ் வினைஅஞ்சாதே யார்செய்தார்?' என்னும் எல்லை 8

கட்டிய உடைவாள் தன்னை உருவி 'அக் கமழ்வா சப்பூத்
தொட்டுமுன் னெடுத்த கையாம் முற்படத் துணிப்ப' தென்று
பட்டமும் அணிந்து காதல் பயில்பெருந் தேவி யான
மட்டவிழ் குழலாள் செங்கை வளையொடுந் துணித்தா ரன்றே 10

அரியஅத் திருத்தொண் டாற்றும் அரசனார் அளவில் காலம்
மருவிய உரிமை தாங்கி மாலயற் கரியார் மன்னும்
திருவருட் சிறப்பி னாலே செய்யசே வடியின் நீழற்
பெருகிய உரிமை யாகும் பேரருள் எய்தி னாரே 12





52. இடங்கழியார்

சேர நாட்டின் ஒரு பகுதியாகிய கோநாட்டின் தலைநகரம் கொடும்பாளூர் என்பதாகும். ஆதித்த சோழனின் முன்னோராகிய இடங்கழியார் என்பவர் கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்தார். இறைத் தொண்டும், அடியார்த் தொண்டும் தலையாய கடமையாகக் கொண்டு வாழ்ந்தவர்.

அடியாருக்கு அமுதளிப்பதையே தொழிலாகக் கொண்ட அடியவர் ஒருவர் தம் வறுமை காரணமாக அடியாருக்கு அமுதளிக்க முடியாத நிலையில் அரசனுக்குரிய நெல் குவித்து வைக்கப்பட்டிருக்கும் கொட்டகாரத்திற்கு வந்து அந்த நெல்லைத் திருடத் துவங்கவே அரசனுடைய காவலர்கள் அவரைப் பிடித்துச் சென்று இடங்கழியார் முன் நிறுத்தினார்கள்.

அடியாராக இருக்கும் அவர் ஏன் நெல்லைத் திருடவேண்டும் என்று அரசன் கேட்க, அவர் ''அத்தன் அடியாரை யான் அமுது செய்விப்பது முட்டினதால் இது செய்தேன்'' என்று கூற, இடங்கழியார் அவரை விடுவித்து 'இவரன்றோ நமக்குப் பண்டாரம்' என்று வாழ்த்தி விடை கொடுத்தார்.

பழைய கல்வெட்டுகளைப் பார்த்தால் பெரிய ஊர்களில் கோயிலுக்குரிய நெல்லும், அரசனுக்குரிய நெல்லும் தனித்தனியே கொட்டகாரங்களில் குவித்து வைக்கப்பட்டிருப்பதைப் பற்றி அறிகிறோம். வரி செலுத்துபவர் அரசனுக்குரிய வரியைப் பணமாகவோ அன்றி நெல்லாகவோ செலுத்தியதாகத் தெரிகிறது. ஊர்தோறும் இவ்வாறு கிடைக்கின்ற நெல்லை வண்டி வைத்துத் தலைநகரத்துக்குக் கொண்டு செல்வதைவிட அந்த அந்த ஊரிலேயே சேமித்து வைத்திருந்தார்கள். அந்தப் பகுதியில் அரசாங்கப் பணி நடைபெறும்பொழுது அதற்குரிய கூலியை தலைநகரத்திலிருந்து கொண்டு வந்து கொடுப்பது என்பது கடினமான காரியம். இற்றைய நாளில் ஒவ்வொரு ஊரிலும் அரசக் கருவூலங்கள், சிறு கருவூலங்கள் (TREASURIES & SUB. TREASURIES) இருப்பதுபோல அற்றைய நாளில் அரசனுக்குரிய வரி நெல்லாகக் கிடைக்குமானால் அங்கங்கே சேமித்து வைத்திருந்தார்கள். அந்தந்தப் பகுதியில் ஏற்படும் அரசாங்கச் செலவுக்கு அந்தப் பகுதியில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நெல்லைப் பயன்படுத்தினார்கள். மன்னராகிய இடங்கழியார் காலத்திலும் இதே பழக்கம் நீடித்திருந்தது.

அடியார் ஒருவர் சிவனடியாருக்குச் சோறு போடும் பணியினை மேற்கொண்டு அது மூட்டுப்பட்ட நிலையில் பெரிதும் மனம் தளர்ந்தார். நெல்லுக்கு எங்கே போவது என்று கவலைப்பட்ட அவருக்கு அரசனுடைய கொட்டகாரத்தில் நிரம்பி வழியும் நெல் நினைவுக்கு வந்தது. அவர் உடனே சென்று அரசனுடைய நெல்லை எடுத்துக் கொண்டு வரத் தொடங்குகையில் காவலர்கள் பிடித்தனர். அரசரிடம் கொண்டு போய் நிறுத்திய பொழுது அவர் கூறிய பதில் மன்னனை வியப்பில் ஆழ்த்தியது! அடியார்களுக்குச் சோறு இல்லாத பொழுது அரசருடைய கடமை அவரை ஆதரிக்க வேண்டியதாகும். எல்லோரும் சென்று அரசனிடம் முறையிட முடியாது. அடியார்கள் பட்டினி கிடப்பார்களேயானால் அரசனுடைய ஆட்சி வளம் குன்றிக்கெட்டு விடும். அரசனுக்குரிய நெல் அடியார்களுக்கு இடப்படுவது முற்றிலும் முறையாகும் என்று கூறினார்.

அடியாரின் இந்தப் புதிய வாதம் இடங்கழியாரின் கண்ணைத் திறந்தது. நெல்லை வைத்திருக்கின்ற சாதாரணப் பண்டாரத்தைவிட இவரே சிறந்த பண்டாரம் என்று கூறி அவரை ஏற்றுக் கொண்டார்.

இடங்கழியார்

இடங்கழியார் எனவுலகில் ஏறுபெரு நாமத்தார்
அடங்கலர்முப் புரமெரித்தார் அடித்தொண்டின் நெறியன்றி
முடங்குநெறி கனவினிலும் முன்னாதார் எந்நாளும்
தொடர்ந்தபெருங் காதலினால் தொண்டர்வேண் டியசெய்வார் 4

சங்கரன்றன் அடியாருக் கமுதளிக்குந் தவமுடையார்
அங்கொருவர் அடியவருக் கமுதொருநாள் ஆக்கஉடன்
எங்கும்ஒரு செயல்காணா தெய்தியசெய் தொழில்முட்டப்
பொங்கிஎழும் பெருவிருப்பால் புரியும்வினை தெரியாது 6


மெய்த்தவரைக் கண்டிருக்கும் வேல்மன்னர் வினவுதலும்
''அத்தனடி யாரையான் அமுதுசெய்விப் பதுமுட்ட
இத்தகைமை செய்தேன்''என் றியம்புதலும் மிகஇரங்கிப்
பத்தரைவிட்(டு) ''இவரன்றோ? பண்டாரம் எனக்(கு)'' என்பார் 8

நிறையழிந்த உள்ளத்தால் ''நெற்பண்டா ரமும்அன்றிக்
குறைவில்நிதிப் பண்டார மானஎலாங் கொள்ளைமுகந்(து)
இறைவனடி யார்கவர்ந்து கொள்க''என எம்மருங்கும்
பறையறையப் பண்ணுவித்தார் படைத்தநிதிப்பயன் கொள்வார் 9

எண்ணில்பெரும் பண்டாரம் ஈசனடி யார்கொள்ள
உண்ணிறைந்த அன்பினால் உறுகொள்ளை மிகஊட்டித்
தண்ணளியால் நெடுங்காலத் திருநீற்றின் நெறிதழைப்ப
மண்ணிலருள் புரிந்திறைவர் மலரடியின் நிழல்சேர்ந்தார் 10

நன்றி:
சக்தி எஸ்டேட்ஸ்
102, கோயமுத்தூர் ரோடு
பொள்ளாச்சி 642 002


S. RAJAM
52


53
S.RAJAM,

53. செருத்துணையார்

சோழ மண்டலத்திலே ஒரு பகுதி மருகநாடு. அங்குள்ள தஞ்சாவூர் என்பது பழங்குடி மக்கள் வாழும் ஊர் அம் மக்கள் உள்ளும் புறமும் குல ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து வாழும் மேன்மை உடையவர். இவர்களுள் வேளாளர் மரபிலே வந்து உதித்தவர் செருத்துணையார். சிவபக்தியிலும் சிவன் அடியார் பால் காட்டும் அன்பிலும் சிறந்தவர்.

திருவாரூருக்குச் சென்று பல தொண்டுகளைச் செருத்துணையார் ஆற்றி வந்தார். காலந்தோறும் அங்கு வீற்றிருக்கும் வன்மீகநாதரை வழிபட்டார்.

பல்லவர் குல மன்னர் கழற்சிங்கர் சிறந்த சிவபக்தர். திருக்கோயில்கள் பலவற்றிற்கும் சென்று பேரன்போடு இறைவனை வணங்குவது அவருடைய பழக்கம். ஒரு நாள் திருவாரூருக்கு வந்து இறைவனை வழிபடுகின்ற நேரத்தில் அவருடைய பட்டத்தரசியார் பூங்கோயிலைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வரும்பொழுது மாலைகள் தொடுக்கும் மண்டபத்தில் புதிய மலர் ஒன்று கீழே விழுந்திருக்கக் கண்டு, அதனை எடுத்து முகர்ந்தார். இதனைப் பற்றி கழற்சிங்கர் வரலாற்றில் கண்டோம். பட்டத்தரசியாரின் மூக்கை அரிந்தவர் செருத்துணையார்.

பலகாலம் சிவத்தொண்டு செய்து ஈற்றில் எம்பிரான்திருவடி நிழலை அடைந்து இறவா இன்பம் எய்தினார்.

நன்றி:
ஆனைமலைஸ் ரிட்ரேடிங் கம்பெனி
472, டாக்டர் நஞ்சப்பா ரோடு
கோயமுத்தூர் 641 018

செருத்துணையார்

சீரின் விளங்கும் அப்பதியில் திருந்து வேளாண் குடிமுதல்வர்,
நீரின் மலிந்த செய்யசடை நீற்றர் கூற்றின் நெஞ்சிடித்த,
வேரி மலர்ந்த பூங்கழல்சூழ் மெய்யன் புடைய சைவரெனப்,
பாரில் நிகழ்ந்த செருத்து ணையார் பரவுந் தொண்டில் நெறி நின்றார். 2

ஆன அன்பர் திருவாரூர் ஆழித் தேர்வித் தகர்கோயில்,
ஞான முனிவர் இமையவர்கள் நெருங்கு நலஞ்சேர் முன்றிலினுள்,
மான நிலவு திருப்பணிகள் செய்து காலங் களின்வணங்கிக்,
கூனல் இளவெண் பிறைமுடியார் தொண்டு பொலியக் குலவுநாள். 3


உலகு நிகழ்ந்த பல்லவர்கோச் சிங்கர் உரிமைப் பெருந்தேவி
நிலவு திருப்பூ மண்டபத்து மருங்கு நீங்கிக் கிடந்ததொரு
மலரை எடுத்து மோந்ததற்கு வந்த பொறாமை வழித்தொண்டர்
இலகு சுடர்வாய்க் கருவிஎடுத் தெழுந்த வேகத் தாலெய்தி 4

கடிது முற்றி மன்றவள்தன் கருமென் கூந்தல் பிடித்தீர்த்துப்,
படியில் வீழ்த்தி மணிமூக்கைப் பற்றிப் ''பரமர் செய்ய சடை,
முடியில் ஏறுந் திருப்பூமண் டபத்து மலர்மோந் திடும் மூக்கைத்,
தடிவன்'' என்று கருவியினால் அரிந்தார் தலைமைத் தனித்தொண்டர். 5

அடுத்த திருத்தொண் டுலகறியச் செய்த அடலே றனையவர்தாம்
தொடுத்த தாம மலரிதழி முடியார் அடிமைத் தொண்டுகடல்
உடுத்த உலகில் நிகழச்செய் துய்யச் செய்ய பொன்மன்றுள்
எடுத்த பாத நிழலடைந்தே இறவா இன்பம் எய்தினார் 6

நன்றி:
ஸ்ரீ பகவதி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்
23, காமராஜ் ரோடு,
மகாலிங்கபுரம், பொள்ளாச்சி 642 002.




S.Rajam

54. புகழ்த்துணையார்

ஸ்ரீவில்லிப்புத்தூரில் சிவ வேதியர் குலத்தில் தோன்றியவர் புகழ்த் துணையார் என்பவர். இறைவன் திருமேனியைத் தொட்டு அபிடேகம் முதலியன செய்யும் தவத்தை உடையவராயினும் ஊரில் பஞ்சம் மிகுந்து விட்டபடியால் பல நாட்கள் உணவின்றி வாழ நேரிட்டது.

எவ்வளவு பட்டினியாக இருப்பினும் இறைவனது பணியில் முட்டுப்பாடு வரா மல் தொண்டாற்றுகின்ற நாளில் ஒருமுறை அபிடேக நீர் நிறைந்த குடத்தை பசிக் கொடுமையால் ஏற்பட்ட தளர்ச்சி காரணமாகத் தூக்க முடியாமல் தூக்கி இறைவன் திருமேனியின்மேல் போட்டுவிட்டார்.

மனம் வருந்திக் களைத்து உறங்கிய அவருக்கு இறைவன் கனவில் தோன்றி ''இந்தப் பஞ்சம் தீருகின்ற வரையில் அன்றாடம் பலிபீடத்தில் ஒரு பொற் காசை வைக்கின்றோம்'' என்று கூறி மறைய அடியார் துயர் நீங்கினார்.

ஆகம முறைப்படி பூசனை புரிகின்றவருக்கு சில நியதிகளும், கட்டுப்பாடுகளும் உண்டு. அபிடேகம், ஆராதனை என்பனவற்றை எவ்வாறு, எப்படிச் செய்ய வேண் டும் என்ற நியதிகள் உண்டு. இன்று திருக்கோயில்களில் அபிடேகம் நடைபெறு வதைப் பார்த்தால் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு வகையாக நடைபெறுவதைக் காணமுடியும். பொதுவாகப் பெரிய பாத்திரங்களில் நீரை நிரப்பிக் கொண்டு சிறிய பாத்திரத்தில் முகந்து நீர் அபிடேகம் நடைபெறுவதைப் பார்க்கலாம். பால், தயிர், இளநீர் முதலிய அபிடேகங்கள் ஒவ்வொன்றும் நடைபெற்ற பிறகு திருமேனி தூய நீரால் ஆட்டப்படுவதையும் காணலாம். எல்லா அபிடேகமும் முடிந்த பிறகு மந்திரக் கலச நீர் குடத்தோடு எடுத்து அபிடேகம் செய்யப்படும். இதனைச் செய்பவர்கள் வலுவான உடம்பு உடையவராக இருந்தாலொழியப் பல்வேறு கனமான பாத்திரங் களைத் தூக்கி இறைவன் திருமேனிக்கு அபிடேகம் செய்வது கடினம்.

புகழ்த் துணையார் பஞ்சம் காரணமாகப் பல நாட்கள் உணவில்லாமல் இருந்து விட்டார். ஆதலின் மந்திரக் கலச நீரை உயரத் தூக்கி அபிடேகம் செய்யும் பொழுது பசிக் கொடுமையால் களைப்பு மீதூர அக்குடத்தைச் சிவலிங்கத்தின் திருமுடியின் மேல் போட்டுவிட்டார். களைப்பு மிகுதியினால் மயங்கி விழுந்த அவருக்கு இறைவன் கனவிடைத் தோன்றி பஞ்சம் தீருகின்ற வரையில் ஒரு பொற்காசு தருகின்றேன் என்று கூறினான்.

பெரிய புராணத்தில் இரண்டு இடங்களில் இத்தகைய நிகழ்ச்சி காணப்படுகிறது. திருவீழிமிழலையில் பஞ்சம் வந்த பொழுது பிள்ளையாருக்கும் திருநாவுக்கரசருக்கும் பஞ்சம் தீருகின்ற வரையில் ஒவ்வொரு பொற்காசு அளித்தான். புகழ்த்துணை நாய னார் வரலாற்றிலும் இச் செய்தி காணப்படுகிறது.

இவ்விரண்டு நிகழ்ச்சிகளிலிருந்தும் அன்றையத் தமிழகத்தின் நிலையை ஒருவாறு அறிய முடிகிறது. பஞ்சம் என்று கூறினால் செல்வர், வறியர், இடை நிற்பவர் ஆகிய மூன்று திறத்தாருக்கும் உணவு கிடைக்காமல் போகின்ற நிலை என்று இன்று நாம் நினைக்கின்றோம். அப்படியானால் இறைவன் பொற்காசு தருவதன் நோக்கம் தடைப் படும். பொற்காசு தருகின்றான் என்றால் அதனைக் கொண்டு உணவுப் பொருட் களை வாங்க முடியும் என்பதுதானே பொருள். நாவரசரும் பிள்ளையாரும் தங்களுக்

குக் கிடைத்த பொற் காசுகளைக் கொண்டு உணவுப் பொருள்கள் வாங்கிப் பஞ்சம் தீருகின்ற வரை எல்லோருக்கும் உணவளித்தனர் என்று அறிகிறோம். எனவே பஞ்சம் என்று சேக்கிழார் குறிப்பிடுவது உணவுப் பொருள் கிடைக்காத பஞ்சமாகத் தெரிய வில்லை. கிடைக்கின்ற உணவுப் பொருள்களை வாங்குவதற்குரிய வாய்ப்பு வசதி களைச் சாதாரண ஏழை மக்கள் பெற்றிராத நிலையையே இது குறிக்கும். அப்படி யானால் விளை பொருள்கள் மழையின்மை காரணமாக குறைந்து விளைந்தால் அதனால் பாதிக்கப்படுபவர்கள் கோயில் பூசகர் போன்ற ஏழை மக்களேயாகும் என்று தெரிகிறது. புகழ்த்துணையாரும் இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர் எனவே துன் புற்றார் என்று அறிகிறோம்.

புகழ்த்துணையார்

செருவிலிபுத் தூர்மன்னுஞ் சிவமறையோர் திருக்குலத்தார்
அருவரைவில் லாளி தனக்(கு) அகத்தடிமை யாமதனுக்(கு)
ஒருவர்தமை நிகரில்லார் உலகத்துப் பரந்தோங்கிப்
பொருவரிய புகழ்நீடு புகழ்த்து ணையார் எனும்பெயரார் 1

மாலயனுக் கரியானை மஞ்சனம்ஆட் டும்பொழுது
சாலவுறு பசிப்பிணியால் வருந்திநிலை தளர்வெய்திக்
கோலநிறை புனல்தாங்கு குடந்தாங்க மாட்டாமை
ஆலமணி கண்டத்தார் முடிமீது வீழ்ந்தயர்வார் 3

சங்கரன்தன் அருளாலோர் துயில்வந்து தமையடைய
அங்கணனுங் கனவின்கண் அருள்புரிவான் ''அருந்துணவு
மங்கியநாட் கழிவளவும் வைப்பதுநித் தமும்ஒருகா(சு)
இங்குனக்கு நாம்'' என்ன இடர்நீங்கி எழுந்திருந்தார் 4

பெற்றம்உகந் தேறுவார் பீடத்தின் கீழ்ஒருகா(சு)
அற்றம்அடங் கிடஅளிப்ப அன்பரும்மற் றதுகைக்கொண்(டு)
உற்றபெரும் பசியதனால் உணங்கும்உடம் புடன்உவந்து
முற்றுணர்வு தலைநிரம்ப முகமலர்ந்து களிகூர்ந்தார் 5

அந்நாள்போல் எந்நாளும் அளித்தகா சதுகொண்டே
இன்னாத பசிப்பிணிவந் திறுத்தநாள் நீங்கியபின்
மின்னார்செஞ்சடையார்க்கு மெய்யடிமைத் தொழில்செய்து
பொன்னாட்டின் அமரர்தொழப் புனிதரடி நிழல்சேர்ந்தார் 6

நன்றி:
ஸ்ரீ சக்தி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்
தபால் பெட்டி எண் 36
கோயமுத்தூர் ரோடு, பொள்ளாச்சி 642 001.


54



55

55. கோட்புலியார்

சோனாட்டில் திருநாட்டியத்தான்குடி என்னும் ஊரில் தோன்றியவர் கோட்புலியார். பெரும் படையை வைத்துக் கொண்டு அரசர்கள் வேண்டும்பொழுது அவர்கட்குத் துணைப்படையாகச் செல்லும் தொழில் புரிகிறவர் இவர். மன்னன்பால் பெற்ற பெருநிதியத்தை நெல்லாக மாற்றி ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ஓர் ஆண்டிற்குத் தேவையான அமுதுபடிக்கான நெல்லை அந்த அந்தக் கோயிலில் நெல் கூடு கட்டி வைத்துவிடுவது வழக்கம்.

ஒருமுறை போருக்குச் செல்லப் புறப்படும்போது நாட்டியத்தான் குடித்திருக கோயிலில் ஓர் ஆண்டிற்குரிய நெல்லைக் கூடுகட்டி வைத்துவிட்டுச் சுற்றத்தார்களை அழைத்த ''எந்தையர்க்கு அமுது படிக்கு ஏற்றிய நெல். இவை அழிக்க சிந்தை ஆற்றா நினைவார் திருவிரையாக் கலி'' என்று சபதம் செய்து புறப்பட்டு விட்டார்.

இவர் சென்ற பிறகு ஊரில் பஞ்சம் வர, பின்னர்க் கொடுத்து விடலாம் என்று முடிவு செய்த சுற்றத்தார் இறைவனுடைய நெற் கூட்டைப் பிரித்து பகிர்ந்து உண்டு விட்டனர்.

போரிலிருந்து மீண்ட கோட்புலியார் சுற்றத்தார்களை எல்லாம் அழைத்து விருந்து தரப்போவதாகச் சொல்லி அனைவரையும் வீட்டிற்குள் அடைத்துத் தாய், தந்தை, மனைவி, மக்கள், சுற்றத்தார் என்ற வேறுபாடு கருதாமல் ''சிவபெருமான் சொத்தைத் திருடிய உங்களுக்குரிய தண்டனை இதுவே'' என்று கூறி அனைவரையும் வெட்டிச் சாய்த்தார்.

ஒரு இளம் குழந்தை அங்கு இருந்தது. அரிசி உணவு உண்ண முடியாத குழந்தையாதலால், இப்பாவத்தில் இக்குழந்தைக்குப் பங்கில்லை என்று ஒருவர் கூற, 'பாவ நெல்லை உண்டவளுடைய பாலை உண்டுதான் இக்குழந்தை வளர்ந்தது. எனவே இதற்கும் தண்டனை உண்டு' என்று அக் குழந்தையையும் வெட்டிச் சாய்த்தார். அந்தக் கண்மே இறைவன் தோன்றி இறந்தவர் அனைவரையும் வீடுபேறு எய்துமாறு செய்துவிட்டான்.

முனைஅடுவார் நாயனாரைப் போலக் கோட்புலியாரும் பயிற்சி பெற்ற ஒரு பெரும் படையைத் தம்மிடம் வைத்துக் கொண்டு அரசர்களுக்குத் தேவை ஏற்படும் பொழுது, அவர்கள் யாராக இருப்பினும், சென்று உதவி அவர்கள் தரும் பெரும் நிதியத்தைத் திருக்கோயில் பணிக்குச் செலவிட்டார். நேரே அடியார்கள் பசிப் பிணியைப் போக்கும் பணியை மேற்கொள்ளாமல் ஒவ்வொரு ஊரிலுமுள்ள திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்கு ஓர் ஆண்டு முழுவதற்கும் தேவையான அமுதுபடிக்கும் உரிய நெல்லைக் கொட்டகாரமாகக் கட்டி வைப்பது இவரது வழக்கம் என்று தெரிகிறது.

இந்தச் செயலே சற்றுப் புதுமையாகத் தெரிகிறது. அந்நாளில் திருக்கோயில்கள் நேரே அரசருடைய மேற்பார்வையில் இருந்தன. ஒவ்வொரு ஊரிலும் திருக்கோயிலைப் பாதுகாத்துக் கோயிலுக்குரிய வருமானத்தைப் பெற்றுப் பணி புரிகிறவர்களுக்கு நெல்லைக் கூலியாகத் தந்து வேலை வாங்குவதைக் கடமையாகக் கொண்ட குழுக்கள் இருந்தன. இக்குழுவில் இடம் பெற வேண்டுமேயானால் தேர்தலில் நின்று வெற்றிபெற வேண்டும். இங்ஙனம் வெற்றி பெற்றவர்கள் திருக்கோயில் வாரியத்தார் என்றழைக்கப்பட்டனர்.

அமுதுபடிக்கு நெல் சேகரிப்பதும் அதனைப் பாதுகாப்பதும் அன்றாடம் தேவையானவற்றை எடுத்துத் தருதலும் அவ்வாரியத்தின் ஒரு கிளையாக உள்ள உள் வாரியத்தாரின் கடமையாகும். இது ஒழுங்காக நடைபெற்றிருந்தால் கோட்புலியார் ஒவ்வொரு கோயிலுக்கும் தம் சொந்த வருமானத்திலிருந்து ஓராண்டுக்குரிய நெல்லை சேமித்து வைக்க வேண்டிய தேவை இல்லாமல் போயிருக்கும். 1985-87-ஆம் ஆண்டுகளில் தஞ்சைப் பெருவுடையார் கோயில் உள்ளிட்ட பல பெருங் கோயில்களிலும், சிறு கோயில்களிலும் அமுதுபடிக்குக்கூட நெல் இல்லாமல் போன அவல நிலையைக் காணமுடிந்தது. இன்று இந்நிலை தோன்றக் காரணமாயிருந்த மக்களின் முன்னோர் கோட்புலியார் காலத்திலும் இருந்திருக்க வேண்டும். எனவே அமுது படிக்கு வரவேண்டிய நெல் வராமல் போக, கோட்புலியார் தம் சொந்தச் செலவில் இதனைச் செய்ய நேரிட்டதுபோலும். கோயில் சொத்தைத் திருடித் தின்பது என்பது தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு வருகின்ற பழக்கம் போலும்!

இது தமிழ் நாட்டில் மட்டுமல்ல உலகம் பூராவும் இருந்த பழக்கம். ஐரோப்பிய நாடுகளில் குடும்பத்தில் முதல் மகன் LORD ஆக, பலமற்ற மகன் 'சர்ச்'சில் பொறுப் பேற்று வசதியாக வாழ்வான். பின்னர் மாதா கோயில்களில் கி.பி. 1000-இல் மக்களுக்கு வசதிகள் செய்யப்பட்டன.

கோட்புலியார் தம்முடைய ஊர்க் கோயிலுக்கு அமுதுபடிக்கென்று ஓராண்டுக் குரிய நெல்லைச் சேகரித்து வைத்து சுற்றத்தாரையெல்லாம் அழைத்து இந்தக் கொட்டகாரத்தைக் காட்டி 'இது இறைவனுக்குரிய நெல். இதை யாரேனும் பயன்படுத்த நினைத்தால் திருவிறையாக் கலி' என்று ஆணையும் இட்டார் என்று தெரிகிறது. இப்படி ஆணையிட வேண்டிய தேவை ஏன் வந்தது? இதற்கு முன்னரே ஒரு முறையோ பலமுறையோ திருக்கோயிலுக்குரிய நெல்லைத் தேவை ஏற்பட்ட பொழுது சுற்றத்தார் திருடி உண்டனர் போலும்! அதனால்தான் இந்த முறை இறைவன் பேரில் ஆணையிட்டுச் சென்றார் கோட்புலியார்.


'திருவிறையாக்கலி' என்ற சொல் காஞ்சிப் புராணத்தில் ஒரு முறை வருவது தவிர வேறு தமிழ் இலக்கியத்தில் எங்கும் இடம் பெற வில்லை. காஞ்சிப் புராணத்தில் ஒருமுறை இடம் பெறுவதாலும் தொண்டை நாட்டுப் பெரியவராகிய சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தில் ஒருமுறை இடம் பெறுவதாலும் இறைவன் மேல் ஆணையிடுவதற்குத் தொண்டை நாட்டுக்காரர்கள் இச்சொல்லை வழங்கினர் என அறியலாம்.


கோட்புலியார்

மற்றவர்தாம் போயினபின் சிலநாளில் வற்காலம்
உற்றலும்அச் சுற்றத்தார் உணவின்றி ''இறப்பதனில்
பெற்றம்உயர்த் தவர்அமுது படிகொண்டா கிலும்பிழைத்துக்
குற்றமறப் பின்கொடுப்போம்'' எனக்கூடு குலைத்தழித்தார் 5

தந்தையார் தாயார்மற் றுடன்பிறந்தார் தாரங்கள்
பந்தமார் சுற்றத்தார் பதியடியார் மதியணியும்
எந்தையார் திருப்படிமற் றுண்ணஇசைந் தார்களையும்
சிந்தவாள் கொடுதுணித்தார் தீயவினைப் பவந்துணிப்பார் 9

அந்நிலையே சிவபெருமான் அன்பரெதிர் வெளியேநின்(று)
''உன்னுடைய கைவாளால் உறுபாசம் அறுத்தகிளை
பொன்னுலகின் மேலுலகம் புக்கணையப் புகழோய்நீ
இந்நிலைநம் முடன்அணை''கென் றேவிஎழுந் தருளினார் 11





56. பூசலார்

தொண்டை நாட்டில் உள்ளது திருநின்றவூர். வேதமும் ஆகமமும் கற்றுணர்ந்த மறையவர் நிறைந்துள்ள அவ்வூரில் பூசலார் என்ற அன்பர் தோன்றினார்.

ஆகம முறைப்படி இறைவனுக் கொரு திருக்கோயில் எழுப்ப நினைந்த பூசலார் இறுதியில் அதற்குரிய பொருளைச் சேகரிக்க முடியாமல் அல்லலுற்றார்.

திருக்கோயில் எடுக்க வேண்டும் என்ற தம்முடைய முடிவில் சிறிதும் தளர் வெய்தாமல் தம் மனத்துள்ளேயே ஆலயம் எடுக்க முடிவு செய்தார். திருக்கோயில் எடுப்பதற்குரிய சாதனங்கள், தச்சர் முதலானவர்களை நிறுவிக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகத் திருக்கோயிலை எழுப்பி முற்றச் செய்து குடமுழுக்குக்குரிய நாளையும் குறித்து விட்டார்.

காஞ்சியில் கயிலாசநாதர் கோயிலைக் கட்டிய இராஜசிம்மப் பல்லவன் தான் கட்டிய கயிலாச நாதர் திருக்கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்ய நிச்சயித்த நாளும் பூச லார் குறித்த நாளும் ஒன்றாக இருந்துவிட்டது. முதல்நாள் இரவு பல்லவன் கனவில் தோன்றிய பெருமான் 'நின்றவூர் பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த ஆல யத்தில் நாளை நாம் குடி புகுகின்றோம். நீ உன்னுடைய குடமுழுக்கை வேறொரு நாளில் வைத்துக் கொள்க' என்று கூறி மறைந்தான்.

வியப்பெய்திய மன்னவன் இறைவனே விரும்பிக் குடிபுகும் அந்தப் பூசலார் கோயிலைக் காணத் திருநின்றவூர் வந்து சேர்ந்தான். அங்குக் கோயில் எதுவும் இல் லாததைக் கண்டு வியப்பெய்தி இறுதியாகப் பூசலாரை அணுகினான். 'ஐயனே! தாங் கள் கட்டிய கோயிலில் இறைவனை ஸ்தாபிக்கின்ற நாள் இன்று என்று உம்மைக் கண்டு அடி பணிய வந்தேன்' என்றான். இறைவன் திருவருளை எண்ணி வியந்த அடியார் தாம் மனத்துள் கட்டிய கோயிலைப்பற்றி அரசனிடம் கூற இறையருளை எண்ணி வியந்த மன்னன் அவரை வணங்கிவிட்டுச் சென்றான்.

உலகிலுள்ள பல்வேறு சமயங்களிலும் தொண்டர்கள், அடியார்கள் என்பவர் கள் நிரம்ப உள்ளனர். அவ்வடியார்கள் பற்றிய வரலாறும் எல்லாச் சமயங்களிலும் பேசப்பட்டு உள்ளன. செயற்கரும் செய்கை செய்த அடியார்கள் தத்தம் சமயத்தைக் காக்க மாபெரும் தியாகங்களைச் செய்த அடியார்கள் என்பவர்களுடைய வரலாறும் அவ்வச் சமய நூல்களில் உண்டு. என்றாலும் பெரிய புராணத்தில் காணப்படும் பூச லார் வரலாறும், சாக்கியர் வரலாறும் தனித்தன்மை வாய்ந்தவை. இவை போன்ற வரலாறுகளை வேறு எந்த நாட்டிலும் தோன்றி வளர்த்த எந்தச் சமயத்திலும் காண முடியாத ஒன்றாகும். ஒரு சமயத்தைச் சேர்ந்த அடியார் அச் சமயம் கூறும் முழு முதல் பொருள் மேல் தினம் கல்லை எடுத்து அடித்து அதன் மூலமாகவே வீடு பேற் றைப் பெற்றார் என்பது போன்ற வரலாறு வேறு எங்கும் இல்லை.

இதனை அடுத்து மனத்தினாலேயே கோயில் கட்டி இறைவனை அக் கோயிலில் ஸ்தாபிக்க ஒருநாள் குறித்தார் என்ற வரலாறே புதுமை. அப் பகுதியை ஆண்ட மன்னன் கட்டிய ஒப்பற்ற கோயிலில் இவர் குறித்த நாளிலேயே குடமுழுக்குச் செய்ய அவனும் நாள் குறித்தான். மன்னனுடைய கனவில் தோன்றி உன்னுடைய குடமுழுக் கைத் தள்ளி வைத்துக் கொள். பூசலாருடைய கோயிலில் நாளை நாம் குடி புகப் போகின்றோம்' என்று இறைவன் கூறுவது அதைவிடப் புதுமை. இது முற்றிலும் சத் தியமானது என்பதை இராஜசிம்மன் தான் கட்டிய கயிலாசநாதர் கோயில் கல்வெட்டு ஒன்றில் தன்னை அசரீரி கேட்டவன் என்றே குறித்துள்ளான்.

இந்நாட்டில் தோன்றிய சைவ சமயச் சான்றோனாகிய மன்னன் பல லட்சங்கள் செலவழித்து உலகமே கண்டு வியக்கின்ற முறையில் கட்டிய கயிலாசநாதர் கோயிலைக் காட்டிலும் ஊர் பெயர் தெரியாத ஒருவர் ஒரு செங்கல்லைக்கூடப் பயன்படுத்தாமல் மனத்தினால் கட்டிய கோயிலைப் பெரிதாக மதித்தான் இறைவன் என்று அறியும்போது இச் சமயத்தின் சிறப்பு வானளாவி நிற்கின்றது. மக்கள் மட்டுமல்லாமல் இறைவனும்கூட இதையே பெரிதென மதித்தான் என்பதை அறிகிறோம். எங்கும் நிறைந்துள்ள பரம்பொருள் சாதாரண மக்களைப்போல ஓரிடத்தில் இருந்தால் மற்றோர் இடத்தில் இருக்க முடியாமல் போய்விடுமா? பூசலார் கோயிலில் புகுகின்றவன் எங்கும் நிறைந்தவன் ஆயிற்றே! அத்தகையவன் கயிலாசநாதர் கோயிலில் புக முடியாமல் போய்விட்டதா? அப்படியானால் 'பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த நன்று நீடு ஆலயத்து நாளை நாம் புகுவோம். நீ இங்கு ஒன்றிய செயலை ஒழிந்து பின்கொள்வாய்' என்று சொல்ல வேண்டிய இன்றியமையாமை யாது? ஆரவாரத்தோடு புறத்தே கட்டப்பட்ட கற்கோயிலை விட எவ்வித ஆரவாரமின்றி மனத்துக்கண் மாசில்லாத ஒருவன் எல்லையற்ற அன்பு என்ற ஒன்றையே துணையாகக் கொண்டு கட்டிய கோயில் இறைவனுக்கு உகந்ததாயிற்று என்பது பண்டைத் தமிழர் அனுபவத்தில் கண்ட பேருண்மை.

பூசலார்


அன்றினார் புரமெ ரித்தார்க் காலயம் எடுக்க எண்ணி
ஒன்றும்அங் குதவா தாக உணர்வினால் எடுக்குந் தன்மை
நன்றென மனத்தி னாலே நல்லஆ லயந்தான் செய்த
நின்றஊர்ப் பூச லார்தம் நினைவினை உரைக்க லுற்றாம் 1


மனத்தினாற் கருதி எங்கும் மாநிதி வருந்தித் தேடி,
''எனைத் தும்ஓர் பொருட்பே றின்றி என்செய்கேன்'' என்று நைவார்
நினைப்பினால் எடுக்க நேர்ந்து நிகழ்வுறு நிதிய மெல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச் சிந்தையால் திரட்டிக் கொண்டார் 5

சாதனத் தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக் கால யஞ்செய் நலம்பெறு நன்னாட் கொண்டே
ஆதரித் தாக மத்தால் அடிநிலை பாரித் தன்பால்
காதலிற் கங்குற் போதுங் கண்படா தெடுக்க லுற்றார். 6

அப்பதி அணைந்து ''பூசல் அன்பர்இங் கமைத்த கோயில்
எப்புடை யது?'' என் றங்கண் எய்தினார் தம்மைக் கேட்கச்
''செப்பிய பூசல் கோயில் செய்ததொன் றில்லை'' என்றார்.
''மெய்ப்பெரு மறையோ ரெல்லாம் வருக'' என் றுரைத்தான் வேந்தன் 12

அன்பரும் அமைத்த சிந்தை ஆலயத் தரனார் தம்மை
நன்பெரும் பொழுது சாரத் தாபித்து நலத்தி னோடும்
பின்பூ சனைக ளெல்லாம் பெருமையிற் பலநாட் பேணிப்
பொன்புனை மன்று ளாடும் பொற்கழல் நீழல் புக்கார். 17





57. மங்கையர்க்கரசியார்

சோணாட்டில் சோழ மன்னனுக்கு மகளாய்த் தோன்றிப் பாண்டிய மன்ன னாகிய நின்றசீர் நெடுமாறனை மணந்து வாழ்ந்தவர் மங்கையர்க்கரசியார்.

அங்கையர்க்கண்ணி வாழும் இருந் தமிழ்நாடு உற்ற பர சமயம் உன்ற இடரை நீக்கி, தென்னர் குலப் பழி தீர்த்து, அம்மையின் ஞானப்பால் உண்ட பெருமகனை மதுரையம்பதிக்கு வரவழைத்து மன்னனை திருத்திப் பணி கொண்டவர்.

வெற்றி பெறுகின்ற ஒவ்வொரு ஆண் மகன் பின்னேயும் மறைவில் ஒரு பெண் இருந்தே தீருவாள் என்று இன்றைய நாளில் கூறப்படுவதை நாம் அறிவோம். இதனை இத் தமிழர் என்றோ நன்கு அறிந்திருந்தனர். மாபெரும் செய்ல்கள் செய்த பெரு மக்களின் பின்னே உலகம் அறியாத முறையில் அவர்களுக்கு உறுதுணையாக, வழி காட்டியாகப் பெண்கள் இருந்ததை நம் சமய வரலாறும் நாட்டு வரலாறும் தெரிவிக் கின்றன.

எத்துணைப் பெரிய காரியத்தை நிகழ்த்தினாலும் இந்நாட்டுப் பெண்கள் தனிப் பட்ட முறையில் புகழப்படுவதை விரும்புவதில்லை. அவர்களுக்கே உரிய அச்சம், மடம், நாணம் என்பவை குறுக்கே நிற்பதால் இப் புகழுரையை ஏற்க மறுக்கின்றனர். அவர்களுடைய பண்பாட்டில் விளைந்த இந்த நுணுக்கத்தை நம் முன்னோர்களும் நன்கு அறிந்திருந்தனர். ஆதலால் நேரிடையாக இம் மகளிரைப் புகழாமல் குறிப் பாகவே சொல்லிச் சென்றனர்.

பெரிய புராணத்தில் மூன்று பெண்கள் செயற்கரும் செயலைச் செய்கின்றனர். இருந்தாலும் இந் நாட்டவரோ, சேக்கிழாரோ, நம்பி ஆரூரர்கூட இவர்களைத் தனியே புகழவில்லை. சைவ சமயத்தின் ஒரு மாபெரும் தூணாகப் பின்னர் விளங்கப் போகின்ற திருநாவுக்கரசர் எங்கோ திசைமாறிப் போனவரைத் திருப்பிக் கொணர்ந்து இத்தமிழ்ச் சாதிக்குப் பயன்படுமாறு செய்தவர் அவருடைய தமக்கையாராகிய திலக வதியார்.

செயற்கரும் செயல் என்று முற்றத் துறந்த பட்டினத்துப் பிள்ளையாலும் போற் றப்பட்ட செயலைச் செய்த சிறுத்தொண்டர் அவருடைய மனைவியின் முழு ஒத் துழைப்பு இருந்திராவிட்டால் ஒன்றும் செய்திருக்க முடியாது. அதனாலேயே சேக் கிழார் 'மனையறத்தின் வேராகி விளங்குதிரு வெண்காட்டு நங்கை' என்று இவரைப் புகழ்கின்றார். சிறுத்தொண்டர் செயலுக்கும் புகழுக்கும் வேராக உள்ளவர் என்பதை விட உயர்ந்த பெருமை வேறு என்ன சொல்ல முடியும். திலகவதியாரின் தொண்டும், மங்கையர்க்கரசியாரின் தொண்டும் தனிப்பட்ட அவரவர் குடும்பத்திற்கு மட்டுமல் லாமல் இத் தமிழகம் முழுவதற்கும் நன்மை புரிவதாயிற்று.

பாழில், உழிஞும், நெல்வேலி ஆகிய இடங்களில் வெற்றி பெற்றுச் சேர, சோழப் பேரரசுகளையும் தன் அடிப்படுத்தி நடுநாடும், தொண்டை நாடும் நீங்க லாகத் தமிழகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டு வந்தவன் நெடுமாறன். உண்மைதான். ஆனால் பின்னர் வந்த இராஜராஜன், இராஜேந்திரன் ஆகிய தமிழ் மன்னர்களையும் அசோகன் முதலிய வடபுலத்து அரசர்களையும் ஒப்பிடும்போது நெடுமாறன் வெற்றி எங்கோ சென்று மறைந்துவிடுகிறது. இன்னும் நெடுமாறன் புகழ் நிலைத்திருக்கிறதென்றால் தமிழர் நாகரிகத்தை, பண்பாட்டை, தமிழ் மொழியை

அவன் நிலைபெறச் செய்தான் என்பதனாலேயே அவன் புகழ் ஓங்கி நிற்கின்றது. யார் மூலமாக அவன் இதைச் செய்ய முடிந்தது? இவற்றையெல்லாம் செய்த காழிப் பிள்ளையாரை வருமாறு வேண்டிக் கொண்டு இவற்றையெல்லாம் செய்யுமாறு செய் தவர் மங்கையர்க்கரசியாரே யாவார். இவர் செய்த மாபெரும் தொண்டைச் சோழப் பேரரசின் முதலமைச்சர் நன்கு அறிந்திருந்தமையாலும் பன்னிரெண்டாம் நூற் றாண்டில் தமிழ், மொழி, நாடு, கலை, பண்பாடு என்பவை நிலைபெறக் காரண மாயிருந்தவர் இப்பெருமாட்டியார் என்பதை நன்கறிந்து நன்றிப் பெருக்கை வெளி யிடும் முறையிலும் 'மங்கையர்க்கு தனி அரசி எங்கள் தெய்வம்' என்றும், 'தென்னர் குல பழிதீர்த்த தெய்வப்பாவை' என்றும் போற்றிப் புகழ்கின்றார்.

மங்கையர்க்கரசியார்

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம் வளவர்திருக் குலக் கொழுந்து
வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள் தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே இருந்தமிழ்நா டுற்ற இடர்
நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் டிருநீறு பரப்பி னாரைப் போற்றுவார் கழல்எம்மால்
போற்ற லாமே 1

பூசுரர்சூ ளாமணியாம் புகலி வேந்தர் போனகஞா னம் பொழிந்த புனித வாக்கால்
தேசுடைய பாடல் பெறுந் தவத்தி னாரைச் செப்புவதியா மென்னறிந்து
தென்னர் கோமான்
மாசில் புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ வழித்து ணையாய் நெடுங் காலம்
மன்னிப் பின்னை
ஆசில்நெறி யவரோடுங் கூட ஈசர் அடிநிழற்கீழ் அமர்ந்திருக்க அருளும் பெற்றார் 2

வருநாளென் றும்பிழையாத் தெய்வப் பொன்னி வளம் பெருக்க வளவர்குலம்
பெருக்குந் தங்கள்
திருநாடு போற்செழியர்தென்னர் நாடு சீர்விளக்குஞ் செய்யசீ றடிகள் போற்றி
ஒருநாளுந் தஞ்செயலில் வழுவா தன்பர்க் குடைகீளும் கோவணமும் நெய்து நல்கும்
பெருநாமச் சாலியர்தங் குலத்தில் வந்த பெருந்தகையார் நேசர்திறம் பேச லுற்றாம் 3

நன்றி:
ஏ.பி.டி. பார்சல் சர்வீஸ்
10/13-15, காளிங்கராயன் தெரு
ராம்நகர், கோயமுத்தூர் 641 009





58. நேசர்

காம்பீலி என்ற நகரில் துணி நெய்பவர் குலத்தில் தோன்றியவர் நேச நாயனார். மனத்தைச் சிவபெருமானுக்கு அடிமையாக்கித் தம் வாக்கை அஞ்செழுத்துக்கு அடிமையாக்கி, உடம்பின் துணை கொண்டு நெய்யப்படும் துணியை இறைவன் அடியார்க்கு உடையாகவும், கோவணமாகவும் ஈந்தவர்.

பெரியபுராணத்துள் வரும் அடியார்கள் அனைவரும் தமிழகத்தில் தோன்றி வாழ்ந்தவர்களே யாவர். சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகையில் தமிழ் நாட்டில் பிறந்த அடியார்களைப் பற்றி மட்டுமே பாடியுள்ளார். அவரால் நன்கு அறியப்பட்டு அவருடைய தேவாரத்திலும், ஏனைய சம்பந்தர், நாவரசர் ஆகியவர்கள் தேவாரத்திலும் இடம் பெற்றுள்ள மார்க்கண்டர், பதஞ்சலி, வியாக்கர பாதர் ஆகியோரைத் திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் பாடவில்லை.

அப்படி இருந்தும் தமிழ்நாட்டின் எல்லைக்கு வடக்கே வெகு தூரத்தில் இருக்கும் காம்பீலி நகரில் இருந்த இவரை எப்படிப் பாடினாரென்று தெரியவில்லை. ஒரு வேளை இவர் தமிழ்நாட்டில் வந்து தங்கிவிட்டவராக இருக்கலாம்.

பதினொராம் நூற்றாண்டில் சேர நாட்டிலும் தமிழ் மொழி தான் வழக்கிலிருந்தது. அதுபோலவே சேக்கிழார் காலத்திற்கு முன்னர் தமிழ்நாட்டின் எல்லை வடக்குதிக்கில் இருந்திருக்கலாம்.

குஜராத், மகாராஷ்டிரம், தெலுங்கு நாடு, கன்னட நாடு, தமிழ்நாடு ஆகியவை பஞ்ச திராவிடம் ஆகும். மகாராஷ்டிரத்திலும், குஜராத்திலும் தமிழ் கல்வெட்டுகள் உண்டு என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ளார்கள். இதுபற்றி ஆய்வுகள் தேவை.

நன்றி:
தி இந்தோ-ஸ்விஸ் சிந்தடிக் ஜெம்
மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,
14-1-60 & 61 மெயின் ரோடு, மேட்டுபாளையம் 641 301

நேசர்


சீர்வளர் சிறப்பின் மிக்க செயன்முறை ஒழுக்கங் குன்றா
நார்வளர் சிந்தை வாய்மை நன்மையார் மன்னி வாழும்
பார்வளர் புகழின் மிக்க பழம்பதி மதிதோய் நெற்றிக்
கார்வளர் சிகர மாடக் காம்பீலி என்ப தாகும் 1

அந்நகர் அதனில் வாழ்வார்; அறுவையர் குலத்து வந்தார்;
மன்னிய தொழிலில் தங்கள் மரபில் மேம்பாடு பெற்றார்
பன்னகா பரணற் கன்பர் பணிதலைக் கொண்டு பாதம்
சென்னியிற் கொண்டு போற்றுந் தேசினார்; நேசர் என்பார் 2


ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப் போதுக் காக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்தஅஞ் செழுத்துக் காக்கித்
தாங்குகைத் தொழிலின் செய்கை தம்பிரான் அடியார்க்காகப்
பாங்குடை உடையுங் கீளும் பழுதில்கோ வணமும் நெய்வார் 3

உடையொடு நல்ல கீளும் ஒப்பில்கோ வணமும் நெய்து
விடையவர் அடியார் வந்து வேண்டுமா றீயு மாற்றால்
இடையறா தளித்து நாளும் அவர்கழல் இறைஞ்சி ஏத்தி
அடைவுறு நலத்த ராகி அரனடி நீழல் சேர்ந்தார் 4

நன்றி:
கவுண்டர் & கம்பெனி
51-ஏ, பாலக்காடு மெயின் ரோடு
தெற்கு உக்கடம், கோயமுத்தூர் 641 001.



58


59

59. கோச் செங்கட்சோழர்

திருச்சியை அடுத்த திருவானைக்காவில் வெண்நாவல் மரத்தின் கீழ் அமைந்துள்ள இலிங்கத் திருமேனியைக் கண்டு ஒரு வெள்ளை யானை அத்திருமேனிக்கு அபிடேகம் செய்து மலர் கொய்து வழிபட்டு வரலாயிற்று. அடர்ந்த காடாக இருந்த அந்த இடத்தில் இலிங்கத் திருமேனியின் மேலே படிந்த மரக்கிளையில் இருந்த சிலந்திப் பூச்சி ஒன்று பெருமான் மேல் சருகுகள் உதிராமல் தன் வலை ஒன்றைப் பின்னி விதானம்போல் அமைத்தது. சிலந்தி வலையைக் கண்ட யானை அதனை அனுசிதம் என்று நினைத்து அழித்து விட்டது.

பல நாட்கள் இவ்வாறு தன் விதானத்தை யானை அழிப்பதைக் கண்ட சிலந்தி யானையின் துதிக்கையினுள் புகுந்து கடித்தது. வலி பொறுக்க மாட்டாத யானை துதிக்கையைக் கல்லின் மேல் அடித்துத் தானும் வீழ்ந்து இறந்தது. கல்லில் அடிபட்ட காரணத்தால் சிலந்தியும் இறந்தது.

சோழர் குல முன்னோன் சுபதேவன் என்பவன் கமலவதி என்ற தன் மனைவியுடன் பல ஊர்களுக்கும் சென்று வழிபாடு செய்யக் கமலவதி கருவுற்றாள். குழந்தை பிறக்க வேண்டிய நேரம் வந்தபோது, இன்னும் ஒரு நாழிகை கழித்துப் பிறந்தால் இக்குழந்தை மூவுலகையும் ஆளும் என்று சோதிடர் கூற அத்தாய் தன்னைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடுமாறு ஏவினாள். உரிய நேரம் வரக் குழந்தை பிறக்க அதன் கண்கள் சிவப்பாய் இருப்பதைக் கண்ட அரசி 'என்கோச் செங்கண்ணனோ' என்று மகிழ்ந்து கூறி உயிர் நீத்தாள். வேளாளர்களில் செங்கண்ணன் கூட்டம் என்று உண்டு.

யானையின் துதிக்கையில் புகுந்து இறந்த சிலந்தியே கோச் செங்கண்ணனாகப் பிறந்த காரணத்தால் தமிழ்நாடு முழுவதும் பல கோயில்களை நிறுவினான் அம் மன்னன்.

இத்தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பிறப்புகள், சங்கிலித் தொடர் போலத் தொடர்ந்து வரும் இயல்பின என்ற நம்பிக்கை வலுவாக இருந்து வந்தது. சைவம், வைணவம், சமணம், பௌத்தம் ஆகிய எல்லாச் சமயங்களும் மறு பிறப்பில் முழு நம்பிக்கை கொண்டிருந்தன. இன்றைய விஞ்ஞான உலகம் 'கூர்தல் முறையை' (EVOLUTION) ஏற்றுக் கொள்கிறது. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த மணிவாசகப் பெருந்தகையார் 'புல்லாய் பூடாய் புழுவாய்... எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்! எம்பெருமான்!' என்று பாடுவதனால் உயிர்கள் தாம் இயற்றிய புண்ணிய பாபங்களுக்கு ஏற்ப மறு பிறப்பில் உயர்ந்தோ தாழ்ந்தோ பிறப்பெடுக்கின்றன என்பதை அறியலாம்.

திருவானைக்காவில் இறைவன் திருமேனிக்கு மேல் வலை பின்னிய சிலந்தி மறு பிறப்பில் சோழன் மகனாகப் பிறக்கும் பேற்றைப் பெற்றது. முற்பிறப்பில் தான் இருந்த நிலை, தான் செய்த தொண்டு என்பவற்றை மறவாமல் சோழ மன்னன் நினைவில் கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருந்தான். எனவே அரசனாகிய பிறகு சிவ பெருமானுக்கு எழுபது கோயில்கள் கட்டினான் என்று வரலாறு கூறுகிறது. 'இருக்கு

இலங்கு திருமொழியாய் எண்தோள் ஈசர்க்கு எழில் மாடம் எழுபது செய்து உலகம் ஆண்ட திருக்குலத்து வளர் சோழன் என்று திருமங்கை ஆழ்வார் பாடுவதனாலும் இவன் கோயில் கட்டிய பெருமையை அறிய முடிகிறது. திருஞான சம்பந்தர் காலத்தில் இவன் கட்டிய கோயில்களில் பல அழிந்து விட்டாலும் எஞ்சியிருந்த ஒரு சில கோயில்களுக்குப் பிள்ளையார் சென்று வழிபட்டுத் தேவாரப் பாடல்கள் அருளியிருக்கின்றார்.

கோச்செங்கட் சோழர்

ஆன செயலால் திருவானைக் காஎன் றதற்குப் பெயராக
ஞான முடைய ஒருசிலந்தி நம்பர் செம்பொன் திருமுடிமேல்
கானல் விரவுஞ் சருகுதிரா வண்ணங் கலந்த வாய்நூ லால்
மேனற் றிருமேற் கட்டிஎன விரிந்து செறியப் புரிந்துளதால் 3

தறையிற் புடைப்பக் கைப்புக்க சிலம்பி தானும் உயிர் நீங்க
மறையிற் பொருளுந் தருமாற்றான் மதயா னைக்கும் வரங்கொடுத்து
முறையிற் சிலம்பி தனைச்சோழர் குலத்து வந்து முன்னுதித்து
நிறையிற் புவனங் காத்தளிக்க அருள்செய் தருள நிலத்தின்கண் 6

''பிறவா தொருநா ழிகைகழித்தென் பிள்ளை பிறக்கும் பரிசென்கால்
உறஆர்த் தெடுத்துத் தூக்கும்'' என உற்ற செயல்மற் றதுமுற்றி
அறவா ணர்கள்சொல் லியகாலம் அணையப் பிணிவிட் டருமணியை
இறவா தொழிவாள் பெற்றெடுத்(து) ''என் கோச்செங் கண்ணா னோ!''
என்றாள் 10

திருவார்ந்த செம்பொன்னின் அம்பலத்தேநடஞ்செய்யும்
பெருமானை அடிவணங்கிப் பேரன்பு தலைசிறப்ப
உருகாநின் றுளங்களிப்பத் தொழுதேத்தி உறையுநாள்
வருவாய்மை மறையவர்க்கு மாளிகைகள் பலசமைத்தார் 16

தேவர்பிரான் திருத்தொண்டிற் கோச்செங்கட் செம்பியர்கோன்
பூவலயம் பொதுநீக்கி ஆண்டருளிப் புவனியின்மேல்
ஏவியநற் றொண்டுபுரிந் திமையவர்கள் அடிபோற்ற
மேவினார் திருத்தில்லை வேந்தர்திரு வடிநிழற்கீழ் 17

நன்றி:
சென்னை பாட்லிங் கம்பெனி லிமிடெட்
423, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை
அரும்பாக்கம், சென்னை 600 106.





60. திருநீலகண்ட யாழ்ப்பாணர்

சோணாட்டில் திருஎருக்கத்தம் புலியூரில் தோன்றியவர் அரிசனராகிய திரு நீலகண்ட யாழ்ப்பாணர். ஒவ்வொரு ஊராகச் சென்று யாழ் வாசித்து இறைவனை வணங்கும் முறையில் திருஆலவாய் சென்று புறத்தே நின்று யாழ் வாசித்தார். இறைவன் மறையவர்களை ஏவி இவரை உள்ளே அழைத்து வருமாறு சொல்ல, சொக்கனின் எதிரே நின்று யாழ் வாசித்துப் பாடினார். ஈரம் தாக்கிய இடத்தில் யாழை வைத்தால் சுருதி கெட்டுவிடும். எனவே, 'யாழ்ப்பாணருக்கும் அவருடைய கருவிக்கும் பலகை ஒன்று இடுக' என்று இறைவன் கட்டளை இட அவ்வாறே பலகை ஒன்று இட்டனர். பாணர் அப்பலகையின் மேலிருந்து வணங்கி மகிழ்ந்த பிறகு திருவாரூர் வந்து சேர்ந்தார்.

திருவாரூரில் வணங்கிய பிறகு பல தலங்களையும் வணங்கிவிட்டு இறுதியாகச் சீர்காழியில் வந்து ஞான சம்பந்தருக்கு யாழ் வாசிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

திருஞானசம்பந்தரிடம் யாழ்ப்பாணர் வருவதற்கு முன்னர் பல ஊர்களுக்கும் சென்று தம் யாழின் மூலம் இறைவன் புகழினைப் பாடலானார். ஆனால் அன்றைய சமுதாயச் சூழ்நிலைக்கு ஏற்ப இத்தகைய மாபெரும் பக்தரை யாரும் கோயிலுக்குள் அனுமதித்ததாகவோ, அழைத்துச் சென்றதாகவோ தெரியவில்லை. தம் யாத்திரையில் மதுரை சென்றடைந்த இப்பெருமகனார் கோயில் வாயிலை அடைந்து நின்று பாலைப் பண்ணில் பாடலானார். அன்று அவரை யாரும் கோயிலுக்குள் அனுமதித்ததாகத் தெரியவில்லை. அன்றிரவு கோயில் அலுவலரிடம் சொக்கன் கனவில் தோன்றி பாணரை உள்ளே அழைத்து வருமாறு ஆணையிட அதன் பிறகே இவர் கோயிலுக்குள் அழைத்துச் செல்லப்பட்டார்.

இதன் பிறகு பல தலங்களையும் வணங்கிக்கொண்டு காழிப்பதியை அடைகின்றார். இவரைப் பார்த்த உடனேயே இறைவன் திருவருளை முழுவதுமாகப் பெற்ற அடியார் என்பதனை நன்கு அறிந்து கொண்ட ஞானசம்பந்தர் எடுத்த எடுப்பிலேயே இவரை 'ஐயர்' என்று அழைக்கின்றார். அம்மட்டோடல்லாமல் கூடவே இவரை இருத்திக் கொண்டு தாம் செல்லுமிடமெல்லாம் பாணரையும் அவர் மனைவியாரையும் உடன் அழைத்துச் செல்கின்றார்.

திருஞானசம்பந்தர், அவரைச் சூழ்ந்து செல்லும் அடியார்கள் என்ற கூட்டத்தில் பெண்பாலார் யாருமே இல்லாமல் இருக்கவும் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மட்டும் தம் மனைவியை அழைத்துக் கொண்டே எல்லா இடங்களுக்கும் செல்கிறார். பாடுகின்றவரின் பக்கத்திலிருந்துதான் யாழ் வாசிக்க முடியுமே தவிரப் பத்தடி எட்டி நின்று வாசிக்க முடியாது. எனவே ரிக்வேதியாகவும், முத்தீ வளர்க்கின்ற இயல்புடையவராகவும் இருந்த வேதியராகிய ஞானசம்பந்தர் திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் அவரது மனைவியாரையும் தமக்கு மிக அண்மையில் இருக்குமாறு செய்ததுடன் தாம் செல்லும் எல்லாக் கோயில்கட்கும் அவரையும் அழைத்துச் சென்றார் என்று தெரிகிறது. சாதி அந்தணராகிய பிள்ளையார் பாணர் குலத்தில் தோன்றிய யாழ்ப்பாணரை விளிக்கும் போதெல்லாம் 'ஐயரே' என்றுதான் அழைத்தார் என்று பெரிய புராணம் பாடுகின்றது.

திருஞானசம்பந்தப் பெருமான் செய்த பல்வேறு புரட்சிகளுள் இதுவும் ஒன்றாகும். வைதிகராகிய அவர் வேதங்களைவிட உயர்ந்தது ஐந்தெழுத்து என்று பாடியது ஒரு புரட்சி. செந்தமிழாலேயே பாடி அவனை அடைய முடியும் என்று கூறியது இரண்டாவது புரட்சி. நாளும் கோளும் சகுனமும் அடியாருக்கு இல்லை. அவை அவர்களை ஒன்றும் செய்ய முடியாது என்று பாடியது மூன்றாவது புரட்சி. சாதி வேறுபாடுகளைக் கருதாமல் பாணரைப் பக்கத்திலேயே அமர்த்திக் கொண்டது நான்காவது புரட்சி. இங்ஙனம் பல்வேறு புரட்சிகளைச் செய்த இப்பெருமகனார் பதிகம் தோறும் தம்மைத் 'தமிழன்' என்றும், 'முத்தமிழ் விரகன்' என்றும், 'தலைமகனாகி நின்ற தமிழ் ஞான சம்பந்தன்' என்றும் கூறிக் கொள்கிறார்.

ஏழாம் நூற்றாண்டில் தமிழ் மொழி, பண்பாடு, நாகரிகம், தமிழர் கண்ட சைவம் என்பவற்றிற்கு நேர இருந்த மாபெரும் அழிவைத் தடுத்து நிறுத்தித் தமிழும் சைவமும் வளரக் கால்கோள் இட்டவர் இப் பெரியாரேயாவார்.

ஆப்பிரிக்காவில் 'நீக்ரோ' மக்கள் இசையை வளர்த்து விளங்குவது போல அரிசன மக்கள் மத்தியில் இசையை வளர்த்து அவர்கள் முன்னேற உதவினால் அவர்களின் இயற்கை வளம் பெருக வாய்ப்பு ஏற்படும்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர்


திரிபுர மெரித்த வாறும் தேர்மிசை நின்ற வாறும்
கரியினை யுரித்த வாறும் காமனைக் காய்ந்த வாறும்
அரிஅயற் கரிய வாறும் அடியவர்க் கெளிய வாறும்
பரிவினாற் பாடக் கேட்டுப் பரமனார் அருளி னாலே 5

அந்தரத் தெழுந்த ஓசை "அன்பினிற் பாணர் பாடும்
சந்தயாழ் தரையிற் சீதந் தாக்கில்வீக் கழியும்" என்று
"சுந்தரப் பலகை முன்நீர் இடும்" எனத் தொண்ட ரிட்டார்
செந்தமிழ்ப் பாண னாருந் திருவருள் பெற்றுச் சேர்ந்தார் 6

கோயில் வாயில் முன்னடைந்து கூற்றஞ் செற்ற பெருந்திறலும்
தாயின் நல்ல பெருங்கருணை அடியார்க் களிக்குந் தண்ணளியும்
ஏயுங் கருவி யிற்றொடுத்தங்கிட்டுப் பாடக் கேட்டங்கண்
வாயில் வேறு வடதிசையில் வகுப்பப் புகுந்து வணங்கினார் 8

ஆழி சூழுந் திருத்தோணி அமர்ந்த அம்மான் அருளாலே
யாழின் மொழியாள் உமைஞானம் ஊட்ட உண்ட. எம்பெரு மான்
காழி நாடன் கவுணியர்கோன் கமல பாதம் வணங்கு தற்கு
வாழி மறையோர் புகலியினில் வந்தார் சந்த இசைப் பாணர் 10

ஞானம் உண்டார் கேட்டருளி நல்ல இசையாழ்ப் பெரும் பாணர்க்(கு)
ஆன படியாற் சிறப்பருளி அமரும் நாளில் அவர் பாடும்
மேன்மைப் பதிகத் திசையாழில் இடம்பெற் றுடனே மேவியபின்
பானற் களத்தார் பெருமணத்தி லுடனே பரமர் தாளடைந்தார் 11


60



61
62

61. சடையனார்

தேசம் உய்யத் திருத் தொண்டத் தொகையைப் பாடியருளினார் சுந்தர மூர்த்தி. திருமுனைப்பாடி நாட்டில் நாவலூர் என்பது ஒரு வளமிக்க கிராமம். இங்குதான் சுந்தரமூர்த்தி பிறந்தார். பிள்ளைப் பிராயத்தில் இவருக்கு நம்பியாரூர் என்ற பெயர் சூட்டப்பட்டது.

முன்னொரு பிறவியின் பின்னர் சிவபிரான் திருவடி நிழலில் நித்தம் நின்று கொண்டிருந்த ஆலாலசுந்தரர் என்பவர் வழக்கம் போல் எம்பிரானுக்குச் சூட்டு வதற்காக மலர்கள் கொய்வதற்காகப் பூங்காவுக்குச் சென்றிருந்தார். பிராட்டிக்குத் தேவையான பூக்களைப் பறிப்பதற்காக அங்கு ஏற்கனவே சென்றிருந்த மங்கையர் இருவரை ஆலாலசுந்தரர் பார்த்தார். அவர்களும் பார்த்தனர். முந்தை வினைப் பயனை முடிப்பதற்கோ அன்றி தென்னாடு செய்த தவப்பயனோ அன்றி இறைவன் திருவுளமோ தான் இந்த நிகழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது. ''மங்கையரை மணந்து வாழ்ந்து பின்னர் வருவாயாக'' என்ற கட்டளைக்கேற்ப ஆலாலசுந்தரர் வந்த நாவலூரில் நம்பியாரூரராக ஆதி சைவ பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சடையனார்.

தம்பி ரானைத் தோழமைகொண் டருளித் தமது தடம்புயஞ்சேர்
கொம்ப னார்பால் ஒருதூது செல்ல ஏவிக் கொண்டருளும்
எம்பி ரானைச் சேரமான் பெருமாள் இணையில் துணைவராம்
நம்பி யாரூ ரரைப்பயந்தார் ஞால மெல்லாங் குடிவாழ. 1

நன்றி:
ஸ்ரீ சாமுண்டீஸ்வரி சுகர்ஸ் லிட்
76, உல்சூர் ரோடு
பெங்களூர் 560 042.

62. இசைஞானியார்


தம்பிரான் அருளினாலே தவத்தினால் திகழ்ந்தோர் போற்றும் வண்ணம் நம்பி ஆரூரர் என்ற நாமத்தோடு வந்து பூவுலகில் பிறந்தார் சுந்தரர். ஐம்படை சதங்கை சாத்தி அணிமணிச் சுட்டி சாத்தி, செம்பொன் நாண் அரையில் மின்னத் தெருவில் அவர் தேர் உருட்டி விளையாடிய நாட்களில், நாடு வாழ் அரசரான நரசிங்க முனையர் என்பார் அக் குழந்தை பால் விரவிய அன்பினாலே பெற்றோரிடம் சென்று வேண்டி அரசிளங் குமரர் போல் அவரைப் புத்திரனாகப் பெற்றுக்கொண் டார்.


பெற்ற புத்திரனை மற்றவரிடம் கொடுப்பது தகப்பனுக்கு எப்பொழுதும் கவ லையைத் தராது என்று கூறினாலும், தாயிடம் அந்தக் குணத்தைக் காண்பது அரிது. தனது குழந்தையை மற்றவரிடம் விட்டுவைக்க எந்தத் தாயும் விரும்பமாட்டாள். ஆயி னும் நம்பி ஆரூரருடைய தாயார் இந்தத் தியாகத்தைச் செய்தார். தாயாருடைய பெயர் இசைஞானியார்.

இசைஞானியார் என்று பெயர் பெற்றிருந்தமையின் இவர் இசையில் வல்லவ ராக இருந்திருக்கலாம் என்றும் அந்த இசையின் தாக்கத்தினால் தான் சுந்தரரும் இசை வல்லுனராக இருந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

ஒழியாப் பெருமைச் சடையனார் உரிமைச் செல்வத் திருமனையார்
அழியாப் புரங்கள் எய்தழித்தார் ஆண்ட நம்பி தனைப்பயந்தார்
இழியாக் குலத்தின் இசைஞானிப் பிராட்டி யாரை என்சிறுபுன்
மொழியாற் புகழ முடியுமோ? முடியா தெவர்க்கும் முடியாதால்.

நன்றி:
சக்தி ஆட்டோமோபைல்ஸ்
469, டாக்டர் நஞ்சப்பர் ரோடு
கோயமுத்தூர் 641 018





63. சுந்தர மூர்த்தி நாயனார்

அப்பர் பெருமான் தோன்றிய திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூர் என்ற ஊரில் சிவ வேதியர் குலத்தில் சடையனார்க்கு மகனாய்த் தோன்றியவர் நம்பி ஆரூரர் (சுந்தர மூர்த்தி நாயனார்). புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைத் திருமணம் நேர்ந்து மணவினை தொடங்குகின்ற நேரத்தில் பழுத்த கிழவர் ஒருவர் திருமணத்தை நிறுத்துமாறு செய்துவிட்டார். நம்பி ஆரூரர் தமக்கு அடிமை என்று அவருடைய பாட்டனால் எழுதித் தந்ததாக ஓர் ஓலையைக் காட்டி அவ்வூர் நீதி மன்றத்தில் வழக்காடிய கிழவர் வென்றும்விட்டார். ஓர் அந்தணனை மற்றோர் அந்தணன் அடிமையாகக் கொண்டதால் அந்தக் கிழவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்று எல்லோரும் கேட்கக் கோயிலினுள் சென்ற கிழவர் மறைந்து விட்டார்.

வல்வழக்காடிய கிழவர் உண்மையில் தம்மை ஆட்கொள்ள வந்த இறைவனே ஆவான் என்பதை உணர்ந்துவிட்ட நம்பி ஆரூரர் திடுக்குற்றார். வந்தவர் அருமை அறியாதது மட்டுமல்ல அவரைப் பித்தன் என்றும், பேயன் என்றும், அழிவழிக்குப் பேசுபவர் என்றும் தாம் ஏசியதை நினைந்து மிகவும் வருந்தினார். அந்நிலையில் 'தூமறை பாடும் வாயானா'கிய சிவபெருமான் 'முன்பு நீ வன்மை பேசி எம்மிடம் வந்ததால் வன்றொண்டன் என்ற பெயரைத் தாங்கி என்மேல் சொற்றமிழ் பாடுக' என்று ஆணையிட்டான். அதனைக் கேட்ட நம்பி ஆரூரர் தம்முடைய சிறுமையையும், இறைவனுடைய பெருமையையும் மனத்திற் கொண்டு 'உன்னை என் சொல்லிப் பாடுவேன்' என்று வினவி நின்றார். உடனே இறைவன் 'முன்பு நீ பித்தன் என்று நம்மைப் பேசினை ஆதலாலே பித்தன் என்றே பாடுக' என்று ஆணையிட்டான். அதனைத் தலைமேற்றாங்கிப் 'பித்தா! பிறை சூடி! பெருமானே!' என்று தொடங் கும் பாடலைப் பாடினார்.

இறைவன் தம்மைத் தடுத்தாட்கொண்டான் என்ற உண்மையை உணர்ந்த நம்பி ஆரூரர் ஒவ்வோர் ஊராகச் சென்று பதிகங்கள் பாடிச் செல்லும் வழியில் திரு வாரூரை அடைந்தார். பரத்தையர் குலத்தில் தோன்றிய பரவையார் என்ற பெரு மாட்டியை இறைவன் திருக்குறிப்பின்படி மணம் செய்து வாழ்ந்தார்.

திருவாரூரில் வாழ்கின்ற காலத்தில் அன்றாடம் புற்றிடம் கொண்ட புராத னரைச் சென்று வணங்கும் பழக்கத்தை மேற் கொண்டிருந்தார். கோயிலின் உள்ளே நுழைவாயிலின் அருகிருந்த தேவாசிரிய மண்டபத்தில் கூடியுள்ள அடியார்களை முதலில் வணங்காது சென்றதைக் கவனித்த விறன்மிண்டர் "தேவாசிரியனிடைப் பொலிந்து மருவா நின்ற சிவனடியார் தம்மைத் தொழுது வந்தணையாது ஒருவாறொதுங்கும் வன்றொண்டன் புறகு, அவனை வலிய ஆட்கொண்ட பரமசிவனும் புறகு" என்றதனைக் கேட்ட சுந்தரர், "தில்லைவாழ் அந்தணர்" என்று தொடங்கும் திருத் தொண்டத் தொகையைப் பாடி அடியார்கள் எல்லோருக்கும் தாம் அடியார் என்று வலியுறுத்தினார்.

தடுத்தாட் கொண்ட புராணம் என்று வழங்கும் இப் பகுதியில் சோழப் பேர ரசன் தலைமை அமைச்சராக இருந்த சேக்கிழார் பெருமானின் கல்வி அறிவு, அனு பவ அறிவு, சட்ட ஞானம் முதலிய அனைத்தும் வெளிப்படக் காணலாம். நம்பி ஆரூரரைத் திருநாவலூர் வழக்குமன்றத்துக்கு அழைத்துச் சென்ற கிழவேதியர் தம் முடைய வழக்கை நீதிபதிகளின் மனங்கொள்ளுமாறு எடுத்துரைத்தார். அதனைக் கேட்ட நீதிபதிகள் ஓர் அந்தணருக்கு மற்றோர் அந்தணன் அடிமையாகின்ற மரபு இந்

நாட்டில் இல்லை என்று கூறி வழக்கினைத் தள்ளியிருக்கலாம்; ஆனால் அந்நீதி மன்றம் அவ்வாறு செய்யாமல் கிழவேதியரை நோக்கி (வாதி) நீர் தொடுக்கும் வழக்கிற்கு ஆட்சியில் (CUSTOM), ஆவணத்தில் (RECORDED EVIDENCE) அன்றி மற்று அயலார் தங்கள் காட்சியில் (EYE WITNESS) மூன்றில் ஒன்று காட்ட வேண்டும் என்று கேட்கிறார்கள். முன்பின் தெரியாத கிழவரிடமிருந்த ஆவணத்தை ஏற்றுக் கொள்கிறது. மரபு தெரிந்த நம்பி ஆரூரரின் பாட்டனாரால் அம்மரபையும் மீறி எழுதப் பெற்ற ஆவணம் ஆதலின் நீதிமன்றம் அதை ஏற்றுக் கொள்கிறது.

பின்னர் பரவையாருடன் வாழ்கின்ற‘காலத்தில் சேர நாட்டுப் பெரும் தொண்டராகிய சேரமான் பெருமாள் என்று அழைக்கப் பெறும் கழறிற்றறிவார் நாயனாரின் நட்பு சுந்தரருக்குக் கிடைத்தது. பலமுறை சேரநாடு சென்று சேர மன்னரோடு சில நாட்கள் தங்கிப் பின்னர்த் திருவாரூர் மீண்டார். அதேபோலச் சேரர் பெருமானும் திருவாரூருக்கு வந்து சுந்தரருடன் தங்கி இன்புற்று மீண்டதாக வரலாறு பேசுகின்றது.

ஊர்கள்தோறும் சென்று இறைவனைப் பாடும் பழக்கத்தை மேற்கொண்ட சுந்தரர் திருவொற்றியூருக்கு வந்து படம்பக்க நாதரை வணங்கி மீளுகையில் இறைவனை வணங்க வந்த சங்கிலியார் என்ற வேளாள குலத்துதித்த நங்கையைக் கண்டு விருப்புற்றார். அவரைத் தமக்கு திருமணம் செய்து வைக்கும்படி இறைவனை வேண்டிக் கொண்டார். தம் தோழரை இக்கட்டில் சிக்க வைத்து வேடிக்கை பார்க்க விரும்பிய பெருமான் சங்கிலியாரின் கனவில் தோன்றி ‘உன்னைவிட்டுப் பிரிய மாட்டேன்’ என்று சுந்தரரிடம் சத்தியம் வாங்கிக் கொண்டு அவனை மணப்பாயாக என்று அருளிச் சென்றார்.

இறைவன் திருவிளையாட்டை அறியாத நம்பி ஆரூரர் சங்கிலியார் விருப்பப்படியே சத்தியம் செய்து கொடுத்துவிட்டு அவரை மணந்தார். நாட்கள் பல நகர்ந்தன. தென்றல்காற்று திருவாரூரில் உள்ள வீதி விடங்கனை, தம்மைத் தோழனாக ஏற்றுக் கொண்ட பெருமானை, ஆரூரனை மறந்து விட்டேனே என்று நினைத்தார். உடனடியாகத் திருவாரூருக்குப் போகப் புறப்பட்டு விட்டார். சத்தியத்தை மீறிய காரணத்தால் திருவொற்றியூரின் எல்லையைத் தாண்டியவுடன் ஆரூரரின் கண்கள் இரண்டும் பார்வையை இழந்தன. என்றாலும் தியாகேசனைக் காண வேண்டும் என்ற தம் உறுதிப்பாட்டில் தளராதவராக உடன் வரும் அன்பர்களின் துணை கொண்டு வழியிலுள்ள தலங்களையெல்லாம் வணங்கிக் கொண்டு ஆரூரை நோக்கிச் செல்லத் தொடங்கினார்.

இடையில் காஞ்சியில் அன்னையின் திருவருளால் மறைந்த இடக்கண்ணைப் பெற்றார். அதன் மேலும் திருவாரூர் சென்று பூங்கோயிலில் உறையும் பெருமானை ஒற்றைக் கண்ணால் கண்டு ஆராத வேட்கை உடையவராய் மனம் மிகவும் நொந்து ‘மீளா அடிமை’ என்ற பாடலைப் பாடி இரண்டாவது கண்ணையும் பெற்றுப் பெரிதும் ஊடல் கொண்டிருக்கும் பரவையாரிடம் இறைவனையே தூதாக அனுப்பினார்.

பரவையாரின் ஊடலைத் தணித்து அவரோடு வாழ்கின்ற காலத்தில் மறுபடியும் தல யாத்திரையை. மேற்கொண்டு சேரர் பெருமானைப் பார்ப்பதற்காகச் சேர நாட்டிற்குச் செல்ல தொடங்கினார். வழியில் கோவையை அடுத்துள்ள அவினாசியில் முதலை உண்ட பாலகனை யமன் வாயிலிருந்து மீட்டு அவன் பெற்றோர்களுக்குப் பெரு மகிழ்ச்சி அளித்தார். அப்படியே பெருமாக் கோதையாரைச் சந்திக்கச் சென்று அவருடன் சிலநாள் உறைந்து சேர நாட்டுத் தலங்களை வணங்கிக்

கொண்டு வருகின்ற நிலையில் திருவஞ்சைக்களத்தை அடைந்தார். 'தலைக்குத் தலை மாலை' என்ற பாடலைப் பாடும்பொழுது இவ்வுலக வாழ்க்கையை நீத்துவிட வேண்டும் என்ற தம் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தினார். இறைவன் திருவருளால் கயிலையிலிருந்து வெள்ளையானை ஒன்று வரவும் அதில் ஏறித் தேவர்கள் புடைசூழக் கயிலை நோக்கிச் சென்றார்.

தம் நண்பர் கயிலை செல்லும் நிகழ்ச்சியை அறிந்த சேரமான் பெருமாள் ஒரு குதிரையில் ஏறித் திருவஞ்சைக்களம் சென்று அக் குதிரையின் செவியில் ஐந்தெழுத்தை ஓதவும் அக்குதிரையும் வெள்ளை யானையைப் பின் தொடர்ந்து கயிலை நோக்கிச் சென்றது. இருவரும் கயிலை சென்று இறைவன் திருவருளில் கலந்தனர்.

ஆயிரம் ஆண்டுகள் ஆகியும் சுந்தரர் பெருமையைத் தமிழ் உலகம் அறியவில்லை. அவருடைய வாழ்க்கைச் சிறப்பைச் சரியாக மக்கள் உணர்ந்து செயல்படுவதாக இல்லை. அவர் பிறந்த திருநாவலூரில் உள்ள கோயில்கள் புதுப்பிக்க வேண்டிய நிலையில் உள்ளன.

தடுத்தாட் கொண்ட புராணம்

தம்பிரான் அருளி னாலே தவத்தினால் மிக்கோர் போற்றும்
நம்பியா ரூரர் என்றே நாமமுஞ் சாற்றி மிக்க
ஐம்படை சதங்கை சாத்தி அணிமணிச் சுட்டி சாத்திச்
செம்பொன் நாண் அரையில் மின்னத் தெருவில்தேர் உருட்டு நாளில் 4

காலைசெய் வினைகள் முற்றிக் கணிதநூற் புலவர் சொன்ன
வேலைவந் தணையும் முன்னர் விதிமணக் கோலம் கொள்வான்
நூலசைந் திலங்கு மார்பின் நுணங்கிய கேள்வி மேலோன்
மாலையுந் தாரும் பொங்க மஞ்சன சாலை புக்கான் 14

மாசிலா மரபில் வந்த வள்ளல்வே தியனை நோக்கி
நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியால் சிரிப்பு நீங்கி
''ஆசில்அந் தணர்கள் வேறோர் அந்தணர்க் கடிமை ஆதல்
பேசஇன் றுன்னைக்கேட்டோம் பித்தனோமறையோன்'' என்றார் 40

தொல்லைமால் வரைபயந்த தூயாள்தன் திருப்பாகன்
அல்லல்தீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால்
''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்என்(று)
எல்லையில்வண் புகழாரை எடுத்திசைப்பா மொழி'' என்றார் 199

தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ்மாலைச்
செம்பொருளால் திருத்தொண்டத் தொகையான திருப்பதிகம்
உம்பர்பிரான் தானருளும் உணர்வுபெற உலகேத்த
எம்பெருமான் வன்றொண்டர் பாடிஅவர் எதிர்பணிந்தார் 202


63